ஸ்ரீ

ஸம்யமனீபுரம் ஹைகோ

வேதாந்த விசாரணை.

# ஸிவில் ஸூட்

1, 2-வது இஷ்யூக்கள்.

ஸ்ரீராம தபோவ
வாசக சாலை.

ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்ய
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி குணகணாலங்க்ருத
ஸ்ரீமதுத்தராதிமடாதீச
ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதங்களவர்களால்
இயற்றப்பட்டு

எஸ். கிருஷ்ணாசார்யரால்
மொழி பெயர்க்கப்பட்டது.

4653.

பத்மஸரோவரம் (திருச்சானூர்)
ஸ்ரீமன் மத்வ ஸித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ சபையாரால்
ப்பட்டது.

34.

T004653
Sarasvati Mahal Library. Thanjavur

ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்

வேதாந்த விசாரணை.

# ஸிவில் ஸூட்

## 1, 2-வது இஷ்யூக்கள்.

---

ஸ்ரீமத் வைதிக வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரதிஷ்டாபகாசார்ய
ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி குணகணாலங்க்ருத
ஸ்ரீமதுத்தராதிமடாதீச

ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீ பாதங்களவர்களால்
இயற்றப்பட்டு

எஸ். கிருஷ்ணசார்யரால்
மொழி பெயர்க்கப்பட்டது.

---

பத்மஸரோவரம் (திருச்சானூர்)
ஸ்ரீமன் மத்வ சித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ சபையாரால்
ப்ரசுரிக்கப்பட்டது.

சென்னை ஆனந்தா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது

1934.

# பிழைதிருத்தம்.

## ஜட்ஜ்மெண்ட் பாகம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 10 | 23 | ஸம்பவத் | ஸமபவத் |
| 11 | 3 | ஏதேதோ | ஏதேது |
| ,, | 7 | களிருக்கும் | களிவிருக்கும் |
| ,, | 15 | பிரஹ | ப்ரஹ்ம |
| 12 | 17 | பூரிதிதி | பூரிதி |
| 14 | 24 | யத | யத் |
| 15 | 22 | ஸர்வ | ஸர்வ: |
| 25 | 28 | கல்பிதம் | கல்விதம் |
| 26 | 1 | ப் ஹ்ம | ப்ரஹ்ம |
| 26 | 27 | கல்பிதம் | கல்விதம் |
| 40 | 26 | உத்கரி | உதகரி |

## விசாரணை பாகம்.

---

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 5 | ஸர்வோர்த்த | ஸர்வோத்த |
| 8 | 26 | ஆஜ | அஜ |
| 5 | 8 | ரஹிதன் | ரஹிதம் |
| 11 | 11 | இாண்டும் | இரண்டும் |
| ,, | 25 | ஸ்ரீ: | ஸ்ரீ: |
| 21 | 5 | ஸதயம் | ஸத்யம் |
| 23 | 10 | ப்ராதுர் | பராதுர் |
| 52 | 7 | ஸமான்ய | ஸாமான்ய |
| ,, | 8 | இவகைள் | இவைகள் |

| | | | |
|---|---|---|---|
| ,, | 12 | ஸமான்ய | ஸாமான்ய |
| ,, | 15 | ,, | ,, |
| ,, | 24 | ,, | ,, |
| 56 | 15 | ஸம்சாரம் | ஸம்ஸாரம் |
| 57 | 4 | ,, | ,, |
| 61 | 27 | கரணம் | காரணம் |
| 73 | 29 | ऽपह्नोतुम् | ऽपह्नोतुम् |
| 78 | 30 | विरायात् | विरोधात् |
| 85 | 17 | ஆவஸ்ய | ஆவஶ்ய |
| 91 | 17 | வாத்கிய | வாக்கிய |
| 92 | 13 | பரயா | பரமா |
| 108 | 11 | அத்வைகதிகள் | அத்வைதிக |
| ,, | 20 | விகாரோ | விகாரோ |
| 109 | 21 | ததேஸத் | ததேதத் |
| 112 | 24 | குதரை | குதிரை |
| 120 | 19 | வ்யக்ஸ்வ | வ்யக்தஸ்வ |
| 128 | 12 | பிரஸ்ன | ப்ரஶ்ன |
| 130 | 23 | ஸம்ஸ்காம் | ஸம்ஸ்காரம் |
| 138 | 11 | தரன் | தான் |

॥ श्रीः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमद्वैष्णवद्वैतमतप्रतिष्ठापनाचार्य

सकलसद्गुणसम्पन्न श्रीमन्मध्वाचार्यपीठाधीश्वर

श्रीमद्वैदिकसनातनधर्मप्रचारणतत्पर

श्री १०८ श्रीमत्सत्यध्यानतीर्थ मुनीन्द्रमहोदयानां

# अभिनन्दनम्

स्रग्धरा छंदोभिः

श्रुत्वा यत्सिंहनादं कतिचन कुधियः पण्डितम्मन्यवर्याः ।
प्राप्ता गोमायुभावं किमपि कलकलं कुर्वते कान्दिशीकाः ॥
विद्यापीठेऽपि काश्यां सकलबुधजनाः शिष्यभावं प्रपन्नाः ।
पीत्वा यस्योपदेशामृतमिह सुधियः संभवन्ति प्रसन्नाः ॥ १ ॥
जातो यस्यास्यकञ्जामृतरसनिकरैर्नास्तिकाध्वा विशीर्णः ।
शेषः किं वा गणेशः स्वयमथ किमहो ! वाक्पतिश्चावतीर्णः ॥
श्रुत्यैव द्वैतसिद्धिं कथयितुममलां तत्ववित् सिद्धमन्त्रः ।
श्रीसत्यध्यानतीर्थः सुमतिनुतपदः सर्वतन्त्रस्वतन्त्रः ॥ २ ॥
दृष्ट्वा दानं यदीयं प्रतिदिनमधुना सादरं विज्ञनेभ्यः ।
स्वर्गस्थः कल्पवृक्षो भवति नतशिखस्तस्य शाखागणेभ्यः ॥
चित्वा पुष्पाण्ययत्नात् सुरजनवनिता यस्य गायन्ति गीतिं ।
श्रीमध्वाचार्यवर्यः स जयति भुवने शिक्षयन् धर्मनीतिम् ॥ ३ ॥
श्रीमानाचार्यवर्योऽयमाराध्यः सुजनैः सदा ।
श्रीरामं हृदये ध्यायन् सीतारामं च पश्यतु ॥ ४ ॥

शुभम्

साहित्यपरिषदुपसभापतिः

श्रीसीतारामझा (मैथिलः), काशी.



आरूढस्सहसा यतीन्द्रपदवीं गत्वा च वाराणसीं
तत्रत्यान्कुमतप्रचारनिरतानद्वैतिदिग्दन्तिनः ।
प्रौढार्थैर्वचनैस्सुयुक्तिखचितैस्संभीषयन्मोहयन्
सत्यध्यानसुकेसरी विजयते पादाश्रितः श्रीपतेः ॥

# அட்டவணை.

---


| விஷயம். | | | பக்கம், |
|---|---|---|---|
| முன்னுரை | ... | ... | i–ii |
| ஜட்ஜ்மெண்ட் | ... | ... | 1—44 |
| வாதியின் தாவா | ... | ... | 1 |
| ப்ரதிவாதியின் ஸ்டேட்மெண்ட் | ... | ... | 4 |
| இஷ்யூ | ... | ... | 6 |
| ரெஸ் ஜூடிகேடா விசாரணை | ... | ... | 6 |
| ரெஸ் ஜூடிகேடா கோர்ட் ஆர்டர் | ... | ... | 7 |
| ப்ரதிவாதி சாக்ஷி விசாரணை | ... | ... | 8 |
| ததநந்யத்வ மாரம்பண ஶப்தாதிப்ய: என்கிற ஸூத்ரத்தின் ப்ரதிஞ்ஞாபாக விசாரணை | ... | ... | 9 |
| ப்ரதிவாதி ஸாக்ஷியினால் ஜகத்துமித்யை என்கிற விஷயத்தில் தாகல் செய்யப்பட்ட இதர ஆதாரங்கள் | | ... | 10 |
| ஷை ஸூத்ரத்தின் ஹேதுபாக விசாரணை | | ... | 13 |
| வாசாரம்பண ஶ்ருத்யர்த்த விசாரணை | ... | ... | 14 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | ... | 17 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | ... | 18 |
| ஐததாத்ம்ய ஶ்ருத்யர்த்த விசாரணை | ... | ... | 19 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | ... | 21 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | ... | 21 |
| இதம் ஸர்வம் யதயமாத்மா ஶ்ருதயர்த்த விசாரணை | | | 22 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | ... | 25 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | ... | 26 |
| ப்ரஹ்மைவேதம் ஶ்ருத்யர்த்த விசாரணை | | ... | 27 |
| ,, பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | ... | 33 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | ... | 33 |
| ஆத்மைவேதம் ஶ்ருத்யர்த்த விசாரணை | | ... | 34 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | | ... | 36 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | ... | 36 |
| நேஹ நாநாஸ்தி கிஞ்சன ஶ்ருத்யர்த்த விசாரணை | | | 37 |

| | | |
|---|---|---|
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | 47 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 47 |
| அத்யாஸ (ப்ரம) விசாரணை ... | ... | 50 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | 58 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 60 |
| வ்யாஹத பாஷண விசாரணை ... | ... | 63 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | 74 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 74 |
| யத்ரஹி த்வைதமிவ பவதி ஶ்ருத்யர்த்த விசாரணை | | 75 |
| ,, வாதியின் விசாரணை ... | ... | 83 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | 90 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 91 |
| நேதி நேதி ஶ்ருத்யர்த்த விசாரணை ... | ... | 92 |
| ,, வாதி விசாரணை ... | ... | 99 |
| ,, ப்ரதிவாதி வகீல் ஆர்க்யுமெண்ட் | ... | 101 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 101 |
| ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம ஶ்ருத்யர்த்த விசாரணை | | 102 |
| ,, வாதி விசாரணை ... | ... | 105 |
| ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 105 |
| வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 106 |
| 2. B. இஷ்யூ வாதி விசாரணை ... | ... | 112 |
| ,, ப்ரதிவாதி ஸாக்ஷிவிசாரணை ... | ... | 120 |
| ,, வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் ... | ... | 127 |
| ,, ப்ரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட் | ... | 129 |
| ,, வாதி வகீல் ரீ ஆர்க்யுமெண்ட் ... | ... | 130 |
| 2. A. இஷ்யூ வாதி விசாரணை ... | ... | 136 |
| வாதியினால் ஜகத் ஸத்ய மென்கிற விஷயத்தில் தாகல்செய்த ஆதாரங்கள் ... | ... | 138 |
| ப்ரதிவாதி வக்கீல் க்ராஸ் ... | ... | 140 |
| ப்ரதிவாதி விசாரணை ... | ... | 143 |

श्री

॥ श्रीमद्दिग्विजयरामोविजयते ॥

# முன்னுரை.

---

### "सुखमेव मेस्याद्दुःखं मनागपि माभूत्"

'ஸுகமே ஸர்வகாலத்திலும் நமக்கு இருக்கவேண்டும். துக்கம் எப்பொழுதும் வரக்கூடாது' என்று எல்லா ப்ராணிகளாலும் அபேக்ஷிக்கப்படும் துக்கமற்ற ஸுகம் மோக்ஷத்திலேயே கிடைக்கக்கூடியது. அந்த மோக்ஷத்திற்கு ஸ்ரீபரமாத்மாவின் ப்ரஸாதமே முக்ய காரணம். அந்த ப்ரஸாதத்திற்கு தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் தான் செய்துவரும் சினேகத்தைவிட பலமடங்கு அதிகமானதும், எவ்வளவு தடைகள் வந்தபோதிலும் தடுக்கப்படாததாயும், நிஷ்காமமானதாயுமிருக்கும் சினேக ரூபமான பக்தியே காரணம். அத்தகைய பக்தி உண்டாவதற்கு பரமாத்மாவின் ஸர்வஞ்ஞத்வம், ஸத்ய ஜகத்கர்த்ருத்வம், பாலகத்வம், ஜீவ ஜடாத்மக ப்ரபஞ்ச பின்னத்வம் முதலிய அநேக குணங்களின் அபரோக்ஷ ஞானம் காரணம். அத்தகைய அபரோக்ஷ ஞானம் வேதாதி ஸாஸ்த்ரங்களை ச்ரவணம் செய்து, நாநாவித துர்மதங்களைக் கேழ்ப்பதினால் உண்டாயிருக்கும் ஸம்ஶயங்களை ப்ரஹ்மமீமாம்ஸா ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் யுக்திகளினால் போக்கடித்துக்கொண்டு, வேதங்களினால் அந்த தத்வங்களின் நிச்சய ஞானத்தை யடைந்தபிறகு, அச்சாஸ்த்ரங்களினால் நிர்ணயிக்கப்பட்ட பகவானிட குணங்களின் த்யானத்தினாலுண்டாகிறது. அத்தகைய த்யானத்திற்கு காரணமான ஶாஸ்த்ர ச்ரவணாதிகள்—ப்ராஹ்மணாதிவர்ணங்கள், ப்ராஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள் இவைகளுக்கு வேதங்களினால் விஹிதமான ஸ்நான ஸந்த்யா வேதாத்யயன யஜ்ஞ ஜப தேவதார்ச்சன கங்காதி தீர்த்த ஸ்நானம் முதலியவைகளைச்செய்து, அவைகளால் அந்த:கரணசுத்தியைச் சம்பாதித்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு உண்டாகிறதென்று வேதம், ஸூத்ரம், கீதை இவைகளில் கூறப்பட்டிருக்கிறது.

இப்படியிருந்தபோதிலும்—கௌடபாதாசார்யர், சங்கராசார்யர் முதலிய அத்வைதிகள்—வேதம், ஸூத்ரம் கீதை இவைகளுக்கு வேறு அர்த்தங்களைக் கல்பித்து, ப்ராஹ்மணாதிவர்ணம் முதலிய ஜகத்து மித்யை, (பொய்), ஜீவன் ப்ரஹ்மமே, ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி குணங்களுடன் கூடினதல்ல. ப்ரஹ்மம் (பௌத்தர்களின் சூன்யத்தைப்போலவும், விஞ்ஞானத்தைப்போலவும்) நிர்விசேஷமானது (ஸகலதர்ம ரஹிதமானது). வேதம் அப்ரமாணமென்று சொல்லும் பௌத்த மதத்திற்கே அத்வைதமதமென்று பெயரிட்டு, வைதிகமத்தைப்போல் தோன்றச்செய்து, ஸஜ்ஜனர்களுக்கு ப்ரமையுண்டாக்கி அதோகதிக்கு அழைத்துச் சென்றுக்கொண்டிருக்க—**'मध्वो वा नाम मारुतं यजत्राः' (ऋ.)** இது முதலிய வேதங்களினால் வாயு பகவானின் அவதாரரென்று ப்ரசித்தரான ஸ்ரீமான் மத்வாசார்யர், மற்றும் ஸ்ரீபத்மநாபதீர்த்தர், ஸ்ரீமத் ஜயதீர்த்தர், ஸ்ரீ வ்யாஸராஜர், ஸ்ரீ வாதிராஜ தீர்த்தர், விஜயீந்த்ர தீர்த்தர், ராகவேந்திர தீர்த்தர், ஸ்ரீமத் வித்யாதீஶதீர்த்தர், ஸ்ரீ ஸத்ய நாததீர்த்தர், பாண்டுரங்கி, ஆனந்தாசார்யர், கேசவாசார்யர் யாதவாசார்யர், வ்யாஸராமாசார்யர் முதலிய மஹான்கள் அநேக நூல்களை

இயற்றி அவைகளால் அந்த அத்வைதமதத்தைக்கண்டித்து, த்வைதமதத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். அந்த நூல்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் மிகவும் ப்ரௌடமாகவும் விஷயங்கள் ஆங்காங்கு விக்ஷிப்தமாயுள்ளதாயும் இருக்கின்றன. அந்த நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்கள் ஸஜ்ஜனர்களுக்கு ஸுலபமாய்த் தெரிவதற்காக, ஸ்ரீமதுத்தராதிமடாதிபதிகளான ஸ்ரீமத் ஸத்யத்யான தீர்த்த ஸ்ரீ பாதங்களவர்கள் எளிய ஸம்ஸ்க்ருதபாஷையில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள எல்லாவிஷயங்களையும் ஒன்றுகூட்டி அநேக நூல்களை இயற்றியிருப்பதேயன்றி, இக்காலத்தில் நடக்கும் கோர்ட் விசாரணை ரீதியில் வாதிதாவாமனு, பிரதிவாதி ஸ்டேட்மெண்டு, இஷ்யு, வாதிப்ரதிவாதிகளின் விசாரணை, க்ராஸ், ரீக்ராஸ், வாதிப்ரதிவாதி வக்கீல்களின் ஆர்க்யுமெண்ட், ஜட்ஜ்மெண்ட் இவைகளுடன் கூடிய ஓர் நூலையும் இயற்றி அத்வைதமதத்தைக் கண்டித்திருக்கிறார்.

அந்த நூலில் முதல் பாகத்தில்—தாவா ரெஸ்ஜுடிகேடா (மின் விசாரம் நடந்திருப்பதால் மறுபடியும் கோர்ட்டாருக்கு விசாரிக்க அதிகாரமில்லாதது,) அல்லவென்றும், இரண்டாவதுபாகத்தில்-ப்ராஹ்மணவர்ணம் முதலிய ஜகத்து ஸத்யமானது, மித்யை (முக்காலத்திலுமில்லாதது) அல்லவென்றும்; மூன்றாவது பாகத்தில்—ப்ரஹ்மம் ஜீவனைவிட வேறானது (பின்னம்) ஜீவரூபமல்ல என்றும்; நாலாவது பாகத்தில்—ப்ரஹ்மம் ஸர்வஞ்ஞத்வாதி அநேக குணங்களினால் பூர்ணமானது, நிற்குணமானதல்ல வென்றும்; ஐந்தாவது பாகத்தில்—அத்வைதமதம் பௌத்த மதமே என்றும் பிரதிவாதிகளின் ஆதாரங்களினாலேயே தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய நூலை இக்காலத்தில் எல்லா லௌகிக வைதிக ஸஜ்ஜனர்களுக்கும் ஸுலபமாய்த் தெரிவதற்காக கர்னாடக, ஆந்த்ர, திராவிட, மகாராஷ்ட்ர, ஹிந்தி முதலிய பாஷைகளில் மொழிபெயர்ப்பித்து, ஸ்ரீமன் மத்வசித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபையோரால் ப்ரகரிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் ஶாஸ்த்ர விசாரரூபமானதால் கடினமாயிருப்பதின் பொருட்டு "वक्तव्यं ब्रह्मगुरुणाचतुर्वारमथापिवा" வேதார்த்தங்களை உபாத்யாயர்கள் பலதடவைகள் சொல்லவேண்டும் என்கிற ஆசார்யரின் உத்திரவின்படிக்கு ஸஜ்ஜனர்களுக்கு ஸுலபமாய்த்தெரிவதற்காக அநேக இடங்களில் அநேக தடவைகள் அநேகப்பிரகாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய க்ரந்தத்தை ஸஜ்ஜனர்கள் நன்றாய் விசாரம் செய்து, ப்ரஹ்மத்தின் ஸர்வஞ்ஞத்வம், ஸத்யமானஜகத் ஸ்ரஷ்ட்ருத்வம், ஜீவஜடாத்மக ப்ரபஞ்ச விலக்ஷணத்வம் முதலிய மஹாமாஹாத்ம்யங்களை அறிந்துகொண்டு, பரமாத்மாவின் அனுக்ரஹத்தினால் ப்ரக்ருதி பந்தத்தினின்றும் முக்தர்களாய் நித்ய ஸுகானுபவ ரூபமோக்ஷத்தை யடையத் தகுந்தது.

பத்மஸரோவரம்,
ஸ்ரீ பாவஸம்.
சித்திரைமீ 1உ

கௌரவ கார்யதர்சி,

ஸ்ரீமன் மத்வசித்தாந்தாபிவ்ருத்திகாரிணீ ஸபா.

ஸ்ரீ

ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்.

28-வது கலியுகம், சாலிவாஹனசகம் 1849-ல்

சீப் ஜஸ்டிஸ்

தர்மராஜ் H. B. அவர்கள் சமூகத்தில் நடந்த

வேதாந்த விசாரணை

# ஸிவில் ஸூட்.

O. S. No. 564 of 1921.

1, 2-வது இஷ்யூக்களின்

ஜட்ஜ்மெண்ட்.

| வாதி | பிரதிவாதி. |
|---|---|
| விஷ்ணுதாஸாசார்யர். | கங்காதரசாஸ்திரிகள். |
| வாதி வக்கீல். | பிரதிவாதி வக்கீல். |
| மாதவதாஸ். P. B. D. | ஹரிஹரசர்மா. P. B. S |

வாதியின் தாவா என்னவென்றால்:—

(1) வாதியினால் வைதிக ஆஸ்திகர்களான எல்லா ஜனங்களிட பிரதிநிதியாக கோர்ட்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவாசெய்யப்பட்டது.

2. மேற் சொல்லப்பட்ட கங்காதரஶாஸ்திரிகளை அத்வைதிகளெல்லோரிடபிரதிநிதியாக கோர்ட்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவாவில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. வாதிகள் ஆஸ்திகமான வைதிகமதத்தில் சேர்ந்தவர்கள்.

4. இவ்வைதிகமத தத்வங்கள்:—

(a) பிராஹ்மண்யாதி வர்ணங்கள், பிரஹ்மசர்யாத் யாச்ரமங்கள், யஜ்ஞாதிகிரியைகள், தேவதைகள், வேதங்கள், கங்காதி

தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி பரலோகங்கள், இப்பூலோகம் முதலான எல்லா ஜகத்தும் ஸத்தியம்.

(b) விஷ்ணு ஸர்வோத்தமன், ஸர்வஜ்ஞன், ஸர்வகர்த்தா, அனந்த கல்யாண குணபூர்ணன்.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் வேறானவன் (பின்னன்).

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர்வோத்தமன், ஸர்வகர்த்தா" என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

5. இத் தத்வங்கள் வேதங்கள், வேதார்த்த நிர்ணயகமான பிரஹ்மஸூத்திரங்கள், பகவத்கீதை இவைகளில் சொல்லப்பட்டிருப்பதால் வைதிக ஜனங்களெல்லோரும் அத்தத்வங்களை அங்கீகரிப்பதற்கு உடன் பட்டிருக்கிறார்கள்.

6. இவ்வைதிக மதம் அநாதி காலமாக வந்துக்கொண்டிருக்கிறது.

7. தத்வமிப்படியிருக்க, கௌடபாதாசார்யரும், அவரிட் பரமசிஷ்யரான சங்கராசார்யரும், வேதம், பிரம்மஸூத்திரம், பகவத்கீதை இவைகளுக்கு வேறு அர்த்தத்தைக்கல்பித்து, விஞ்ஞானவாதிகளான, பௌத்தரிட மதத்தையும், சூன்ய வாதிகளான பௌத்தரிட மதத்தையும் வைதிகமதமாகத் தோன்றும் படிக்குச்செய்து, ஜனங்களை மோசப்படுத்தி, வைதிக தத்வங்களுக்கு விருத்தமானதத்வங்களை போதித்திருக்கிறார்கள்.

இப்படிச் செய்கிறது புராதன சிக்ஷா நியமம் (பகவத்கீதா) 16 வது ஸெக்ஷனில் (அத்தியாயத்தில்) சொல்லப்பட்ட சிக்ஷைக்குத் தகுந்த குற்றமாயிருக்கிறது.

8. பிரதிவாதிகள் போதிப்பதென்ன வென்றால்:—

(a) விஷ்ணு (பரபிரஹ்மம்) ஸர்வோத்தமனல்ல, ஸர்வஜ்ஞனல்ல, ஸர்வ கர்த்தா அல்ல, அநந்த கல்யாண குண பூர்ணனல்ல, அவன் ஸகல தர்மரஹிதன்.

(b) 4-வது a பாராவில் சொல்லிய பிராஹ்மண்யாதி எல்லா ஜகத்தும் மித்யை என்றால் மூன்று காலங்களிலும் இல்லாதது.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னனல்ல.

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர்வோத்தமன்" என்கிற ஞானம் மோக்ஷ ஸாதனமல்ல. "அஹம் ப்ரஹ்மாஸ்மி (நானே பிரஹ்மம்)" என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

9. பிரதிவாதி-வேதம் கீதை ஸூத்திரம் இவைகளில் கூறப்பட்டுள்ள தத்வங்களை அதற்கு விருத்தமாக தெரிந்துக்கொண்டு "நஷ்டாத்மானேல்பபுத்தய:| ப்ரபவந்த்யுக்ர கர்மாண: க்ஷயாயஜகதோஹிதா:" (கீதை 16-9)ல் சொல்லியவாரு தாங்கள் அதோகதியை அடைவதல்லாமல் இதரஸஜ்ஜனர்களையும் ஆஸ்தீகமதத்தினின்றும் விடுவித்து, அவைதிக மதத்தை ஆஶ்ரயிக்கச்செய்து அதோகதியை அடைவிக்கிறார்கள்.

ஆகையால் கோர்ட்டார் ஸஜ்ஜனங்களின் நன்மைக்காக கீழ்க்கண்டவாரு தீர்மானம் செய்யவேணுமாய்க் கோருகிறோம்.

(a) பரபிரஹ்மம் ஜீவனைக்காட்டிலும்வேறானது, ஸர்வோத்தமமானது, பிராஹ்மண்யாதி வர்ணங்கள் பிரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், வேதம், யஜ்ஞம், தேவதைகள், கங்காதி தீர்த்தங்கள் முதலிய ஜகத்து நிஜமானவைகள், மித்யை அல்ல. இவைகளே வைதிக மதத்தின் தத்வங்கள்.

பிரதிவாதியால் சொல்லப்பட்ட "பிரஹ்மம் நிற்குணம், மற்றும் அது ஜீவனுடன் அபின்னமானது. பிராஹ்மணவர்ணாதி ஜகத்து பொய் (மித்யை)" இவைகள் வைதிகமதத்தின் தத்வங்கள் அல்ல.

(b) வேதம், பிரஹ்மஸூத்ரம், கீதை இவைகளுக்கு விருத்தமான அர்த்தங்களைக் கல்பித்து "ஜகத்து மித்யை, பிரஹ்மம் நிற்குணம்" இது முதலிய பிரதிவாதிகளின் உபதேசம் சாஸ்த்ரங்களுக்கு விருத்தமானவைகள் என்று தீர்மானிக்கவேணும்.

(c) மற்றும் கோர்ட்டாருக்கு ஏதேதுயுக்தமென்று தோன்றுகிறதோ அதுகளையும் தீர்மானிக்கக் கோருகிறோம்.

10. கோர்ட்டார் இவ்விதமாகச் செய்யாவிடில் ஜனங்கள் மிகவும் கஷ்டங்களை அடைவார்கள்.

இவ்விதமாக 25-3-1921ல் மாதவதாஸ் வக்கீல் இவர்கள் முகாந்தரமாய் தாவா தாகல் செய்யப்பட்டு, பிரமாண பத்திரிகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிறகு பிரதிவாதிக்கு கோர்ட்டாரால் ஸம்மன் ஜாரி செய்யப்பட்டு பிரதிவாதியால் 30-3-1921ல் கீழ்கண்டவாரு ஸ்டேட்மெண்டும் தாக்கல் செய்யப்பட்டது.

## பிரதிவாதி ஸ்டேட்மெண்டு.

(1) இந்த வாதியின் தாவாவில் சொல்லப்பட்ட விஷயங்கள் பொய்.

(2) வாதிமனு 4-வது பாராவில் சொல்லிய தத்வங்கள் வேதங்களிலும், ஸூத்திரங்களிலும், கீதையிலும் சொல்லப்பட்டிருப்பினும், வேதங்களுக்காவது, கீதைக்காவது, பிரஹ்மஸூத்திரங்களுக்காவது அத்தத்வங்களில் தாத்பர்யமில்லை. ஆகையால் அத்தத்வங்கள் வைதிகங்களல்ல, மற்றும் பொய்யானவை.

(3) வாதியின்மதம் அனாதி காலத்தினின்றும் வருவதல்ல.

(4) வாதி 4-வது பாராவில் சொல்லிய விஷயங்கள் வெரும் பொய்.

(a) எங்களிட அத்வைத மதமே வைதிகமதம்.

(b) அத்வைதமதம் பௌத்தமதமென்று சொல்லுவது சரியல்ல.

(c) நாங்கள் சொல்லுவதே வேதார்த்தம்.

5. அத்வைதமத தத்வங்கள்:—

(a) பிரஹ்மத்தை விட வேறான பிராஹ்மண்யாதி வர்ணங்கள், தேவதைகள், சந்தியாவந்தனாதி கர்மங்கள் முதலான ஜகத்து ஸ்வப்னத்தைப் போல் பொய்.

(b) பிரஹ்மம் நிற்குணம் (ஸகலதர்மரஹிதம்)

(c) ஜீவனும் பிரஹ்மமும் ஒன்றே.

(d) அஹம் பிரஹ்மாஸ்மி என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

(6) இவ்விஷயம் முதலே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், மறுபடியும் விசாரிப்பதற்கு கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (Res-judicata.)

(7) வாதியினால் 9-வது பாராவில் சொல்லப்பட்ட விஷயம் பொய். எங்களிட அத்வைத மதத்தை ஆஸ்ரயித்து நாங்களும் நஷ்டப்படவில்லை. மற்றும், இதை ஆஸ்ரயித்து வேறு யாரும் நஷ்டமடையவில்லை.

இக்காரணங்களினால் கோர்ட்டார் வாதிக்கு எவ்வித அனுகூலத்தையும் செய்யாமல் அவரிட மனுவை தள்ளிவிட வேணுமாக பிரார்த்திக்கிறோம்.

பிரதிவாதி இவ்விதமான ஸ்டேட்மெண்டை வக்கீல் ஹரிஹர சர்மா மூலமாக தாகல் செய்வித்து பிரமாணமும் செய்திருக்கிறார். அதற்கு மேல் கோர்ட்டார் வாதி பிரதிவாதி வக்கீல்களின் முன்னிலையில் கீழ்கண்ட இஷ்யூக்களை எடுத்திருக்கிறார்கள்.

## இஷ்யூ ISSUE.

(1) ரெஸ்ஜுடிகேடா (Resjudicata) ஆகிறதா இல்லையா? [இதற்கு முன் விசாரிக்கப்பட்டிருப்பதினால் மறுபடியும் விசாரணை செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டா இல்லையா?]

2. (a) பிராஹ்மண்யாதி வர்ணங்கள், பிரஹ்மசர்யாத்யாஸ்ரமங்கள் முதலிய பிரபஞ்சம் நிஜமா, பொய்யா?

(b) ஸ்வப்னம் சத்யமா மித்யையா?

(3) பரப்பிரஹ்மம் ஜீவனைவிட வேறானதா, அல்லவா?

(4) பரபிரஹ்மம்—ஸர்வஞ்ஞத்வம், ஸர்வகர்த்ருத்வம், முதலான ஸகல கல்யாண குணபூர்ணமா அல்லவா?

(5) (a) அத்வைதமதத்திற்கும் பௌத்தமதத்திற்கும் பேதமுண்டா இல்லையா?

(b) அத்வைதமதம் வைதிகமதமா அல்லவா?

முதல் இஷ்யூரெஸ்ஜூடிகேடா விசாரணை—3-7-1921ல் வாதி பிரதிவாதி வக்கீல்களின் ஆர்க்யுமெண்ட் நடந்து இந்த தாவா ரெஸ்ஜூடிகேடா அல்ல, என்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(a) பிராஹ்மணாதிவர்ணங்கள் பிரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள் முதலிய எல்லா ஜகத்தும் ஸத்யமா (நிஜமானவைகளா) அல்லது மித்யையா (பொய்யா)?

(b) ஸ்வப்னத்தில் காணப்படும் பதார்த்தங்கள் நிஜமானவைகளா பொய்யானவைகளா என்கிற இரண்டாவது இஷ்யூ விசாரணை செய்து:—

பிராஹ்மணாதி வர்ணங்கள், பிரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், யஜ்ஞாதி கிரியைகள் தேவதைகள், வேதம், கங்காதி தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி லோகங்கள், இந்த லோகம் முதலிய எல்லா ஜகத்தும் ஸத்யமானது (நிஜமானது) மித்யை (பொய் = முக்காலத்திலுமில்லாதது) அல்ல, மற்றும் ஸ்வாப்ன பதார்த்தங்களும் நிஜமானவைகள் பொய்யல்ல

என்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படுகிறது.

**காரணங்கள்:—**

ஜகத்து ஸத்தியமென்கிற விஷயத்தில் வாதியினால் ஆதாரமாகச் சொல்லப்பட்ட வேதம், கீதை பிரஹ்மஸூத்ரங்கள், பிரத்யக்ஷம், அனுமானம் இவைகள், பிராஹ்மணவர்ணாதி எல்லா ஜகத்தும் ஸத்யமே, மித்யை அல்ல என்றே கூறுகின்றன. எப்படி எனின்:—

(1) **'விஶ்வம் ஸத்யம்'** இச்சுருதி ஸ்பஷ்டமாய் விஶ்வம் = ஜகத்து, ஸத்யம் = நிஜமானது என்று அறிவிக்கின்றது.

ருக்வேதத்திற்கு பாஷ்யம் செய்தவரான, அத்வைதமதாவலம்பியான, அத்வைதத்தில் பெரிய ஞானமுடையவரென்று சொல்லிக்கொள்ளப்பட்டவருமான வித்யாரண்யரும் இவ் வேதவாக்கியத்திற்கு வ்யாக்யானம் செய்யும் காலத்தில் "ஸத்யம் = யதார்த்தம் = வித்யமானமேவ = நத்வாரோபிதமித்யர்த்தః" என்று

ஸத்யபதத்திற்கு நிஜமென்றே அர்த்தம், ஆரோபிதமென்றல்ல, இருப்பவைகளே என்று ஸ்பஷ்டமாய் அர்த்தம் செய்திருக்கிறார்.

வித்யாரண்யர் 'விஶ்வம்' என்கிறபதத்திற்குமேல் ஶ்ருதியில் இல்லாத தம்மிடசொந்தமான ஸ்தோத்ரம் என்கிற பதத்தைச் சேர்த்துக் கொண்டு "விஶ்வம் ஸர்வம் ஸ்தோத்ரம் யதார்த்தம் ஸ்துத்யா யத்குணஜாதம் ப்ரதிபாத்யதே தத்ஸர்வம் யுவயோர் வித்யமானமேவ நத்வாரோபிதம்" இந்த்ராதி தேவதைகளின் எல்லா குணங்களும் ஸத்யமானவைகள், கல்பிதம் = மித்யை அல்ல என்று சொல்லியிருக்கிறார். அவர் எப்படிச் சொல்லி யிருந்தபோதிலும் விஶ்வஶப்தத்தினால் அறியப்படும் எல்லா குணங்களும் ஸத்யமானவைகள், கல்பிதங்களல்ல என்கிற விஷயம் அவருக்கு ஸம்மதமானதால் பிரஹ்மத்தைவிட வேறான பதார்த்தங்கள் ஸத்தியமானது என்றே ஷை வித்யாரண்யஸ்வாமிகள் அங்கீகரித்திருக்கிறார் என்கிற விஷயத்தில் விவாதமே கிடையாததினால் இச்சுருதி பிரஹ்மாதிரிக்தமான ஜகத்து ஸத்யம் கல்பிதமல்ல என்று அறிவிக்கிறதென்று சொல்லும் வாதியின் வார்த்தையை கோர்ட்டார் அங்கீகரித்திருக்கிறார்கள்.

(2) வாதியினால் சொல்லப்பட்ட 'ததேதத் ஸத்யம்' என்கிற முண்டக ஶ்ருதியும் கர்மாதி ஜகத்து ஸத்யமென்றே அறிவிக்கிறது. இந்த ஶ்ருதி முண்டகம் 1-2-1; 2-2-2 முதலிய அநேக இடங்களில் பிரஹ்மத்தின் ஸத்யத்வத்தையும், ஜகத்தின் ஸத்யத்வத்தையும் அறிவிக்கிறது. பிரஹ்மத்தின் ஸத்யத்வத்தை அறிவிக்கும்போது, ததேதத் = அந்த பிரஹ்மம், ஸத்யம் = அவிததம் = நிஜம், பொய்யல்ல என்று சங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறார். ஜகத்தின் ஸத்யத்வத்தை அறிவிக்கும் 'ததேதத்ஸத்யம்'என்கிற வாக்யத்திற்கும் ஜகத்து,ஸத்யம் = அவிததம் = நிஜம், பொய்யல்ல என்றே அர்த்தம் செய்திருக்கிறார். ஆகையால் 'ததேதத்ஸத்யம்' என்கிற இச்சுருதி பிரஹ்மத்திற்கு எவ்விதமான ஸத்யத்வத்தைக் கூறுகிறதோ ஜகத்துக்கும் அவ்விதமான ஸத்யத்வத்தையே சொல்லுகிறதென்கிற விஷயத்தில் விவாதம் இல்லை.

ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கும் எல்லா பிரமாணங்களும் ஜகத்துக்கு வியாவஹாரிக ஸத்யத்வத்தையே அறிவிக்கின்

றன. ஆகையால் 'விஶ்வம் ஸத்யம்' முதலிய பிரமாணங்களால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வம் ஸித்தமாகிறதில்லை என்று பிரதிவாதி சொல்லுவது, அத்வைதிகளின் அநேக கிரந்தங்களுக்கு விருத்தமாகவும், ஸ்வவ்யாஹதமாகவும், அயுக்தமாகவும் இருக்கிறது. எப்படியெனின்—பௌத்தர்கள் ஜகத்து மித்யை என்று சொல்லவே, பிரதிவாதிகளான அத்வைதிகள் ஜகத்து ஸத்தியமென்று பிரமாணங்களினால் சித்தமாய்க் கொண்டிருக்க ஜகத்து மித்யை என்று சொல்லுவது பிரமாணங்களுக்கு விருத்தமாகிறது என்று ஆக்ஷேபித்தார்கள். அதற்கு பௌத்தர்கள் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கும் பிரமாணங்கள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை (பொய் ஸத்யத்வத்தை) அறிவிக்கின்றன. நாங்கள் பௌத்தர்கள் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை (நிஜமான ஸத்யத்வத்தை) நிஷேதிக்கிறோம். பிரமாணங்களினால் சித்தமாகும் வியாவஹாரிக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறதில்லை. ஆகையால் நம்மிட பௌத்த மதத்தில் ஜகத்துக்கு, மித்யாத்வம் = பாரமார்த்திக ஸத்யத்வமின்மையைச் சொல்லுவது வியாவஹாரிக ஸத்யவத்தைச் சொல்லும் பிரமாணங்களுக்கு விருத்தமாகிறதில்லை. பிரமாணங்களினால் தெரியவரும் வியாவஹாரிக ஸத்யத்வம் வேறு, நம்மால் (பௌத்தர்களால்) நிஷேதம் செய்யப்படும் பாரமார்த்திக ஸத்யத்வம் வேறாகையால் விரோதம் வருகிறதில்லை என்று ஸமாதானம் சொன்னார்கள். அதற்கு பிரமாணங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை பாரமார்த்திக ஸத்திய (நிஜநிஜ) மென்றே அறிவிக்கின்றன. வ்யாவஹாரிக ஸத்ய (பொய் நிஜ)மென்று அறிவிக்கிறதில்லை. அதற்காக நீங்கள் (பௌத்தர்கள்) ஜகத்துக்கு பிரமாணங்களினால் சித்தமாயிருக்கும் பாரமார்த்திக ஸத்தியத்தையே நிஷேதித்திருப்பதினால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை அறிவிக்கும் பிரமாணங்களினால் விரோதம் வந்தே தீருகிறது என்று சங்கராசார்யரின் பாஷ்ய வ்யாக்யானத்தில் பாமதிகாரர் முதலிய அத்வைதிகள் சொல்லி, மறுபடியும் தாங்களே பௌத்தர்களைப் போல் ஜகத்துவிஷயத்தில் நாங்கள் பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம். ஶ்ருத்யாதி

பிரமாணங்களினால் சித்தமாகும் வியாவஹாரிக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறதில்லை என்று சொல்லுவது ஸ்வவியாஹதமாகிறது.

ஜகத்து வியாவஹாரிக ஸத்யமென்றால் ஶுக்திரஜதத்தைப் போல் (முத்துச் சிப்பியில் தோன்றும் வெள்ளியைப்போல்) முக்காலத்திலும் இல்லாததாகையால் (பாதிதமாகையால்) அந்த வ்யாவஹாரிக ஸத்திய பதார்த்தங்களின் ஞானத்தை உண்டாக்குகிற பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் 'இதம் ரஜதம்' முத்துச் சிப்பியைப் பார்த்து இது வெள்ளி என்று அறிவிக்கும் இந்திரியங்களைப் போல் அப்ரமாணங்களே ஆகின்றன. அப்ரமாணமென்பதற்கே வ்யாவஹாரிக பிரமாணமென்று பிரதிவாதி (அத்வைதி) கள் ஸங்கேதம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கல்பதருபரிமளம் ப்ரஹ்மவித்யாபரணம் முதலிய கிரந்தங்களினால் சித்தமாகிறது.

வ்யாவஹாரிக ஸத்திய மென்றாலும் முக்காலத்திலில்லாததென்றாலும் ஒன்றேயாகிறது என்று அத்வைதிகள் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், பிராஹ்மணாதி வர்ணங்கள், கங்காதி தீர்த்தங்கள், யஞ்ஞம் முதலிய எல்லா ஜகத்தும் முயல்கொம்பை (ஶஶவிஷாணத்தை) ப்போல் முக்காலத்திலும் இல்லாததென்று சொன்னால், கங்காதி தீர்த்தங்களிருக்கின்றன, தேவதைகள் இருக்கின்றார்கள். பிராஹ்மணாதி வர்ணங்களிருக்கின்றன, பரலோகங்களுண்டு என்று ஒப்புக்கொள்ளும் ஆஸ்திக ஜனங்கள் அத்வைதமதத்தை அங்கீகரிக்க மாட்டார்களென்று நினைத்து, ஆஸ்திக ஜனங்களும் தம்மதத்தில் அகப்படும்படியாகச் செய்ய வேணுமென்கிற துருத்தேசத்தினாலேயே பிராஹ்மண வர்ணாதி ஜகத்து முக்காலத்திலும் இல்லாததென்பதற்கு பதிலாக வ்யாவஹாரிக ஸத்யமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையினால், ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை அறிவிக்கும் பிரமாணங்களின் விரோதம் ஜகத்து வ்யாவஹாரிக ஸத்யம் (எப்போதுமில்லாதது) என்று சொன்ன மாத்திரத்தினால் விட்டுப்போவதல்ல. ஆகையால் 'ததேதத் ஸத்யம்' என்கிற ஶ்ருதியினால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வமே சித்தமாகிறதென்று கோர்ட்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

3. "யாதாதத்யதோர்த்தான் வ்யததாத்ஶாஶ்வதீப்ய: ஸமாப்ய:" என்கிற ஈஶாவாஸ்யமந்த்ரம் பரமாத்மா, யாதாதத்யத: = நிஜமாயிருக்கும், அர்த்தான் = பதார்த்தங்களை, வ்யதாத் = படைத்தார் என்று சொல்லிக்கொண்டே, ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கிறதென்று வாதி சொல்லுவதை கோர்ட்டார் அங்கீகரிக்கிறார்கள்.

4. "யச்சிகேத ஸத்யமித்தன்ன மோகம்" என்கிற ருக்வேத மந்த்ரமும் பரமாத்மனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்து ஸத்யமானது, பொய்யல்ல என்றே அறிவிக்கிறது.

5. "அஸத்ய மப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரனீஶ்வரம்" என்கிற கீதா வாக்யமும் ஜகத்துக்கு அஸத்யத்வத்தைச் சொல்லும் அஸுர ஜனங்கள் அதோகதியை யடைகிறார்கள் என்று நிந்தித்துக் கொண்டிருப்பதினால் ஜகத்து ஸத்யமென்று சித்தமாகிறது.

6. "அதாதோ பிரஹ்மஜிஞ்ஞாஸா" என்கிற முதல் ஸூத்ரம் முதல் "அனாவ்ருத்திஶ்ஶப்தாதனாவ்ருத்திஶ்ஶப்தாத்" என்கிற கடைசி ஸூத்ரம்வரைக்குமுள்ள எல்லாபிரஹ்ம ஸூத்திரங்களும்ஜகத்து எந்த பரமாத்மனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டதோ அந்த பரமாத்மாவின் விசாரம் செய்யவேணும். அப்பரமாத்மனிடத்தில் அநேக குணங்களிருக்கின்றன, அப்பரமாத்மாவின்ஞானத்தைச் சம்பாதித்து அவனிட அனுக்கிரஹத்தினால் மோக்ஷத்தை அடைந்து, அம்மோக்ஷத்தில் "ஸர்வான் காமானாப்த்வா அம்ருதஸ்ஸம்பவத்" "ஜக்ஷன் க்ரீடன் ரமமாண:" இதுமுதலிய வேத வாக்யங்களில் கூறியுள்ளபடிக்கு ஜீவர்கள் வைகுண்டத்தில் தம்மால் அபேக்ஷிக்கப்படும் பதார்த்தங்களை அடைந்து மரணமில்லாதவர்களாய் ஸுகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகின்றனவாகையால் ஞானம், ஞாதா, ஞேயம் (ஞானத்திற்கு விஷயமான எல்லா ஜகத்து) இவைகளுக்கு ஸத்யத்வம் சித்திக்கிறது.

7. கடஸ்ஸன் = குடம் நிஜமானது; படஸ்ஸன் = வஸ்திரம் நிஜமானது இதுமுதலிய பிரத்யக்ஷங்களும், ஜகத்ஸத்யம், அர்த்

தக்ரியாகாரித்வாத் (பதார்த்தங்களை பிறப்பிப்பதாயிருப்பதால்) என்கிற அனுமானங்களும் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக் கின்றன. அதிகம் சொல்லவேண்டியதென்ன—ஏதேதோ பிர மாணங்களோ அவைகளெல்லாம் தம்தம் விஷயங்களை கீழ்ச் சொல்லியவாறு ஸத்யத்வத்தையே அறிவிக்கின்றன.

பிரமாணமென்கிற பதத்தில் ப்ர—மா—அன (ல்யுட்) என்று மூன்று பாகங்களுண்டு. அவைகளிருக்கும் 'ப்ர' என்கிறதற்கு ஸத்யமான வஸ்துவை அறிவிக்கும் என்று அர்த்தம். 'மா' என்கிற தற்கு ஞானம் என்று அர்த்தம் 'அன' (ல்யுட்) என்கிறதற்குபிறப் பிக்கக்கூடியது என்று அர்த்தம். இப்படி இருக்கிறபடியால் பிர மாணமென்கிற பதத்திற்கு ஸத்யமான பதார்த்தங்களை அறிவிக் கும் ஞானத்தை பிறப்பிக்கக்கூடியது (தான் பிரப்பிக்கும் ஞானத் திற்கு விஷயமான பதார்த்தங்கள் ஸத்யமானவைகள்) என்று அர்த்தமாகிறது. ஆகையால் வேதம், கீதை, பிரத்யக்ஷம், அனு மானம், பிரஹ்ம ஸூத்ரங்கள் இவைகளெல்லாம் பிரமாணங்களே என்று பிரதிவாதியும் அங்கீகரித்திருப்பதினால் அவ்வேதாதி பிர மாணங்களினால் அறிவிக்கப்படும் ஜகத்து ஸத்யமானது என்று சித்திக்கிறதென்று கோர்ட்டார் அங்கீகரிக்கிறார்கள்.

"ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்ய: க்ருத: ஊரு ததஸ்ய யத் வைஶ்ய: பத்ப்யாம் ஶூத்ரோ அஜாயத" இது முத லிய வேதங்களினாலும் "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் ப்ராஹ் மண க்ஷத்ரியவிஶாம்ஶூத்ராணாம்சபரம்தப' முதலிய கீதா வாக்கி யங்களினாலும், 'க்ஷத்ரியத்வாவகதேஶ்ச' முதலிய ப்ரஹ்மஸூத் ரங்களினாலும் ப்ராஹ்மணாதிவர்ணங்கள் ஸத்யமென்றே சித்தமா கிறது. 'யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்" இது முத லிய சுருதிகளால் பிரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் இன்னும் ஆஶ்ரமங்களும் ஸத்யமானவைகளென்று சித்திக்கின்றன.

'ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்க்ககாமோ யஜேத' 'வஸந்தே ப்ராஹ்மணோ அக்னீனாததீத' (வேதம்) 'ஸஹயஜ்ஞா ப்ரஜா ஸ்ரு ஷ்ட்வா' 'யஜ்ஞைரிஷ்ட்வாஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே' (கீதா)

'அக்னிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சனாத்' (ஸூத்ரம்) இத்யாதி வேதகீதா பிரஹ்மஸூத்ர வாக்யங்களினால் யஜ்ஞயம் ஸத்யமென்று ஸித்தமாகிறது.

'அக்னிர்வை தேவானாமவமோ விஷ்ணு: பரம: ததந்தரேண ஸர்வா அன்யாதேவதா' முதலிய வேதவாக்யங்களினால் தேவதைகள் இருக்கிறார்களென்று சித்தமாகிறது.

'ருக்வேதம் பகவோத்யேமி யஜுர்வேதம் ஸாமவேத மாதர்வணம்' (சாந்.7-1-2) முதலிய வேதவாக்யங்களினாலும் 'வேதேஷு யஞ்ஞேஷு தபஸ்ஸு சைவ' 'வேதவிதேவ சாஹம்' முதலிய கீதா வாக்யங்களினாலும் 'ஶ்ருதேஶ்ச' இதுமுதலிய ஸூத்ரங்களினாலும் வேதம் ஸத்யமென்று சித்தமாகிறது.

'இமம்மே கங்கே யமுனே ஸரஸ்வதி' முதலிய வேதவாக்யங்களினாலும் கங்காதிதீர்த்தங்கள் ஸத்யமென்று சித்தமாகிறது.

'ஸ்வர்க்ககாமோ யஜேத' (வேதம்) 'ஸ்வர்க்கத்வாரமபாவ்ருதம்' (கீதை) முதலிய வாக்யங்களினால் ஸ்வர்க்காதி லோகங்கள் ஸத்யமென்று சித்தமாகிறது.

'பூரிதிதிவாயம் லோக:' முதலிய வேதப்ரமாணங்களால் இவ்வுலகம் ஸத்யமென்று சித்தமாகிறதென்று கோர்ட்டார் அங்கீகரிக்கிறார்கள்.

ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் பிரதிவாதிகளாலும் அவர்களிட ஸாக்ஷிகளாலும் சொல்லப்பட்ட ஶ்ருதி ஸூத்ர வாக்யங்கள் ஒன்றும் ஜகத்துமித்யை என்று சித்தப்படுத்துகிறதில்லை என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

## காரணங்கள்.

(1.) 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்கிற இச்சுருதியில் மித்யாத்வத்தை அறிவிக்கும் (ஜகத்து மித்யை என்று சொல்லும்) பதமே கிடையாது.

'வாசாரம்பணம்' என்கிற பதம் 'ஶப்தத்தினால் சொல்லப்படுகிறது' என்கிற அர்த்தத்தை அறிவிக்கிறது. 'நாமதேயம்' என்கிற பதம் 'பெயர்' என்கிற அர்த்தத்தை அறிவிக்கிறது. மித்யை என்

கிறதும் ஶப்தப்ரதிபாத்ய மென்கிறதும் ஒன்றேயாகாது. ஏனெனில்—ஶப்தப்ரதிபாத்யமாகிய ஜகத்து மித்யை என்று சொல்லுவதாயின் பிரஹ்மமும் ஶப்தப்ரதிபாத்யமாகையால் அதுவும் மித்யையாக வேண்டியதாகும். ஆகையால் 'வாசாரம்பணம்' 'நாமதேயம்' இவ்விரண்டு பதங்களும் கடாதி பதார்த்தங்கள் மித்யை என்று அறிவிக்கிறதில்லை.

'வாசாரம்பணம்' என்கிற பதத்திற்கு மேலும், 'நாமதேயம்' என்கிற பதத்திற்கு மேலும் 'மாத்திரம்' என்கிற பதத்தைச்சேர்த்துக்கொண்டு 'வாசாரம்பண மாத்திரம்'=ஶப்தத்தினல் சொல்லப்படுகிறது மாத்ரமே யொழிய நிஜமானதல்ல, மித்யை என்றும், 'நாமதேய மாத்ரம்' பெயர் மாத்ரமே நிஜமல்ல, மித்யை என்றும் பிரதிவாதிகள் செய்த அர்த்தம் ஶ்ருத்யர்த்தமாகமாட்டாது. நம்மிஷ்டப்பிரகாரம் சுருதியிலில்லாத பதங்களைச் சேர்த்துக் கொண்டு செய்யும் அர்த்தம் ஶ்ருத்யர்த்தம் ஆவதாயிருந்தால் 'ஸத்யம் ஞானமநந்தம் ப்ரஹ்ம' என்கிற வாக்கியத்திலுள்ள ஸத்தியம், ஞானம், அநந்தம் என்கிற பதங்களுக்கு மேல் ந ந ந என்கிற பதங்களைச் சேர்த்துக்கொண்டு 'பிரஹ்ம ஸத்யம் ந' பிரஹ்மம் ஸத்யமல்ல, 'பிரஹ்ம ஞானம் ந' பிரஹ்மம் ஞானரூபமல்ல, 'பிரஹ்ம அனந்தம் ந' அபரிச்சின்னமல்ல என்று சொல்லுகிற அர்த்தங்களும் ஶ்ருத்யர்த்தங்களாகவேண்டியதாகும். ஆகையால் இவ்வாசாரம்பண வாக்யத்தில் மித்யாத்வத்தைச் சொல்லும் பதமே இல்லாததினல் ஜகத்து மித்யை என்று சித்தமாகிறதில்லை.

சங்கராசார்யரும் கடாதி ரூபமான மண்ணின் விவகாரங்கள் (கார்யங்கள்) மித்யை=பொய், காரணமான மண் ஸத்யம் என்று இச்சுருதிக்கு வ்யாக்யானம் செய்திருக்கிறார். அதினுலும் எல்லா ஜகத்தும் மித்யை என்று சித்தமாகிறதில்லை. தவிர இதற்கு விருத்தமாக பிரஹ்மத்தைவிட வேறான மண் ரூபமான ஜகத்துக்கு ஸத்யத்வமே சித்தமாகிறது.

இவ்வாக்கியத்திற்கு ம்ருத்திகா ரூபமான காரணத்திற்கு ஸத்யத்வத்தைச் சொல்லுவதில் தாத்பர்யமில்லை. ஆகையால் ஸத்யத்வம் சித்திக்கிறதில்லை என்று சொன்னல்—காரணமான ம்ருத்திகை ஸத்யம், கார்யமான கடம் மித்யை என்று அறிவிப்பதின்

முகாந்தரமாய் காரணமான பிரஹ்மம் ஸத்யம், கார்யமானஜகத்து மித்யை என்று சித்தப்படுத்துகிறது என்று பிரதிவாதிகள் சொல்லுவது பொருந்துவதில்லை. ஆகையால் இச்சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் விஷயத்தில் ஆதாரமாகிறதில்லை.

(2) 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம்' என்கிற ஶ்ருதியிலும், ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கும் பதமே இல்லை. 'தத் ஸத்யம்' என்கிற வாக்கியத்தில் 'ஏவ' என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு 'ததேவ ஸத்யம்' பிரஹ்மமே ஸத்யமானது, வேறு யாதும் ஸத்யமானதில்லை என்று செய்திருக்கும் அர்த்தம் ஶ்ருத்யர்த்தமல்ல, ஆகையால் இந்த ஶ்ருதியும் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிப்பதற்கு ஸாதகமாகிறதில்லை.

(3) 'இதம் ஸர்வம் யதயமாத்மா' என்கிற சுருதியிலும் ஜகத்துக்கு மித்யாத்வ போதகமான பதமில்லை. இதம் ஸர்வம்=இவ்வெல்லா ஜகத்தும் யத்=யாரிடத்தில் ஆஶ்ரயித்திருக்கின்றனவோ அயமாத்மா=அந்த ஆஶ்ரயம் பரமாத்மா ஆதாரனென்று இச்சுருதி சொல்லுகிறது. இந்த அர்த்தம் 'ப்ராஜ்ஞானே ப்ரதிஷ்டிதம்' 'யஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்கிற இது முதலியபிரமாணங்களிலும் 'ப்ரஹ்ம தம் பராதாத் யோந்யத்ர ஆத்மனோ பிரஹ்ம வேத' இது முதலிய பூர்வவாக்யங்களிலும் ப்ராஹ்மணுதி ஸகல ஜகத்தும் பரமாத்மாவின் ஆஶ்ரயித்திலேயே இருக்கிறது என்று சொல்லியிருப்பதினால் பிரமாணங்களுக்கு அனுகூலமாகவும், முக்யார்த்தமாகவும் ஆகிறது. இப்படி அர்த்தம் செய்துக்கொண்டால் 'யத' என்கிற ஶப்தத்திற்கு சார்த்தக்யமுமாகிறது. இதம் ஸர்வம்=இவ்வெல்லா ஜகத்து, அயமாத்மா = ஆத்மாவிடத்தில் (பிரஹ்மத்தில்) கல்பிதம் (பொய்) என்று பிரதிவாதி சொல்லும் அர்த்தம் யுக்தமல்ல. ஏனெனில் (1) இப்படி அர்த்தம் செய்த பக்ஷத்தில் 'யத்' என்கிற பதம் வ்யர்த்தமாகிறது. (2) இதம் ஸர்வம்=இவ்வெல்லாம், அயமாத்மா=இவ்வாத்மாவாக யிருக்கிறது என்கிற அர்த்தமே ஆகிறது. ஆத்மா=ஆத்மாவிடத்தில் கல்பிதம் என்கிற அர்த்தமாகிறதில்லை. (3) முக்யார்த்தம் பொருந்தாவிட்டால் அமுக்யார்த்தத்தை செய்யவேண்டும். அப்படிச் செய்

யும் அமுக்யார்த்தத்திற்கு இதர ப்ரமாணங்களின் ஸகாயம் வேண்டியது. ஜகத்து கல்பிதமென்கிற அர்த்தம் செய்வதற்கு சகாயமான ப்ரமாணமுமில்லை. ஆகையால் இதம் ஸர்வம் = எல்லா ஜகத்தும், அயமாத்மா = ஆத்மாவா யிருக்கிறதென்கிற முக்யார்த்தம் பொருந்தாததினால், இதம் ஸர்வம் = இவ்வெல்லா ஜகத்தும், ஆத்மா = ஆத்மாவிடத்தில் கல்பிதம் என்கிற அமுக்யார்த்தத்தை அங்கீகரிக்கிறோம் என்று சொல்லுவது யுக்தமல்ல. ஆகையால் இச்சுருதி ஆதாராதேய பாவத்தைச் சொல்லுகிறதே யொழிய, ஜகத்து மித்யை என்கிற அர்த்தத்திற்கு ஆதாரமாகிறதில்லை என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

(4) 'பிரஹ்மைவேதம் ஸர்வம்' என்கிற ஶ்ருதியிலும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமில்லை 'இதம் ஸர்வம் பிரஹ்மைவ' இவ்வாக்கியத்திலிருக்கும் 'பிரஹ்ம' ஶப்தத்திற்கு பிரஹ்மத்தினிடத்தில் கல்பிதம் என்கிற அர்த்தம் முக்யார்த்தமாகிறதில்லை. 'விஶ்வமிதம் வரிஷ்டம்' இம் முன்வாக்கியத்தில் ஜகத்து உத்தமமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜகத்து மித்யையாயின் அந்த ஜகத்து உத்தமமென்று சொல்லுவது எப்படிப்பொருந்தும்?'பிரமைவாதஸ்தாத் பிரஹ்ம [illegible]' இது முதலிய பூர்வவாக்யங்களில் பிரஹ்மம் அ[illegible]பாகத்திலிருக்கிறது, ஊர்த்வபாகத்தி லிருக்கிறது என்று பிரஹ்மத்தின் வ்யாப்தியை அறிவித்துக் கொண்டிருப்பதினால் 'பிரஹ்மைவேதம் ஸர்வம்' என்கிற வாக்யம் 'ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸிஸர்வ' என்கிற கீதாவாக்யத்தின்படிக்கு பிரஹ்ம, ஸர்வம் = ஸர்வவ்யாபகம் (எங்கும் நிறைந்தது) என்று அர்த்தம் செய்வதே ஸரியாகிறது. ஆகையால் இவ்வாக்யமும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைப் போதிக்கிறதில்லை.

(5) 'ஆத்மை வேதம் ஸர்வம்'என்கிற இவ்வாக்யத்திலும் ஜகத்துக்கு மித்யாத்வ போதகமான பதமில்லை. 'இதம் ஸர்வம் ஆத்மா' இவ்வாக்யத்திலிருக்கும் ஆத்மா என்கிற பதத்திற்கு ஆத்மாவிடத்தில் கல்பிதம் என்கிற அர்த்தம் முக்யார்த்தமல்ல. 'ஆத்மைவாதஸ்தாத் ஆத்மா உபரிஷ்டாத்' இது முதலிய பூர்வவாக்யத்தில் பரமாத்மாவுக்கு ஆங்காங்கு இருப்பைச்சொல்லி இம்முன் வாக்யம்

(ஆத்மை வேதம் ஸர்வம்) பரமாத்மாவின் ஸர்வத்ர வ்யாப்தியை சொல்லுகிறது என்று சொல்லுவதே ஸரியாகும். ஏனெனில் பூர்வ வாக்யத்தில் ஆத்மா கீழ்ப்பாகத்திலும் மேல்பாகத்திலும் இருக்கிறதென்று ஆத்மாவை உத்தேசித்தது கீழ்ப்பாக மேல்பாக ஸ்திதியை விதித்திருப்பதினால்'ஆத்மை வேதம் ஸர்வம்' என்கிற வாக்யம் ஆத்மாவை உத்தேசித்து அதன் ஸர்வ ஜகத் வ்யாப்தியைச் சொல்லுகிறது என்று சொல்லுவதே ஸரியானதாகும். ஜகத்தை உத்தேசித்து ஆத்மாவிடத்தில் கல்பிதம் என்று விதிப்பது பூர்வ வாக்யத்திற்கு அனுகுணமாகிறதில்லை. தவிர இவ்வாக்யத்தின் உத்தர வாக்யத்திலேயே பரமாத்மா பூர்ணன் (வ்யாப்தன்) என்று அறியும் ஜனங்கள் எல்லா உலகத்திலும் தம்மிஷ்டப்படிக்கு ஸஞ்சரிக்கிறார்கள். அப்படி யார் அறிவதில்லை? அவனுக்கு ஸர்வலோக ஸஞ்சாரம் உண்டாகிறதில்லை என்று எல்லா லோகங்கள் ஸஞ்சாரம் ஸஞ்சரிப்பவன் முதலிய ஜகத்து சொல்லியிருப்பதினால் பூர்வ வாக்யத்தில் எல்லா ஜகத்தும் மித்யை(முக்காலத்திலுமில்லாதது) என்று சொல்லுவது உத்தரவாக்யத்திற்கு விருத்தமாகிறபடியால் இவ்வாக்யம் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிப்பதில்லை.

(6) காடகத்திலும் பிரஹதாரண்யகத்திலுமுள்ள 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யத்திலும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைப் போதிக்கும் பதமில்லை. பிரதிவாதி இக்காடக வாக்யத்தின் பூர்வத்திலுள்ள ஐந்தாவது மந்த்ரத்தில் பரமாத்மா பின்னிருந்த உலகத்திற்கும் முன் உண்டாகும் உலகத்திற்கும் நியாமகன் = ஸ்வாமி என்று ஜகத்துக்கு ஸத்யத்வம் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஒத்துக்கொண்டிருக்கிறார். 'யதஶ்சோதேதி ஸூர்யோஸ்தம் யத்ர ச கச்சதி' என்கிற ஒன்பதாவது மந்த்ரத்தில் ஸூர்யனின் உதயம் அஸ்தமயம் இவைகள் எந்த பரமாத்மாவின் ப்ரேரணையினால் ஆகிறதோ அந்த பரமாத்மாவின் ஆஶ்ரயத்தினால் தேவதைகள் இருக்கிறார்கள். அப்பரமாத்மனை மீறி நடக்கிறவர்கள் யாரும் இல்லை என்று அர்த்தம் சொல்லப்பட்டிருப்பதினாலும், அந்த அர்த்தத்தை பிரதிவாதி ஒத்துக்கொண்டிருப்பதினாலும் இப்பூர்வ வாக்யத்தினால் ஸூர்யாதி ஜகத்து ஸத்யமென்றே சித்தமாகிறது.

மித்யையான ஜகத்தை 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்யத்தினால் நிஷேதிப்பதற்காக மேற்கூறிய வாக்யங்கள் அந்த ஜகத்தை அனுவாதம் செய்கிறதென்று சொல்லுவது யுக்தமல்ல. ஏனெனில்—பின் ஏதாவது பிரமாணங்களினால் பதார்த்தங்கள் சொல்லப்பட்டிருந்தால் (ப்ரஸக்தமாயிருந்தால்) அப்பதார்த்தங் களின் அனுவாதம் செய்து இதர ப்ரமாணங்களினால் நிஷேதிக்கக் கூடும். தற்காலம் இதர ப்ரமாணங்களினால் ஸ்வர்க்காதி ஜகத்தின் ப்ரஸக்தியே இல்லாமலிருக்க, வேதம்தானே ஜனங்களுக்கு ஸ்வர்க் காதி ஜகத்து இருக்கிறதென்கிற ப்ரமையை யுண்டாக்கி தானே கண்டிக்கிறதென்று சொல்லுவது 'ப்ரக்ஷாலனாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்சனம் வரம்'தானே சேற்றைமெறித்து அதை அலம் பிக் கொள்ளுவதைவிட முதலிலேயே சேற்றில் காலைவைக்காமல் இருப்பது நன்றென்கிற நியாயத்தை யனுசரித்து ஜகத்தைச் சொல்லி மறுபடியும் இல்லை என்று சொல்லுவதைவிட சொல்லா மலே இருப்பது மேலாக இருக்குமாகையால் அயுக்தமாகிறது.

ச்ருதி தானே ஸ்வர்க்காதி லோகங்களின் ப்ரமையை உண் டாக்கி தானே நிஷேதிக்கிறதென்பது 'ப்ரக்ஷாலனாத்தி பங்கஸ்ய' என்கிற நியாயானுஸாரமாக விருத்தமாகிறதென்கிற தூஷணம் தன்பேரில் வருகிறது என்று தாம் அறிந்திருந்தும், கேவலம் தம்மிட மதத்திலுள்ள ஆக்ரகத்தினால் 'ச்ருதிக்கு ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கும் விஷயத்தில் தாத்பர்யமில்லை. அதை நிஷேதிப்பதற்காக அனுவாதம் செய்கிறது' என்று 3-2-22 ஸூத்ர பாஷ்யத்தில் சங்கராசார்யர் சொல்லி நடந்திருக்கிறாரே யொழிய, எந்த ப்ரமாணத்தினால் ப்ரஸக்தமாயிருக்கும் ஸ்வர்க் காதி லோகங்களை ச்ருதி அனுவாதம் செய்கிறது என்பதை அவர் சொல்லவில்லை. மேலும் சொல்லுவதற்கு வருகிறதுமில்லை. அதீந்திரியமான ஸ்வர்க்காதி லோகங்கள் வேதத்தைவிட வேறு ப்ரமாணங்களினால் அறியக்கூடியதுமல்ல.

'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' இவ்வாக்யத்திற்கு மேலுள்ள 12,13வது மந்த்ரத்தில் 'ஈசானோபூதபவ்யஸ்ய' என்று பரமாத்மா பூதபவிஷ்ய (பின்னிருந்த மின்வரும்) ஜகத்துக்கு ஸ்வாமி என்று

பலதடவைகளில் சொல்லுகிறது. நிஷேதித்த பிறகு மருபடியும் ஜகத்து இருக்கிறதென்று சொல்லுவது பொருந்துகிறதில்லை யாகையால்'நிஷேதிப்பதற்காக அனுவாதம் செய்கிறதேயொழிய ஶ்ருதிக்கு அவ்விஷயத்தில் தாத்பர்யமில்லை' என்று சொல்லுவது பொருந்துவதில்லை யாகையால் இச்சுருதியில் சொல்லப்பட்ட ஜகத்து ஸத்யமானதென்றே ஒத்துக் கொள்ளவேண்டும்.

'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற காடகம், பிரஹதாரண் யகம் இவ்விரண்டு வாக்யங்களின் பூர்வபாகத்தில் 'மனஸைவேத மாப்தவ்யம்' 'மனஸைவானுத்ரஷ்டவ்யம்' என்கிற வாக்யங்கள் இருந்து, ஜீவன் பரமாத்மாவை மனதினால் காண்கிறான். ஜீவன் ஞாதா, பரமாத்மா ஞேயன், மனது, கரணம் (ஸாதனம்) என்று இவ்வாக்யம் அறிவிக்கிறது. மேலும் ஞாத்ரு ஞேயபாவத்தினாலும் ஜீவ பரமாத்மாக்களின் பேதம் சித்தமாகிறதென்று சங்கராசார் யர் தம்மிட கிரந்தத்தில் பல இடங்களில் ஒத்துக்கொண்டிருக் கிறபடியால் ஜீவபரமாத்மாக்களின் பேதம், ஞானம், கரணம் (மனது) முதலிய ஜகத்து ஸத்யமானது என்றே 'மனஸைவ' என் கிற இது முதலிய வாக்யத்தினால் சித்தமாகிறபடியால் 'நேஹநா நாஸ்தி கிஞ்சன' என்கிற ஶ்ருதிக்கு ஜகத்து மித்யை என்கிற அர்த்தத்தைச் சொல்லுவது பொருந்துகிறதில்லை. ஆகையால் 'யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ, ம்ருத்யோஸ்ஸ ம்ருத் யுமாப்னோதி ய இஹ நானேவபஶ்யதி' (கா. 2-4-10) எந்த பர மாத்மா இவ்வுலகத்திலிருக்கிறானோ அதே பரமாத்மா பரலோ கத்திலிருக்கிறான். எந்த பரமாத்மா பரலோகத்திலிருக்கிறானோ அவனே இவ்வுலகத்திலுமிருக்கிறான். அப்பரமாத்மாவின் ரூபத் தில் பேதமில்லை. அப்பரமாத்மாவின் ரூபத்தில் யார் பேதத்தைக் காண்கிறார்களோ அவர்கள் ம்ருத்யுவை அடைகிறார்கள் என்று பூர்வ வாக்கியத்தில் பரமாத்மாவின் ரூபங்களுக்கு அபேதத்தைச் சொல்லி 'மனஸைவேதமாப்தவ்யம் நேஹ நாநாஸ்தி கிஞ்சன, ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்னோதி யஇஹநாநேவ பஶ்யதி' என் கிற முன் வாக்கியத்தில் இவ்விதமாக இவ்வுலகத்திலும் பரலோ கத்திலுமுள்ள பரமாத்மா ஒருவனே என்று பரமாத்மாவின் ஞானத்தை சுத்தமான மனதினால் ஸம்பாதிக்க வேணும். (நியா

மக்ஞன பரமாத்மாவின் ரூபத்தில் பேதத்தை அறியக்கூடாது) இஹ = இவ்வுலகத்திலிருக்கும் பரமாத்மாவினிடத்தில், கிஞ்சனநா நா = பரலோகாத்யந்தர்யாமி ரூபங்களுடன் பேதமில்லை. எவன் இவ்வுலகத்திலிருக்கும் பரமாத்மா வேறு, பரலோகத்திலிருக்கும் பரமாத்மா வேறு என்னிடத்தில் நியாமகனுயிருக்கும் பரமாத்மா வேறு உன்னிடத்தில் நியாமகனுயிருக்கும் பரமாத்மா வேறு என்று அந்தர்யாமி பகவத்ரூபங்களில் பேதத்தைக் காண்கிருனே அவனுக்கு நரகாத்யனர்த்தங்கள் உண்டாகிறது என்று வாதியினுல் சொல்லப்பட்ட அர்த்தத்தையே அங்கீகரிக்கவேண்டியது.

'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற (பிரஹ.) 19-வது மந்த்ரத்தின் பூர்வத்திலுள்ள 'ஈஶானம் பூதபவ்யஸ்ய' என்கிற 15-வது மந்த்ரத்திலும் பூதபவ்யமான ஜகத்துக்கு பரமாத்மா ஸ்வாமி என்று சொல்லி, ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லியிருக்கிறது என்பதை பிரதிவாதி அங்கீகரித்தும், அச்சுருதி ஜகத்துக்கு பொய்யான ஸத்யத்வத்தை (பொய்யான நிஜத்தன்மையை) அறிவிக்கிறதென்று பிரதிவாதி சொல்லுகிருரே யொழிய, ஶ்ருதியில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் பொய் என்று சொல்லுவதற்கு யாதொரு ஆதாரத்தையும் காட்டுவதில்லை. ஆகையால் அச்சத்யத்வம் பொய் என்று ஒத்துக்கொள்ளுவதற்கு யோக்யமானதல்ல.

'தத்தேவா: ஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர் ஹோபாஸதேம்ருதம்' என்கிற 16வது மந்த்ரத்திலும் ப்ரகாஶமுள்ள பதார்த்தங்களுக்கு பரமாத்மா ப்ரகாஶத்தைத் தருகிறவன் என்று தேவதைகள் பரமாத்மாவை உபாஸிக்கிருர்கள் என்றும், 'யஸ்மின் பஞ்ச பஞ்சஜனு: ஆகாஶஶ்ச ப்ரதிஷ்டித: தமேவமன்ய ஆத்மானம் வித்வான் பிரஹ்மாம்ருதோம்ருதம்' என்கிற 17வது மந்த்ரத்தில் எந்த பரமாத்மனிடத்தில் ப்ராணம், சக்ஷுராதி இந்திரியங்கள் ஆகாஶம் முதலியவைகளெல்லாம் ஆஶ்ரயித்து இருக்கின்றனவோ அந்த பரமாத்மனே அவன் ஸர்வாஶ்ரயனென்று அறிந்துகொள்ளும் ஜனங்கள் மோக்ஷத்தையடைகிருர்கள் என்றும், 'ப்ராணஸ்ய ப்ராணமுத சக்ஷுஷஶ்சக்ஷுருத ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மனஸோயே மனோவிது:தே நிசிக்யுர் ப்ரஹ்ம புராணமக்ர்யம்'என்கிற

18வது மந்த்ரத்தில் பரமாத்மா ப்ராணம சக்ஷுஸ் ஶ்ரோத்ரம் முதலியவைகளுக்கு சேஷ்டா தர்ஶனம் முதலிய ஶக்திகளைக் கொடுப்பவன் என்று அப்பரமாத்மனை அறியவேண்டும் என்று சொல்லியிருப்பதினால் தேவதைகளே முதலியவர்கள் பிராணம், சக்ஷுஸ், ஆகாயம், மனது, ஞாதா, ஞேயம், உபாஸனை முதலிய எல்லா ஜகத்தும் ஸத்யமென்றே சித்தமாகிறது.

மேலும் 22வது மந்த்ரத்திலும் 'ஸர்வஸ்யவஶீ ஸர்வஸ்யேஶான: ஸர்வஸ்யாதிபதி:' முதலிய வாக்கியங்களினால் எல்லா ஜகத்தையும் ஒப்புக்கொண்டு அந்த ஜகத்துக்கு பரமாத்மா நியாமகன், ஸ்வாமி, அதிபதி என்று சொல்லியிருக்கிறது. மலடிக்கு மகனே இல்லாமலிருக்க, சைத்ரன் அம்மகனுக்கு நியாமகன், அவனுக்கு ஆதாரன் என்று சொல்லுவது எப்படிப்பொருந்துகிறதில்லையோ அப்படியே ஜகத்தே இல்லாமலிருக்க அந்த ஜகத்துக்கு நியாமகன், ஆஶ்ரயன் என்று சொல்லுவதும் பொருந்துகிறதில்லை: ஆகையினால் 'நேஹ நாநாஸ்திகிஞ்சன' என்கிற ப்ரஹதாரண்யக வாக்யத்தின் பூர்வோத்தர வாக்யங்களும் ஜகத்துக்கு ஸத்யத்வத்தையே அறிவிக்கின்றன. மேலும் 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' இவ்வாக்யத்தின் 'மனஸைவானு த்ரஷ்டவ்யம்' என்கிற பூர்வ பாகமும், ஜீவபரமாத்மாக்களின் பேதம், ஞானம், ஞாதா, கரணம் (மனது) முதலிய ஜகத்து நிஜமென்றே சொல்லுகிறது. 'நேஹ நாநாஸ்தி' என்கிற வாக்யத்தின் 'ம்ருதயோ: ஸ ம்ருத்யுமாப்னோதி' என்கிற உத்தரபாகத்திலும் ம்ருத்யுவினால் மரணமடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ம்ருத்யு முதலிய ஜகத்து பொய்யா (முக்காலத்திலுமில்லாததா)யின் ம்ருத்யுவினால் மரணத்தை அடைகிறான் என்று சொல்லுவது எப்படி பொருந்தும். ஆகையால் இவ்வாக்யம் ம்ருத்யுமுதலிய ஜகத்துக்குஸத்யத்வத்தையே அறிவிக்கிறது. இப்படி ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லும் அநேக வாக்யங்களுக்கு மத்தியில் இருக்கும் 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிறவாக்யம் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கிறதில்லை என்பது மாத்ரமே அல்லாமல் ஜகத்துக்கு ஸத்யத்வத்தையே அறிவிக்கிறது.

(7) ப்ருஹதாரண்யகோபனிஷத்திலுள்ள 'யத்ரஹித்வைதமிவபவதி' 'யத்ரது ஸர்வமாத்மைவாபூத்' இவ்விரண்டு பாகங்களும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதில்லை. எப்படி எனின்:—

(a) 'யத்ரஹித்வைதமிவ பவதி' என்கிற பாகத்தில் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமே இல்லை.

(b) தவிர சங்கராசார்யர், ஸுரேஸ்வராசார்யர், ஆனந்தகிரி இவர்கள் இவ்வுபனிஷத்துக்கு வியாக்யானம் செய்யுங்காலத்தில் இச்சுருதியில் 'த்வைதமிவ' என்று த்வைதத்திற்கு த்வைதத்தின் உபமானம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வமே சித்தமாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றும் சங்கராசார்யர் பௌத்தமதத்தைக் கண்டிக்கும்போது 'பஹிர்வத் அவபாஸதே' ஜகத்து வெளி பதார்த்தங்களைப் போல் தோன்றுவது என்றுஜகத்துக்கு பாஹ்யபதார்த்தங்களின் உதாஹரணம் கொடுத்திருப்பதினால் பாஹ்ய ஜகத்து ஸத்யமென்று சித்தமாகிறது. 'நஹிவிஷ்ணுமித்ரோ வந்த்யாபுத்ரவத்' என்று விஷ்ணுமித்ரனுக்கு மலடிமகனின் உதாஹரணம் கொடுக்கப்படுகிறதில்லை என்று 2-2-28வது ப்ரஹ்மஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் 'இவ' சப்தத்திற்கு ஸமானார்த்தமான 'வத்' என்கிற பதத்திற்கு பூர்வத்தில் 'பஹி:' என்று பாஹ்ய ஜகத்தை அறிவிக்கும் பதம் இருப்பதினால், பாஹ்ய ஜகத்து ஸத்யமானதென்று சித்தமாகிறதென்று சொல்லி இருப்பதினால் 'வத்' பதத்திற்கு ஸமானார்த்தமான 'இவ' சப்தத்திற்கு பூர்வத்தில் 'த்வைதம்' என்று பிரபஞ்சத்தை அறிவிக்கும் பதமிருப்பதினால் 'த்வைத மிவ பவதி' என்கிற இச்சுருதி த்வைத ப்ரபஞ்சம் (ஜகத்து) பாரமார்த்திக ஸத்யமென்று அறிவிக்கிறதென்று சித்தமாகிறது. ஆகையால் இச்சுருதி ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தின் விஷயத்திலேயே ஆதாரமாகிறது. மித்யாத்வத்தின் விஷயத்தில் ஆதாரமாகிறதில்லை. மித்யாத்வத்தின் விஷயத்தில் இச்சுருதி பிரமாணம் (ஆதாரம்) என்று சொல்லுவது அத்வைத க்ரந்தங்களுக்கே விருத்தமாகிறது. 'வாசாரம்பணம்' 'ஆத்மைவேதம் ஸர்வம்' இச்சுருதிகளில் ஜகத்

துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கும் பதமில்லாததினால் ஜகத்துக்கு மித்யாத்வம் சொல்லுகிறதில்லை என்று அந்தந்த ஶ்ருத்யர்த்தங்களின் விசாரணை காலத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதினால் "வாசாரம்பணம், ஆத்மை வேதம் ஸர்வம்' இவைகளே முதலிய ஶ்ருதிகள் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கின்றபடியால் 'யத்ரஹி த்வைதமிவ பவதி' என்கிற சுருதி ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் அந்த ஸத்யத்வத்தை அங்கீகரிக்கக் கூடாது என்று சங்கராசார்யர் சொல்லியது சரியல்லவென்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

(c) 'யத்ரது ஸர்வம் ஆத்மைவாபூத் தத்கேன கம் பஶ்யேத் ...யேநேதம் ஸர்வம் விஜானாதி தம் கேன விஜானீயாத் ஸவா ஏஷ நேதி நேதி.....விஞ்ஞாதாரமரே கேன விஜானீயாத்' என்கிற இச்சுருதி ஞானாவஸ்தையில் (மோக்ஷதசையில்) ஆத்மாவைவிட வேறு பதார்த்தம் ஒன்றும் இல்லாவிடின் கந்தாதிகளின் அறிவு எப்படி யுண்டாகும்? எந்த பரமாத்மாவினால் ஜீவன் எல்லா ஜகத்தையும் அறிகிறானோ அப்பரமாத்மனை அஜ்ஜீவன் எப்படி அறிவான்? தான் தன்னை எப்படி அறிவான்? மோக்ஷதசையில் கந்தாதி ஞானம், பரமாத்மாவின் ஞானம், தன்னிட ஞானம், இதரலோகங்களின் ஞானம் ஆவஶ்யகமென்று 'ஜக்ஷன் க்ரீடன்' இது முதலிய ஶ்ருதிகளினால் சொல்லப்பட்டிருப்பதினால் அந்தஞானத்திற்கு காரணமான பரமாத்மனைவிட வேறான பதார்த்தத்தை ஒப்புக்கொள்ளவேவேண்டும் என்று இச்சுருதி ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவித்துக்கொண்டே மித்யாத்வத்தை நிஷேதிக்கிறது.

(d) *ப்ரஹ்மவித்யாபரணகாரர், அபேயதீக்ஷிதர் முதலிய அத்வைதிகளும் 'யேனேதம், என்கிற வாக்யம் எந்த பரமாத்மனால் ஜீவன் எல்லாவற்றையும் அறிகிறானோ என்று ஜீவ பரமாத்மாக்

---

* ननु जीवेश्वराभेदप्रकरणे 'विज्ञातारमरे केन विजानीयादि' त्यतः पूर्ववाक्ये येनेदं सर्वं विजानाति तं केन विजानीयादि'ति जीवाद्भिन्नतया परमेश्वरः किमर्थं प्रतिपाद्यते । येनेश्वरेण जीव इदं सर्वं विजानाति, तं परमेश्वरं केन विजानीयादितिहि तदर्थः । तस्मादिदं वाक्यमत्यन्ताभेदवादिनोऽननुगुणमिति । (ब्रह्मविद्याभरणं 1—4—22.)

களின் பேதத்தை (ஞாதா, ஞேயம், ஞானம் முதலிய பிரபஞ்சத்தை) முக்யமாக அறிவிக்கிறபடியால் இந்த ஶ்ருதி ஜீவபரமாத்மாக்களின் அபேதத்தைச் சொல்லும் (அத்வைத) மதத்திற்கு விருத்தமாகிறது என்று அங்கீகரித்திருந்தும் கேவலம் தம்மிட மதத்தின் அபிமானத்தினாலேயே ஶ்ருதியின் இந்த முக்யார்த்தத்தை விட்டு *'யேன' என்கிற பதத்தை முதல்வேற்றுமையாக வைத்துக்கொண்டு 'ய:' எந்த ஜீவன் என்கிற அர்த்தத்தை அங்கீகரித்து அவர்கள் செய்திருக்கும் அர்த்தம் முக்யார்த்தமல்ல. 'நாங்கள் செய்திருக்கும் வாக்யங்களின் பொருந்துகை மிகவும் கஷ்டமானதே ஆயினும் ஸஹிக்கவேண்டியதே, நாங்கள் செய்திருக்கும் அர்த்தம் சரியானதல்ல (ஸ்வரஸமானதல்ல)' என்று அவர்களே தங்களிட வாக்கினாலேயே அங்கீகரித்திருக்கிறார்கள். ஆகையினாலும் இச்சுருதி ஜீவபரமாத்மாக்களின் ஐக்கியத்தையும், ஜகத்துக்கு மித்யாத்வத்தையும் சொல்லும் அத்வைதிகளுக்கு ஸாதகமாகாததும் தவிர பாதகமுமாகிறது. 'யேனேதம் ஸர்வம் விஜாநாதி' இவ்வாக்யத்திலுள்ள 'யேன' என்கிற பதத்தினால் போதிக்கப்படும் வஸ்துவையே 'ஸவா ஏஷ நேதி' என்கிற வாக்யத்திலிருக்கும் 'ஸ:' என்கிற பதத்தினால் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருப்பதினால் 'ஸவா ஏஷ நேதி நேதி' என்கிற பின் வாக்யத்திலுள்ள 'ஸ:' என்கிற பதத்தினால் பரப்ரஹ்மத்தையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சங்கராசார்யர் வ்யாக்யானம் செய்திருக்கிறபடியாலும், வாஸ்தவ

---

* 'येने'ति तृतीयान्तस्य परामर्शनीयं परमात्मानं विजानातेः कर्तारं जीवञ्चासाद्य समञ्जसं भवति । जीवस्य ब्रह्माभेदेन प्रस्तुतत्वांगीकारे तु 'येने'ति तृतीया प्रथमार्थे योजनीयेति क्लेशस्स्यात् ।

(न्यायरक्षामणि 1—4—22.)

येनेदं सर्वं विजानातीत्यस्य योजनाक्लेशोऽपि अद्वैतप्रस्तावानुरोधार्थत्वान्न दोषायेत्याशय इति (न्यायर. 1—4—22) येनेति तृतीया प्रथमार्थे भविष्यति।अथवा येन विशुद्धस्यसाक्षिणा अयं प्रमाता विजानातीत्यर्थो द्रष्टव्यः। ब्रह्मवि. (1—4—22.)

மாக 'ஸ:' என்கிற பதத்திற்கு பரப்ரஹ்ம மென்றே அர்த்த மாய்க் கொண்டிருப்பதினாலும் ஜீவனை எடுத்துக்கொள்ள முடிவ தில்லை. ஆகையால் 'யேன' என்கிற பதத்திற்கு ஜீவனென்று அர்த்தம் செய்வது யுக்தமல்ல.

(e) 'விஞ்ஞாதாரமரே கேன விஜானீயாத்' என்கிற வேத வாக்யத்தினால் மோக்ஷதசையில் ஜீவனுக்கு கர்த்ருத்வம் சித்த மாகிறதென்று சங்கராசார்யர் அங்கீகரித்தும்,கேவலம் தம் மதத் திலுள்ள ஆக்ரஹத்தினால் இவ்வாக்யம் பின்னிருந்த (ஸம்ஸாரா வஸ்தையிலிருந்த) கர்த்ருத்வத்தை அறிவிக்கிறதென்று தம்மிட கைச்சரக்கைச் சேர்த்துக்கொண்டு சொல்லுகிறார். அவர் எதை யாகிலும் சொல்லிக்கொள்ளட்டும். இச்சுருதி மோக்ஷதசையில் ஜீவனுக்கு கர்த்ருத்வம் சொல்லுகிறதென்பது சித்தமாகிறது.

(f) இச்சுருதிக்கு ஜகத்து மித்யை என்று சொல்லுவதில் தாத்பர்யமிருந்தால் 'ஆத்மாதிரிக்தம் ஜகத் நாஸ்தி' (பரமாத்மனை விட வேறான ஜகத்து கிடையாது) என்று மாத்திரம் சொன்னால் போதுமாயிருக்க 'யத்ரஹி த்வைதமிவ பவதி' இது முதலிய பெரிய (நீட்டான) வாக்யத்தைச் சொல்லியது வீணாகிறது.

(g) மோக்ஷாவஸ்தையில் கந்தாதிஞானம் இல்லை என்று சொல்லுவதில் அபிப்ராயமிருந்தால் 'ந பஶ்யதி' 'ந ஜிக்ரதி' இவ் வளவும்மாத்ரமே சொன்னால் போதுமாயிருக்க 'பஶ்யேத்' 'ஜிக் ரேத்' முதலிய விதிலிஙந்த பதங்களைச் சொல்லியதும் வ்யர்த்தமா கிறது. ஆகையால் இச்சுருதிக்கு ஜகத்து மித்யை என்று சொல் லும் விஷயத்தில் தாத்பர்யமில்லை என்றே சித்தமாகிறது.

இரண்டாவது பதார்த்தம் இருந்தால்தான் கந்தாதி ஞானம், பரமாத்மாவின் ஞானம், தன்னிட ஞானம் இவைகள் பொருந்து கிறது. ஆத்மாதிரிக்தமான வஸ்துவே மோக்ஷத்தில் இல்லாவிடின் கந்தாதி ஞானம் எப்படிப் பொருந்தும்? கந்தாதிஞானம் மோக்ஷ தசையில் ஆவஶ்யகமென்று 'ஜக்ஷன் க்ரீடன்' இது முதலிய ஶ்ருதி களில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஈஶ்வராதிகளின் ஞான முண்டாவதற்காக மோக்ஷத்தில் இரண்டாவது பதார்த்தத்தை

அங்கீகரிக்கவேண்டும் என்று த்வைதிகளால் சொல்லப்படும் அர்த்தமே இவ்வாக்யத்திற்கு ஸ்வரஸ (ஸார்த்தக) மாகிறது. அப்படியே விதிலிஙந்த ப்ரத்யயங்களுக்கும் ஸார்த்தக்யமுண்டாகிறது.

ஆகையால் 'யத்ரஹி த்வைதமிவபவதி' என்கிற முதல்பாகமும், 'யத்ரது ஸர்வம் ஆத்மைவாபூத்' என்கிற இரண்டாவது பாகமும்—சங்கராசார்யரே முதலான அத்வைதிகளினுல் சொல்லப்பட்டிருப்பதைப் போலவும், வாஸ்தவமாக ஶ்ருதிகளின் பத ஸ்வாரஸ்யத்தினுலும் ஜகத்து (த்வைத பிரபஞ்சம்) பாரமார்த்திக ஸத்யம் மித்யை அல்ல என்கிற விஷயத்திற்கே ஆதாரமாகிறபடியால் "அச்சுருதியின் இரண்டுபாகங்களும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் விஷயத்தில் ஆதாரமாகிற" தென்று பிரதிவாதிகள் (அத்வைதிகள்) சொல்லுவது யுக்தமல்ல.

(8) 'அதாத ஆதேஶ: நேதி நேதி நஹ்யேதஸ்மாதிதி' என்கிற இச்சுருதியில் ஜகத்துக்கு மித்யாத்வ போதகமான பதமில்லை. இச்சுருதி ப்ரஹ்மம் 'இதி ந இதி ந' என்று * பூர்வ வாக்யத்தில் பிரஸக்தமாயிருக்கும் மூர்த்த பதார்த்த ரூபமல்ல, அமூர்த்த பதார்த்த ரூபமல்ல என்றல் ப்ரஹ்மம் மூர்த்த விலக்ஷணம் (பின்னம்) மற்றும் அமூர்த்த விலக்ஷணம் (பின்னம்) என்று அறிவிக்கிறது. எப்படி குடம் வஸ்திரமல்ல என்றல் குடத்திற்கும் வஸ்த்ரத்திற்கும் பேதமே சித்தமாகிறதே யொழிய வஸ்திரமே இல்லை (மித்யை) என்று சித்தமாகிறதில்லையோ, அப்படியே ப்ரஹ்மம் மூர்த்த பதார்த்தமல்ல அமூர்த்த பதார்த்தமல்ல என்று சொல்லியிருப்பதினுல் ப்ரஹ்மம் மூர்த்த பின்னம், அமூர்த்த பின்னம் என்று சித்தமாகிறதேயொழிய மூர்த்தாமூர்த்த ரூபமான ஜகத்து மித்யை என்று சித்தமாகிறதில்லை. ஆகையால் இச்சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுவதற்கு ஆதாரமாகிறதில்லை.

(9) 'ஸர்வம் கல்பிதம் ப்ரஹ்ம' இச்சுருதியிலும் ஜகத்துக்கு மித்யாத்வ போதகமான பதமில்லை. ப்ரஹ்ம என்கிற பதத்திற்கு

---

* 'த்வேவாவ ப்ராஹ்மணோ ரூபே மூர்த்தம் சாமூர்த்தஞ்ச' இதிபூர்வ வாக்யம்.

ப் ஹ்மத்தினிடத்தில் கல்பிதமென்கிற அர்த்தம் முக்ய வ்ருத்தியி ஞல் ஆகிறதில்லை. லக்ஷணு (அமுக்ய) வ்ருத்தியிஞல் செய்யவேண் டும். ப்ரஹ்ம ஶப்தத்திற்கு முக்யார்த்தத்தை விட்ட பிறகு இதர ப்ரமாணங்களுக்கு அவிருத்தமான அர்த்தத்தையே கிரகிக்க வேண்டியது. மேலும் சங்கராசார்யர் இவ்வாக்யத்தின் மின்னிருக் கும் 'ஸர்வகாம: ஸர்வ கந்த:' என்கிற வாக்யத்திலுள்ள 'ஸர்வ காம:' என்கிற பதத்திற்கு வ்யாக்யானம் செய்யும்போது 'காமோ ஸ்மி பரதர்ஷப' இக்கீதா வாக்யாநு ஸாரமாக பரமாத்மா ஸர்வ காமரூபன் என்று ஏன் அர்த்தம் செய்யக்கூடாது என்று சங் கித்துக்கொண்டு, காமம் பரதந்திரமானது, பிரக்கக்கூடியது. அக் காமத்திற்கும் பரமாத்மனுக்கும் அபேதம் சொல்லின்—பரமாத் மாவின் ஸ்வாதந்த்ர்யம், அநுதித்வம் இவைகள் நஷ்டமாகவேண் டியதாகும். ஆகையால் 'ஸர்வகாம:' என்கிற பதத்திற்கு ஸர்வ காமத்திற்கு ஸ்வாமி என்று அர்த்தம் செய்யவேணுமென்றும், 'காமோஸ்மி' என்கிற கீதாவாக்யத்திலும் ஸ்ரீ கிருஷ்ணபகவாந் காமரூபி என்று அர்த்தம் செய்யாமல் காமம் ஈஶ்வரனிட அதீன மென்று அர்த்தம் செய்யவேண்டும் (ஸ்ரீ கிருஷ்ணன் காமத்திற்கு ஸ்வாமி என்றே அர்த்தம் செய்யவேண்டும்) என்று சொல்லி யிருக்கிறுர்.

மேலும், 'ஸர்வஸ்யவஶீ, ஏஷ ஸர்வேஶ்வர:, ஸர்வஶ்யாதி பதி:, ஸர்வஶ்யேஶான:, ஏஷ பூதாதிபதி:, ஏஷ பூதபால:' முதலிய அநேக வேத வாக்யங்களிஞல் எல்லா ஜகத்தும் ப்ரஹ்மத்தின் அதீனம், பிரஹ்மம் ஜகத்துக்கு ஸ்வாமி என்று சொல்லப்பட்டி ருக்கிறது. ப்ருஹதாரண்யகத்தின் 2-5-1 மந்த்ர பாஷ்யத்திலும் சங்கராசார்யர்-இதம் ஸர்வம் = இது ஸர்வாப்தி ஸாதனம் (எல்லா பதார்த்தங்களையும் அடைவதற்குக் காரணமானது) என்று அர்த் தம் செய்திருக்கிறுர். அதைப்போலவே 'ஸர்வம் கல்பிதம் ப்ர ஹ்ம' இவ்வாக்யத்திற்கும் இவ்வெல்லாஜகத்தும், ப்ரஹ்ம = ப்ரஹ் மாதீனமானது, அல்லது, இதம் ப்ரஹ்ம = இந்த ப்ரஹ்மம், ஸர் வம் = எல்லா ஜகத்துக்கும் நியாமகமானது. அல்லது, இதம் ப்ரஹ்ம = இப்பிரஹ்மம், ஸர்வம் = ஸர்வப்ராப்தி ஸாதனம் என்று இவ்விதமான அர்த்தங்களைச் செய்வதே சரியானது. ஆகையால்

'ப்ரஹ்மைமேவதம் ஸர்வம்' 'ஸர்வம் யதயமாத்மா' 'ஆத்மை வேதம் ஸர்வம்' முதலிய வாக்யங்களைப் போலவே இவ்வாக்ய மும் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கிறதில்லை.

'வாசாரம்பணம்' இது முதலிய ஶ்ருதிகளினால் ஜகத்துக்கு மித்யாத்வம் சித்திக்கிறதில்லையாகையால், இச்சுருதிகளின், ஆதா ரத்தினால் ஜகத்துமித்யை என்று 'ததநன்யத்வ மாரம்பண ஶப்தா திப்ய:' என்கிற ஸூத்ரம் சொல்லுகிறதென்று பிரதிவாதி வ்யாக் யானம் செய்திருப்பது சரியல்ல. ஷை ஸூத்ரத்திலும் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமுமில்லை.

இவ்விதமாக வேதம், ஸூத்ரம், கீதாரூபமான இப்ரஸ்தான த்ரயத்திலும் ஜகத்து மித்யை என்று சொல்லும் வாக்யம் ஒன்றும் இல்லாததினாலும், ஜகத்து ஸத்யம் என்கிற விஷயத்தில் ப்ர மாணமாகிய வேத, ஸூத்ர, கீதாரூபமான, ப்ரஸ்தானத்ரயமும், பிரத்யக்ஷம், அனுமானம் இவைகளும் ஆதாரங்களா யிருப்பதினா லும் "ஜகத்து ஸத்யம், மித்யையல்ல" என்று கோர்ட்டார் தீர் மானிக்கிறார்கள்.

---

## அத்யாஸ விஷயத்தில் ஜட்ஜ்மெண்ட்.

---

ப்ரதிவாதியின் மதத்தின்படிக்கே ப்ரஹ்மத்தினிடத்தில் ஜகத் தின் ப்ரமை பொருந்துகிறதில்லை. ஆகையால் ப்ரத்யக்ஷாதி பிர மாணங்களினால் காணப்படும் ப்ராஹ்மணவர்ணாதி எல்லா ஜகத்து ப்ரஹ்மத்தினிடத்தில் கல்பிதம் (பொய் = முக்காலத்திலுமில்லா தது) என்கிறது யுக்தமல்ல. ஏனெனின்:—

ப்ரமமுண்டாவதற்குக் காரணங்கள்:—(1) அதிஷ்டானம் (எந்த வஸ்துவைப்பார்த்து ப்ரமமுண்டாகிறதோ அந்த வஸ்து) இருக்கவேணும். (2) ப்ராந்தனாகிற புருஷன் வேண்டும். (3) அந்த அதிஷ்டானத்தில் ஸாமான்ய தர்மம். (4) விசேஷ தர்மம். (5)ஆரோபிக்கப்படும் வஸ்துவின் ஸாத்ருஶ்யம். (6) ப்ராந்தனாகும் புருஷனுக்கு ஸாமான்ய தர்மத்துடன் கூடிய அதிஷ்டானத்தின்

ஞானம், (7) விசேஷ தர்மத்தின் அஞ்ஞானம், (8) ஆரோபிக்கப் படும் வஸ்துவின் ஸாத்ருஸ்யத்தின் ஞானம், (9) அந்த ஞானத் திற்குக் காரணமான தேஹேந்திரியங்கள் இவைகள் தேவை. உதாரணம்:—கயற்றில் பாம்பின் ப்ரமை வருவதற்கு கயறு அதிஷ்டானம். அந்த அதிஷ்டானத்தில் இதம்த்வரூபமான (எதி ரில் இருக்கை என்கிற) ஸாமான்ய தர்மம், ரஜ்ஜுத்வரூப (கயற் றுத்தனம்) விசேஷ தர்மம், பாம்மைப்போல் நீட்டுத்தனம், ப்ரம மடையும் மனிதனுக்கு, இதம் = இது என்கிற ஸாமான்யதர்மத் துடன்கூடிய கயற்றின் ஞானம், இது கயறு என்கிற (கயற்றுத் தன்மையின்) விசேஷ ஞானமின்மை (அஞ்ஞானம்) பாம்பைப் போல் நீட்டுத் தனத்தின் அறிவு, மேற்படி அறிவுக்குக் காரண மான இந்திரியாதிகள், இவைகள் இருப்பதினுல் கயற்றில் பாம் பின் ப்ரமை மனிதனுக்கு வருகிறது.

'ப்ரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா' என்றுசொல்லும் அத்வைதி களின் மதப்படிக்கு ப்ரஹ்மத்தைவிட வேருன வஸ்துவே இல் லாததினுல் ப்ரஹ்மத்தில் ப்ரஹ்மத்திற்கே ப்ரமம் வருகிறது (ப்ரஹ்மமே ப்ரமத்திற்கு அதிஷ்டானம் ஆஸ்ரயம்) என்று சொல்ல வேண்டியதாகிறது. ப்ரஹ்மம் நிர்த்தர்மகமான (ஸகல தர்ம ரஹிதமான) தால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் அதிஷ்டான மாகிறதற்குக் காரணமான ஸாமான்ய தர்மம், விசேஷ தர்மம், ஆரோபிக்கப்படும் ஜகத்தின் ஸாத்ருஸ்யம் இவைகளில்லை. மற்றும் ப்ரமத்தை அடைவதற்குக் காரணமான ஸாமான்ய தர்மத்தின் ஞானம், விசேஷ தர்மங்களின் அஞ்ஞானம், ஸாத்ருஸ்யஞானம் அந்த ஞானத்திற்குக் காரணமான தேஹேந்திரியாதிகள் கிடை யாது. ஆகையால் ப்ரஹ்மம் ஜகத்தின் ப்ரமத்திற்கு அதிஷ்டான மும் ஆஸ்ரயமும் (ப்ராந்தனும்) ஆகிறதற்கு சாத்யமில்லை. ப்ரமத் திற்கு அதிஷ்டானமும், ஆஸ்ரயமும் (ப்ராந்தனும்) ஆகியவஸ் துவே இல்லாததினுல் ஜகத்தின் ப்ரமையே பொருந்துகிறதில்லை. தவிர மேற்சொல்லிய காரணங்களினுல் ப்ரமம் பொருந்துகிற தில்லை என்று சங்கராசார்யர், பாமதிகாரர் முதலிய அத்வைதி களும் 4-1-3-வது ப்ரஹ்மஸூத்ர வ்யாக்யானத்தில் *'யுக்தம்ஹி'

* युक्तं हि पुरोवर्तिनि द्रव्ये द्राघीयसि सामान्यरूपेणालोचिते

இது முதலிய வாக்யங்களினால் அங்கீகரித்திருக்கிறார்கள். இவ்விதமாக ஜகத்தின் ப்ரமம் பொருந்தாததினால் ப்ராஹ்மண வர்ணாதி எல்லா ஜகத்தும் ரஜ்ஜு ஸர்ப்பத்வத்தைப்போல் ப்ரமத்தினால் தோன்றுகிறது. (மித்யை = முக்காலத்திலு மில்லாதது) என்று பிரதிவாதி சொல்லுவது யுக்தமல்ல.

"பாமதிகாரர் 4-1-3-வது ஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் *'நிரம்ஸஸ்யாபி' இது முதலிய வாக்யங்களினாலும், 1-1-1 வது ஸூத்ரத்தின் 'நைஸர்க்கிகோயம் லோக வ்யவஹார:' இது முதலிய சங்கர பாஷ்யத்தின் வ்யாக்யானத்தில் சொல்லியுள்ள †'ஸ்வாபாவிகோனாதிரயம்' இது முதலிய வாக்யங்களினாலும் 'ப்ரஹ்மஸத்யம் ஜகன்மித்யா' என்கிற எங்களிட அத்வைத மதத்தில் ப்ரஹ்மாதிரிக்தமான வஸ்துவே இல்லை என்று சித்திப்பதால் ப்ரஹ்மமே ஜகத்தின் ப்ரமைக்கு அதிஷ்டானமும் ஆஸ்ரயமும் (ப்ரமத்தையடைவதும்) ஆகிறது. அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ப்ரமத்திற்கு அதிஷ்டானமும் ஆஸ்ரயமுமாவதற்கு காரணமான தர்மங்கள் வாஸ்தவமாக (பாரமார்த்திகமாக) இல்லாவிடினும், கல்பிதமான (ப்ரமையினால் தோன்றும்) தர்மங்களிருக்கின்றபடியினால் ப்ரஹ்மம் ஜகத்தின் ப்ரமைக்கு அதிஷ்டானமும் ஆஸ்ரயமும் ஆகிறது. ஜகத்தின் ப்ரமைக்கு அதிஷ்டானமும் ஆஸ்ரயமுமாவ

---

**विशेषरूपेणागृहीते विशेषांतरसमारोपणं । इहतु प्रकाशात्मनो निर्विशेषसामान्यस्यापराधीन प्रकाशस्य नागृहीतमस्ति किंचिद्रूपमिति कस्य विशेषस्याग्रहे किं विशेषांतरं समारोप्यतां तस्माद्ब्रह्मणो जीवभावारोपा संभवाज्जीवो जीवो ब्रह्मचब्रह्मेति तत्वमसीति प्रतीकोपदेश एवेति प्राप्तम्।**
**(भामती 4—1—3.)**

* **निरंशस्यापि चानाद्यनिर्वाच्याविद्यातद्वासनासमारोपित विविधप्रपंचात्मनः सांशस्येव कस्यचिदंशस्याग्रहणाद्विभ्रम इव ।**

† **स्वाभाविकोऽनादिरयं व्यवहारः व्यवहारानादितया तत्कारणस्य अध्यासस्य अनादितोक्ता ततश्च पूर्वपूर्वमिथ्याज्ञानोपदर्शितस्य बुद्धीन्द्रिय शरीरादेः उत्तरोत्तराध्यासोपयोगः इत्यनादित्वात् बीजांकुरवत् न परंपराश्रयत्वमित्यर्थः ।**

தற்குக் காரணங்களான தர்மங்களின் ஆரோபத்திற்கு வேண்டியிருக்கும் தர்மங்களும் பூர்வத்தில் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது என்று பூர்வபூர்வ அனாதி ப்ரமபரம்பரையினால் ப்ரஹ்மம் ஜகத்தின் ப்ரமைக்கு அதிஷ்டானமும் ஆஶ்ரயமும் ஆகிறது. எப்படி பீஜாங்குர பரம்பரை ஒப்புக்கொள்ளுவது தோஷமாகிறதில்லையோ அப்படியே ப்ரம பரம்பரையை ஒப்புக்கொள்ளுவதும் துஷ்டம் (தோஷம்) ஆகிறதில்லை. இப்படி ப்ரமைக்குக் காரணங்களிருப்பதினால் ப்ரமை பொருந்துகிறதென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் 'ப்ரமத்திற்குக் காரணங்களில்லாததால் ப்ரமம் பொருந்துகிறதில்லை' என்று சொல்லும் பாமதிகாரரிட வாக்யம் சித்தாந்த வாக்யமல்ல. பூர்வபக்ஷ வாக்யம். சித்தாந்த வாக்யத்தைப் பார்க்காமலே பூர்வபக்ஷ வாக்யத்தை வைத்துக்கொண்டு ப்ரமத்திற்கு காரணமில்லாததினால் ப்ரமம் பொருந்துவதில்லை' என்று அத்வைதிகளால் (பாமதிகாரரால்) அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்று வாதியினால் சொல்லப்படுவது சரியானதல்ல'' என்று பிரதிவாதி சொல்லுவது கீழ்ச்சொல்லப்படும் காரணங்களினால் சரியானதல்ல என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

எப்படி எனின்:— பாமதீகாரரே முதலிய அத்வைத க்ரந்தகாரர்களும்—ஜகத்தின் ப்ரமம் பொருந்துகிறதென்று சொல்லாததும் தவிர, 'நிரப்ஸஸ்யாபி' இது முதலிய வாக்யங்களினால் ஸாம்ஶபதார்த்தத்தினிடத்தில் (தர்மங்களால் கூடியுள்ள பதார்த்தத்தினிடத்தில்) எப்படி ப்ரமை வருகிறதோ அப்படியே ப்ரஹ்மம் நிரம்ஶ (தர்மரஹித) மிருப்பினும், அனாதியான அவித்யாவாஸனையினால் நாநாவிதமான ஆரோபித (கல்பித) தர்மங்களினால் கூடியதைப்போல் தோன்றுவதினால் ப்ரஹ்மத்தில் 'விப்ரம இவ' ப்ரமம் வந்தாற்போல் காணுகிறது. வாஸ்தவமாக நன்றாய் விசாரித்துப்பார்த்தால் ப்ரமமுமில்லை. ப்ரமத்தினால் காணப்படும் கர்த்ருத்வம் போக்த்ருத்வம் முதலிய ஸம்ஸாரமும் இல்லை. ப்ரமத்தையும் ஸம்ஸாரத்தையும் ஒப்புக்கொண்டால் த்வைதிகள் சொல்லிய எல்லா அனுபபத்திகளும் (ஸகல தோஷங்களும்) வருகின்றன. ஆகையால் இப்ரமம் எப்படி வந்தது? ஸம்ஸாரம் எப்படிவந்

தது என்பது நமக்குச் சொல்லவராது (அநிர்வசனீயமானது) என்று சொல்லுவதே சரியானதென்று 4-1-3வது ப்ரஹ்மஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் ஸ்பஷ்டமாய் "ப்ரமை பொருந்துகிறதில்லை. ப்ரமையை ஒப்புக்கொண்டால் த்வைதிகள் சொல்லிய எல்லா தோஷங்களும் வருகின்றன" என்று அங்கீகரித்திருப்பதினால் ப்ரமை பொருந்துகிறதென்று சொல்லுவது மிகவும் அயுக்தமாகிறது.

அவிசித்ரமான (ஒரே விதமான) விஞ்ஞானத்தில் விசித்ர (நாநாவித) மான ப்ரபஞ்சத்தின் ப்ரமம் எப்படி வருகிறதென்று அத்வைதிகள் ஆக்ஷேபித்தார்கள்.

அதற்கு பௌத்தர்கள் விசித்ர வாஸனையினால் விசித்ர ப்ரபஞ்சத்தின் ப்ரமை வருகிறதென்று பதில் சொன்னார்கள்.

அதற்கு அத்வைதிகள் விசித்ர வாஸனைக்காக அதற்கு பூர்வத்தில், விசித்ர ஜகத்தின் ஞானம் வேண்டும், அந்த விசித்ர ஜகத்தின் ஞானம் எப்படி உண்டாயிற்று என்று மறுபடியும் அத்வைதிகள் ஆக்ஷேபித்தனர்.

அதற்கு பௌத்தர்கள் ப்ரம பரம்பரை ஒப்புக்கொள்வதினால் விசித்ரவாஸனா பரம்பரை பொருந்துகிறதென்று ஸமாதானம் சொன்னார்கள்.

அதற்கு அத்வைதிகள் வாஸனா பரம்பரையையும் அதற்காக ப்ரம பரம்பரையையும் அங்கீகரித்தால் அனவஸ்தை என்கிற தோஷம் வருகிறபடியால் வாஸனா பரம்பரையையும் ப்ரமபரம்பரையையும் அங்கீகரிப்பது யோக்யமல்ல என்று ஆக்ஷேபித்தார்கள்.

அதற்கு எப்படி பீஜாங்குரபரம்பரை எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படியே இந்த வாஸனா பரம்பரையையும், ப்ரம பரம்பரையையும் அங்கீகரிப்பதற்கு யோக்யமானவைகளே என்று பௌத்தர்கள் சமாதானம் கூறினர்.

அதற்கு பீஜத்திற்கு அங்குரம் காரணம், அங்குரத்திற்குபீஜம் காரணம் என்கிறது ப்ராமாணிக (த்ருஷ்ட) மாயிருக்கிறபடியால்

ஸா:—ஸத்திய மென்கிறது பாரமார்த்திகம், வ்யாவஹாரிகம் என்று இருவகையானது. பாரமார்த்திக ஸத்ய மென்றால் எக்காலத்திலும் கெடுதலையடையாத தாகையால் மித்யையல்ல. வ்யாவஹாரிக ஸத்ய மென்கிறது ஶுக்திரஜதத்தைப்போல் (முத்துச்சிப்பியில் காணப்படும் வெள்ளி உத்தரக்ஷணத்திலேயே நாசமடைவதைப்போல்) நாசமடைவதினால் மித்யையாகிறது. தற்காலம் அக்னிஹோத்ராதி கர்மங்கள் 'ஸத்யம்' என்றால் வ்யாவஹாரிகஸத்யம் = மித்யை என்றே அர்த்தம் செய்கிறோமாகையால் மித்யை என்று சொன்னாலும், ஸத்திய மென்கிறது பொருந்தும்.

வ:—'ததேதத் ஸத்யம்' (முண். 2-2-2.) என்கிற மந்திரமும் 'ததேதத்ஸத்யம்' (முண். 1-2-1.) என்கிற மந்திரமும் ஓரே விதமல்லவா?

ஸா:—இரண்டு மந்திரங்களும் ஓரே விதமானது.

வ:—இரண்டு மந்திரங்களிலிருக்கும் ஸத்யம் என்கிற பதங்களுக்கு ஓரே விதமான அர்த்தம் அல்லவா?

ஸா:—ஓரே விதமான அர்த்தம் தான்.

வ:—முண். 2-2-2. மந்திரத்திலிருக்கும் ஸத்யம் என்கிற பதத்திற்கு என்ன அர்த்தம் சொல்லியிருக்கிறீர்கள்?

ஸா:—ஸத்யம் = அவிததம் = மித்யை அல்ல என்று அர்த்தம் சொல்லியிருக்கிறோம்.

வ:—முண். 1-2-1. மந்திரத்திலிருக்கும் ஸத்யம் என்கிற பதத்திற்கு ஸத்யம் = அவிததம் = மித்யை அல்ல என்று அர்த்தம் சொல்ல வேண்டுமல்லவா?

ஸா:— (பதிலில்லை.)

வ:—To the court முண்டகோபனிஷத் பிரம்மத்திற்கு எந்த ஸத்ய மென்கிற பதத்தினால் ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதோ அதே ஸத்யம் என்கிற பதத்தினாலேயே அக்னிஹோத்ராதி ஜகத்துக்குக்கூட ஸத்யத்வத்தைச் சொல்லிக் கொண்டிருக்க

பத்திகளும்) வருகிறபடியால் ப்ரமம் எதினிடத்தில் வருகிறது, மற்றும் யாருக்கு வருகிறது என்கிற விஷயங்களெதையும் சொல்லுவதற்கு வருகிறதில்லை (அனிர்வசனீயம்) என்கிறதே சரியானதென்று தம்மிட மனோகதமான சித்தாந்தத்தை பாமதீகாரர் சொல்லி, *'யத்யேவம்' இவ்வாக்யத்தினால் சங்கராசார்யரும் அங்கீகரித்திருக்கிறாரென்று அறிவித்திருக்கிறார். ஆகையால் ப்ரமம் பொருந்துகிறதில்லை என்பது பூர்வபக்ஷமென்று ஜனங்களை வஞ்சிப்பதற்காக அத்வைதிகள் சொல்லியிருந்தபோதிலும், சித்தாந்தம் செய்யும்போது ப்ரமத்தை பொருந்துவிக்கவில்லை. அவ்வளவேயல்லாமல் ப்ரமம் பொருந்துவதில்லை என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதினாலும், "அத்வைதிகள் ப்ரமை பொருந்துகிறதில்லை என்று அங்கீகரித்திருக்கிறார்கள்" என்று வாதியினால் சொல்லப்படுவது சரியாயிருக்கிறதென்று கோர்ட்டார் அங்கீகரிக்கிறார்கள்.

† "கார்யவஸ்துவும் காரணவஸ்துவும் மாயையினால் கல்பிதமாயிருப்பதினால், அந்த கார்யமெப்படி, காரணமெப்படி, அதின்

---

* यद्येवं प्रतिबुद्धोसि नास्ति कस्यचिद्प्रबोधः इत्यादि (ब्र. सू. शां. भा. 4—1—3.)

† अस्तुवानुपपत्तिरेव कार्यकारणयोर्मायात्मकत्वात् अनुपपत्तिर्हि मायामुपोद्बलयत्यनुपपद्यमानार्थत्वान्मायायाः। (भामती. 1—4—22.)

मायायामनुपपत्तिरलंकार इति न मायावादे अत्यन्तमुपपादनार्थं प्रयतितव्यमिति। (कल्पतरुपरिमळ 1—4—22.) तस्यमायिकत्वेन मायाया.............सर्वानुपपत्तेर्भूषणत्वात् (अद्वैतसिद्दिः 1 प. अनुकूल-तर्कनिरूपणे)

भूषणत्वादिति। उक्तंहि खण्डने 'अनवस्थादयोदोषास्सत्तां निघ्नंति वस्तुनः। अद्वैतिनांते सुहृदः प्रपञ्चेतत्प्रसञ्जकाः' इति। सत्तां निघ्नन्ति सत्ताभावं ज्ञापयंति। तत्प्रसञ्जकाः सत्ताभावज्ञापकाः। (गौडब्रह्मानंदीयं.)

'दुर्घटत्वमविद्याया भूषणं नतु दूषणम्। कथंचिद्घटमानत्वेऽविद्यात्वं दुर्घटं भवेत्।' न भ्रमोनाम कश्चित् न संसारोनाम कश्चित् सर्वमेतत् सर्वानुपपत्ति भाजनत्वेनानिर्वचनीयमिति युक्तमुत्पश्यामः। (ब्र. सू. भामति. 4—1—3.)

பரஸ்பரஸம்பந்தம் எப்படி இது முதலிய கேழ்விகளுக்கு சரிப் படுத்திச் சொல்லுவதற்கு பிரயத்னம் செய்யக்கூடாது. மாயை அனுபபத்யமான தாகையினால் (மாயை நித்யமா? அனித்யமா? கல்பிதமா, ஸத்யமா? ஜீவாஶ்ரிதமா, ப்ரஹ்மாஶ்ரிதமா? இது முதலிய கேழ்விகளைக் கேட்டால்—அக்கேழ்விகளுக்கு பதிலளித்து பொருந்துவிப்பதற்கு வராததாகையால்) மாயைக்கு ஆஶ்ரயம் விஷயம் இவைகள் பொருந்தாமை, ஜகத்தின் ப்ரமைக்கு அதிஷ்டானம் பொருந்தாமை, ஆஶ்ரயம் பொருந்தாமை, ப்ரமபரம்பரையை அங்கீகரித்தால் அனவஸ்தா தோஷமுண்டாதல், மாயிகமான அத்வைத மதத்தின் விஷயத்தில் பிரமாணம் சொல்ல வாராமை இவைகளெல்லாம் பூஷணங்களே, அத்வைதமதத்திற்கு ஸாதகங்களே யாகின்றன. நாங்கள் (அத்வைதிகள்) ப்ரமத்திற்கு அதிஷ்டானம் ஆஶ்ரயம் இவைகளைச்சொல்லி அந்த ப்ரமத்தைப் பொருந்துவிக்க யத்னம் செய்யக்கூடாது. அவித்யை, அவித்யையின்கார்யமான ப்ரமாதிகளுக்கு துர்கடத்வம் (பொருந்துவிப்புதற்குவாராமை) பூஷணமானது. பொருந்துவிப்பதற்கு வருமாயின் அவைகளும் நிஜமாய் அவைகளுக்கும் ஸத்தா(இருப்பு)சித்தமாய் 'ப்ரஹ்மமொன்றே ஸத்யம்' என்கிற நம்மிட அத்வைதமதமே நஷ்டமாகும். ஆகையால் ப்ரமம், அத்வைதமதம் முதலியபதார்த்தங்களின் விஷயத்தில் அனவஸ்தை, அன்யோன்யாஶ்ரயம், சக்ரகம், ஸ்வவ்யாஹதி முதலிய எந்தெந்த தோஷங்கள் வருகின்றனவோஅவைகளெல்லாம் நம்மத்வைதிகளின் ஸ்நேஹிதர்களே (அனுகூலமானவைகளே)என்றால் நமக்கு இஷ்டமான ப்ரஹ்மாதிரிக்தமான ப்ரமை, அத்வைதமதம் முதலியவைகளின் அபாவங்களை (ப்ரமமில்லை, அத்வைதமதமில்லை என்று) அறிவிக்கின்றன" என்று ப்ரதிவாதியினாலேயே (அத்வைதிகளினாலேயே) அங்கீகரிக்கப்பட்டிருப்பதினாலும், வஸ்துத: விசாரம் செய்யும்காலத்திலும் ப்ரமம் முதலியவைகள் அத்வைதமதத்தின்படிக்கு பொருந்தாததினாலும் அத்வைதமதத்தில் ப்ராஹ்மண வர்ணாதி ஜகத்து கல்பிதம், ப்ரமத்தினால் தோன்றுவது என்று சொல்லுவது யுக்தமாகிறதில்லை. ப்ராஹ்மணவர்ணாதி ஜகத்துபாரமார்த்திக ஸத்யமானதே என்கிற விஷயத்தில் ஶ்ருத்யாதிப்ரமாணங்களிருப்பதி

ணல் "இந்த ப்ராஹ்மண வர்ணுதி ஜகத்து பாரமார்த்திக ஸத்ய மானதே" என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறுர்கள்.

---

## ஸ்வாப்ன பதார்த்தங்களின் விஷயத்தில் ஜட்ஜ்மெண்ட்.

ஸ்வாப்ன பதார்த்தங்களின் விஷயத்தில் வாதி ப்ரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆதாரங்களை விசாரித்தும், வாதி ப்ரதிவாதி வக்கீல்களின் ஆர்க்யுமெண்ட்களைக் கேட்டும், **ஸ்வாப்ன பதார்த்தங்கள் பாரமார்த்திக ஸத்யமானவைகள், மித்தை யல்ல முக்காலத்திலுமில்லாதவைகள் அல்ல** என்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்படுகிறது.

### காரணங்கள்.

" வாதியினுல் தாக்கல் செய்யப்பட்ட 'அதரதான் ரதயோகான்பத: ஸ்ருஜதே....அதானந்தான் முத: ப்ரமுத: ஸ்ருஜதே... அதவேஸாந்தா: புஷ்கரணீ: ஸ்ரவந்தீ: ஸ்ருஜதே ஸஹிகர்தா' (ப்ருஹ 4-3-10) என்கிற வாக்யத்தில் ஸ்வப்ன காலத்தில் எந்த பரமாத்மா—இரதம், குதிரை, மார்க்கம் இவைகளைப் படைக்கிறுனே, ஆநந்தம்=ஸுகவிசேஷம், முதம்=புத்ராதிகளின் லாபத்தினுல் உண்டாகும் ஸாதாரணமான ஆநந்தம், ப்ரமுத:= விசேஷமான ஆனந்தம் இவைகளையும் பல்வலா:=சிறிய ஸரோவரங்களையும், புஷ்கரணீ:=பெரிய தடாகங்களையும், ஸ்ரவந்தீ:= நதிகளையும் படைக்கிறுனே, அப்பரமாத்மா எல்லா உலகத்தையும் படைக்கிறுன் என்று பரமாத்மனுல் ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஸ்ருஷ்டியுண்டாகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

'ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண: ததேவ ஸுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருத மஶ்னுதே' (5-8-)இக்காடக வாக்யமும் ஈஶ்வரன் ஜனங்களால் வேண்டப்படும் (புத்ராதி) பதார்த்தங்களை ஸ்வப்னுவஸ்தையில் படைக்கிறுன் என்று சொல்லுகிறது. முயல்கொம்பைப்போல் ஸ்வாப்ன பதார்த்தங்கள் முக்காலத்திலும் இல்லாததாயின் அப்பதார்த்தங்களை ஈஶ்

வரன் படைக்கிறனென்று சொல்லுவது அயுக்தமாகிறது. இவ்விரண்டு காரணங்களினுலும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்யமானவைகளே, மித்யை அல்ல என்று சித்தமாகிறது.

'யதாகர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்னேபி பஶ்யதி, ஸம்ருத்திம் தத்ர ஜானீயாத் தஸ்மின் ஸ்வப்ன நிதர்ஶனே'(5-2-8) என்கிற சாந்தோக்ய ஶ்ருதியும் சில ஸ்வாப்ன பதார்த்தங்கள் நன்மையை அறிவிக்கின்றன என்று சொல்லுகிறது. 'புருஷம் க்ருஷ்ணம் க்ருஷ்ணதந்தம் பஶ்யதி ஸஏனம் ஹந்தி' இவ்வைதரேய வாக்யம் சில ஸ்வாப்ன பதார்த்தங்கள் தீமையை அறிவிக்கின்றன என்றுசொல்லுகிறது. இவ்விதமாக இரண்டு வாக்யங்களும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் நன்மை தீமைகளை அறிவிக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருப்பதாலும், மித்யா பதார்த்தங்களுக்கு அறிவிக்கும் தன்மை பொருந்தாததினுலும்,'ஸ்வாப்ன பதார்த்தா: ஸத்யா:, அர்த்தக்ரியா காரித்வாத்' இது முதலிய அனுமானங்களினுலும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் நிஜமானவைகளென்றே சித்தமாகிறது.

முக்காலத்திலு மில்லாத முயல் கொம்பு முதலிய பதார்த்தங்களினுல் எப்பொழுதும் கார்யங்கள் உண்டாகிறதில்லை. ஸ்வப்னத்தில் உண்டாகும் ஸ்த்ரீஸம்போகம் முதலியவைகள் பொய்யாயின் அதினுல் ரேதோத்ஸர்ஜனுதி கார்யங்கள் எப்படி யுண்டாகும்? ரேதோத்ஸர்ஜனுதி கார்யங்களோ உண்டாகின்றன. ஆகையால் (அர்த்தக்ரியா காரித்வரூப அனுமானத்தினுலும்) இந்த ஸ்வாப்ன பதார்த்தங்கள் முக்காலத்திலு மில்லாத வைகளல்லவென்றே சித்தமாகிறது.

கடம் நிஜமானது, படம் நிஜமானது என்று ஜாக்ரத்காலத்தில் ப்ரத்யக்ஷ முண்டாகிறதினுல் கடாதி பதார்த்தங்கள் ஸத்யமென்று எப்படி ஒப்புக்கொள்ள வேண்டுமோ, அப்படியே யானை நிஜம், கடம் நிஜம் என்று ஸ்வப்னகாலத்திலும் ப்ரத்யக்ஷ முண்டாகிறதினுல் ப்ரத்யக்ஷத்தினுலும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்யமென்றே சித்தமாகிறது.

'வைதர்ம்யாச்ச ந ஸ்வப்னுதிவத்' என்கிற 2-2-29-வது ப்ரஹ்ம ஸூத்ரத்தினுல் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு பாதகம்(இல்லை என்கிற ஞானம்) வருகிறதென்று ஸூத்ரகாரர் சொல்லியிருக்கிறுர். ஆகையால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய் என்று ஒப்புக்கொள்ளவேணும் என்று ப்ரதிவாதிகள் சொல்லுவதும் சரியல்ல. ஏனெனின்—அந்த ஸூத்ரத்தில் எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கும் பாதகம் வருகிறதென்று சொல்லவில்லை. தவிர 'ஸ்வப்னே......ஸச்ச அஸச்ச ஸர்வம் பஶ்யதி' என்கிற (4-5) ஷட்ப்ரஶ்னவாக்யத்தில் ஜீவன் ஸ்வப்னுவஸ்தையில் ஸத்ய பதார்த்தங்களையும் அஸத்ய பதார்த்தங்களையும் காண்கிறுன் என்று சொல்லியிருப்பதினுல் ஸ்வப்னுவஸ்தையில் காணும் பதார்த்தங்கள் ஸத்யமானவைகளென்று சித்தமாகிறது. ஸ்வப்னுவஸ்தையில் காணப்படும் பாதிதமான மற்றும் அபாதிதமான எல்லாபதார்த்தங்களும் மித்யை என்று ஒப்புக்கொண்டால் ஸ்வப்னுவஸ்தையில் அறியப்படும் ஆத்மாவையும் தன்னையும் மித்யை என்று ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். ஸ்வப்னுவஸ்தையில் காணப்படும் ஆத்மாவுக்கு பாதகம் (இல்லை என்கிற ஞானம்) வாராததினுல் அதற்கு எப்படி ஸத்யத்வத்தை ஒப்புக்கொள்ளுகிறுர்களோ, அப்படியே பாதிதமல்லாத ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கும் ஸத்யத்வத்தை ஒப்புக்கொண்டு, ஸ்வப்னத்தில் ஸ்வாப்ன பதார்த்தங்களில் தோன்றும் ஜாக்ரத் பதார்த்தங்களின் அபேதம், வெளியிலிருக்கும் ஸ்தூல பதார்த்தங்களால் செய்கைமுதலிய பாதிதமானவைகள் அஸத்யம் என்று ஒப்புக்கொள்வதினுல் அந்த ஸூத்ரம் பாதகமாகிறதில்லை.

ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு 'நேதம் ஜாக்ரத் கிந்து ஸ்வாப்ன மேவ' என்கிற பாதகஞானம் வருகிறதினுல் எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களும் பொய் என்று பிரதிவாதி சொல்லுவதும் சரியல்ல. ஏனெனின்:—வைகாசி மாதத்தில் கண்டிராத ஓர் மனிதனைக்கண்டு இவன் வைகாசி மாதத்தில் காணப்பட்ட மனிதன் என்கிற ஞானம் உண்டாகிறது. பிறகு யோசிக்குங்கால் இவன் வைகாசி மாதத்தில் காணப்பட்டவனல்ல, கார்த்திகை மாதத்தில் காணப்பட்டவன் என்று பாதகஞானம் உண்டாகிறது (நினைவுக்கு வருகிறது). அந்த பாதகஞானத்தினுல் அம்மனிதனிடத்தில் முதல்

தோன்றிய வைகாசி மாதத்தில் இருப்பு (வைசாகமாஸ வ்ருத்தித்வம்) பொய்யாகிறதே யொழிய அம்மனிதனே எப்படி பொய் என்று ஆகிறதில்லையோ அப்படியே-'நேதம் ஜாக்ரத் கிந்து ஸ்வாப்ன மேவ' இப்பதார்த்தம் ஜாக்ரத்காலத்தில் காணப்பட்டதல்ல, ஸ்வப்ன காலத்தில் காணப்பட்டது என்றே பாதக ஞானமுண்டாகிறது. 'நேதம்' இப்பதார்த்தமே இல்லை என்கிற பாதக ஞானமே வருகிறதில்லை. ஆகையால் அந்தபாதக ஞானத்தினால் ஸ்வாப்னபதார்த்தத்தில் தோன்றும் ஜாக்ரத்காலத்தின் இருப்பு (ஜாக்ரத்காலீன வ்ருத்தித்வம்)மாத்திரம் பொய்யாகிறதேயொழிய எல்லா ஸ்வாப்னபதார்த்தங்களும் பொய்என்று சித்திக்கிறதில்லை.

மின்னல் பூர்வகாலத்தி லில்லாமல் மத்தியில் உண்டாய் உத்தரகாலத்திலேயே நஷ்டமாகிறது. இது எல்லோருக்கும் அனுபவ சித்தமாகையால் அவ்விதமாகவே பூர்வகாலத்திலில்லாத ஸ்வாப்ன பதார்த்தங்களும் மத்யகாலத்தில் உத்பன்னமாய் உத்தரகாலத்தில் நஷ்டமாகிறது என்று சொல்லுவதற்கு பாதகமொன்றும் இல்லாததினால் "ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸ்வப்னத்திற்கு பூர்வ காலத்திலும் உத்தரகாலத்திலும் இல்லாமல் மத்தியில் அவைகள் பிறந்து நஷ்டமாகிறதென்பது பொருந்துகிறதில்லை" என்று பிரதிவாதி சொல்லுவது யுக்தமல்ல.

'மாயாமாத்ரம்து கார்த்ஸ்னேனாபி வ்யக்தஸ்வ ரூபத்வாத்' என்கிற இச்சூத்ரத்தில் ஸூத்ரகாரர் ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை என்கிற விஷயத்தில் ஆறுகாரணங்களைச் சொல்லியிருக்கிறார் என்று காட்டி, ஸ்வப்னத்தில் காணப்படும் இரதம், குதிரை, நதிகள், நாள், க்ரீஷ்மருது முதலிய பதார்த்தங்கள் பொய் என்று பிரதிவாதி சொல்லியிருக்கிறார். அந்த ஆறு காரணங்களும் சரியானதல்ல. மேலும் அப்படி ஒப்புக்கொள்வதும் ஸ்வவ்யாஹதம் (தாங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் அர்த்தங்களுக்கு விருத்தமாகச்சொல்வது) ஆகிறது. ஆகையால், ப்ரதிவாதி சொல்லிய அர்த்தம் ஸூத்ரகாரருக்கு சம்மதமானதல்ல. எப்படி எனின்:—

(1) சங்கராசார்யரே முதலியவர்கள் ப்ருஹதாரண்யக உபநிஷத்தின் தம்மிட வ்யாக்யானத்தில் 'வாஸனாமாத்ர ரூபான்'

'வாஸனாமயீ ஸ்ருஷ்டி:' 'ஸ்வப்னதஶாயாம் வாஸனா பரிணாமபூதா: பித்ராதய: போக்யா:' (ப்ரஹ்மவித்யா-4-4-13) இது முதலிய வாக்யங்களினால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ஸம்ஸ்காரம் (வாஸனா) உபாதான காரணம் என்று சொல்லியிருப்பதினாலும், பாமதீகாரர் 2-1-31 வது ப்ரஹ்ம ஸூத்ரத்தின் *வ்யாக்யானத்தில் வெளியிலுள்ள காஷ்டம் முதலியவைகளின் அபேக்ஷை இல்லாமலே தேகத்திலுள்ள ஆந்தர ஸாதனங்களினாலேயே (வாஸனையினாலேயே) இரதாதிகளின் ஸ்ருஷ்டி கண்டு வருகிறது. ஆகையால் 'அந்த ஸ்வாப்னஸ்ருஷ்டி இல்லை என்று அபலாயம் செய்ய வருகிறதில்லை' என்று சொல்லி யிருப்பதினாலும் இந்த ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு வாஸனா உபாதான காரணம் என்று சித்தமாய்க்கொண்டிருக்க "ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்களுக்கு உபாதான காரணம் இல்லாததினால் அவைகள் பொய் (மித்யை)" என்று சொல்லப்பட்ட முதலாவது காரணம் அயுக்தமும் ஸ்வவ்யாஹதமும் (தான் ஒத்துக்கொண்ட பதார்த்தங்களுக்கு தானே விருத்தமாய்ச் சொல்லுகிறதும்) ஆகிறது.

(2) ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்கள் தேகத்திலுள்ள வாஸனையினால் (வாஸனையே ரதரூபமாய்) உண்டாயிருப்பதினால் அந்த ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்கள் தேகத்திலிருப்பதற்கு பாதகமில்லை. ஆகையால் "ஸ்வப்னத்தில் காணப்படும் பெரிய குதிரைகள், இரதங்கள், பர்வதங்கள் இவைகள் இருப்பதற்குத் தகுந்த இடமில்லாததினால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய்" என்று சொல்லிய இரண்டாவது காரணம் சரியானதல்ல.

(3) பரமாத்மா ஸ்வப்ன காலத்தில் எப்படி இரதாதிகளை ஸ்ருஷ்டிக்கிறானோ, அப்படியே பகலையும் க்ரீஷ்மருதுவையும் அக்காலத்தில் ஸ்ருஷ்டிக்கிறான். ஆகையினால் ஸ்வப்னாவஸ்தையில் ராத்ரியில் பகலைக்காணுவது, வஸந்தருதுவில் க்ரீஷ்மருதுவைக்காணுவது இவைகள் பொருந்திக் கொண்டிருப்பதினால் "ராத்ரி படுத்த மனிதன் ஸ்வப்னத்தில் பகலைப் பார்க்கிறான்,

---

* ததனபேக்ஷாந்தா (பாஹ்ய காரணானபேக்ஷாந்தரா) கரணமாத்ரஸாத்யா த்ருஷ்டா ஸ்வப்னே ரதாதி ஸ்ருஷ்டி ரஶக்யாபஹ்நோதும்.

வஸந்த ருதுவில்படுத்த மனிதன் ஸ்வப்னத்தில் க்ரீஷ்மருதுவைக் காண்கிருன். அக்காலத்தில் பகலுமில்லை க்ரீஷ்மருதுவும் இருப்பதில்லை. ஆகையால் ஸ்வப்னம் பொய்'' என்பதற்காகச் சொல்லிய மூன்ருவது காரணமும் சரியல்ல.

(4) 'ஸஹிகர்தா' இது முதலிய வாக்யங்களில் ஈச்வரனே ஸ்வாப்ன பதார்த்தங்களின் கர்தா (காரணம்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ஸர்வோபேதாச தத்தர்சனாத்' என்கிற 2-1-30 வது ப்ரஹ்ம ஸூத்ர வ்யாக்யானத்தில் 'ஸர்வகர்மா' ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸனே கார்கி' இது முதலிய பிரமாணங்களை உதகரித்து ஈச்வரனுக்கு விசித்ரமான ஸாமர்த்ய மிருக்கிறதென்று சங்கராசார்யரும் ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் ஒரு நொடியில் ஸ்வாப்ன பதார்த்தங்களை ஸ்ருஷ்டிப்பதற்கு ஸமர்த்தனுன புருஷன் இருக்கிருனென்று சித்தமாகிறது. இக்காரணத்திஞல் "ஒரு நொடியில் ஸ்வாப்ன பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கும் புருஷனில்லாததிஞல் அந்த ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய்'' என்று சொல்லிய நாலாவது காரணமும் யுக்தமல்ல.

(5) ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானம் உண்டாவது எல்லோருக்கும் அனுபவ சித்தமாயிருக்கிறது. காரணமில்லாமல் கார்யமுண்டாவது அஸம்பாவித மாகிறது. ஆகையால் அந்த ஸ்வப்னஞானத்திற்குக் காரணம் உண்டென்று எல்லோரும் ஒப்புக்கொண்டே தீரவேணும். அக்காரணம் யாது என்று விசாரிக்கும் கால் ஸ்வப்னத்தில் மனது உபரதமாகிறதில்லை. ஆகையால் மனது காரணமென்று சொல்லவேண்டும். சங்கராசார்யரும் 'இந்த்ரியாணுமுபரமே மனேனுபாதம்பதி, ஸேவதே விஷயானேவ தத்வித்யாத் ஸ்வப்னதர்சனம்' (சங். பா 2-3-40) என்கிற ஸ்ம்ருதியை உத்கரித்து ஸ்வப்ன பதார்த்த ஞானம் மனதிஞலாகிறதென்று சொல்லியிருக்கிருர். ஆகையால் "ஸ்வாப்ன பதார்த்த ஞானத்திற்கு காரணமில்லாததிஞல் அவைகள் பொய்'' என்று சொல்லிய ஐந்தாவது காரணமும் யுக்தமானதல்ல.

(6) 'நதத்ரரதா: நரதயோகா நபந்தானே பவந்தி, அதரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே' இச்சுருதி பூர்வத்தில் இரதாதி

களிருக்கவில்லை. அத = பிறகு ஈச்வரன் இரதாதிகளை படைக்கிறான் என்று சொல்லுகிறது, ஆகையால் இரதாதிகள் முதலிலிருக்கவில்லை,(ப்ராகபாவப்ரதியோகி)என்று மாத்திரம் சித்தமாகிறதே யொழிய எப்போதும் இருக்கவில்லை (அத்யந்தாபாவ பிரதியோகி) என்று சித்தமாகிறதில்லை.

கலியாண மாகாததற்கு முன்னமே குழந்தைகளிருக்க வில்லை, பிறகு பிறந்தார்கள் என்று சொன்னால் அக்குழந்தைகள் கலியாண மாகாததற்குமுன் இருக்கவில்லை என்று மாத்திரம் சித்தமாகுமே யொழிய, மித்யை (முக்காலத்திலு மில்லாதவர்கள்) என்று சித்தமாகமாட்டாது. பூர்வத்திலிருக்க வில்லை பிறகு பிறந்தது என்று சொல்லுவதினால் அப்பதார்த்தமே மித்யை ஆகிறதாயின்—முதலிலே B. A. ஆயிருக்கவில்லை, பிறகு B. A. ஆயிற்று; முதலில் வீடு இருக்கவில்லை, பிறகு வீடு கட்டப்பட்டது என்று சொன்னால் B. A. பொய், வீடும் பொய் என்று சொல்ல வேண்டியதாகும். இவ்வாக்யம் முதலில் இரதாதிகள் இருக்கவில்லை பிறகு படைத்தார் என்று சொல்லுகிறபடியால் ஸ்வாப்ன இரதாதிகள் எப்போதுமில்லாததென்று சித்தமாகிறதில்லை. ஆகையால் ஸ்வாப்ன இர்தாதிகளுக்கு 'நதத்ரரதா:' என்கிற இவ்வாக்யத்தினால் பாதக ஞானம் உண்டாகிறதில்லை. ஆகையால் "இதம் ரஜதம், என்கிற ஞானத்திற்கு 'நேதம் ரஜதம்' என்று பாதகஞானம் வருகிறபடியால் ரஜதத்தை எப்படி ஒத்துக்கொள்ளக்கூடாதோ அப்படியே 'நதத்ரரதா:' இவ்வாக்யத்தினால் ஸ்வாப்ன இரதாதிகள் முக்காலத்திலுமில்லை என்று பாதகஞானம் உண்டாகிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தம் மித்யை என்று ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று சொல்லிய ஆறுவது காரணமும் சரியல்ல. ஆகையால் சங்கராசாரியரால் செய்யப்பட்ட ஸூத்ரார்த்தம் சரியல்ல.

ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை என்கிற விஷயத்தில் பிரதிவாதியினால் சொல்லப்பட்ட ஆறு காரணங்களும் அயுக்தமாகையால் அவைகளால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய் (மித்யை) என்று சித்தமாகிறதில்லை. இத்தகைய அயுக்தமான காரணங்களை ஸூத்ரகாரர் சொல்லுகிறார் என்று சொல்லுவது மிகவும் அயுக்தமாகிறது.

'ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹஹி' 'நிர்மாதாரம்சைகே புத்ராதயஶ்ச' என்கிற பூர்வ ஸூத்ரங்களில் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஈச்வரனால் நிர்மாணம் செய்யப்படுகிறதென்று சொல்லியிருக்கிறது. 'ஸ்வப்னே.........ஸச்ச அஸச்ச பஶ்யதி' என்கிற இவ்வாக்யமும் ஸ்பஷ்டமாக ஸ்வப்ன காலத்தில் ஸத்யமான பதார்த்தங்களையே ஜீவன் பார்க்கிறான் என்று சொல்லுகிறது. 'மாயாமாத்ரம்து' என்

கிற ஸூத்ரத்தில் மித்யாத்வத்தை அறிவிக்கும் பதமில்லை. 'மாயா வயுனம் ஞானம்' என்று நிகண்டுவில் மாயா ஶப்தத்திற்கு ஞான மென்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறதினாலும், சங்கராசார்ய ரும் மாயாஶப்தத்திற்கு ப்ரஞ்ஞை என்று அர்த்தம் செய்திருப்ப தினாலும், 'மாயாமாத்ரம்' என்கிற ஸூத்ர பாகத்திற்கு, ஸ்வாப்ன பதார்த்தங்கள், 'மாயாமாத்ரம்' ஞானமயம் = ஞானத்தின் அம்ஶ பூதமான வாஸனாமயம் (வாஸனையினால் பரிணதமானது) என்று அர்த்தமாகிறது. மாயாமாத்ரம் என்கிற பதத்திற்கு மித்யை (முக்காலத்திலு மில்லாதது) என்கிற அர்த்தமாகிறதில்லை. ஜாக் ரத்காலத்தில் அறியவரும் பதார்த்தங்களில் ஶுக்திரஜதம், ரஜ்ஜு ஸர்பம் முதலிய சில பதார்த்தங்கள் எப்படி பாதிதங்களாகின்ற னவோ அப்படியே ஸ்வப்ன காலத்தில் அறிய வரும் ஜாக்ரத்கால வ்ருத்தித்வமும் (ஜாக்ரத் காலத்திலிருப்பு) ஜாக்ரத் காலத்திலுள்ள வெளிவஸ்துக்களிட அபேதம், வெளிவஸ்துவைப்போல் ஸ்தூலத் வம் இது முதலிய சில பாதிதங்கள் பொய்யாயினும், ஈஶ்வரனால் வாஸனைவை உபாதான காரணமாகவும், ஜீவர்களின் அத்ருஷ் டத்தை நிமித்தகாரணமாகவும் வைத்துக்கொண்டு ஸ்ருஷ்டித்த ஸ்வாப்ன இரதம் குதிரை முதலிய பதார்த்தங்கள் ஸத்யமே, பொய்யல்ல என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

---

## ஸம்யமினீபுரம் ஹைகோர்ட்

### ஸிவில் ஸூட்

### O. S. No. 564 of 1927.

---

### டிக்ரீ.

(1) ஜகத்து பாரமார்த்திக ஸத்யமென்கிற விஷயத்தில் வேதம் ஸூத்ரம், கீதா, ப்ரத்யக்ஷம், அனுமானம் இவ்வெல்லா ப்ரமாணங் களும் ஆதாரமா யிருக்கின்றன.

(2) ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் வேதஸூத்ரகீதா ப்ரத்யக்ஷ அனுமானம் இவைகளில் ஒன்றும் ஆதாரங்களாகிற தில்லை.

(3) ஜகத்து ஞானத்திலும், ஶூன்யத்திலும் கல்பிதம் மித்யை (முக்காலத்திலு மில்லாதது) என்று பௌத்தர்கள் சொன்ன தற்கு—ஜகத்து ப்ரமாணங்களினால் காணப்படுகிறது. அதற்கு எந்த அவஸ்தையிலும் (எப்பொழுதும்) பாதகம் வாராததினால்

ஜகத்து ஸத்யமென்றே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று தாங்களே (சங்கராசார்யர் முதலிய அத்வைதிகளே) பௌத்தர்களை நிராகரித்து, மறுபடியும் ஜகத்து ஞானத்தில்=ப்ரஹ்மத்தில் கல்பிதம் (மித்யை) என்று சொல்லுவது வ்யாஹதம் (தான் சொன்னதற்கே விரோதம்) ஆகிறது.

(4) ப்ரபஞ்சம் ப்ரமாணங்களினால் உபலப்தமாய்க் கொண்டிருக்க, ப்ரபஞ்சம் இல்லை என்று நிரூபிப்பது அசக்யமென்கிற தூஷணம் ஸ்பஷ்டமாயிருப்பதினால், ஸூத்ரகாரர் ஜகத்து இல்லை என்று சொல்லும் ஶூன்யவாதிகளான பௌத்தரைக் கண்டிக்கவில்லை. ஆகையால் ப்ரபஞ்சாபாவத்தைச் சொல்லுபவரின் மதம் கண்டனத்திற்குக்கூட யோக்யமான தல்லவென்று அத்வைதிகளே துச்சீகரித்து, மருபடியும் ஸர்வப்ரமாண விருத்தமான பிரபஞ்சத்தின் அபாவத்தைத் தாங்களே அங்கீகரிப்பது அத்யந்த அயுக்தமாகிறது.

(5) அத்வைத மதத்தில் ஜகத்தின் ப்ரமைக்குக் காரணமான அதிஷ்டானம், ஆஶ்ரயம் (ப்ராந்தபுருஷன்) இதுமுதலியவைகள் பொருந்தாததினால் ஜகத்தின் ப்ரமையே பொருந்தாதினால் ஜகத்து கல்பிதம் (ப்ரமத்தினால் தோன்றுவது) என்று சொல்லுவது யுக்தமல்ல.

(6) அபாதிதமான ஸ்வாப்ன பதார்த்தங்களும் ஸத்யமானவைகளே.

(7) ப்ரமாணங்கள் ப்ரபஞ்சத்திற்கு வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை அறிவிக்கின்றன. நாங்கள் (பௌத்தர்கள்) ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம். ஆகையால் நமக்கு ப்ரமாணவிரோதம் வருகிறதில்லை என்று பௌத்தர்கள் சொன்னதற்கு, பிரதிவாதிகள்—ப்ரமாணங்கள் தங்கள் தங்கள் விஷயமான ப்ரபஞ்சத்திற்கு தாத்விகத்வம்=பாரமார்த்திக ஸத்யத்வத்தையே அறிவிக்கின்றன. வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை அறிவிக்கிறதில்லை. ஆகையால் ஜகத்தினிடத்தில் பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கும் உங்களுக்கு (பௌத்தர்களுக்கு) ப்ரமாணவிரோதம் விடுவதல்ல, வந்தே தீரும் என்று அவர்களைக் கண்டித்திருக்கிறார்கள்.

இப்படியிருக்க தாங்களே ப்ரமாணம்—ப்ரபஞ்சம் வ்யாவஹாரிகஸத்யமென்று அறிவிக்கிறது, நாங்கள் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம், வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறதில்லை, ஆகையினால் நமக்கு ப்ரமாணவிரோதம் வருகிறதில்லை என்று பௌத்தரைப்போல் அத்வைதிகள் சொல்லுவது ஸ்வவ்யாஹதமாகிறது.

ஆகையால் ப்ராஹ்மணாதி வர்ணங்கள், ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், யஞ்ஞம், வேதம், தேவதைகள், ஸ்நாநம், ஸந்த்யாவந்தனம், கங்காதி தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி பரலோகங்கள் முதலிய எல்லாஜகத்தும் (த்வைதப்ரபஞ்சம்) பாரமார்த்திக ஸத்யமே என்று கோர்ட்டார் தீர்மானிக்கிறார்கள்.

கோர்ட்டாரின் இவ்வுத்திரவை அங்கீகரிக்காமல் ப்ராஹ்மண வர்ணாதி எல்லாஜகத்தும் மித்யை என்று அறிந்து, அந்தப் படிக்கே உபதேசித்துக்கொண்டே மனதில் ப்ராஹ்மண்யம் பொய், யஞ்ஞம் பொய், தீர்த்தங்கள் பொய், வேதம் பொய், தேவதைகள் பொய் என்று நினைத்துக் கொண்டே எந்த ஜனங்கள் ஆஸ்திக ஜனங்களை வஞ்சிப்பதற்காக யஞ்ஞவேத தீர்த்தங்களை நிஜமென்று ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகர்களைப் போல் யஞ்ஞாதிகளைச் செய்கிறார்களோ அவர்கள் அவ்வெஞ்ஞாதிகளின் பலனையடையாமல் 'மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமாம் கதிம்' என்கிற சிக்ஷாநியமத்தின் (கீதாவாக்யத்தின்) படிக்கு மோக்ஷத்தை அடையாமலே மறுபடியும் பிறப்பில்லாத, மஹாகஷ்டங்களை அனுபவிக்கக்கூடிய அதோகதியை (அந்தந்தமஸ்ஸை) அடைவார்கள்.

ஆகையால் ப்ராஹ்மணவர்ணாதி எல்லா ஜகத்தும் பாரமார்த்திக ஸத்யமென்று ஒத்துக்கொண்டு தேவதைகளின் ப்ரீத்யர்த்தமாக தங்கள் தங்கள் வர்ணாஶ்ரம விஹிதமான ஸ்நான ஸந்த்யா யஜ்யாதி கர்மங்களைச் செய்து அந்தந்த தேவதைகளின் ப்ரீதித்வாரா பரமாத்மனின் ஞானத்தை ஸம்பாதித்து ஐஹிகபலத்தையும் மோக்ஷாதிபாரத்ரிக பலத்தையும் அடைந்து ஶாஶ்வத ஸுகத்தை அனுபவிக்கவேண்டியது.

" नित्योनित्यानां चेतनश्चेतनानां एकोबहूनां योविदधातिकामान् "
" तमात्मस्थं येऽनुपश्यंति धीरास्तेषांसुखंशाश्वतम् "

Samyamanipuram,
28-8-1928.

(Sd.) Dharma Raj, *H. B.*
*Chief Judge High Court.*

ஸ்ரீ

# ஸம்யமினீபுரம் ஹைகோர்ட்.

## O. S. No. 564 of 1921.

சீப் ஜஸ்டிஸ் S. தர்மராஜ் H. B. அவர்கள் சமுகத்தில்
28வது கலியுகம், சாலிவாகன சகம் 1849 நடந்த

# ஸிவில் ஸூட்.

## வேதாந்த விசாரணை.

**வாதி.**

விஷ்ணுதாஸாசார்யர்.

**வாதி ஸாக்ஷிகள்.**

(1) ராமாசாரியர்.

(2) கிருஷ்ணாசாரியர்.

**வாதி வக்கீல்.**

மாதவதாஸ். P. B. D.

**பிரதிவாதி.**

கங்காதரசாஸ்திரிகள்.

**பிரதிவாதி ஸாக்ஷிகள்.**

(1) ஸுப்பிரம்மண்ய சாஸ்திரிகள்.

(2) நீலகண்டாவதானி.

**பிரதிவாதி வக்கீல்.**

ஹரிஹரசர்மா. P. B. S.

## வியாஜ்யம்.

வாதி எழுதிக்கொண்ட மனு என்னவென்றால்:—

(1) வைதிக ஆஸ்திகர்களான எல்லா ஜனங்களிட பிரதிநிதியாக கோர்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவா செய்யப்பட்டது.

2. மேற் சொல்லப்பட்ட பிரதிவாதியை அத்வைதிக ளெல்லோரிட பிரதிநிதியாக கோர்டார் உத்திரவைப்பெற்று இந்த தாவாவில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

3. வாதிகள் ஆஸ்திகமான வைதிகமதத்தில் சேர்ந்தவர் கள்.

4. இவ்வைதிகமத தத்வங்கள்:—

(a) பிராம்மண்யாதி வர்ணங்கள், பிரம்மசர்யாத்யா ச்ரமங்கள், யஞ்ஞாதிகிரியைகள், தேவதைகள், வேதங்கள், கங் காதி தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி பரலோகங்கள், இப்பூலோகம் முதலான எல்லா ஜகத்தும், ஸத்தியம்.

(b) விஷ்ணு ஸர்வோத்தமன், ஸர்வஞ்ஞன், ஸர்வகர்த்தா, அனந்த கல்யாண குணபூர்ணன்.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன்.

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர் வோத்தமன், ஸர்வகர்த்தா" என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

5. இத் தத்வங்கள் வேதங்களில், வேதார்த்த நிர்ணயக மான பிரம்மஸூத்திரங்களில், பகவத்கீதையில் சொல்லப்பட் டிருப்பதால் வைதிக ஜனங்களெல்லோரும் அங்கீகரிப்பதற்கு உடன் பட்டிருக்கிறார்கள்.

6. இவ்வைதிக மதம் அனாதி காலமாக வந்துக்கொண் டிருக்கிறது.

7. தத்வமிப்படியிருக்க, கௌடபாதாசார்யரும், அவ ரிட பரமசிஷ்யரான சங்கராசார்யரும், வேதம், பிரம்மஸூத் திரம், பகவத்கீதை இவைகளுக்கு வேறு அர்த்தத்தைக்கல்பித்து, விஞ்ஞானவாதிகளான, சூன்ய வாதிகளான பௌத்த மதத் தையே வைதிகமதமாகத் தோன்றும்படிக்கு மோசம் செய்து வைதிக தத்வங்களுக்கு விருத்தமான தத்வங்களை போதித் திருக்கிறார்கள்.

இப்படி செய்கிறது புராதன சிக்ஷா நியமம் (பகவத்கீதா) 16 வது ஸெக்ஷ (அத்தியாயம்) னில் சொல்லப்பட்ட சிக்ஷைக் குத் தகுந்த குற்றமாயிருக்கிறது.

8. பிரதிவாதிகள் போதிப்ப தென்ன வென்றால்:—

(a) விஷ்ணு (பரபிரம்மம்) ஸர்வோர்த்தமனல்ல, ஸர்வஞ்ஞனல்ல, ஸர்வ கர்த்தா அல்ல, அநந்த கல்யாண குண பூர்ணனல்ல.

(b) 4-வது பாராவில் சொல்லிய பிராம்மண்யாதி எல்லா ஜகத்தும் மித்யை என்றால் மூன்று காலங்களிலும் இல்லாதது.

(c) பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னனல்ல.

(d) "பரமாத்மா ஜீவனைக்காட்டிலும் பின்னன், ஸர்வோத்தமன்" என்கிற ஞானம் மோக்ஷ ஸாதனமல்ல. "அஹம் பிரம்மாஸ்மி (நானே பிரம்மம்)" என்கிற ஞானமே மோக்ஷ ஸாதனம்.

9. இவ்விதமான வேதம் கீதை ஸூத்திரம் இவைகளுக்கு விருத்தமான உபதேசங்களினால் ஜனங்கள் ஆஸ்திக மதத்தை விட்டு அத்வைத மதத்தைச் சேர்ந்து, இஹபரலோக ஸுகத்தை அடையாமல் ஈச்வர நிக்கிரஹத்திற்கு பாத்திரர்களாய் அதோ கதியை அடையப் போகிறார்கள். அதர்க்காக கோர்டார், ஜனங்களின் க்ஷேமத்திர்க்காக பிரதிவாதிகளும், பிரதிவாதி மதஸ்தர்களும், இனிமேல் பிராம்மண்யாதி வர்ணங்கள், தேவதைகள் இஹ பரலோகம் முதலான ஜகத்து வேதத்தில் கூறியுள்ளபடிக்கு, ஸத்திய மென்று ஒப்புக்கொண்டு நிஜமான வைதிகர்களாய் வேதோக்தமான கர்மங்களை அனுஷ்டிக்கும்படியாகச் செய்ய வேண்டியது; அல்லது பௌத்தரைப்போல பிராம்மண்யாதி வர்ணங்கள், தேவதைகள், இஹபரலோகங்கள் இவைகள் கல்பிதங்க ளென்று சொல்லும் பிரதிவாதிகளிடவும், அவரைச் சேர்ந்த ஜனங்களிடவும் வைதிக வேஷங்களினால் ஆஸ்திகர்கள் மோஹமடைகிரார்கள். ஆகையால் அவர்களை வைதிகர்களல்ல

வென்று கோர்டார் தீர்மானம் செய்யவேணுமாய் பிரார்த்திக்கிறோம். இப்படி கோர்டார் செய்யாவிடில் ஜனங்கள் மிகவும் கஷ்ட நஷ்டங்களுக்கு பாத்திரராவார்கள்.

கையெழுத்து. விஷ்ணுதாஸாசார்ய꞉.

தேதி. 25-3-1921

ஷை 9 பாராக்களில் சொல்லிய விஷயங்கள் எங்கள் சொந்த புத்தியினாலும், எங்களிட குருகளின் உபதேசத்தினாலும் நிஜமென்று சொல்லுகிறோம்.

கையெழுத்து. விஷ்ணு தாஸாசார்ய꞉.
வக்கீல் கையெழுத்து. மாதவதாஸ். P. B. D.

---

## ஸம்யமினீபுரம் ஹைகோர்ட்டு O. S. No. 564.

## பிரதிவாதி ஸ்டேட்மெண்டு.

---

| வாதி. | பிரிதிவாதி. |
|---|---|
| விஷ்ணு தாஸாசார்ய꞉. | கங்காதர சாஸ்திரிகள். |

பிரதிவாதி எழுதிக் கொடுத்த ஸ்டேட் மெண்டு:—

(1) இந்த வாதியின் தாவா பொய்.

(2) வாதிமனு 4-வது பாராவில் சொல்லிய தத்வங்கள் வேதங்களிலும், ஸூத்திரங்களிலும், கீதையிலும் சொல்லப்பட்டிருப்பினும், வேதங்களுக்காவது, கீதைக்காவது, பிரம்மஸூத்திரங்களுக்காவது அத்தத்வங்களில் தாத்பர்யமில்லை. ஆகையால் அத்தத்வங்கள் வைதிகங்களல்ல.

(3) வாதி 7-வது பாராவில் சொல்லிய விஷயங்கள் வெரும் பொய்.

(a) எங்களிட அத்வைத மதம் வைதிகமதம்.

(b) அத்வைதமதம் பௌத்த மதமென்று சொல்லுவது சரியல்ல.

(c) நாங்கள் சொல்லுவதே வேதார்த்தம்.

4. அத்வைதமத தத்வங்கள்:—

(a) பிரம்மத்தை விட வேரான பிராம்மண்யாதி வர்ணங்கள், தேவதைகள், சந்தியாவந்தனாதி கர்மங்கள் முதலான ஜகத்து ஸ்வப்னத்தைப் போல் பொய்.

(b) பிரம்மம் நிற்குணம் (ஸகலதர்மரஹிதன்)

(c) ஜீவனும் பிரம்மமும் ஒன்றே.

(d) அஹம் பிரம்மாஸ்மி என்கிற ஞானமே மோக்ஷஸாதனம்.

(5) இவ்விஷயம் முதலே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், மருபடியும் விசாரிப்பதற்கு கோர்டாருக்கு அதிகாரமில்லை. (Res judicata.)

(6) வாதி 9-வது பாராவில் சொல்லிய விஷயம் பொய்.

(a) எங்களிட அத்வைத மதத்தைச் சேர்ந்து ஒருவரும் கெட்டுப்போக வில்லை. ஒருவருக்கும் நஷ்டமும் வரவில்லை

இக்காரணங்களினால் கோர்டார் வாதிக்கு எவ்வித அனுகூலத்தையும் செய்யாமல் அவரிட மனுவை தள்ளிவிட வேணுமாக பிரார்த்திக்கிறோம்.

கையெழுத்து. கங்காதர சாஸ்திரிகள்.

தேதி. 30-3-1921.

இவ்விஷயங்கள் எங்களிட சொந்த புத்தியினாலும், எங்களிட குருகளின் உபதேசத்தினாலும் நிஜமென்று சொல்லுகிறோம்.

கையெழுத்து. கங்காதர சாஸ்திரிகள்.

வக்கீல் கையெழுத்து. ஹரிஹர சர்மா. P. B. S.

## இஷ்யூ ISSUE.

(1) ரெஸ் ஜுடிகேடா (Res judicata) ஆகிறதா இல்லையா? [இதற்கு முன் விசாரிக்கப்பட்டிருப்பதினால் மறுபடியும் விசாரம் செய்ய கோர்டாருக்கு அதிகார முண்டா இல்லையா ?]

2. (a) பிராம்மண்யாதி வர்ணங்கள், பிரம்மசர்யாத்யாச்ரமங்கள் முதலிய பிரபஞ்சம் நிஜமா, பொய்யா ?

(b) ஸ்வப்னம் சத்யமா மித்யையா ?

(3) பரபிரம்மம் ஜீவனைவிட வேறானதா, அல்லவா ?

(4) பரபிரம்மம் ஸர்வஞ்ஞன், ஸர்வகர்தா, ஸர்வசக்தன், ஸகல கல்யாண குணபூர்ணனா, அல்லவா ?

(5) (a) அத்வைதமதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பேதமுண்டா இல்லையா?

(b) அத்வைதமதம்வைதிகமா அல்லவா?

---

## ரெஸ் ஜுடிகேடா விசாரணை.

---

### பிரதிவாதி வக்கீல்.

இவ் விஷயங்கள் இதற்குமுன் விசாரிக்கப்பட்டிருப்பதால் மருபடியும் இதை விசாரிப்பது அனுவச்யகம்.

### வாதி வக்கீல்.

இத் தத்வ விசாரம் ஒவ்வொரு மனுஷ்யனும் எக்காலத்திலும் செய்யத் தகுந்ததுதான். தத்வவிசாரமென்னவென்றால்:- த்வைதாத்வைத பக்ஷங்களின் குணதோஷங்களை நன்றாய் அறிந்து, தோஷமுள்ள பக்ஷத்தை விட்டு, நிர்தோஷமான பக்ஷம் யுக்தமென்று நிச்சயிப்பதுதான். இவ் விஷயங்களையே சுருதிகள் உபதேசிக்கின்றன.

"ஆத்மாவா அரே திருஷ்டவவ்யச் சுரோத்வயோ மந்தவ்யோ நிதித்தியாஸி தவ்ய:,

தத்விஜிஞ்ஞாஸஸ்வ தத் பிரும்ம,

தமேவம் வித்வானமிருத இஹ பவதி;"

இந்த சுருதிகள் ஒவ்வொரு வைதிகரும் சந்தியா வந்தனம் தினந்தோறும் செய்வது போல் ஒவ்வொரு நாளும் த்வை தாத்வைத (பிரம்ம) விசாரம் செய்து ஸத்கதியை அடையுங்களென்று உபதேசிக்கின்றன.

இந்த சுருதிகளின் அர்த்தானுகுணமாகவே நம் பூர்வீகர்களும் த்வைதாத்வைத மதஸ்தர்களுமான சங்கராசார்யார், ராமானுஜாசார்யார், மத்வா சார்யார், தேசிகாசார்யார், வித்யாரண்ணியர், அக்ஷோப்பிய தீர்த்தர், ஜயதீர்த்தர், வியாஸராயர், மதுஸூதன ஸரஸ்வதி, அப்பய்ய தீக்ஷிதர், விஜயீந்திரஸ்வாமிகள், ஸத்யஞதை ஸ்வரமிகள், முதலியோர், த்வைதாத்வைத விசாரம் செய்திருக்கிறார்கள். ஆகையால் இந்த விசாரம் ஒவ்வொரு மனுஷ்யனும் என்னாளும் கட்டாயம் செய்யத்தகுந்தது. இதைச்செய்யாவிடில் தோஷ முண்டு. இக்காரணங்களினால் ரெஸ்ஜுடிகேடா கிடையாது. கோர்ட்டாரவர்களுக்கு விசாரிக்க அதிகார முண்டு. (limitation) காலாவதியும் கிடையாது. ஆகையால் கொர்டார் இந்த வியாஜ்யத்தை விசாரித்து வாதியின் கோறிக்கைப்படி தீர்ப்பு கொடுக்கவேண்டும்.

## கோர்ட் ஆர்டர். COURT ORDER.

கோர்டார் ரெஸ்ஜுடிகேடா விஷயத்தில் **(Preliminary)** விசாரணை செய்து வாதிசொல்லியபடி தத்வவிசாரம் பிரதி மனிதனும் ஒவ்வொரு தினத்திலும் செய்யத்தகுந்த தென்று உபய வாதிகளாலும் பிரமாண மென்று ஒப்புக்கொள்ளப்பட்ட சுருதிகள் முறையிடுகின்றன. த்வை தாத்வைத பூர்வாசார்யர்களும் அந்தபடிக்கே விசாரமும் செய்திருக்கிறார்கள். ஆகையால் (Res judicata) ரெஸ் ஜுடிகேடா கிடையாது. லிமிடேஷனும் கிடையாது என்றும் விசாரிக்க வேண்டிய இஷ்யூக்கள் **Issues** அதிகமாயும் முக்கியமாயு மிருப்பதால் வாதி பிரவாதிகளின்

சௌகர்யத்திர்க்காக ஒவ்வொரு இஷ்யூவாக விசாரித்து அந்தந்த இஷ்யூவை தீர்மானிப்பதாகவும் கோர்டார் தீர்மானித் திருக்கி ருர்கள். முதல் ஜகத் ஸத்யமா அல்லவா என்பது விசாரிக்கப் படுகிறது.

(Sd.) DHARMARAJ (H. B.)
*Chief Judge, High Court,*
SAMYAMINIPURAM.

---

## ஸாக்ஷி விசாரணை.

### பிரதிவாதியின் முதல் ஸாக்ஷி.

*கோர்டு* :—உம்மிட பெயரென்ன?

*ஸாக்ஷி* :—சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.

*கோ* :—நீர் உம்மிட தெய்வ சாக்ஷியாக சொல்வ தெல் லாம் சத்ய மென்று சொல்லும்.

*ஸா* :—எங்கள் மதத்தில் பாரமார்த்திகமென்றும் வ்யாவஹா ரிக மென்றும் இருவகை ஸத்யங்களிருக்கின்றன. அதில் எவ்வித ஸத்யமாகச் சொல்ல வேண்டும்?

*கோ* :—பாரமார்த்திக ஸத்யமாகவே சொல்லும்.

*ஸா* :—பிரம்மனைக்காட்டிலும் வேரான பாரமார்த்திக சத்ய மான வஸ்து ஒன்றும் கிடையாது. பிரம்ம மொன்றே பாரமார் திகமாகையால் நான் எல்லாம் பாரமார்த்திக சத்யமாய் சொல்லு கிறே னென்று சொல்லமுடியாது.

*கோ* :—வேறெப்படிச் சொல்லுகிறீர்?

*ஸா* :—வ்யாவஹாரிக ஸத்யமாய் சொல்வதாகச் சொல்லு கிறேன்.

*வா. வ* :—வ்யாவஹாரிக சத்ய மென்ருல் என்ன?

*கோ* :—இப்பொழுது இவ்விஷயத்தை விசாரிப்பது ஆனு வச்யகம்,

பி. வ :—பிராம்மண்யாதிவர்ணம் முதலிய ஜகத் ஸத்யமா; மித்யையா ?

ஸா :—மித்யை (பொய்).

வ :—மித்யை என்றால் என்ன ?

ஸா :—பிரம்ம வ்யதிரேகேணுபாவ: பிரம்மத்தைவிட வேறாக இல்லாதது. பிரம்மத்தினிடத்தில் ஆரோபிதம்.

வ :—இவ் விஷயத்திற்கு ஆதார மென்ன ?

ஸா :—"ததநன்யத்வ மாரம்பண ஸப்தாதிப்ய: (பிர. ஸூ. 2-1-14) என்கிற ஸூத்திரமே.

வ :—சுருதி ஆதார மிருக்கிறதா, இல்லையா ?

ஸா :—இருக்கிறது.

வ :—ஏன் அந்த சுருதியைச் சொல்லவில்லை ?

ஸா :—சங்கரா சார்யரே சுருதிகளின் ஆதாரத்தினல் ஜகத்துமித்யை என்று இச்சூத்திரத்திற்கு பாஷ்யம் செய்திருக்கிறார். அந்த பாஷ்யத்தை அனுசரித்து இந்த ஸூத்ரார்த்தம் சொல்லுவதினல் சுருத்யர்த்தமும் சொல்லப்பட்டதாகிறது ஆகையால் நாம் அவைகளைச் சொல்லவில்லை.

வ :—இச் சூத்திரத்திற்கு அர்த்த மென்ன ?

ஸா :—ஷை ஸூத்திரத்தில் ததனன்யத்வம் என்கிற பிரதிஞ்ஞாபாகம், ஆரம் பண சப்தாதிப்ய: என்று அதற்கு ஹேதுவை (ப்ரமாணத்தை) ச்சொல்லும் பாகம் என்று இரண்டு பாகங்களிருக்கின்றன. பிரதிஞ்ஞா பாகத்தில் ஜகத: என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு ஜகத: ததனன்யத்வம் என்கிறபாகத்திற்கு காரியமான ஜகத்திற்கு காரணமான பிரம்மத்தை விடவேராக அபாவம் (இல்லாமலிருப்பது) என்று அர்த்தம்.

பி. வ :—ஆரம்பண சப்தாதிப்ய: என்கிற ஹேது பாகத்திற்கு அர்த்த மென்ன ?

ஸா !—ஆரம்பணசப்த மென்பதினுல், "வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் மிருத்திகேத்யேவ ஸத்யம்" என்கிற சுருதியை எடுத்துக்கொண்டு ஆதி சப்தத்தினுல்,—

(1) "ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்வமஸி" (சாந்தோக்கியம் 6-8-7)

(2) இதம் ஸர்வம் யதயமாத்மா (பிருஹ. 2-4-6)

(3) பிரம்மைவேதம் ஸர்வம் (முண்டகம் 2-2-11)

(4) ஆத்மைவேதம் ஸர்வம் (சா.7-25-2)

(5) நேஹநாநாஸ்தி கிஞ்சன (பிருஹ. 4-4-19; கா. 2-4-11.)

என்கிற இவ்வைந்து சுருதிகளையும் எடுத்துக் கொண்டு ஆக இந்த ஆறு சுருதிகளினுல் ஜகத் பிரம்மவ்யதிரிக்தமாக இல்லையென்று சித்திக்கிறதென்று அர்த்தம்.

வா. வ :—இச் சூத்ரத்தில் ஜகத் என்று சொல்லும் பதமில்லாமலிருக்க, ஜகத் பிரம்மத்தை விட வேறில்லை என்று அர்த்தம் எப்படி சொல்லுகிறீர்.

ஸா:—ஜகத: என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு அர்த்தம் சொல்லுகிறோம்.

வ :—ஜகத: என்கிற பதத்தையே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்கிறதற்கு என்ன ஆதாரம்? வேறு பதத்தை ஏன் சேர்த்துக் கொள்ளக்கூடாது?

ஸா :— (பதிலில்லை.)

வ :—ததனன்யத்வ மென்கிற வாக்யத்திலுள்ள தத் என்கிற பதத்திற்கு, பிரம்ம மென்றே அர்த்தம் செய்வதற்கு என்ன ஆதாரம்? வேறு அர்த்தத்தைச் செய்யலா மல்லவா?

ஸா :— (பதிலில்லை.)

வ :—ஜகத: என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு தத் என்கிற பதத்திற்கு பிரம்மமென்று அர்த்தம் செய்துக்கொண்டபோதிலும், ஜடமாகிய ஜகத்திற்கும் பிரம்மத்திற்கும் எப்படி ஐக்கியம் கூடும்?

ஸா :—நாங்கள் அனன்யத்வம் என்கிற பதத்தினால் ஜகத்துக்கு பிரம்மத்தோடு * அபேதத்தைச் சொல்லுவதில்லை. வேறெப்படியெனின் :—பேதத்தை நிராகரிக்கிறோ மாகையால் அபேதபக்ஷத்தின்பேரில் சொல்லும் தோஷம் அபேதத்தை அங்கீகரிக்காத எங்கள் பேரில் வராது.

வா. வ :—ஜகத்துக்கு பிரம்மத்துடன் அபேதத்தை நிஷேதிக்கிறவர்களோ நீங்கள் நிராகரிக்கமாட்டீர்களல்லவா?

ஸா :—ஜகத்துக்கு பிரம்மத்துடன் † அபேதத்தை நிராகரிக்கிறவர்கள் நமக்கு ஸகாயம் செய்கிரவர்களாவர்.

வ :—கடம் பட (வஸ்திர) த்தைவிட பின்னமாகவும் அபின்னமாகவும் இரண்டும் ஆகலாமா?

ஸா :—பேதத்திற்கும் அபேதத்திற்கும் விரோத மிருக்கிற படியால் பின்னமாவது ஆகவேணும், அல்லது அபின்னமாவது ஆகவேணும். பின்னம் அபின்னம் இரண்டும் ஆகமாட்டாது.

வ :—பிரம்மம் ஸத்தியம் அஸத்தியம் என்று சொல்லக் கூடுமா? அல்லது ஸத்தியமல்ல அஸத்தியமல்ல வென்று சொல்லக் கூடுமா?

ஸா :—ஸத்தியத்வம் அஸத்தியத்வம் இவ்விரண்டும் பரஸ்பர விருத்தமானதினால் ஒரு வஸ்து ஸத்தியமாகாவிடின் அஸத்திய மாகவேணும், அஸத்தியமாகாவிடின் ஸத்திய மாகவேணும். ஸத்தியமாயின் அஸத்தியமாகக்கூடாது. அஸத்தியமாயின் ஸத்தியமாகக்கூடாது. ஆகையால் பிரம்மம் அஸத்தியமல்லாததினால் ஸத்தியமே. ஸத்தியம் அஸத்தியம் என்று இரண்டும் சொல்லுவதற்கு எப்படி ஸாத்திய மில்லையோ அப்படியே ஸத்

---

* न खलु अनन्यत्वमित्यभेदं ब्रूमः, किंतु भेदं व्यासेधामः, ततश्च नाभेदाश्रयदोषप्रसंगः ।

† किंत्वभेदं व्यासेधद्भिर्वैशेषिकादिभिरस्मासु साहायकमेवाचरितं भवति (भामति. 2-1-14.)

தியமல்ல அஸத்திய மல்ல என்று சொல்லுவதற்கும் ஸாத்திய மில்லை.

வா. வ :—ஜீவன் பிரம்மத்தைவிட பின்னன் அபின்னன் என்று இரண்டும் சொல்லக்கூடுமா?

ஸா :—ஜீவன் பிரம்மத்தைவிட பின்னன் அபின்னன் என்று இரண்டும் சொல்லுவதற்கு வராது.

வ :—ஜீவன் பிரம்மத்தைவிட பின்னனல்ல, அபின்னனல்ல என்று சொல்லக்கூடுமா?

ஸா :—பின்னனல்ல, அபின்னனல்ல என்று சொல்லக் கூடாது.

வ :—ஜகத்து பிரம்மத்தைவிட பின்னமா, அபின்னமா?

ஸா :—ஜகத்து பிரம்மத்தைவிட பின்னமுமல்ல, அபின்னமு மல்ல.

வ :—பேதத்திற்கும் அபேதத்திற்கும் விரோத மிருக்கிற படியால் ஜகத்து பிரம்மத்தைவிட பின்னமாவது ஆகவேணும், அபின்னமாவது ஆகவேணும். பின்னமு மல்ல, அபின்னமு மல்ல என்கிறது அனுபபத்தி யாகையால் எப்படிக் கூடும்?

ஸா :—நம்மிட அத்வைத மதத்தில் ஜகத்து மாயையினால் கல்பிதமாகையால் எல்லா * அனுபபத்திகளும் (தோஷங்களும்) நம்மதத்திற்கு பூஷணமே ஆகையால் நீங்கள் சொல்லும் இவ் வனுபபத்தியானது நமக்கு (அத்வைதிகளுக்கு) பூஷணமே.

வ :—To the court—அத்வைதிகள் தங்கள் மதத்திலிருக் கும் அனுபபத்திகளை பூஷணங்களென்று சொல்லுகிறார்கள். அனுபபத்திகளினால் கூடிய இவ்வத்வைதமதம் எப்படி சரியான தென்கிற விஷயத்தை கோர்ட்டார் கவனிக்கவேண்டியது.

---

* अस्तुवाऽनुपपत्तिरेव, कार्यकारणयोर्मायात्मकत्वात्, अनुपपत्ति र्हि मायामुपोद्बलयत्यनुपपद्यमानार्थत्वान्मायायाः (भाम. 1-4-22) मायाया-मनुपपत्तिरलंकार इति न मायावादे अत्यन्तमुपपादनार्थं प्रयतितव्यं (कल्प-तरुपरिमळ १-४-२२)

## ஆரம்பணசப்தாதிப்ய: என்கிற ஹேது பாகத்தின் விசாரம்.

வா. வ :—ஸூத்திரகாரர் இச்சூத்திரத்தில் 'வாசாரம்பணம் விகாரோ நாம தேயம்' என்கிற சுருதியை உதாகரித்திருக்கிறாரென்று நீரெப்படி அறிந்தீர்?

ஸா :—இச்சூத்திரத்திலிருக்கும் ஆரம்பண சப்த பதத்தினால் வாசாரம்பண மென்கிற சுருதியை உதாகரித்திருக்கிறாரென்று தெரிந்துக் கொண்டோம்.

வ :—ஒரே பதத்தின் முதல் பாகத்தினாலா, இரண்டாவது பாகத்தினாலா சுருதியை உதாகரிக்க வேண்டியது?

ஸா :—முதல் பாகத்தினாலேயே.

வ :—'வாசாரம்பணம் விகாரோ நாமதேய' மென்கிற சுருதியில் வாசாரம்பண மென்கிறது ஒரே பதமல்லவா?

ஸா :—ஒரே பதம்.

வ :—ஆரம்பண மென்கிறபதம் சுருதியிலிருக்கும் வாசாரம்பண மென்கிற பதத்தின் உத்திரபாகமே யல்லவா?

ஸா :—பதத்தின் உத்திர பாகமே.

வ :—எந்த சூத்திரத்திலாவது ஒரு பதத்தினுடைய உத்திர பாகத்தை எடுத்துக்கொண்டு அப்பதத்துடன் கூடிய சுருதியையாகிலும் சுலோகத்தையாகிலும் காட்டியிருக்கிறாரா?

ஸா :—இல்லை.

வ :—வாசாரம்பண மென்கிற பதத்தின் உத்திரபாகமான ஆரம்பண மென்கிற சப்தத்தினால் வாசாரம்பணம் விகாரோ என்கிற சுருதியை எடுத்துக் கொண்டிருக்கிறா ரென்கிறது எப்படிப்பொருந்துகிறது.

ஸா :— (பதிலில்லை.)

வ :—To the court—இம்மௌனத்தை கோர்ட்டார் கவனிக்க வேண்டியது.

## வாசாரம்பண சுருத்யர்த்த விசாரம்.

பிர. வ:—"வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் மிருத்திகே த்யேவ ஸத்தியம்" என்கிற வாக்கியம் எதற்காக பிரவர்த்தித் திருக்கிறது?

பி. ஸா:—"யதா ஸௌம்மேகேன மிருத்பிண்டேன ஸர்வம் மிருண்மயம் விஞ்ஞாதம் ஸ்யாத்" என்கிற வாக்கியத்தினால் காரணமான மிருத்பிண்ட ஞானத்தினால் அதின் கார்யமான கடாதி ஞானம் உண்டாகிற தென்று சொல்லவே காரணமான மண், கார்யமான கடத்தைவிட வேராக யிருந்தால் மண்ணின் ஞானத்தினால் கடஞானம் எப்படி உண்டாகும் என்று ஸம்சயம் வரவே கடம் மண்ணைவிட அபின்னம் (வேறல்ல) என்று பதில் சொல்லவே, அபின்னமானால் மண் காரணம் கடம் காரியம் என்கிறது எப்படிக் கூடும்? என்று சந்தேகமுண்டாயிற்று. அதை ப்பரிகரிக்க இவ்வாக்கியம் பிரவர்த்தித்திருக்கிறது.

பி. வ:—இவ்வாக்கியத்தினால் என்ன பதில் சொன்னதாக ஆகிறது?

ஸா:-கார்ய மென்று சொல்லப்படுகிற கடம் முதலிய எல்லா விகாரங் (மாருதல்) களும், வாசாரம்பணம் = பொய், நாமதேயம் = பேருமாத்திரம் (பொய்). மண் என்கிற உபாதான காரணமே ஸத்தியம் என்று, காரணம் ஸத்தியமென்று சொல்லிக்கொண்டே கார்யமெல்லாம் பொய் யென்று இந்த வாக்கியம் சொல்லுகிறது.

பி. வ:—இவ்வாக்கியம் பிராம்மண்யாதி ஸர்வ பிரபஞ்சத்திற்கும் மித்யாத்வத்தை எப்படிச் சொல்லுகிறது?

ஸா:—மண்ணான காரணம் ஸத்தியம் கடாதிரூப கார்யங்கள் பொய் என்று இவ்வாக்கியம் சொல்லிக்கொண்டே காரணமான பிரம்ம மொன்றே ஸத்தியம், காரிய (விகார-மாருதல்) மான இஜ்ஜகத் தெல்லாம் மித்யை என்று தெரிவிக்கிறது.

வா. வ:—இச்சுருதியில் மித்யாத்வபோதகமான பதம் யாது?

ஸா :—வாசாரம்பணம், நாமதேயம் என்கிற பதங்கள்.

வா. வ :—இப்பதங்களுக்கு அர்த்த மென்ன ?

ஸா :—வாசாரம்பண மென்றால் பொய், நாமதேய மென்றால் பொய்.

வ :—வாசாரம்பண மென்கிற பதத்திற்கு மித்யை என்கிற அர்த்தம் * ரூட விருத்தியினலா ? † யோக விருத்தியினலா ?

ஸா :—இரண்டுமல்ல. வாசாரம்பணம் நாமதேயம் என்கிற பதங்களுக்கு மித்யை என்கிற அர்த்தம் ‡ முக்ய விருத்தியினல் (Primary Meaning) உண்டாகாது.

வ :—வாசாரம்பணம், நாமதேயம் என்கிறபதங்கள் முக்கிய விருத்தியினல் எந்த அர்த்தத்தை போதிக்கிறது ?

ஸா:—வாசாரம்பணம் = சப்தத்தினல் பிரதிபாத்யம் (சொல்லப்படுகிறது); நாமதேயம் = பெயர்.

வ :—பிரம்மம் சப்தபிரதிபாத்யமா, அல்லவா ?

ஸா :—பிரம்மம் சப்த பிரதிபாத்யமே.

வ :—சப்த பிரதிபாத்யமாயின் மித்யை என்று சொல்லலாமா ?

ஸா :—சொல்லக்கூடாது.

வ :—ஏன் சொல்லக்கூடாது.

ஸா :—பிரம்மம் சப்தப்பிரதிபாத்திய மாகையால் அதுவும் மித்யையாக வேண்டி வருகிறது. ஆகையால் அப்படி சொல்லக்கூடாது.

வ :—வாசாரம்பண சப்தத்தினல் கார்யத்திற்கு மித்யாத்வத்தை எப்படிச் சொல்லுகிறது ?

---

* கடமென்கிற பதத்திற்கு ரூட விருத்தியினல் குடமென்று அர்த்தம்.

† பங்கஜ மென்கிற பதத்திற்கு யோக விருத்தியினல் கமலமென்று அர்த்தம்.

‡ முக்யவிருத்தி—ரூட விருத்தி என்றும், யோக விருத்தி என்றும் இரண்டுவிதம்.

ஸா :—வாசாரம்பண மென்கிற பதத்துடன் மாத்திர மென்கிற பதத்தை சேர்த்துக்கொண்டு வாசாரம்பண மாத்திரம் என்று பதமிருப்பதாக பாவித்து வாசாரம்பண மாத்திரம் = கேவல சப்தத்தினுல் மாத்திரம் சொல்லப்படுகிறதே யொழிய பதார்த்த மில்லை என்று அர்த்தம் செய்கிறோம்.

வா. வ :—நாமதேய மென்கிற பதத்தினுல் கார்யத்திற்கு மித்யாத்வத்தை எப்படிச் சொல்லுகிறீர் ?

ஸா :—நாமதேய மென்கிற பதத்திற்குமுன் மாத்திர மென்கிறபதத்தை வைத்துக்கொண்டு நாமதேய மாத்திர மென்கிற பதமிருப்பதாக பாவித்து நாமதேய மாத்திரம் = வெறும் பெயர் மாத்திரமே யொழிய பதார்த்தமில்லை என்று அர்த்தம் சொல்லுகிறோம்.

வ :—'ஸத்தியம் ஞான மநந்தம் பிரம்ம' என்கிற சுருதி பிரம்மத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதல்லவா ?

ஸா :—அச்சுருதியில் பிரம்மத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமே இல்லாததினுல் 'ஸத்தியம் ஞான' மென்கிற சுருதி பிரம்மத்திற்கு மித்யாத்வத்தை போதிக்காது.

வ :—அச்சுருதியிலும் ந என்கிற பதத்தை சேர்த்துக்கொண்டு நஸத்தியம் என்று பதமிருக்கிற தென்று தெரிந்துக்கொண்டால், பிரம்மத்திற்கு மித்யாத்வத்தை போதிக்கும் 'நஸத்யம்' என்கிற பதம் இருக்கிறதல்லவா ?

ஸா :—சுருதியில் இல்லாத ந என்கிறபதத்தை சேர்த்துக்கொண்டு அர்த்தம் செய்தால் அது சுருத்யர்த்த மாகாது. ஆகையால் 'ஸத்திய' மென்கிற சுருதி பிரம்மத்திற்கு மித்யாத்வத்தை போதிக்காது.

வ :—வாசாரம்பணம், நாமதேயம் என்கிற பதங்கள் மாத்திரமே சுருதியிலிருக்கிறது. வாசாரம்பண மாத்திரம், நாமதேய மாத்திரம் என்று மாத்திர பதத்தை சேர்த்துக்கொண்டு மித்யை என்று செய்த அர்த்தம் சுருத்யர்த்தமாகாதல்லவா ?

ஸா ;— (பதிலில்லை.)

வ :—உம்மிட அத்வைத மதத்தில் மிருத்திகை (மண்) ஸத்தியமா பொய்யா ?

ஸா :—மண் மித்யையே.

வ :—'மிருத்திகேத்யேவ ஸத்தியம்' என்கிற வாக்கியம் மண்ணுக்கு ஸத்தியத்வத்தைச் சொல்லுகிறதா இல்லையா ?

ஸா :—மண்ணுக்கு ஸத்யத்வத்தை சொல்லுவதில் இச்சுருதிக்கு அபிப்பிராயமில்லை ?

வ :—அப்படியாயின் 'மிருத்திகேத்யேவ ஸத்தியம்' என்று ஏன் சொல்லப்பட்டது.

ஸா :—கார்யமான ஜகத்து மித்யை, காரணமான பிரம்மம் ஸத்தியம் என்று அறிவிப்பதற்காக. இச்சுருதி கார்யமானகடம் மண்முதலான எல்லா பதார்த்தங்களும் மித்யை என்று அறிவிப்பதற்காகச் சொல்லுகிறதே யொழிய, மண்ணுக்கு ஸத்தியத்வத்தைச் சொல்லுவதில் தாத்பர்ய மில்லை; அதற்கு ஸத்யத்வம் கூடுவதுமில்லை.

வ :—வாசாரம்பண மென்கிற சுருதியில் பொய் யென்று போதிக்கும் பதமில்லை. 'மிருத்திகேத்யேவ ஸத்யம்' என்கிற வாக்கியத்திற்கு மண்ணுக்கு ஸத்தியத்வத்தைச்சொல்லுவதில் தாத்பர்யமில்லை, சொன்ன போதிலும் பொருந்துவதுமில்லை; என்றால் இவ்வாக்கியம், கார்யம், மித்யை, காரணம் ஸத்தியமென்று அறிவிப்பதுடன் காரணமான பிரம்மம் ஸத்தியம், கார்யமான ஜகத்து மித்யை என்று போதிக்கிற தென்பது எப்படிக் கூடும் ?

ஸா :— (பதிலில்லை.)

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

"வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் மிருத்திகேத்யேவ ஸத்தியம்" என்கிற சுருதி மண்ணினால் உண்டாகும் (விகாரங்களான) கடாதி பதார்த்தங்களுக்கு வாசாரம்பண மென்கிற பதத்

திஞலும் நாமதேய மென்கிற பதத்திஞலும் மித்யாத்வத்தைச் சொல்லி, காரணமான மண்ணென்றே ஸத்திய மென்று சொல்லு கிறது. இதிஞல் காரண மொன்றே ஸத்தியம், காரியமெல்லாம் பொய்யென்று ஸூசித்துக் கொண்டே காரணமான பிரம்ம மொன்றே ஸத்தியம், கார்யமான ஸகல பிரபஞ்சமும் பொய் யென்று ஸூசிக்கிறது. ஆகையால் இச்சுருதி ஜகத்துக்கு மித் யாத்வத்தை போதிக்கிறது. (ஜகத்து பொய் யென்று அறிவிக் கிறது.)

---

## வாதிவக்கீல் ஆர்க்யுமெண்டு.

---

வாசாரம்பண மென்கிற சுருதியிலிருக்கும் வாசாரம்பண பதமாகிலும், நாமதேயமென்கிற பதமாகிலும் மித்யை என்கிற அர்த்தத்தைச் சொல்லுவதில்லை என்று பிரதிவாதிகளே ஒப்புக் கொண்டிருக்கிருர்கள்.

வாசாரம்பண பதத்திற்கு மேலும், நாமதேய மென்கிற பதத்திற்குமேலும் மாத்திர மென்கிற பதத்தைச் சேர்த்துக் கொண்டு வாசாரம்பண மாத்திரம்=வெரும் வியவஹார விஷயமே யொழிய வாஸ்தவமாக பதார்த்தமில்லை; நாமதேய மாத்திரம்= வெரும் பெயர் மாத்திரமே யொழிய பதார்த்தமில்லை என்று அர்த்தம் செய்யவேணு மென்று பிரதிவாதிகளே ஒப்புக்கொண் டிருக்கிருர்கள்.

மற்றும் வேண்டிய பதங்களை வைத்துக் கொண்டு செய்யும் அர்த்தம் சுருத்யர்த்த மென்று ஒப்புக்கொண்டதாகில் 'ஸத் தியம் ஞான மனந்தம் பிரம்ம' என்கிற சுருதியில் ந என்கிற பதத்தை வைத்துக்கொண்டு பிரம்மம் நஸத்யம்=ஸத்தியமல்ல, மித்யை, நஞானம்=ஞானரூப மல்ல என்கிற அர்த்தங்களும் சுருத்யர்த்தங்க ளென்று சொல்ல வேண்டியதாகிறது. ஆகையால் நமக்கு வேண்டிய பதத்தைச் சேர்த்துக் கொண்டு சொல்லும் அர்த்தங்கள் சுருத்யர்த்தங்களல்ல என்பதை பிரதிவாதியின் சாக்ஷி ஒப்புக்கொண்டிருக்கிருர்.

மிருத்திகை (மண்) அத்வைதமத பிரகாரம் மித்யை யாகையால் 'மிருத்திகேத்யேவ ஸத்தியம்' என்கிற வாக்கியத்திஞல் சொல்லப்படும் மண் ஸத்திய மென்று பிரதிவாதிகள் ஒப்புவதில்லை.

வாசாரம்பண மென்கிற சுருதியில் கார்யம் மித்யை என்று சொல்லும் பதமில்லை. காரணமான மண் ஸத்திய மென்கிறதை அத்வைதிகளே ஒப்புவதில்லை. காரணமான மண் ஸத்திய மென்று சொல்லுவதில் சுருதிக்கு தாத்பர்யம் இல்லையென்றும் ஒப்புக்கொள்ளுகிறூர்கள்.

இக்காரணங்களிஞல் இவ்வாக்கியம் கார்யமான கடாதி பதார்த்தங்கள் மித்யை, காரணமான மண் முதலான பதார்த்தங்கள் ஸத்தியம் என்று சொல்லிக்கொண்டு, கார்யமான ஜகத்து மித்யை காரணமான பிரம்ம மொன்றே ஸத்திய மென்று சொல்லுவதில் அதிற்கு தாத்பர்யம் இருக்கிற தென்பது இச்சுருதியிஞல் சித்திக்காது.

ஆகையால் இவ்வாசாரம்பண மென்கிற சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தை போதிக்காது.

---

## ஐததாத்ம்ய சுருதி விசாரணை.

---

**பிர. வக்கீல்:**—"ஐததாத்ம்ய மிதம் ஸர்வம்" என்கிற சுருதிக்கு அர்த்த மென்ன? இதிஞல் ஜகத்துக்கு மித்யாத்வமெப்படி சித்திக்கிறது?

**பிர. ஸா:**—இதம் ஸர்வம் = இந்த ஸமஸ்தமான ஜகத்து ஐததாத்ம்யம் = ஸத் என்கிற பெயரையுடைய பரமாத்மனை ஆத்மாவாக உடையது. தத் = அப்பரமாத்மனே, ஸத்யம் = பரமார்த்த ஸத்தியம், ஸ: = அவனே, ஆத்மா = பிரத்யக்ஸ்வரூபன், த்வம் = நீ, தத் = ஸத்ரூபமான பிரம்மமாக, அஸி = இருக்கிருய், என்று அர்த்தம். இதிஞல் ஜகத்துக்கு மித்யாத்வம் சித்திக்கிறது.

வா. வ:—இப்பெரிய வாக்கியத்தில் எத்தனை அவாந்தர வாக்கியங்கள் இருக்கின்றன?

ஸா:—நாலு.

வ:—அவைகளைச் சொல்லுங்கள்.

ஸா:—(1) ஐததாத்ம்யமிதம் ஸர்வம் (2) தத்ஸத்தியம் (3) ஸ ஆத்மா (4) தத்த்வமஸி.

வா. வ.:—இன்னுலு அவாந்தர வாக்கியங்களில் எவ்வாக்கியத்திஞல் ஜகத்துக்கு மித்யாத்வம் சித்திக்கிறது?

ஸா:—தத்ஸத்யம் என்கிற வாக்கியத்திஞல்.

வ:—அதற்கர்த்த மென்ன்?

ஸா:—தத் ஏவ = ஸத் என்கிற பெயர்ரயுடைய பரமாத்மனே, ஸத்யம் = பாரமார்த்திக ஸத்யமானவன், இதர பதார்த்தங்கள் பரமார்த்த ஸத்ய மல்ல (மித்யை) என்று அர்த்தம்.

வ:—சுருதியில் தத், ஸத்யம் என்கிற பதங்களே இருக்கின்றன. ஏவ என்கிற பதமில்லையல்லவா?

ஸா:—ஏவ என்கிற பதமில்லை.

வ:—ஏவ என்கிற பதமில்லாமல் அவ்வாக்கியத்திற்கு என்ன அர்த்தமாகிறது?

ஸா:—தத் = பிரம்மம், ஸத்யம் = ஸத்ய மென்று அர்த்தமாகிறது.

வ:—ஜகத்து மித்யை என்று அர்த்தமாகாதல்லவா?

ஸா:—தத் ஸத்யம் என்றிருக்கிறபடியால் ஜகத்து மித்யை என்று அர்த்தமாகாவிடினும் தத் என்கிற பதத்திற்குமேல் ஏவ என்கிற பதத்தை வைத்துக்கொண்டு தத் ஏவ = அந்த பிரம்மமே ஸத்ய மென்று சொல்லும் சாந்தோக்ய சாங்கர பாஷ்யத்தில் வைத்துக்கொண்டிருப்பது போல் இங்கும் வைத்துக் கொள்ளுவதிஞல் பரம்மத்தை விட பின்னமான ஜகத்து மித்யை என்று அர்த்தமாகிறது.

வ:—சுருதியில் இல்லாத ஏவ என்கிற பதத்தை வைத்துக் கொண்டு ஜகத்து மித்யை என்று அர்த்தம் செய்தால் பின் சொல்லிய வாரு 'ஸத்யம் ஞான மனந்தம் பிரம்ம' என்கிற வாக்கியத்தில் ந என்கிற பதத்தை வைத்துக்கொண்டு பிரம்ம ந ஸதயம்=பிரம்மம் ஸத்யமல்ல, ந ஞானம்=ஞானரூபமல்ல என்று அர்த்தம் செய்யலாமல்லவா?

ஸா:— (பதிலில்லை)

வ:—To the Court–சுருதியில் இல்லாத பதத்தை வைத்துக் கொண்டு தங்களுக்குத் தோன்றின வாரு பிரதிவாதிகள் அர்த்தம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது சுருத்யர்த்தமல்ல என்பதை கோர்ட்டார் கவனிக்க வேண்டியது.

வ:—தத்வமஸி என்ற வாக்கியத்திற்கு அர்த்தம் சொல்லுங்கள்.

## கோர்ட் ஆர்டர்.

ஜகத்து ஸத்யமா அல்லவா என்கிற இஷ்யு விசாரணையில் அவ்விசாரம் அனாவஶ்யகம். ஜீவன் பரமாத்மனுடன் பின்னனா? அபின்னனா? என்கிறஇஷ்யு விசாரணை காலத்தில் அதை விசாரிக்கலாம்.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

தத்ஸத்யம் என்கிற சுருதி பரமாத்ம னொருவனே ஸத்யமென்று சொல்லிக்கொண்டு, ஜகத்து மித்யை என்று சொல்லுகிறது. ஆகையால் ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் இந்த ஐததாத்ம்ய மென்கிற சுருதி ஆதாரமாகிறது.

---

## வாதிவக்கீல் ஆர்க்யுமெண்ட்.

சுருதியில் தத், ஸத்யம் என்கிற பதங்களே இருக்கின்றன. ததேவ ஸத்ய மென்று ஏவ பதமில்லை. ஆகையால் இவ்வாக்யம்

பிரம்மம் ஸத்ய மென்று மாத்திரம் சொல்லுகிறதே யொழிய ஜகத்து மித்யை என்று சொல்லவில்லை. தங்களுக்குத் தோன்றின படி அர்த்தம் செய்வதற்காக வேண்டிய பதங்களை வைத்துக் கொண்டு அர்த்தம் செய்வதாயின் 'ஸத்யம் ஞானமனந்தம் பிரம்ம' என்கிற சுருதியில் ந என்கிற பதத்தை வைத்துக் கொண்டு, ப்ரம்ம ந ஸத்தியம் = ஸத்தியமல்ல, ந ஞானம் = ஞான ரூபமல்ல என்று அர்த்தம் செய்யக்கூடும். அப்படியாயின் சுருதி களுக்கு இப்படியே அர்த்தம் செய்யவேண்டு மென்கிற வ்ய வஸ்தை இல்லாமற் போகும். ஆகையால் பின் கூறிய வாசாரம் பணம், நாமதேயம் என்கிற பதத்திற்கு மேல் மாத்திர மென்கிற பதத்தை வைத்துக்கொண்டு, செய்த அர்த்தம், ஸாக்ஷி சொல் லியவாறு எப்படி சுருத்யர்த்தமாக மாட்டாதோ, அப்படியே இங்கும் ஏவ என்கிற பதத்தை வைத்துக்கொண்டு அர்த்தம் செய்வது சுருத்யர்த்தமாக மாட்டாது. ஆகையால் தத்ஸத்யம் என்கிற ஶ்ருதி ஜகத்து மித்யை என்று சொல்லுவதற்கு ஆதார மாகமாட்டாது.

---

## இதம் ஸர்வம் யதயமாத்மா என்கிற சுருதி விசாரணை.

*பிர. வ:*—"இதம் ஸர்வம் யதயமாத்மா" என்கிற சுருதிக்கு அர்த்த மென்ன?

*ஸா:*—இதம் ஸர்வம் = இவைகளெல்லாம் பரமாத்மனே என்று சொல்லுகிறது. ஜடமான ப்ரபஞ்சத்திற்கு சேதனமான பிரம்மஸ்வரூப மென்று சொல்லுவது பொருந்தாது* ஆகையால் ப்ரம்மத்தினிடத்தில் ஜகத்து கல்பிதமென்று அர்த்தம்.

*வா. வ:*—ஆத்மா என்கிற பதத்திற்கு ஆத்மாவினிடத்தில் கல்பித மென்கிற அர்த்தம் முக்யார்த்தமா? அல்லது அமுக் யார்த்தமா?

---

* "பாதாயாம் ஸாமாநாதி கரண்யம்' என்கிற நியாயம். ஸாமாநாதி கரணத்தினால் அபேதம் தோன்றுகிறது. பாதாயாம் அபேதம் பொருந்தா விடின் கல்பித மென்று சொல்ல வேணும்.

ஸா:—அமுக்யார்த்தமே.

வ:—ஆத்ம சப்தத்திற்கு முக்கியார்த்தத்தை விட்டபிறகு ஆத்மாவிடத்தில் கல்பிதமென்கிற அர்த்தத்தையே ஏன் செய்ய வேணும்?

ஸா:— (பதிலில்லை.)

வ:—இவ்வாக்கியத்தின் பூர்வவாக்கியங்களைச் சொல்லும்.

ஸா:—பிரம்ம தம் பராதாத் யோன்யத்ர ஆத்மனோ பிரம்ம வேத, க்ஷத்ரதம்...............க்ஷத்ரம் வேத, லோகாஸ்தம் பராதுர்யோன்யத்ர ஆத்மனோ லோகான் வேத, தேவாஸ்தம் ப்ராதுர்யோன்யத்ராத்மனோ தேவான் வேத, பூதானியம் பராதுர் யோன்யத்ராத்மனோ பூதானி வேத, ஸர்வம் பராதாத் யோன் யத்ராத்மனோ ஸர்வம் வேத, இதம் பிரம்ம இதம் க்ஷத்ரம் இமேலோகா: இமே தேவா: இமானி பூதானி இதம் ஸர்வம் யதய மாத்மா (பிரஹ. 2-4-6)

வ:—சாஸ்திரிகளே! இதற்கு அர்த்தம் சொல்லுங்கள்.

ஸா:—பிரம்ம = பிராம்மண ஜாதி, யஃ = யார், ஆத்மன: அன்யத்ர = பரமாத்மாவை விட்டு அன்யாதாரமாக (பரமாத்மாவை ஆதாரமாக இல்லாமல்) ஸ்வதந்திரமாக (ஸ்வாதந்த்ர்யேண, 1-4-18 சாங். ஸூ. பா.) ஸத்தா (இருப்பு) உள்ளதென்று அறிகிறானோ, தம் = அவனை, பராதாத் = திரஸ்கரிக்கின்றன. இப்படியே க்ஷத்ரியஜாதி, லோகங்கள், வேதம், பூதங்கள், ஸகல பதார்த்தங்களும் தம்மை பரமாத்மனை விட்டு வேறாக, அன்யத்ர = ஸ்வதந்திரமாக இருக்கின்றன வென்று யார் அறிகிறார்களோ அவர்களை திரஸ்கரிக்கின்றன. ஆகையால் இப்ரம்மம், இந்த க்ஷத்ரம், இந்த லோகம், இவ்வேதம், இப்பூதங்கள், இந்த சர்வம், இவை எல்லாம், அயமாத்மா = அப்பர மாத்மா என்றால் பிரம்ம க்ஷத்ராதி எல்லா ஜகத்தும் பிரம்மத்தை விட வேறாக இல்லை என்று அர்த்தம்.

வா. வ:—பிரம்ம க்ஷத்ராதி ஸமஸ்தமும், அயமாத்மா = பிரம்மமென்கிற அர்த்தம் வேதத்திற்கு கருத்தாக இருக்குமே

யாயின் "இதம் ஸர்வம் அயமாத்மா" இவ்வாக்கியம் மாத்திரமே சொன்னால் போதுமாயிருக்கும். 'இதம் ஸர்வம் யத் அயமாத்மா' என்கிற வாக்கியம் இருக்கப்படாது. யத் என்கிற பதம் அதிக மாகிறதல்லவா?

ஸா:— (பதிலில்லை.)

பிர. வ:—உங்களிட அர்த்தத்தில் யத் என்கிற பதத்திற்கு எப்படி பிரயோஜன முண்டாகிறது?

வாதி:—பிரம்ம க்ஷத்ராதிகள், யத் = யஸ்மின் = எதிலிருக் கிறதோ, அயம் = அவ்வாதாரம், ஆத்மா = பரமாத்மன் என்று யத் சப்தத்திற்கு பிரயோஜனம் உண்டாகிறது.

பிர. வ:—யத் என்கிற பதத்திற்கு யஸ்மின் என்று அர்த்தம் செய்வதற்கு ஆதாரமென்ன?

வாதி:—அன்யத்ர ஆத்மனோவேத, என்று பரமாத்மாவை விட வேறான வஸ்துவில் அறிகிறானோ என்று அன்யத்ர என்கிற ஆதார வாசகமான சப்தம் ஏழாவது வேற்றுமையாக இருப்பதி னால் அதையனுசரித்து யத் என்கிற பதமும் ஏழாவது வேற்று மை பதமே என்று அறியவேணும்.

பிர. வ:—யத் என்கிற பதம் ஏழாவது வேற்றுமை என்பது அல்லது லக்ஷணையினால் ஏழாவது வேற்றுமையின் அர்த்தத்தை யுடையதாகிறது என்பது கௌணமே யல்லவா?

வாதி:—கௌணமல்ல. யத் என்கிற பதத்திற்கு ஏழாவது வேற்றுமை யுண்டு.

பிர. வ:—அது எப்படி?

வாதி:— (1) யத் என்கிற பதம் அவ்யயமாகையால், அவ்ய யத்தினால் வரும் விபக்திகள் லுப்தங்களாகின்றன. அந்த லுப்த மாயிருக்கும் ஸப்தமீ விபக்தியை (ஏழாவது வேற்றுமையை) அனுஸந்தானம் செய்துக் கொள்ளுவோமாயின் ஸப்தமீ விபக்த் யர்த்தம் உண்டாகிறது. ஆகையால் காவ்யாதிகளில் தத் = தஸ்

மாத் = அதினுல் என்று பஞ்சமீ விபக்த்யர்த்தத்தை தத் என்கிற அவ்யயத்திற்கு சொல்லுகிருர்கள்.

(2) அல்லது 'ஸுபாம்ஸுலுக்' என்கிற ஸூத்திரத்தின் படிக்கு யத் சப்தத்திற்கு மேல் வந்தஸப்தமீவிபக்திக்கு லோபம் சொல்லினும், அல்லது ஸப்தமீவிபக்திக்கு ஸு ஆதேசம் செய்த போதிலும் யத் என்றே பதமாகிறது. ஆகையால் யத் என்பதற்கு ஸப்தமீவிபக்த்யர்த்தம் முக்கியமே யொழிய கௌணமல்ல.

வா. வ:—ஜகத்து ஞான ஸ்வரூபமே. ஞானுதிரிக்தமானதல்ல என்கிற பௌத்தமதத்தை நாபாவ உபலப்தே: இது முதலான ஸூத்திரங்களினுல் சங்கராசார்யார் நிருகரித்திருக்கிருரல்லவா?

பிர. ஸா:—பாஹ்ய பதார்த்தத்தை (ஞானுதிரிக்தமான ஜகத்தை) நிருகரித்திருக்கிருர்.

வ:—நீங்களும் பௌத்தர்களைப்போல் பாஹ்ய பதார்த்தங்களை (ஞான = பிரம்மாதிரிக்தமான பதார்த்தங்களை) இந்தஸ்ருதி நிருகரிக்கிறதென்று சொல்லவே அந்ததோஷம் உங்கள் பேரில் வருவதில்லையோ?

ஸா:— (பதிலில்லை.)

வ:—இம்மௌனத்தை கோர்ட்டார் நோட் செய்ய வேணுமாய்க் கோருகிறேன்.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

"இதம் ஸர்வம் யதயமாத்மா" (பிரஹ. 2-4-6) இவ்வாக்யம் ஸமஸ்தமான ஜகத்து ஆத்மனைவிட வேருக இல்லை என்று சொல்லுகிறபடியால் ஜகத்து மித்யை என்று சொல்லவேணும்.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

"இதம் ஸர்வம் யதயமாத்மா" என்கிற வாக்கியத்தில் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமில்லை. ஜகத்து ஆத்மரூபமென்று சொல்லுவதுமில்லை. "பிரம்மதம் பராதாத்யோன்யத்ராத்மனோ பிரம்மவேத" இது முதலான வாக்கியங்கள் பிரம்மக்ஷத்ராதி ஜகத்து தங்களை (அவைகளை) ஆத்மன: அன்யத்ர = ஆத்மாவை விட வேறான ஸ்தானத்தில் (ஸ்வதந்திரமாக) இருக்கிறதென்று அறிந்தவனுக்குக் கெடுதியைச் செய்கின்றன என்று சொல்லியிருக்கிறபடியால், பிரம்ம க்ஷத்ராதி ஜகத்து யத் = யாரிடத்தில் இருக்கிறதோ அவனே ஆத்மா என்று சொல்லுகிறது என்று சொல்லவேணும். ஆகையால் இந்த ஶ்ருதி பிரம்ம க்ஷத்ராதிஜகத்து மித்யை என்று சொல்லுவதில்லை.

இவ்வெல்லா ஜகத்தும்ஆத்மா என்றுசொல்ல வேண்டியிருக்குமாயின் 'இதம் ஸர்வம்அயமாத்மா' இவ்வளவே சொல்லியிருந்தால் போதுமாயிருக்கும். யத் என்கிற பதம் வீணாகிறது. இவ்வெல்லா ஜகத்து ஆத்மா என்கிறது பொருந்தாதாகையால் ஆத்மா என்றாலும் ஆத்மாவிடத்தில் கல்பிதம் (மித்யை) என்று லக்ஷணா விருத்தியினால் அர்த்தம் செய்ய வேணும், முக்யவிருத்தியை விட்ட பிறகு அமுக்கிய விருத்தியினால் அப்படி ஏன் அர்த்தம் செய்ய வேணும்? ஆத்மா = ஆத்மாவின் அதீனமென்று ஏன் அர்த்தம் செய்துக் கொள்ளக்கூடாது. ஆத்மாதீனமென்கிற அர்த்தமே இதரானேக ஶ்ருதிஸ்மிருதி ஸூத்திரங்களுக்கு அனுகூலமாகவும் இருக்கின்றன.

ஜகத்து இல்லை என்பது பிரமாண விருத்தமானது, ஸ்வீகரிப்பதற்கு யோக்யமானதல்ல என்று சங்கராசாரியர் 'நாபாவ உபலப்தே:' இது முதலான ஸூத்திரங்களினால் தாங்களே கண்டித்திருக்கிறார். ஆகையால் மறுபடியும் அவரே பிரபஞ்சத்தை நிஷேதிப்பது (பிரபஞ்சம் இல்லை என்பது) ஸ்வவ்யாஹத (தான் சொன்ன வார்த்தைக்குத்தானே விருத்தமாகச் சொல்லுவது) மாகிறது.

---

# பிரம்மை வேதம் விஶ்வ மிதம் வரிஷ்டம் என்கிற சுருதி விசாரணை.

*பிர. வ:*—"பிரம்மை வேதம் விஶ்வமிதம் வரிஷ்டம்" (முண். 2-2-11.) இந்த மந்திரத்திற்கு அர்த்த மென்ன?

*பிர. ஸா:*—இவ்வெல்லா உலகமும் பிரம்மமே என்றால் பிரம்மத்தில் கல்பிதமானது, பிரம்மத்தைவிட வேறாக இல்லை. 'இதம்' இவ்வுலகம், 'வரிஷ்டம்' மிகவும் மேலானது என்று அர்த்தம்.

*வா. வ:*—இச்சுருதியில் உலகத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதம் யாது?

*ஸா:*—இச்சுருதியிலிருக்கும் ஒரே வேற்றுமையாயுள்ள விஶ்வம், பிரம்ம என்கிற இரண்டு பதங்கள்.

*வ:*—இந்த ஒரே வேற்றுமையுடைய இரண்டு பதங்களுக்கு என்ன அர்த்தம்?

*ஸா:*—'விஶ்வம்' ஜகத்து, 'பிரம்ம' பிரம்மத்தில் கல்பிதமானது (மித்யை) என்று அர்த்தம்.

*வ:*—பிரம்ம மென்கிற ஶப்தம் பிரம்மத்தில் கல்பித மென்கிற அர்த்தத்தை முக்யவிருத்தியினால் (பிரைமரி மீனிங்கினால்) போதிக்கிறதா? அமுக்கிய விருத்தியினால் (செகண்டரி மீனிங்கினால்) போதிக்கிறதா?

*ஸா:*—பிரம்ம மென்கிறபதம் பிரம்மத்தில் கல்பித மென்கிற அர்த்தத்தை முக்கிய விருத்தியினால் போதிக்கிறதில்லை. அமுக்கிய விருத்தியினாலேயே போதிக்கிறது.

*வ:*—முக்ய விருத்தியினால் எந்த அர்த்தத்தை போதிக்கிறது?

*ஸா:*—'விஶ்வம்' ஜகத்து, 'பிரம்ம' பிரம்மம், என்று ஜகத்துக்கு பிரம்மத்துடன் அபேதத்தைப் போதிக்கிறது.

வ:—முக்கிய விருத்தியினால் தோன்றும் அர்த்தத்தை நீர் ஏன் விட்டீர்.

ஸா:—மித்யையான ஜகத்து ஸத்தியமான பிரம்மத்துடன் அபின்னம் (ஒன்றே) என்கிறது பொருந்துகிறதில்லை யாகையால் முக்கியார்த்தத்தை விட்டோம்.

வ:—ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் இந்த "பிரம்மை வேதம் விஶ்வம்" என்கிற ஶ்ருதியே பிரமாணமல்லவா?

ஸா:—இந்த ஶ்ருதியே பிரமாணம்.

வ:—இச்சுருதியினால் ஜகத்து மித்யை என்று சித்திக்க வேணுமல்லவா?

ஸா:—இச்சுருதியினாலேயே சித்திக்கவேணும்.

வ:—"விஶ்வம் பிரம்ம" என்கிற ஶ்ருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தை எப்போது போதிக்கும்?

ஸா:—பிரம்ம மென்கிற ஶப்தத்திற்கு பிரம்மத்தில் கல்பிதம் என்று அமுக்கிய விருத்தியினால் அர்த்தம் செய்துக் கொண்டால் போதிக்கும்.

வ:—பிரம்ம ஶப்தத்திற்கு பிரம்மத்தில் கல்பிதம் என்கிற அமுக்கியார்த்தம் எப்போது சொல்லுவதற்கு வரும்?

ஸா:—ஜகத்து மித்யை என்று சித்தித்தால் மித்யையான ஜகத்து ஸத்தியமான பிரம்ம ஸ்வரூபமாகாததினால் 'விஶ்வம்' ஜகத்து, 'பிரம்ம' பிரம்ம ஸ்வரூபமென்று சொல்லவருதாகையால் 'பிரம்ம' என்றால் பிரம்மத்தினிடத்தில் கல்பித மென்று அர்த்தம் செய்வதற்கு வரும்.

வ:—ஜகத்து மித்யை என்று சித்திக்காமல் பிரம்ம பதத்திற்கு பிரம்மத்தில் கல்பித மென்று அர்த்தம் செய்வதற்கு வருமா?

ஸா:—அர்த்தம் செய்வதற்கு வருது.

வ:—பிரம்ம என்கிற பதத்திற்கு பிரம்மத்தில் கல்பிதமென்று அர்த்தம் செய்யாமல் ஜகத்து மித்யை என்று சித்திக்குமா?

ஸா:—பிரம்மத்தில் கல்பித மென்று அர்த்தம் செய்யாமல் ஜகத்து மித்யை என்று சித்திக்காது.

வ:—ஜகத்து மித்யை என்று சித்திக்காமல் பிரம்மபதத்திற்கு பிரம்மத்தில் கல்பித மென்று அர்த்தம் செய்வதற்கு வராது, பிரம்மத்தில் கல்பிதமென்று அர்த்தம் செய்யாமல் ஜகத்து மித்யை என்று சித்திக்காதாகையால் அன்யோன்யாஶ்ரய தோஷம் வருகிறதல்லவா?

ஸா:—அன்யோன்யாஶ்ரய தோஷம் வந்தபோதிலும் நமக்கு பாதகமாகாது.

வ:—கடத்திற்கு படம் காரணம், படத்திற்கு கடம் காரணம், என்றால் அன்யோன்யாஶ்ரயம் வருகிறதினால் கடம் உண்டாகாமல் படமுண்டாகாது, படமுண்டாகாமல் கடம் உண்டாகாது. இப்படி கடம் படம் இரண்டும் எப்படி உண்டாகாதோ அப்படியே ஜகத்து மித்யை என்று சித்திக்காமல் ஜகத்து பிரம்மஸ்வரூபமல்லவென்று சித்திக்கிறதில்லை, ஜகத்து பிரம்மஸ்வரூபமல்ல என்று சித்திக்காமல் ஜகத்து மித்யை என்று சித்திக்காது இப்படி அன்யோன்யாஶ்ரய தோஷம் நேர்ந்து இரண்டும் சித்திக்காதல்லவா?

ஸா:—*அனவஸ்தை, அன்யோன்யாஶ்ரயம் முதலிய எவ்வளவு தோஷங்களுண்டோ எல்லாம் நமக்கு ஸ்நேஹிதர்களே (என்றால்—எங்கள் மதத்தில் பிரம்மத்தைவிட வேறான எந்த பதார்த்தமும் இல்லாததினால் ஜகத்துக்கு மித்யாத்வம் முதலான பதார்த்தங்கள் சித்திக்கவேகூடாது என்கிறதே எங்களுக்கு வேண்டியது. அன்யோன்யாஶ்ரயம் முதலிய தோஷங்கள் எங்

---

* அனவஸ்தாதயோ தோஷா: ஸத்தாம் நிக்னந்தி வஸ்துன: அத்வைதினும் தேஸ—ஹ்ருத: பிரபஞ்சே தத்பிரஸஞ்ஜகா: (பிரம்மானந்தீயம்).

களுக்கு வேண்டியதையே செய்கின்றன.) * எல்லா அநுபபத்திகளும் மாயாகல்பித மென்கிற எங்கள் மதத்திற்கு பூஷணங்களானவை. மற்றும் உபோத்பலகமானவை (புஷ்டியைத்தருகின்றனவை) என்று எங்கள் பிராசீன அத்வைதிகள் சொல்லியிருக்கிறபடியால் ஜகத்து மித்யை என்று சித்திக்கவேண்டியதில்லை.

வ:—To the court யுவர் ஆனர்! மாயாகல்பிதமான தம்மிட அத்வைத மதத்திற்கு மேல்கண்ட எல்லா தோஷங்களும் வருகின்றன. அத்தோஷங்கள் அத்வைதிகளுக்கு ஸ்நேஹிதர்கள் (தோஷங்கள் எந்த பதார்த்தத்தையும் சித்திக்கச் செய்யாமலிருக்கிறது. தங்களிட மதத்தில் எந்த பதார்த்தங்களும் சித்திக்கக்கூடாது. ஆகையால் அவைகள் தமக்கு வேண்டியவற்றையே செய்கின்றன) மற்றும் தங்கள் மதத்திற்கு அநுபபத்தி (யுக்திக்குப் பொருந்தாதது) பூஷணம், மற்றும் "உபோத்பலகம்" என்று பிரதிவாதிகள் சொல்லுகிறார்கள். இப்படி அவர்களே ஸகல தோஷயுக்தமானதென்று ஒப்புக்கொள்ளும் அவாளிட அத்வைதமதத்தை விசாரசீலர்கள் எப்படி சரியானதென்று ஒப்புக்கொள்ளுவார்கள் என்கிறதை கோர்ட்டார் கவனிக்க வேண்டியது.

வ:—"விஶ்வம் பிரம்ம" என்கிற சுருதிக்கு முக்யார்த்தத்தை விட்டு அமுக்கியார்த்தத்தை அங்கீகரிப்பதாயின் விஶ்வம் பிரம்ம என்கிறதை எல்லாபிரமாணங்களுக்கும் விருத்தமாக பிரம்மத்தினிடத்தில் கல்பித மென்று ஏன் அர்த்தம் செய்யவேணும். "யதோவா இமானி பூதானி ஜாயந்தே" இதுமுதலான ஶ்ருதிகளை அநுஸரித்து பிரம்ம என்கிற பதத்திற்கு பிரம்மத்தினால் பிறந்ததென்றாகிலும், பிரம்மாதீன மென்றாகிலும் ஏன் அர்த்தம் செய்யக்கூடாது.

ஸா:— (பதிலில்லை)

பிர. வ:—ராமாசார்! ஆனால் இவ்வாக்கியம் எதற்காக பிரவர்த்தித்திருக்கிறதென்று நீர் சொல்லுகிறீர்?

---

* "மாயாயாமனுபபத்திர் பூஷணமேவ" (பாமதீ) "அநுபபத்தி: மா்யா்ம் உபோத்பலயதி" (பாமதீ).

வா. ஸா:—(ராமாசார்) இவ்வாக்கியத்தில் "பிரம்மை வேதம மிருதம் புரஸ்தாத் பிரம்ம பஶ்சாத் பிரம்ம தக்ஷிணதஶ்சோத்தரேண, அதஶ்சோர்த்வம்ச பிரஸ்ருதம் பிரம்மை வேதம் விஶ்வமிதம் வரிஷ்டம்" என்று பிரம்மம் முன்பக்கத்திலிருக்கிறது, பிரம்மம் பின்பக்கத்திலிருக்கிறது, மேல்பக்கத்திலும் கீழ்பக்கத்திலும் எல்லாப் பிரதேசங்களிலும் இருக்கிறதென்று பிரம்மத்திற்கு வ்யாப்தியைச் சொல்லுவதற்காக பிரவர்த்தித்திருக்கிறது என்று சொல்லுகிறோம்.

வா. வ:—'தேதத் ஸத்யம்' என்கிற வாக்யம் எந்த மந்திரத்திலிருக்கிறது?

பிர. ஸா:—இரண்டாவது முண்டகம் இரண்டாவது கண்டத்திலிருக்கிறது.

வ:—அம் மந்திரத்திற்கு அர்த்தமென்ன?

ஸா:—தத்ஏதத் = ஸர்வாஶ்ரயமான பரபிரம்மம், ஸத்யம் மித்யை அல்ல என்று அர்த்தம்.

வ:—'தேதத்ஸத்யம்' என்கிற வாக்கியம் இவ்வுபனிஷத்தில் வேறு எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா?

ஸா:—முதல் முண்டகத்தில் இரண்டாவது கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வ:—அதற்கு அர்த்தம் என்ன?

ஸா:—ருஷிகளினால் பார்க்கப்பட்ட வேதங்களில் விஹிதமான அக்னிஹோத்ராதி கர்மங்கள், ஸத்யம் = ஸத்யமானவை என்று அர்த்தம்.

வ:—கர்மங்கள் ஸத்யமாயின் மித்யையாகாதல்லவா?

ஸா:—கர்மங்கள் மித்யைகளே.

வ:—கர்மங்கள் மித்யைகளாயின் சுருதி ஸத்திய மென்று சொல்லுவது எப்படிக் கூடும்?

ஸா:—ஸத்திய மென்கிறது பாரமார்த்திகம், வ்யாவஹாரிகம் என்று இருவகையானது. பாரமார்த்திக ஸத்ய மென்றால் எக்காலத்திலும் கெடுதலையடையாத தாகையால் மித்யையல்ல. வ்யாவஹாரிக ஸத்ய மென்கிறது ஶுக்திரஜதத்தைப்போல் (முத்துச்சிப்பியில் காணப்படும் வெள்ளி உத்தரக்ஷணத்திலேயே நாசமடைவதைப்போல்) நாசமடைவதினால் மித்யையாகிறது. தற்காலம் அக்னிஹோத்ராதி கர்மங்கள் 'ஸத்யம்' என்றால் வ்யாவஹாரிகஸத்யம் = மித்யை என்றே அர்த்தம் செய்கிறோமாகையால் மித்யை என்று சொன்னாலும், ஸத்திய மென்கிறது பொருந்தும்.

வ:—'ததேதத் ஸத்யம்' (முண். 2-2-2.) என்கிற மந்திரமும் 'ததேதத்ஸத்யம்' (முண். 1-2-1.) என்கிற மந்திரமும் ஒரே விதமல்லவா?

ஸா: — இரண்டு மந்திரங்களும் ஒரே விதமானது.

வ:—இரண்டு மந்திரங்களிலிருக்கும் ஸத்யம் என்கிற பதங்களுக்கு ஒரே விதமான அர்த்தம் அல்லவா?

ஸா:—ஒரே விதமான அர்த்தம் தான்.

வ:—முண். 2-2-2. மந்திரத்திலிருக்கும் ஸத்யம் என்கிற பதத்திற்கு என்ன அர்த்தம் சொல்லியிருக்கிறீர்கள்?

ஸா:—ஸத்யம் = அவிததம் = மித்யை அல்ல என்று அர்த்தம் சொல்லியிருக்கிறோம்.

வ:—முண். 1-2-1. மந்திரத்திலிருக்கும் ஸத்யம் என்கிற பதத்திற்கு ஸத்யம் = அவிததம் = மித்யை அல்ல என்று அர்த்தம் சொல்ல வேண்டுமல்லவா?

ஸா:— (பதிலில்லை.)

வ:—To the court முண்டகோபனிஷத் பிரம்மத்திற்கு எந்த ஸத்ய மென்கிற பதத்தினால் ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதோ அதே ஸத்யம் என்கிற பதத்தினாலேயே அக்னிஹோத்ராதி ஜகத்துக்குக்கூட ஸத்யத்வத்தைச் சொல்லிக் கொண்டிருக்க

"இம்முண்டகசுருதி பிரம்மத்திற்கு ஸத்யத்வத்தை, (மித்யை அல்ல என்று) சொல்லுகிறது. அக்னிஹோத்ராதி ஜகத் ஸத்ய மல்ல மித்யை என்று சொல்லுகிறது" என்று இச்சாக்ஷி சொல் லுவதை கோர்ட்டார் கவனிக்க வேண்டியது.

வ:—பிரமாணங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை தாத் விகம் (ஸத்யமானது) என்றே கிரகிக்கிறதேயொழிய வியாவ ஹாரிக மென்று கிரகிக்கிறதில்லை என்று உங்களிட அத்வைதி கள் 'க்ஷணிகத்வாச்ச' என்கிற ஸூத்திர வ்யாக்கியானத்தில் பௌத்தர்களை நிராகரித்திருப்பது உமக்குத்தெரியுமா?

ஸா:—தெரியும்.

வ:—'ததேதத்ஸத்யம்' என்கிற வாக்யம் (பிரமாணம்) வியாவஹாரிக ஸத்தியத்வத்தை விஷயீகரிக்கிறதென்று நீர் எப் படிச் சொன்னீர்?

ஸா:— (பதிலில்லை.)

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பிரம்மை வேதம் விஶ்வ (ஸர்வ) மிதம் வரிஷ்டம் என்கிற ஶ்ருதி ஜகத்து பிரம்மத்தில் கல்பிதம் (மித்யை) என்று சொல்லு கிறபடியால் ஜகத்து மித்யையே யாகும்.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

பிரம்மை வேதம் ஸர்வம் என்கிற வாக்கியம் பிரம்மத்திற்கு எல்லா பிரதேசங் களிலும் வியாப்தியைச் சொல்லுகிறது. ஜகத் துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதில்லை. இவ்வாக்கியத்தில் ஜகத்து மித்யை என்று சொல்லும் பதமே இல்லை. இதம் விஶ் வம் பிரம்ம என்கிற பதங்களுக்கு பிரம்மனிடத்தில் கல்பித மென்று அர்த்தம் முக்கிய விருத்தியினால் ஆகிறதில்லை. அமுக்

யார்த்தத்தை வைத்துக் கொண்டால் அநேகமான பூர்வோத்தர வாக்கியங்களுக்கு விருத்தமாக ஜகத்து பிரம்மத்தில் கல்பிதம் என்கிற அர்த்தத்தையே ஏன் செய்ய வேண்டும்? ஜகத்து பிரம்மாதீனம் இதுவே முதலான அர்த்தங்களை ஏன் செய்யக் கூடாது? என்கிற விஷயத்தில் பிரதிவாதிகள் காரணங்களைச் சொல்லவில்லை. இந்த முண்டகோபனிஷத்திலேயே 'தடேதத் ஸத்யம்' (2-2-2.) என்கிற மந்திரம் பிரம்மத்திற்கு எப்படி ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதோ அப்படியே 'தடேதத்ஸத்யம்' (1-2-1.) என்கிற மந்திரம் அக்னிஹோத்ர கர்மம் முதலிய ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லுகிறது.

பிரமாணங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை தாத்விகம் (ஸத்தியம்) என்றாகிலும், அதாத்விகம் (மித்யை) என்றாகிலும் கிரகிக்கின்றனவே யொழிய வியாவஹாரிக மென்று கிரகிக்கிறதில்லை என்று அத்வைதிகளே 'க்ஷணிகத்வாச்ச' என்கிற ஸூத்திர வ்யாக்யானத்தில் பௌத்தரை நிராகரித்திருந்து மறுபடியும் ஶ்ருதி முதலிய பிரமாணங்கள் கர்மம் முதலிய ஜகத்து வியாவஹாரிக ஸத்திய மென்று சொல்லுகிறதென்று சொல்லுவது பொருந்தாது. ஆகையால் ஶ்ருதியில் சொல்லியிருக்கும் ஸத்யத்வம் வ்யாவஹாரிக ஸத்யத்வ மென்று சொல்லுவதற்கு அவகாசமில்லை. ஆகையால் இவ்வாக்யம் ஜகத்துக்கு மித்யாத்வத்தை போதிக்கிறதில்லை.

---

## ஆத்மை வேதம் ஸர்வம் சுருதி விசாரணை.

---

பிர. வ:—சாஸ்திரிகளே! "ஆத்மை வேதம் ஸர்வம்"(சாந். 7-25-2.) என்கிற மந்திரத்திற்கு அர்த்த மென்ன?

**பிர. ஸா:**—இதம் ஸர்வம் = இந்த எல்லா ஜகத்து, ஆத்மைவ = ஆத்மனிடத்தில் கல்பிதமானது, மித்யை என்று அர்த்தம்.

வா. வ:—இச்சுருதியில் மித்யை என்கிற அர்த்தத்தைச் சொல்லும் பதமிருக்கிறதா ?

ஸா:—இல்லை.

வ:—இவ்வாக்யம் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதென்று நீர் எப்படி சொன்னீர்?

ஸா:—இச்சுருதியில் ஸர்வம், ஆத்மா என்கிற இரண்டுபதங்களும் ஒரே வேற்றுமையாக இருப்பதினால் (ஸாமானாதிகரணம்) ஜகத்துக்கும் ஆத்மாவிற்கும் அபேதத்தைச் சொல்லுகிறது மித்யையான ஜகத்துக்கும், ஸத்யமான ஆத்மாவிற்கும் அபேதம் பொருந்துவதில்லை யாகையால் இதம் ஸர்வம்=இந்த எல்லா ஜகத்தும், பிரம்ம = பிரம்மத்தில் கல்பிதமென்று சொல்லுகிறோம்.

வ:—"ஸர்வம் ஸமாப்னோஷி" என்கிற கீதாஶ்லோகானுசாரமாக பிரம்ம ஸர்வம் = சர்வவ்யாப்தம் என்று பூர்வோத்தர வாக்யங்களுக்குஅனுகூலமாக அர்த்தம் பொருந்திக்கொண்டிருக்க அமுக்கிய விருத்தியினால் ஜகத்து பிரம்மத்தில் கல்பிதமென்று அர்த்தம் செய்வதற்கு என்னமாவது ஆதாரங்களிருக்கின்றனவா ?

ஸா:— (பதிலில்லை).

வ:—"ஸவா ஏஷ ஏவம் பஶ்யன் ஏவம் மன்வான: ஏவம் விஜானன்.........தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோபவதி. அதயே அன்யதாதோ விது: அன்ய ராஜான: தேக்ஷ்ய்ய லோகா பவந்தி தேஷாம் ஸர்வேஷு லோகேஷு அகாமசாரோபவதி" என்கிற உத்திரவாக்கியத்திற்கு அர்த்தம் சொல்லுங்கள்.

ஸா :—எவன் இவ்விதமாக அறிகிறானோ.........அவனுக்கு எல்லா லோகத்திலும் யதேஷ்டமாக ஸஞ்சரிப்பதற்கு ஸாமர்த்யமுண்டாகிறது. எவன் அறிவதில்லையோ அவனுக்கு எல்லா லோக ஸஞ்சாரம் செய்வதற்கு ஸாமர்த்ய முண்டாகிறதில்லை என்று அர்த்தம்.

வ:—'ஆத்மை வேதம் ஸர்வம்' என்கிற வாக்கியத்தினால் எந்த ஜகத்தும் இல்லை என்று சொல்லி அதே மந்திரத்தின் உத்திரபாகத்தில் மனிதன் அறிகிறான், லோக ஸஞ்சாரம் செய்கிறான் என்று அறிவு, லோகம், லோகஸஞ்சாரம் முதலிய ஜகத்தை ஸ்ருதி சொல்லக்கூடுமா?

ஸா:— (பதிலில்லை.)

பிர. வ:—ஆனால் இவ்வாக்கியம் எந்த அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?

வா. ஸா.— கிருஷ்ணாசார்:—"அதாத ஆத்மாதேஶ ஏவ ஆத்மைவாதஸ்தாத் ஆத்மா உபரிஷ்டாத் ஆத்மா பஶ்சாத் ஆத்மா புரஸ்தாத் ஆத்மா தக்ஷிணத: ஆத்மோத்தரத: ஆத்மை வேதம் ஸர்வம்" என்கிற பூர்வ வாக்கியத்தைப் பார்க்க பரமாத்மனே பூர்வபஶ்சிமதக்ஷிணோத்தர திசைகளில் வியாபித்திருக்கிறானென்று பரமாத்மனின் வ்யாப்தியைச் சொல்லுகிறது. இவ்விதமாக பரமாத்மனுடைய வ்யாப்தியை யார் அறிகிறார்களோ அவர் எல்லா உலகத்திலும் ஸஞ்சரிப்பதற்கு ஸமர்த்தர்களாகின்றனர் என்று அர்த்தம் சொல்லுகிறதென்று நாங்கள் சொல்லுகிறோம்.

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

'ஆத்மை வேதம் ஸர்வம்' (சாந் 7-25-2.) என்கிற ஸ்ருதி எல்லா ஜகத்து பிரம்மத்தினிடத்தில் கல்பிதமென்று சொல்லிக்கொண்டே ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறது.

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

ஆத்மை வேதம் என்கிற ஸ்ருதியில் மித்யாத்வத்தை போதிக்கும் பதமே இல்லை என்று பிரதிவாதி ஒப்புக்கொண்

டிருக்கிருர். அமுக்கிய விருத்தியிஞல் ஆத்மா என்ருல் ஆத்மனிடத்தில் கல்பிதமென்று அர்த்தம் செய்வதற்கு பிரதிவாதிகள் ஆதாரங்களைச் சொல்லவில்லை.

ஆத்மை வேதம் ஸர்வம் என்கிற வாக்கியத்தின் உத்திர பாகத்தில் லோகங்கள், ஸஞ்சாரம், ஞானம், மனனம் முதலிய அநேக ஜகத்து சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால் இவ்வாக்கியம் ஜகத்துக்கு மித்யாத்வத்தை போதிக்கிறதில்லை. 'ஆத்மைவாதஸ்தாத்' என்கிற பூர்வ வாக்கியானுஸாரமாக பரமாத்மனுக்கு ஸர்வத்ரவ்யாப்தியைச் சொல்லுகிறது.

---

## நேஹநாநாஸ்தி கிஞ்சன சுருதி விசாரணை.

---

பிர. வ:—அவதானிகளே! 'ததனன்யத்வமாரம்பண ஶப்தாதிப்ய:' என்கிற ஸூத்திரத்திலிருக்கும் ஆதிபதத்திஞலெடுத்துக்கொண்ட, பிரஹதாரண்யகம் மற்றும் காடகம் இவைகளிலுள்ள 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்கியத்திஞல் ஜகத்துக்கு மித்யாத்வம் எப்படி சித்திக்கிறது?

பிர. ஸா:—இஹ = இப்பிரம்மத்தில், நாநா = பின்னமான, கிஞ்சன = எந்த வஸ்துவும், நாஸ்தி = கிடையாது என்றுசொல்லுகிறபடியால் உலகத்திற்கு மித்யாத்வம் (மூன்று காலங்களிலும் இல்லாத்தன்மை) சித்திக்கிறது.

வா. வ:—'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்கியம் காடகத்தில் எந்த அத்யாயத்தில் எந்த வல்லியில் சொல்லப்பட்டிருக்கிறது?

ஸா:—இரண்டாவது அத்தியாயம் நாலாவது வல்லியில் 11-வது மந்திரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வா. வ:—'நேஹநாநாஸ்தி' என்கிற வாக்கியத்திற்கு பூர்வோத்திர வாக்கியங்களைப் பார்த்திருக்கிரீரு?

ஸா:—பார்த்திருக்கிரேம்.

வ:—5-வது மந்திரத்தைச் சொல்லுங்கள்.

ஸா:—'ஈசாநம் பூதபவ்யஸ்ய நததோவிஜுகுப்ஸதே'

வ:—ஐயா இதற்கு அர்த்தமென்ன?

ஸா:—பின்னிருந்த ஜகத்துக்கும் முன்வரும் ஜகத்துக்கும் ஸ்வாமியான பரமாத்மனை யார் அறிகிறுரோ அவர் தன்னை காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு இச்சிக்கிறதில்லை.

வ:—ஒன்பதாவது மந்திரத்தைச் சொல்லுங்கள்.

ஸா:—'யதஶ்சோதேதி ஸூர்யோ; அஸ்தம் யத்ரச கச்சதி தம் தேவாஸ்ஸர்வே ஸமர்பிதா: ததுநாத்யேதிகஶ்சன, ஏதத் வைதத்'

வ:—இதற்கு அர்த்த மென்ன?

ஸா:—எந்த பரமாத்மனுல் ஸூர்யன் உதயமாகிறுனே, எந்த பரமாத்மனிடத்தில் மறைகிறுனே, அந்த பரமாத்மனை எல்லா தேவதைகளும் ஆஶ்ரயித்திருக்கிறுர்கள். அந்த பரமாத்மனை யாரும் மீருவதில்லை என்று அர்த்தம்.

வா. வ:—இந்த 5, 9 மந்திரங்களினுல் என்ன சித்திக்கிறது?

ஸா:—பரமாத்மன் பின்னிருந்த உலகத்திற்கும் முன்னுண்டாகும் உலகத்திற்கும் ஸ்வாமி, ஸூர்யோதயாதிகளுக்கு காரணன், எல்லா தேவதைகளுக்கு ஆஶ்ரயன், அந்த பரமாத்மனை யாரும் மீறிப்போகிறதில்லை என்று சித்திக்கிறது.

வ:—மேற்சொன்ன இரண்டு மந்திரங்கள், முதலிய பிரமாணங்கள் இந்த லோகமிருக்கிறது, பரலோகங்களு மிருக்கின்றன, ஸூர்யன் இருக்கிறுன், தேவதைகளுளர், ஸூர்யனிட உதயாஸ்தமயாதிகளுக்கு ஈஶ்வரனே காரணன், தேவதைகளுக்கு ஆதாரனவன், என்று சொல்லிக்கொண்டிருப்பதால் ஸூர்யாதி தேவதைகள் முதலான ஜகத்து உண்டு (ஸத்யம்) என்று சொல்லியிருக்கிறதா? இல்லையா?

ஸா:—யத்யபி பின் மந்திரங்களில் ஜகத்து உண்டு, தேவதைகளுளர் என்று சொல்லியிருந்தபோதிலும், வேதத்திற்கு அவ்

வுலக மிருக்கிறதென்று சொல்லுவதில் தாத்பர்யமில்லை, அனுவாதம் செய்கிறது.

வ:—அந்த மந்திரங்கள் ஜகத்து உண்டென்று சொல்லிக் கொண்டிருந்த போதிலும், அதில் தாத்பர்யமில்லை, அனுவாதம் செய்கிறதென்று நீரெப்படி அறிந்தீர்?

ஸா:—'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற 11-வது மந்திரம் உலகத்தை நிஷேதித்துக் கொண்டிருப்பதால் நிஷேதிப்பதற்காகவே (இல்லை என்று சொல்லுவதற்காகவே) அனுவாதம் செய்திருக்கிறதென்று அறிந்தோம்.

வ:—அனுவாத மென்கிறது எதற்குப் பொருந்தும்?

ஸா:—பின் சித்தமாயிருக்கும் பதார்த்தங்களுக்கே அனுவாதமென்பது பொருந்தும்.

வ:—தேவதைகள், பின்னிருந்த உலகம், மின்வரும் உலகம், இந்த லோகம், பரலோகம் இவைகள் பிரத்தியக்ஷத்தினலும், அனுமானத்தினலும் சித்திக்காதல்லவா?

ஸா:—பரலோகாதிகள், தேவதைகள் பிரத்யக்ஷாதிகளினல் ஸித்திக்காவிடினும் வேதத்தினல் சித்திக்கிறது.

வ:—ஐயா, தாங்கள் 3-2-22 பிரம்ம ஸூத்திரத்தின் சாங்கர பாஷ்யத்தைப் பார்த்திருக்கிறீரு?

ஸா:—பார்த்திருக்கிறோம்.

வ:—'நேதிநேதி' என்கிற (பிரஹ 2-3-6) வாக்கியம் பிரம்மத்தை நிஷேதிக்கிறதென்று ஏன் சொல்லக்கூடா தென்கிற ஆக்ஷேபணைக்கு சங்கராசார்யர் என்ன பதில் சொல்லியிருக்கிறார்?

ஸா:—*'பிரம்ம விதாப்னோதிபரம்' இது முதலான அநேக வாக்கியங்களில் பிரம்ம மிருக்கிறதென்று சொல்லி மறுபடியும்

---

*ஸர்வ வேதாந்த வ்யாகோப பிரஸங்காச்ச -நஹிமஹதா பரிகாபந்தேன 'பிரம்ம விதாப்னோதிபரம்' (தை 2-1-1 ) ஸத்யம் ஞானமனந்தம் பிரம்ம (தை. 2-1-1) இத்யே வமாதின வேதாந்தேஷு பிரம்ம பிரதியாத்ய தஸ்யைவ புனரபாவோபிலப்யேத 'பிரக்ஷாளனாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶனம் வரம்' இதிஹி நியாய: (பிர, ஸூ. சாங். பா. 3-2-22).

அந்தபிரம்மம் இல்லை என்று சொல்லுவது "சேற்றை பூசிக் கொண்டு அலம்பிக்கொள்ளுவதை விட முதலே சேற்றை பூசிக் கொள்ளாமலே இருப்பது மேலான" தென்கிற பிரசித்தமான நியாயத்தின் படிக்கு விருத்தமானது. (பிரம்மத்தை நிஷேதிப்ப தாயின் முதலே பிரம்மத்தை சொல்லக்கூடாது. அனேக கிரந்தங் களினால் பிரம்மம் இருக்கிறதென்று சொல்லி மற்றும் நிஷே திப்பது 'பிரக்ஷாள ஞத்தி பங்கஸ்ய' என்பது போல் (அயுக்த மானது) என்று பதில் சொல்லி யிருக்கிறார்.

வ:—'விஶ்வம் ஸத்யம்' இதுவே முதலான அநேக சுருதி களினால் ஜகத்து இருக்கிறதென்று சொல்லி மறுபடியும் இல்லை என்று சொன்னால் 'பிரக்ஷாளஞத்தி' என்கிற நியாய விரோதம் வருகிறதில்லையோ?

ஸா:—*சாஸ்திரம் மூர்த்தா மூர்த்தரூபமான உலகத்தைச் சொல்லி மற்றும் நிஷேதிக்கிறது "பிரக்ஷாளஞத்தி" என்கிற நியாய விருத்தமாகிறதில்லையோ என்று சங்கராசார்யர் தமக்குத் தாமே ஆக்ஷேபித்துக்கொண்டிருக்கிறபடியால் நீங்கள் செய்த ஆக்ஷேபணை புதிதல்ல.

வ:—ஆக்ஷேபணை புதிதேயாகட்டும், சங்கராசார்யர் செய் திருப்பதினால் பழையதேயாகட்டும், அதற்குச் சமாதான மென்ன?

ஸா:—† சாஸ்திரத்திற்கு மூர்த்தா மூர்த்தாத்மகமான (மூர்த்தம் = பிரதிவி, அப்பு தேஜஸ்; அமூர்த்தம் = வாயு ஆகாசம்) ஜகத்தைச் சொல்லுவதில் தாத்பர்யமில்லை. லோக சித்தமான பிரமத்தினிடத்தில் கல்பிதமான ஜகத்தை நிஷேதிப்பதற்காக

---

*நசாத்ரேயமாஶங்கா கர்த்தவ்யா-கதம்ஹிஶாஸ்த்ரம் ஸ்வயமேவ பிரம்ம ணோரூபத்வயம் தர்ஶயித்வா ஸ்வயமேவபுன: பிரதிஷேததி 'ப்ரக்ஷாளஞத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶனம் வரம் இதி. (3-2-22).

†யதோ நேதம் ஶாஸ்த்ரம் பிரதிபாத்யத்வேன பிரம்மணோ ரூபத்வயம் (மூர்த்தா மூர்த்தாதிரூபம்) நிர்திஶதி லோக பிரஸித்தம் த்விதம் ரூபத்வயம் பிரம்ம விகல்பிதம் பராம்ருஶதி பிரதிஷேத்யத்வாய.

அநுவாதம் செய்கிறபடியால் தானே ஜகத்தைச்சொல்லி தானே நிஷேதம் செய்யவில்லை ஆகையால் 'பிரக்ஷாளனுத்தி' என்கிற நியாயத்திற்கு பிரஸக்தியே இல்லை.

வ:—பரலோகங்கள் தேவதைகள் முதலான ஜகத்து பிரத்யக்ஷாதிகளினுல் சித்திக்கிறதில்லை, ஆகமத்தினுலேயே சித்திக்க வேண்டுமல்லவா?

ஸா:—பரலோகம் முதலிய ஜகத்து ஆகமத்தினுலேயே சித்திக்கவேணும்.

வ:—பரலோகம் முதலியவைகளை ஆகமம் தானேசொல்லி மறுபடியும் தானேநிஷேதிக்குமாயின் 'பிரக்ஷாளனுத்தி' என்கிற நியாயத்தை அனுசரித்து அயுக்தமாகிறதில்லையோ?

ஸா:— (பதிலில்லை.)

வ:—அனுவாதம் செய்தபிறகு நிஷேதிக்கிறது வழக்கமா, நிஷேதித்து மறுபடியும் அநுவாதம் செய்வது வழக்கமா?

ஸா:—அனுவாதம் செய்து பிறகு நிஷேதிக்கவேணுமேயொழிய நிஷேதித்து மறுபடியும் அனுவாதம் செய்வது ஸம்பிரதாயமல்ல.

வ:—12-வது மந்திரத்தையும், 13-வது மந்திரத்தின் மூன்றுவது பாதத்தையும் சொல்லுங்கள்.

ஸா:—'அங்குஷ்ட மாத்ர: புருஷோ மத்ய ஆத்மனிதிஷ்டதி ஈமானே பூதபவ்யஸ்ய நததோவிஜுகுப்ஸதே ஏதத்வைதத் 12, ஈமானேபூதபவ்யஸ்ய 13.

வ:—இவ்வாக்கியத்திற்கு அர்த்த மென்ன?

ஸா:—அங்குஷ்ட பரிமிதனுன பரமாத்மா 'ஆத்மனிமத்யே' ஜீவர்களின் மத்தியில் இருக்கிறுன், இறந்த காலத்திலிருந்த ஜகத்துக்கு ஸ்வாமி, எதிற்காலத்திலுண்டாகும் ஜகத்துக்கு ஸ்வாமி, 12. பூதபவ்யமான ஜகத்துக்கு ஸ்வாமி 13. என்று அர்த்தம்.

வ:—இவ்வாக்கியத்தினுல் என்ன சித்திக்கிறது?

ஸா:—பரமாத்மன் ஜீவர்களில் இருக்கிறன், பூதபவ்யமான ஜகத்துக்கு நியாமகனென்று சித்திக்கிறது.

வ:—இதினுல் பூதபவ்யமான ஜகத்து ஸத்யமென்று சித்திக்கிறதா; மித்யை என்று சித்திக்கிறதா?

ஸா:—ஸத்ய மென்றே சித்தமாகிறது.

வ:—உலகத்தை நிஷேதிக்கும் வாக்கியம் யாது?

ஸா:—'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்கியம்.

வ:—நேஹநாநாஸ்தி' என்கிற வாக்கியம் 'அங்குஷ்டமாத்ர: என்கிற 'வாக்கியத்திற்கு பூர்வத்திலிருக்கிறதா அல்லது உத்தரத்திலிருக்கிறதா?

ஸா:—பூர்வத்திலேயே இருக்கிறது.

வ:—பூர்வத்திலிருக்கும் வாக்கியம் முன் சொல்லப்போகும் வாக்கியத்தின் அர்த்தத்தை நிஷேதிக்காதல்லவா?

ஸா:—பூர்வத்திலிருக்கும் 'நேஹநாநாஸ்தி' என்கிற வாக்கியம் (கா. 2-4-11) உத்திரத்திலிருக்கும் 'ஈஶானோ பூதபவ்யஸ்ய' (2-4-12) ஈசானோ பூதபவ்யஸ்ய (2-4-13) என்கிற இவ் வாக்கியங்களினுல் சொல்லப்படும் ஜகத்தை நிஷேதிக்காது.

வ:—'ஈசானே பூதபவ்யஸ்ய' 'ஈசானேபூதபவ்யஸ்ய' என்கிற வாக்கியங்களில் சொல்லப்பட்ட ஜகத்து நிஷித்தமாகவில்லையாகையால் ஸத்தியமானதேயல்லவா ?

ஸா:— (பதிலில்லை)

வ:—3-2-27 பிரம்ம ஸூத்திரத்தின் சாங்கர பாஷ்யத்தை பார்த்திருக்கிரீரு?

ஸா:—பார்த்திருக்கிறோம்.

வ:—'ததஸ்துதம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமான:' என்கிற வாக்கியம் ஜீவனுக்கு பரமாத்மனுடன் பேதத்தைச் சொல்லுகிறதென்று அந்த பாஷ்யத்தில் சொல்லி யிருக்கிறுரு,அபேதத்தைச் சொல்லி யிருக்கிறதென்று சொல்லியிருக்கிறுரு ?

ஸா:—ஜீவனுக்கு பரமாத்மனுடன் பேதத்தைச் சொல்லு கிறதென்று சொல்லியிருக்கிறார்.

வ:-பேதம் எப்படி சித்திக்கிறதென்று சொல்லியிருக்கிறார்?

**ஸா:**—ஜீவன் த்யாதா = த்யானம் செய்கிறவன், மற்றும் த்ரஷ்டா = காண்கிறவன், பரமாத்மா த்யேயன் = தியானம் செய்வித்துக் கொள்ளுகிறவன், மற்றும் திருஷ்டவ்யன் = காணப்படுகிறவன் என்று த்யாத்ருத்யாதவ்யபாவத்தினாலும், த்ரஷ்ட்ரு த்ரஷ்டவ்யபாவத்தினாலும் பேதம் சித்தமாகிறதென்று சொல்லியிருக்கிறார்.

வ:—'மனஸை வேதமாப்தவ்யம்' என்கிற வாக்கியம் 'மனஸை வானுதிருஷ்டவ்யம்' என்கிற வாக்கியம் எந்த உபனிஷத்திலிருக் கின்றன?

ஸா:—'மனஸை வேதமாப்தவ்யம் நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்று காடகம் (2-4-11) லும், 'மனஸை வானுத்ரஷ்டவ்யம் நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்று (பிரஹதாரண்யகம் 4-4-19) லும் இருக்கிறது.

வ:—அவைகளுக்கு அர்த்த மென்ன?

ஸா:—இப்பிரம்மம் மனதினாலேயே அறிவதற்குத் தகுந்தது என்று அர்த்தம்.

வ:—இவ்வாக்கியத்தினால் என்ன சொல்லப்பட்டது?

ஸா:—ஜீவன் த்ரஷ்டா (காண்கிறவன்) பரமாத்மா த்ரஷ்டவ்யன் (காணப்படுபவன்) என்று சொல்லப்பட்டது.

வ:—இவ்வாக்கியம் த்ரஷ்டரு, த்ரஷ்டவ்ய பாவத்தினால் ஜீவனுக்கு பரமாத்மனுடன் பேதத்தையும், ஞானம், அதற்கு ஸாதனமான மனது இவ்விதமான ஜகத்து ஸத்யமென்றும் சொல்லுகிறதோ இல்லையோ?

ஸா:—யத்யபி ஜீவபரமாத்மர்களுக்கு பேதம், ஞானம் கரணம் (மனது) இருக்கிறதென்று சொல்லுகிறதாயினும், அந்த சுருதிக்கு பேதத்தைச் சொல்லுவதிலாகிலும், ஞானம், கரணம்

முதலிய ஜகத்து இருக்கிறதென்று சொல்லுவதிலாகிலும் தாத்பர்யமில்லை.

வ:—பிரஹதாரண்யகம், காடகம் இவைகளிலுள்ள பூர்வோத்தர அநேக வாக்கியங்கள் ஜீவ பிரம்மர்களுக்கு பேதத்தையும் ஜகத்துக்கு ஸத்யத்வத்தையும் சொல்லிக் கொண்டிருக்க, பேதம் முதலியவைகளைச் சொல்லுவதில் சுருதிக்கு தாத்பர்யமில்லை என்று எப்படி சொல்லுகிறீர்?

ஸா:— (பதிலில்லை)

பிர. வ:—ராமாசார்! ஜகத்து ஸத்ய மென்கிறதற்கு உங்களுக்கு ஆதார மென்ன.

வா. ஸா:—(ராமாசார்) 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற பிரஹதாரண்யக (4-4-19) வாக்கியத்தின் பூர்வோத்தர அனேக வாக்கியங்கள்.

பிர. வ:—"நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற பிரஹதாரண்யக வாக்கியத்திற்கு பூர்வத்திலிருக்கும், ஜகத்ஸத்திய மென்று சொல்லும் வாக்கியங்கள் எவை?

வா. ஸா:—(ராமாசார்) 'ஈசானம் பூதபவ்யஸ்ய' 15, 'தம் தேவாஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர்ஹோபாஸதேமிருதம்' 16, 'யஸ்மின் பஞ்சபஞ்சஜனா ஆகாசஶ்ச பிரதிஷ்டித:' 17, 'பிராணஸ்ய பிராணம் சக்ஷுஷஶ்சக்ஷு: ஶ்ரோத்ரஸ்ய ஶ்ரோத்ரம் மனஸோயேமனோ விது: தே நிசிக்யு: பிரம்ம புராணமக்ரயம்' 18, இந்த பூர்வ வாக்கியங்கள் பூதபவ்யங்களான ஜகத்துக்கு ஸ்வாமி என்றும் (15), பிரகாசங்களுக்கு பிரகாசகனான பரமாத்மனை தேவதைகள் உபாஸிக்கின்றார்களென்றும் (16), எப்பரமாத்மனிடத்தில் ஆகாசம் முதலிய பதார்த்தங்கள் ஆஶ்ரயித்திருக்கின்றனவோ என்றும் (17), பரமாத்மன் பிராணம் சக்ஷுஸ்ஸு ஶ்ரோத்ரம் மனஸ்ஸு முதலியவைகளுக்கு சேஷ்டாதர்ஶன சிரவண மனனாதிஶக்திகளைக் கொடுக்கிறவனென்றும் யார் அறிகிறார்களோ அவர்களே பிரம்மத்தை அறிந்துக் கொள்ளுகிறார்களென்றும் (18), சொல்லுகின்றன.

பிர. வ:—இதினால் என்ன சித்திக்கிறது?

ராமா:—ஜகத்துண்டு, தேவதைகளிருக்கிறார்கள், தேவதைகளுக்கும் பரமாத்மனுக்கும் பேதமுண்டு, பரமாத்மன் ஜகன்னியாமகன், சேஷ்டகத்வாதி அனேக சக்திகளை யுடையவன் என்று சித்திக்கிறது.

பிர. வ:—'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்கியத்தின் (ஜகத்துக்கு ஸத்தியத்வத்தையும், ஜீவேஶ்வரர்களுக்கு பேதத்தையும் சொல்லும்) உத்தரவாக்கியம் யாது?

ராமா:—எல்லாஜகத்துக்கும் பரமாத்மன் ஸ்வாமி, ஜகத்து பரமாத்மாதீனம், பரமாத்மனை அறிவதற்காக இச்சிக்கின்றனர் என்று சொல்லிக்கொண்டே, ஜகத்து ஸத்யம், பரமாத்மன் நியாமகத்வ பாலகத்வாதி அநேக குணங்களையுடையவன், பரமாத்மன் அறியப்படுகிறவன், ஜீவன் அறிகிறவன் என்று ஜீவபரமாத்மர்களுக்கு பேதத்தைச் சொல்லுகிற "ஸர்வஸ்யவஶீ, ஸர்வஸ்யேஶானః ஸவஸ்யாதிபதிః..........ஏஷஸர்வேஶ்வரః ஏஷபூதாதிபதி:' ஏஷபூதபால......தமேவம் வேதாநுவசனேன பிராம்மணா விவிதிஷந்தி" (பிரஹ. 4-4-22)என்கிறமந்திரமே.

பிர. வ:— 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற சுருதி உலகத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லாவிடில் வேறென்ன சொல்லுகிறது?

ராமா:—"யதேவேஹ ததமுத்ர யதமுத்ர ததன்விஹ, ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்னோதி ய இஹ நாநேவ பஶ்யதி" என்கிற பூர்வமந்திரத்தில் சொல்லிய அர்த்தத்தையே மறுபடியும் உறுதிப் படுத்துவதற்காகச் சொல்லுகிறது.

பிர. வ:—யதேவேஹ என்கிற மந்திரத்திற்கு அர்த்தமென்ன?

ராமா:—'யத் ஏவ' எந்த பரமாத்மன், 'இஹ' இந்தலோகத்திலிருக்கிறானோ, 'தத்' அந்த பரமாத்மன் 'அமுத்ர' பரலோகத்திலிருக்கிறான், 'யத்' எந்த பரமாத்மன், 'அமுத்ர' பரலோகத்

தில் இருக்கிருனே 'தத்' அந்த பரமாத்மன், 'இஹ' இந்த லோகத்திலிருக்கிருன், 'யஃ' எவன், 'இஹ' இந்த பரமாத்மனிட ரூபங்களில் 'இவ' அல்பமான, 'நாநா' பேதத்தை, 'பஶ்யதி' காண்கிருனே 'ஸஃ' அவன், 'ம்ருத்யோஃ' யமனுல், 'ம்ருத்யும் நர காத்யனர்த்தங்களை 'ஆப்னோதி' அடைகிருன் என்று அர்த்தம்.

பிர. வ:—இம்மந்திரத்தினுல் என்ன சித்திக்கிறது?

ராமா:—'இஹ, அமுத்ர' என்கிற பதங்களினுல் பரலோகங் களிருக்கின்றன வென்று சொல்லி, இந்த லோகத்திலிருக்கும் பரமாத்மனும் பரலோகத்திலிருக்கும் பரமாத்மனும் ஒருவனே, அப்பரமாத்மனின் ரூபங்களில் பேதமில்லை என்று சொல்லி, அந்த பரமாத்மனின் ரூபங்களில் யார் பேதத்தை அறிகிருர்களோ அவர்களுக்கு யமனுல் பயமுண்டென்று சித்திக்கிறது.

பிர. வ:—"யதேவேஹ" என்கிற வாக்கியத்தினுல் சொல் லிய அர்த்தத்தையே "நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற வாக் கியம் எப்படிச் சொல்லுகிறது?

ராமா:— இதம் = இந்த பரமாத்மன், மனஸா ஏவ = மனதி னுலேயே, ஆப்தவ்யம் = அறியப்பட வேண்டியவன், இஹ = இந்த பரமாத்மனிடத்தில், கிஞ்சன நாநா = ஞானுதி குணங்களினுலா கிலும், ராமகிருஷ்ணுதி ரூபங்களினுலாகிலும் பேதம், நாஸ்தி = இல்லை. எவன் இந்த பரமாத்மனிடத்தில் ஸ்வல்பமான பேதத் தைக் காண்கிருனே அவன் நரகாத்யனர்த்தங்களை அடைகிரு னென்று 'யதேவேஹ' என்கிற வாக்கியத்தைப்போல் பரமாத்ம னிட ரூபங்களுக்கு பரஸ்பரம் பேதத்தை அறிந்தவர்களை நிந்திக் கிறது.

பிர. வ:—நேஹநாநாஸ்தி கிஞ்சன என்கிற வாக்கியம் ஜகத் தை நிஷேதிக்கிறதென்று ஏன் சொல்லக்கூடாது?

வா. ஸா:—(ராமாசார்) 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற வாக்கியத்திற்கு முன்னும் பின்னும் 'ஈசானோ பூதபவ்யஸ்ய' என்று ஜகத்து இருக்கிறதென்று சொல்லி மறுபடியும் மத்தியில்

ஜகத்தை நிஷேதிக்கிறதென்று சொல்லுகிறது 'பிரக்ஷாளனாத்தி பங்கஸ்ய' என்கிற நியாயத்தை யனுசரித்து தோஷயுக்தமாகிறது. மருபடியும் ஜகத்து இல்லை என்று சொல்லும் பௌத்தர்களை "ஜகத்து பிரமாண சித்தமாயிருக்க, இல்லை என்கிறது அங்கீகரிக்கத்தக்கதல்ல" என்று சங்கராசார்யர் கண்டித்திருக்கிறார். ஆகையால் இந்த நேஹநாநாஸ்தி ஶ்ருதி ஜகத்தை நிஷேதிக்கிற தென்று சொல்லுவது அநேக பிரமாண விருத்தமாயிருப்பதால் இந்த சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுவதில்லை, ஆகையால் இந்த ஶ்ருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தை சொல்லுவதற்கு ஆதாரமாகிறதில்லை.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

நேஹநாநாஸ்தி கிஞ்சன (பிரஹ. 4-4-19; கா. 2-4-11) என்கிற வாக்கியம் இந்த பிரம்மத்தினிடத்தில் நாநாவிதமான எந்த ஜகத்தும் இல்லை என்று சொல்லிக்கொண்டே, ஜகத்துமித்யை (முக்காலத்திலு மில்லாதது) என்று சொல்லுகிறதாகையால் ஜகத்து பிரம்மத்தைவிட வேறாக இல்லை.

## வாதிவக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

(1) நேஹநாநாஸ்தி கிஞ்சன என்கிற சுருதியில் ஜகத்து (மித்யை) இல்லை என்று சொல்லும் பதமே கிடையாது.

(2) இதே மந்திரத்தின் பூர்வபாகத்திலிருக்கும் 'மனஸைவேதமாப்தவ்யம்' என்கிற காடக வாக்கியத்தினிடவும், 'மனஸைவானு த்ருஷ்டவ்யம்' என்கிற பிரஹதாரண்யக வாக்கியத்தினிடவும் பூர்வபாகத்தில் ஞான, ஞேய, கரணம் (மனது) முதலிய அநேக பதார்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

(3) மற்றும் ஞாத்ரு (அறிகிறவன்) ஞேய (அறியப்படும்) பாவத்தி (தன்மையி)னால் ஜீவனுக்கு பரமாத்மனுடன் பேதம்

சொல்லப்பட்டிருக்கிறதென்று சங்கராசார்யர் முதலான அத்வைதிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

(4) இந்த 'நேஹநாநாஸ்தி' என்கிற காடக பூர்வ வாக்கியத்தின் 5-வது மந்திரத்தில் 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய, என்று பூத பவ்ய ஜகத்துக்கு பரமாத்மன் ஸ்வாமி என்றும், 'யதஶ்சோதேதி ஸூர்யோ' என்கிற 9-வது மந்திரத்தினால் ஸூர்யோதயாஸ்தமயங்களுக்கு காரணனென்றும், ஸகல தேவதைகளுக்கும் ஆஶ்ரயனென்றும்; அப்பரமாத்மனை மீறி எவரும் போகாரென்றும்;

(5) "அங்குஷ்ட மாத்ர: புருஷ: மத்ய ஆத்மனி திஷ்டதி, ஈஶாநோ பூதபவ்யஸ்ய" என்கிற 12-வது மந்திரத்திலும், மற்றும் 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய' என்கிற 13-வது மந்திரத்திலும், பூத பவிஷ்யஜ்ஜகத்து இருக்கிறதென்றும், அதற்கு பரமாத்மா ஸ்வாமி என்றும், ஜீவனிடத்தில் பரமாத்மா இருக்கிறானென்றும் ஆதாராதேயபாவத்தினால் ஜீவபரமாத்மாக்களுக்கு பேதத்தைச் சொல்லுகிறது. ஆகையால் இதற்கு மத்தியிலிருக்கும் 'நேஹ நாநாஸ்தி கிஞ்சன' என்கிற காடக வாக்கியம் பூர்வோத்தர வாக்கியத்திற்கு விருத்தமாக ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதில்லை.

(6) உலகத்தை அனுவாதம் செய்து நிஷேதிக்கிறதென்பது ஸரியல்ல. ஏனெனின் 'பிரக்ஷாளனாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶனம் வரம்' சேற்றை பூசிக்கொண்டு அலம்பிக்கொள்ளுவதைக் காட்டிலும், தூரத்திலிருந்து சேற்றை பூசிக்கொள்ளாமலிருப்பதே சிரேஷ்டமானது என்கிற நியாயத்தின்படிக்கு, வேதம் பரலோகாதி ஜகத்தைத் தானே சொல்லி தானே நிஷேதிப்பதைவிட சொல்லாமலே இருப்பது உத்தம மாகையால் ஜகத்தை நிஷேதிப்பதற்காக இச்சுருதி அனுவாதிக்கிற தென்பது ஸரியல்ல.

(7) அத்வைதிகள் ஜகத்துக்கு நிஷேதகமானதென்று சொல்லும் "நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற வாக்கியத்தின் உத்தர வாக்கியத்தில் ஜகத்து இருக்கிறதென்று சொல்லப்படுகிறதாகை

யால் 'ஈஶாநோ பூதபவ்யஸ்ய' என்கிற இது முதலான உத்திர வாக்கியங்கள் நிஷேதிப்பதற்காக அநுவாதம் செய்கிறதென்று சொல்லுவதற்கு ஸாத்திய மில்லாததினால் அவ்வாக்கியங்கள் ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதென்று அவஶ்யமாக ஒப்புக்கொண்டே தீரவேணும்.

(8) "மநஸைவேதமாப்தவ்யம் நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற காடக வாக்கியத்தின் பூர்வபாகம் ஜீவன் த்ரஷ்டா, பரமாத்மன் த்ரஷ்டவ்யன், மனது காணம் என்று ஞான, ஞாத்ரு, அந்தஃகரணம் முதலான ஜகத்தையும், ஜீவேஶ்வரர்களின் பேதத்தையும் சொல்லுகிறது. சங்கராசார்யார் ஞாத்ரு ஞேயபாவத்தினால் ஜீவனுக்கு பிரம்மத்துடன் பேதம் சித்திக்கிறதென்று சொல்லியிருக்கிறார்.

(9) இப்படியே "மனஸைவானுத்ரஷ்டவ்யம்" "நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற வாக்கியத்தின் பூர்வபாகமும், மற்றும் பூர்வ வாக்கியங்களும் உத்தர வாக்கியங்களும் ஜீவேஶ்வரர்களுக்கு பேதத்தையும், ஸூர்யோதயாஸ்தமயாதிகளுக்கு ஈஶ்வரன் காரணன், ஸர்வதேவதைகளுக்கும் ஆதாரன், சுரோத்ரசக்ஷுர் மனது முதலானவைகளுக்கு சிரவணசக்தி முதலிய சக்திகளைக் கொடுப்பவன், என்று யார் பரமாத்மனை அறிகிறார்களோ அவர்களே பரமாத்மனை அறிந்தவர்கள்.

எல்லாஜகத்தும் பரமாத்மனிட ஆதீனத்தில் இருக்கிறது. எல்லா ஜகத்துக்கும் பரமாத்மன் ரக்ஷகன் என்று சொல்லுகிறபடியால் "நேஹநாநாஸ்தி கிஞ்சன" என்கிற வாக்கியத்திலும் "யதேவேஹ" என்கிற வாக்கியத்திலும் சொல்லியவாறு பரமாத்மனிடத்தில் ஸ்வகதபேதம் (தன்னிட குணகிரியாதிகளினால் தனக்கு பேதம்) இல்லை யென்று சொல்லுகிறது. அத்வைதிகளும் "ஏகமேவ" என்கிற சுருதி ஸ்வகத பேதத்தை நிஷேதிக்கிறதென்று சொல்லியிருக்கிறபடியால் இச்சுருதிக்கு ஸ்வகதபேத நிஷேத ரூபமான அர்த்தத்தைச் சொல்லுவது பாதிதமாகிறதில்லை. ஆகையால் 'நேஹநாநாஸ்தி கிஞ்சன' என்கிற சுருதி ஜகத்துக்கு மித்யாத்வ விஷயத்தில் ஆதாரமென்கிறது யுக்தமல்ல.

# அத்யாஸ (பிரம) விசாரணை.

பிர. வ:—பிராம்மண்யம் முதலிய வர்ணங்கள், யஞ்ஞங்கள், வேதங்கள், தேவதைகள், கங்காதி தீர்த்தங்கள் முதலிய ஜகத்து மித்யை என்றால் அர்த்தமென்ன ?

பிர. ஸா:—ரஜ்ஜுவில் (கயற்றில்) சர்ப்பமும், சுக்தி என்றால் முத்துச் சிப்பியில் வெள்ளியும் எப்படி ஆரோபிதமோ என்றால் பிரம விஷயமோ அப்படியே பிராம்மண்யாதி வர்ணங்கள் முதலான எல்லா ஜகத்தும் பிரம்மனிடத்தில் ஆரோபிதமென்று அர்த்தம்.

வா. வ:—பிரமத்திற்கு காரணங்களெவை?

பிர. ஸா:—(1) அதிஷ்டானம் என்றால் எதைப்பார்த்து மற்றொன்றின் பிரமம் வருமோ அவ்வஸ்து (2) அந்த அதிஷ்டானத்தில் ஸாமான்ய தர்மமிருப்பது, (3) விசேஷ தர்மமிருப்பது, (4) ஆரோப்யமாண வஸ்துவின் ஸாதிருஶ்யமிருப்பது, (5) அதிஷ்டானத்திலிருக்கும் ஸாமான்ய தர்மத்தின் ஞானம், (6) விசேஷ தர்மத்தின் அஞ்ஞானம், (7) ஸாமான்ய தர்மத்தை அறிந்து விசேஷ தர்மத்தை அறியாமலிருக்கும் மனிதன், (8) ஞானத்திற்கு காரணமான அம்மனிதனின் சரீரம், இந்திரியங்கள், இவைகளே முதலான அநேக பதார்த்தங்கள் பிரமத்திற்கு காரணங்கள்.

வ:—ரஜ்ஜுவில் (கயற்றில்) சர்பத்தின் பிரமமுண்டாவதற்கு இக்காரணங்களுண்டா?

ஸா:—ரஜ்ஜு அதிஷ்டானம், ரஜ்ஜுவில் இதம்த்வரூபமான ஸாமான்யதர்மமுண்டு. ரஜ்ஜுத்வரூபமான விசேஷ தர்மமுண்டு, ஆரோபிக்கப் படும் சர்ப்பத்தின் ஸாதிருஶ்யமுண்டு, (சர்ப்பத்தைப்போல் நீட்டாக இருக்கிறது) ஸாமான்ய தர்மத்தை அறிந்து, விசேஷ தர்மத்தை அறியாத மனிதனுண்டு. அவனுக்கு தேகம் இந்திரியங்கள் இவைகளுண்டு. இப்படி ரஜ்ஜுவைப்பார்த்து இது சர்ப்பமென்று பிரமமுண்டாவதற்குக் காரணங்களிருக்கின்றன.

வ:—ஜகத்தின் பிரமம் யாருக்குண்டாகிறது?

ஸா:—பிரம்மத்திற்கு.

வ:—அதிஷ்டானமெது?

ஸா:—பிரம்மம்.

வ:—அதிஷ்டானத்தில் சாமான்ய தர்மம், விசேஷ தர்மம் இவைகளுண்டா?

ஸா:—இல்லை.

வ:—ஆரோபிக்கப்படும் ஜகத்தின் ஸாதிருஶ்யமுண்டா?

ஸா:—இல்லை.

வ:—ஸாமான்ய தர்மத்தை யறிந்தவன் (ஞாதா) உண்டோ?

ஸா:—இல்லை.

வ:—விசேஷ தர்மத்தை யறியாதவனுண்டோ?

ஸா:—அறியாதவனில்லை.

வ:—உங்களிட அத்வைத மதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரம்மத்திற்கு பிரமமுண்டாவதற்குக் காரணமான தேகேந்திரியாதிகளுண்டோ?

ஸா:—தேகேந்திரியாதிகளில்லை.

வ:—சர்ப்பத்திற்கு குடம் அதிஷ்டான மாகுமா?

ஸா:—குடம் அதிஷ்டானமாக மாட்டாது.

வ:—ஏன் அதிஷ்டானமாக மாட்டாது?

ஸா:—பிரமத்திற்குக் காரணமான சர்ப்பத்தின் ஸாதிருஶ்யம் குடத்தில் இல்லாததினால் குடம் அதிஷ்டானமாக மாட்டாது.

வ:—அத்வைத மதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரம்மம் ஸகல தர்ம ரஹிதமானதினால் அந்த பிரம்மத்தில் அதிஷ்டானமாகிறதற்குக் காரணமான ஸாமான்ய தர்மம், விசேஷதர்மம் ஆரோபிக்கப்படும் வஸ்துவின் ஸாதிருஶ்யம் இவைகள் இல்லை என்று நீங்களே ஒப்புக்கொள்ளுகிறீர்கள். ஆகையால் பிரம்மம்

பிரமத்திற்கு எப்படி அதிஷ்டானமாகும்? பிரம்மம் அதிஷ்டான மாகாமற்போன பிரகு பிரம்மத்தினிடத்தில் ஜகத்தின் பிரமம் எப்படிப் பொருந்தும்?

ஸா:—எங்கள் அத்வைதிகள் சொல்லும் பிரம்மத்தில் அதிஷ்டானமாவதற்குக் காரணமான ஸமான்ய தர்மம், விசேஷ தர்மம், ஆரோபிக்கப்படும் ஜகத்தின் ஸாதிருஶ்யம் முதலியவைகள் ஸத்யமானவைகளில்லா விடினும், ஸமான்ய தர்மம், விசேஷதர்மம், ஜகத்தின் ஸாதிருஶ்யம், முதலிய இவைகள் கல்பிதமாக (ஆரோபிதமாக) இருக்கின்றனவாகையால் பிரம்மம் அதிஷ்டானமும் பிராந்தமுமாகிறது. ஆகையால் ஜகத்தின் பிரமம் பொருந்தும்.

வா. வ:—ஸமான்யதர்மம், விசேஷதர்மம், ஸாதிருஶ்யம், இவைகளின் ஆரோபத்திற்கு (பிரமத்திற்கு) பிரம்மமே அதிஷ்டானமும், பிராந்தமுமல்லவா?

ஸா:—ஸமான்யதர்மம், முதலியவைகளின் ஆரோபத்திற்கு பிரம்மமே அதிஷ்டானம், பிராந்தம். (பிரமையுள்ளது)

வ:—ஸாமான்ய தர்மங்களின் ஆரோபத்திற்கு பிரம்மம் அதிஷ்டானமாக வேண்டியதாயின் அந்த பிரம்மத்தில் ஆரோபத்திற்குக் காரணமான ஸாமான்ய தர்மம் முதலியவைகள் வேண்டுமல்லவா?

ஸா:—பிரம்மத்தினிடத்தில் தர்மத்தை ஆரோபிப்பதற்கு காரணமான ஸாமான்ய தர்மங்கள் வேண்டும்.

வ:—பிரம்மம் எவ்வித தர்மமு மில்லாத தாகையால் ஸமான்ய தர்மம் முதலியவைகள் பிரம்மத்தினிடத்தில் இல்லாததினால் தர்மங்களின் ஆரோபம் எப்படிப் பொருந்தும்?

ஸா:—ஸத்தியமான தர்மங்கள் இல்லாவிடினும் ஆரோபிதமான தர்மங்கள் இருக்கிறபடியால் பிரம்மத்தினிடத்தில் தர்மங்களின் ஆரோபம் பொருந்தும்.

வ:—இப்படியே அந்த தர்மங்களின் ஆரோபத்திற்கு மற்றும் முன்னமே (பூர்வத்தில்) தர்மங்களின் ஆரோபம் செய்ய

வேண்டும், மற்றும் அந்த தர்மங்களின் ஆரோபத்திற்கு மற்றும் தர்மாரோபம் செய்யவேண்டும். இப்படி அனவஸ்தை என்கிற தோஷம் வருகிறதல்லவா?

ஸா:—அனவஸ்தை வரட்டும். அதை நாம் ஒப்புக்கொள்ளு கிறோம்.

வ:—பீஜாங்குர பரம்பரையைப்போல் பூர்வ பூர்வ வாஸனு பலத்தினுல் உத்தரோத்தர விஞ்ஞானவைசித்ர்யம் ஒப்புக் கொள்ளுகிறோம் என்று பௌத்தர்கள் சொல்லவே, சங்கரா சார்யார் 'நபாவோனுபலப்தே:' (2-2-30) பிரம்ம ஸூத்திரத் தின் வ்யாக்யானத்தில் என்ன தூஷணத்தைச் சொல்லியிருக் கிறுர்?

ஸா:—பீஜத்தினுல் அங்குரமுண்டாகிறது, அங்குரத்தினுல் பீஜமுண்டாகிறது காணப்பட்டுவருகிறது. (பிராமாணிகமாயி ருக்கிறது.) மூலம் பிராமாணிகமாக இருப்பதினுல் பீஜாங்குர பரம்பரையை ஒப்புக்கொள்ளலாம். பதார்த்தங்களின் வாஸனை பாஹ்ய பதார்த்தங்களின் உபலப்தி இல்லாமல் உண்டாவது எங் கும் காணப்படாததினுல் மூலமே அப்பிராமாணிகமாகிறது. ஆகையால் வாஸனு பரம்பரையை ஒப்புக்கொள்ளக்கூடாது என்று தூஷித்திருக்கிறுர்.

வ:—எந்த பரம்பரையை ஒப்புக்கொள்ளவேண்டும், எதை ஒப்புக்கொள்ளக்கூடாது என்று சங்கராசார்யரின் அபிப் பிராயம்?

ஸா:—மூலம் பிராமாணிக மாயிருப்பின் அந்த பொருந்து விப்பதற்காகக் கல்பிக்கும் பரம்பரை (அனவஸ்தை) ஒப்புக் கொள்ளவேண்டும். எதின் மூலம் அப்பிராமாணிகமோ அவை களைப் பொருந்துவிப்பதற்காக கல்பிக்கும் பரம்பரை ஒப்புக் கொள்ளத் தகுந்ததல்ல என்று அபிப்பிராயம்.

வ:—பிரம்மத்தினிடத்தில் தர்மம் முதலியவைகளின் பிரம பரம்பரையை ஏன் ஒப்புக்கொள்ளவேண்டும்?

ஸா:—பிரம்மத்தினிடத்தில் ஜீவபாவம், கர்த்ருத்வம் முத லிய தர்மங்களின் பிரமம் பிராமாணிக மாகையால் அந்த பிர மத்தை பொருந்துவிப்பதற்காக பிரமபரம்பரை ஒப்புக் கொள்ளவேண்டும்.

வ:— 4-1-3. பிரம்ம ஸூத்திரத்தின் ஶாங்கர பாஷ்யம், அதற்கு வ்யாக்யானமாகிய பாமதி என்கிற கிரந்தம் இவை களைப்பார்த்திருக்கிறீரா?

கோர்ட்:—நீர் மத்தியில் அஸங்கதமான கேழ்வியை கேழ்க் கக்கூடாது.

வ:—இக்கேழ்வி அஸங்கதமானதல்ல. சங்கராசார்யர், பாமதிகாரர் முதலிய அத்வைதிகள் 4-1-3 ஸூத்திரத்திற்கு வ்யாக்யானம் செய்யும் காலத்தில் அத்வைத மதத்தின்படிக்கு பிரமமே பொருந்தாது. பிரமம் அப்பிராமாணிக மென்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வார்த்தைகளை பிரதிவாதிகளினு லேயே சொல்லுவிப்பதற்காக கேழ்க்கிறபடியால் இக்கேழ்வி கேழ்ப்பதற்கு கோர்ட்டார் உத்திரவளிக்கவேணுமாய்க் கோரு கிறேன்.

கோர்ட்:—யஸ் ஆல்ரைட். கேளுங்கள்.

வ:—ஐயா சாஸ்த்ரிகளே! 4-1-3 பிரம்ம ஸூத்திரம் சாங்கர பாஷ்யத்தின் பாமதி என்கிற வ்யாக்யானத்தை நீர் பார்த்திருக்கிறீரா?

ஸா:—ஆஹா பார்த்திருக்கிறோம்.

வ:—அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

ஸா:— * பிரமை வரவேண்டியதாயின் அதிஷ்டானத்தில் ஆரோபிக்கப்படும் ஸாதிருஶ்யம், ஸாமான்யதர்மம், விசேஷ தர்

* युक्तं हि पुरोवर्तिनि द्रव्ये द्राघीयसि सामान्यरूपेणालोचिते विशेष रूपेणा गृहीते विशेषान्तरसमारोपणम्। इहतु प्रकाशात्मनो निर्विशेषसामान्य स्यापराधीन प्रकाशस्य नागृहीतमस्ति किंचिद्रूपमिति कस्य विशेषस्याग्रहे किं विशेषांतरं समारोप्यताम्। तस्माद्ब्रह्मणो जीवभावारोपासंभवाज्जीवो जीवो ब्रह्मच ब्रह्मेति तत्त्वमसीति प्रतीकोपदेश एवेति प्राप्तम् (भा. 4-1-3.)

மம், இவைகளிலிருந்து, ஸாமான்ய ரூபத்தினுல் அறிந்திருந்து, விசேஷ ரூபத்தினுல் அறியாமலிருக்கும் அதிஷ்டானத்தில் வேறு விசேஷங்கள் ஆரோபிக்கப்படுகின்றன. உதாரணம்:— ஸர்ப்பத்தைப் போல் நீட்டாகயிருக்கும், இதம்த்வ மென்கிற ஸாமான்ய தர்மத்தையுடைய, ரஜ்ஜுத்வரூபமான விசேஷதர்மத்தையுடைய, இதம் த்வரூபமாக அறியப்பட்டு, ரஜ்ஜுத்வரூப விசேஷத்தினுல் அறியப்படாதிருக்கிற ரஜ்ஜுவில் (கயற்றில்) சர்பத்வம் ஆரோபிக்கப்படுகிறது. இந்த பிரம்மம் பிரகாசரூபமாய், ஸாமான்ய விசேஷதர்ம ரஹிதமானதாகையால் ஸாமான்ய ரூபத்தினுல் அறிகிறது விசேஷரூபத்தினுல் அறியாமலிருப்பதும் பொருந்தாது. ஆரோப்யமாணமான ஜகத்தின் ஸாதிருஶ்யம் இல்லை. ஆகையால் ஜீவபாவம் முதலான எதையும் ஆரோபிக்க முடியாது. என்றுல்— பிரம்மமே ஜீவன் என்கிற இது முதலான பிரமம் உண்டாகிறதில்லை. ஆகையால் ஜீவன் ஜீவனே, பிர்ம்மம் பிரம்மமே. பிரம்மத்தினிடத்தில் ஜீவத்வம் ஆரோபிதமாகிறதில்லாததினுல் 'தத்வமஸி' என்கிற வாக்கியத்திற்கு ஜீவபிரம்மர்களுக்கு அபேத மென்கிற அர்த்தம் சொல்லக் கூடாது. பிரதிமையில் பரமாத்மனிருக்கிருனென்று எப்படி சொல்லிக்கொண்டிருக்கிருேமோ, அப்படியே ஜீவனிடத்தில் பரமாத்மன் இருக்கிருனென்று அந்த ஶ்ருதி சொல்லுகிறதென்று சொல்லவேணும் என்று ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது.

வ:—பிரமை பொருந்துவதில்லை என்கிற ஆக்ஷேபணைக்கு என்னபதில் சொல்லியிருக்கிருர்?

ஸா:— * ஸாப்ருமான அதிஷ்டானத்தில் சில அம்சங் (பாகங்) களின் அக்கிரஹணத்தினுல் பிரமை வருவதுபோல், பிரம்மம் நிரம்சம் (தர்மதர்மிவிபாக மில்லாதது) ஆகையால் பிரமத்திற்குக் காரணங்களான சில அம்சங்கள் தெறிகிறது, சில அம்சங்கள் தெரியாமலிருப்பது இப்படி இல்லாவிடினும், அனுதி

---

* நிரம்சஸ்யாபிசாஞுத்யநிர்வாச்யாவித்யா தத்வாஸஞு ஸமாரோபித விவித பிரபஞ்சாத்மன; ஸாம்ஶஸ்யேவ கஸ்யசிதம்ஶஸ்யாக்ரஹணுத் விப்ரம இவ.

யான் அனிர்வாச்யமான அவித்யா, அதின் வாஸனை இவைகளால் கல்பிதமான நானா பிரபஞ்ச ஸ்வரூபனுண பரமாத்மனின் கல்பிதமான ஒருபாகத்தின் அக்கிரஹணத்தினுல் பிரமை வருவது போல் தோன்றுகிறதென்று பதில் சொல்லியிருக்கிருர்.

வ:—பிரமை வருவதுபோல் தோன்றுகிற தென்று மேல் சொல்லியிருப்பதால் பிரமை பொருந்துகிற தென்று அபிப்பிராயமா? பொருந்துவதில்லை என்று அபிப்பிராயமா?

ஸா:—பிரமை பொருந்துவதில்லை என்று அபிப்பிராயம்.

வ:—பிரமை பொருந்துவதில்லை என்கிறது பாமதிகாரரின் அபிப்பிராய மென்கிறது நீர் எப்படி அறிந்தீர்?

ஸா:—அவரிட வார்த்தைகளினுலேயே அறிந்தோம்.

வ:—அவர் என்ன சொல்லியிருக்கிருர்?

ஸா:— * வாஸ்தவமாக விசாரித்த பக்ஷத்தில் பிரமை என்கிறதே இல்லை. கர்த்ருத்வ போக்த்ருத்வம் முதலான ஸம்ஸாரம் இல்லை. பிரமை ஸம்சாரம் இருக்கிறதென்று நாம் சொல்லுவோமாயின் அவைகளுக்கு த்வைதிகள் சொல்லும் எல்லா அனுபபத்திகளும் வருகிறபடியால் இது என்ருல் பிரமை எப்படி உண்டாயிற்றென்று எங்களுக்குச் சொல்லவராதென்கிறதே ஸரியான தென்று அறிகிரும் என்று சொல்லியிருக்கிருர்.

வ:—இதை பாமதிகாரர் தம்மிட அபிப்பிராய மென்று சொல்லியிருக்கிருரு? சங்கராசார்யரின் அபிப்பிராய மென்று சொல்லியிருக்கிருரு?

ஸா:—பாமதிகாரரின் ஸ்வந்த அபிப்ராயமே அல்ல, "யுத்யேவம் பிரதிபுத்தோஸி நாஸ்திகஶ்ய சிதப்ரபோத இதி" என்கிற சங்கராசார்யரின் வாக்கியத்தினுல் இந்த அபிப்பிராயம் சங்கராசார்யருக்கும் உண்டென்று சொல்லியிருக்கிருர்.

---

* பரமார்த்ததஸ்து ந விப்ரமோ நாம கஶ்சின்னச ஸம்ஸாரோ நாம। கிந்து ஸர்வமேதத்ஸர்வானுபபத்தி பாஜனத்வேனுநிர்வசநீயமிதி யுக்த முத்பஶ்யாம:।

வ:—சங்கராசார்யரின் 'யத்யேவம்' என்கிற வாக்கியத்தின் அபிப்பிராய மென்ன?

ஸா:—சங்கராசார்யரைக் குறித்து ஒரு சிஷ்யன் இந்த அஞ்ஞானம் என்றால் ஸம்சாரம் யாருக்கு என்று கேழ்க்கவே கேழ்வி கேழ்க்கும் உனக்கே அஞ்ஞான மென்று சங்கராசார்யர் சொன்னார். அதற்கு சிஷ்யன் மறுபடியும் 'நான் ஈஸ்வரனே (அஹமீஸ்வர:) என்று சுருதியில் சொல்லியிருப்பதினால் எனக்கு அஞ்ஞானம் எப்படிப் பொருந்தும்' என்று கேழ்க்கவே 'அப்படி ஞானமிருந்தபக்ஷத்தில் யாருக்கும் அஞ்ஞானமில்லை' என்று சொல்லியிருக்கிறாராகையால் இதுவே சங்கராசார்யரின் 'யத்யேவம்' என்கிற வாக்கியத்தின் அபிப்பிராயம்.

வ:—பிரமை பொருந்தாவிடின் உங்களிட அத்வைத மதம் எப்படிச் சரியாகும்?

ஸா:—பிரமை சரியாக பொருந்துமாயின் பிரம்மத்தைவிட வேறான பிரமை ஸத்திய மென்று யேற்பட்டு எங்களிட மதமே கெட்டுப்போகும். ஆகையால் பிரமை பொருந்ாது. மித்யை வாஸ்தவமாக இல்லவே இல்லை.

வ:—பிரமை முதலியவை பொருந்துமாயின் உங்கள் மதமே பாழாகிறதென்று நீங்கள் சொல்லுகிறீரா? அல்லது உங்களிட பிராசீனர் சொல்லியிருக்கிறாரா?

ஸா:—"துர்கடத்வ மவித்யாயா பூஷணம் நது தூஷணம் கத்ஞ்சித்கடமானத்வேவித்யாத்வம் துர்கடம்பவேத்" "மாயயா: அனுபபத்திர்பூஷணம்" அனுபத்தி: மாயாமுபோத்பலயதி" "தஸ்ய மாயிகத்வேன மாயாயா................ஸர்வானுப பத்தேர் பூஷணத்வாத்" இவைகளே முதலான அனேக வாக்யங்களினால் அவித்யைக்கும் அவித்யா கார்யத்திற்கும் துர்க்கடத்வம் (யுக்திக்கு அகப்படாமலிருப்பது என்றால் ஸரியாக பொருந்து விப்பதற்கு வராமலிருப்பது) பூஷணமே, தூஷணமல்ல. எப்படியாவது பொருந்தினும் அவித்யை என்கிறதே பாழாகும் என்று எங்கள் பிராசீனரே சொல்லியிருக்கிறார்கள்.

வ:—பிரமையே முதலில் பிராமாணிகமாகாமற் போன பிறகு பிரமபரம்பரைக்கு அனுதித்வகல்பனம் நிர்மூலமாகிற படியால் நீங்கள் பௌத்தரின் பேறில் சொன்ன அந்தபரம் பரை என்கிற தூஷணம் உங்கள் மீது வருகிறதோ இல்லையோ?

ஸா:— (பதிலில்லை.)

வ:—To the Court–நிர்த்தர்மகமான பிரம்மத்தில் ஜகத்தின் பிரமை உண்டென்கிற விஷயத்தில் பிராமண மில்லை. மூலம் அப்பிராமாணிக மாகையால் அந்த அப்பிராமாணிகமான பிரமை பொருந்துவதற்காக பிரம பரம்பராகல்பனம் நீங்கள் ஒப்புக்கொண்டால் அனவஸ்தை என்கிற தூஷணத்தினுல் தூஷிதமாகிற தென்று அத்வைதிகளால் பௌத்தரின் பேரில் சொல்லப்பட்ட தோஷம் அத்வைதிகளின் பேரிலும் வருகிற தென்கிற விஷயத்தைக் கோர்ட்டார் நோட் செய்யவேண்டியது.

---

## பிரதிவாதிவக்கீல் ஆர்க்யுமெண்ட்

பிரமை வரவேண்டுமாயின்:—

(1) அதிஷ்டானம் என்றால் எதில் ஆரோபிக்கிறோமோ அவ்வஸ்து,

(2) அந்த வஸ்துவில் ஸாமான்யதர்மங்கள்,

(3) விசேஷதர்மங்கள்,

(4) ஆரோபிக்கப்படும் பதார்த்தங்களின் ஸாதிருஶ்யம்,

(5) ஸாமான்ய ரூபத்தினுல் அதிஷ்டானத்தின் ஞானம்,

(6) விசேஷரூபத்தினுல் அதிஷ்டானத்தின் அஞ்ஞானம்,

(7) ஸாமான்யரூபத்தினுல் அறிந்து, விசேஷரூபத்தினுல் அறியாமலிருக்கும் மனிதன்,

(8) அம்மனிதனுக்கு ஞானமுண்டாவதற்குக் காரணமான தேகேந்திரியாதிகள் இவைகளே முதலான அநேக காரணங் களிருக்கின்றன,

கயிற்றில் சர்ப்பத்தின் பிரமை வரவேண்டியதாயின்:—

(1) ரஜ்ஜு (கயறு) அதிஷ்டானம்,

(2) ரஜ்ஜுவில் இதம்த்வம் (எதிரிலிருப்பது) என்கிற ஸாமான்ய தர்மம்,

(3) ரஜ்ஜுத்வ மென்கிற விசேஷதர்மம்,

(4) ஆரோபிக்கப்படும் சர்ப்பத்தின் ஸாதிருஸ்யம், (சர்ப்பத்தைப் போல் நீட்டாக இருப்பது),

(5) ஸாமான்ய தர்மத்தின் ஞானம்,

(6) விசேஷதர்மத்தின் (சர்ப்ப மென்கிற) ஞானமின்மை.

(7) ஸாமான்ய தர்மத்தின் ஞானமும், விசேஷதர்மத்தின் அஞ்ஞானமு முள்ள மனிதன்,

(8) அம்மனிதனுக்குள்ள தேகேந்திரியாதிகள் இக்காரணங்களிருப்பதினுல் ரஜ்ஜுவில் சர்ப்ப பிரமம் வருகிறது.

"பிரம்ம ஸத்யம் ஜகன்மித்யா ஜீவோ பிரம்மைவ நாபர:" பிரம்ம மொன்றே ஸத்தியமானது, ஜகத்து மித்யை (கல்பிதம்) ஜீவன் பிரம்மமே என்று சொல்லும் எங்களிட அத்வைத மதத்தின் படிக்கு பிரம்மம் ஸகல தர்மரஹிதமாகையால் ஜகத்தினிட பிரமத்திற்கு அதிஷ்டானமாகிறதற்குக் காரணமான வாஸ்தவமான ஸாமான்ய தர்மங்களும் விசேஷ தர்மங்களும் ஆரோபிக்கப்படும் ஜகத்தின் ஸாதிருஸ்யம் இவைகளில்லாவிடினும், பிராந்தனுவதற்குக் காரணமான வாஸ்தவமான ஸாமான்ய தர்மத்தின் ஞானமும், விசேஷ தர்மங்களின் அஞ்ஞானமும், தேகேந்திரியாதிகளும் இல்லாவிடினும்; அதிஷ்டானத்திற்குக் காரணமான, கல்பிதமான ஸாமான்ய தர்மங்கள், விசேஷ தர்மங்கள் ஜகத்தின் ஸாதிருஸ்யம் இவைகளுண்டு. பிராந்தனுவதற்குக் காரணமான, வாஸ்தவமான ஸாமான்ய தர்ம ஞானம், விசேஷ தர்மத்தின் அஞ்ஞானம், தேஹேந்திரியாதிகள் இவைகளில்லாவிடினும் கல்பிதமான ஸாமான்ய தர்மத்தின் ஞானம், விசேஷ தர்மத்தின் அஞ்ஞானம், தேகேந்திரியாதிகள் இவைகளிருப்பதி

ஞல் பிரம்மம் ஜகத்தின் பிரமைக்கு அதிஷ்டானமுமாகிறது; பிராந்தியுடையதுமாகிறது.

பீஜாங்குரபரம்பரை எப்படி அங்கீகரிப்பதற்கு யோக்கிய மாயிருப்பது துஷ்ட மல்லவோ அப்படியே ஜகத்தின் பிரமைக்குக் காரணமான ஸாமான்ய தர்மம் விசேஷதர்மம் முதலியவைகளின் பிரமமும் அந்த பிரமத்திற்குக் காரணமான மற்ெருரு பிரமை இப்படியே பிரம பரம்பரை அங்கீகரிப்பதற்கு யோக்கியமாகிறது தோஷமல்ல.

ஆகையால் பிரம்மத்தினிடத்தில் ஜகத்தின் பிரமம் பொருந்துகிறதாகையால் பிராம்மணுதிவர்ணங்கள் தேவதைகள் வேதங்கள் யக்ஞாதிகள் தீர்த்தங்கள் இவ்வெல்லாம் கல்பிதங்களே, ஞானதிரிக்தமாக என்ருல் ஞானத்தைவிட வேருக இல்லவே இல்லை என்பதைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டியது.

---

## வாதிவக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பிரமையுண்டாவதற்கு 7-8 காரணங்களிருக்கவேண்டுமென்றும், ரஜ்ஜுவில் சர்ப்பத்தின் பிரமையுண்டாவதற்கு இக்காரணங்களுண்டென்றும் பிரதிவாதிகளே ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

ஜகத்தின் பிரமை பிரம்மத்தில் வருவதற்கு வாஸ்தவமான இக்காரணங்கள் ஒன்றுமில்லாவிடினும், கல்பிதமான ஸாமான்ய தர்மம் முதலியவைகள் இருக்கின்றனவாகையால் பிரமை பொருந்துகிறதென்று பிரதிவாதிகள் சொல்லுகிருர்கள்.

ஜகத்தின் பிரமைக்குக் காரணமான ஸாமான்ய தர்மம் முதலியவைகளின் பிரமை வரவேண்டுமாயின் அதற்குமுன்னமே ஸாமான்யதர்மம் முதலியவைகளின் பிரமையை ஒப்புக்கொள்ளுகிருேம்; அதற்கு முன் ஒரு பிரமை, அதற்கு முன் ஓர் பிரமை இப்படி பிரமபரம்பரா ரூபமான அனவஸ்தையை ஒப்புக்கொண்டே பீஜாங்குர அனவஸ்தை எப்படி தோஷமல்லவோ,

அங்கீகரிக்கத்தகுந்ததோ அப்படியே பிரமபரம்பரா ரூபமான அனவஸ்தையும் தோஷமல்லாததால் அங்கீகரிக்கத் தகுந்தது என்று பிரதிவாதிகள் சொல்லுவது சரியல்ல. ஏனெனில்:— பாஹ்ய (வெளி) பதார்த்தங்களை அங்கீகரிக்காவிடின் கடஞானம் படஞான மென்கிற விசித்ரஞானம் எப்படி உண்டாகும் என்று அத்வைதிகள் பௌத்தரைக்குறித்து அக்ஷேபித்ததற்கு—வாஸனா வைசித்ர்யத்தினால் ஞானவைசித்ர்யம் பொருந்துகிறதென்று பௌத்தர்கள் சமாதானம் சொன்னார்கள்.

அதற்கு "நபாவோனுபலப்தே:" (2-2-30) பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் "பாஹ்யபதார்த்தங்களின் அனுபவத்தினாலேயே வாஸனா உண்டாக வேண்டும். பாஹ்யபதார்த்தங்களின் அனுபவமே இல்லாததினால் வாஸனாவுக்கு இருப்பே பொருந்துவதில்லை" என்று சங்கராசார்யர் சொன்னார்.

அதற்குமேல் "பாஹ்யபதார்த்தங்களின் உபலப்தி இல்லாவிடினும் பூர்வபூர்வ வாஸனாவினால் உத்தரோத்தர ஞான வைசித்ர்யம் உண்டாகிறது. பீஜாங்குர பரம்பரை எப்படி அங்கீகரிக்கத்தகுந்ததோ, தோஷமல்லவோ அப்படியே வாஸனாபரம்பராரூபமான அநவஸ்தையும் அங்கீகரிக்கத்தகுந்தது தோஷமல்ல" என்று பௌத்தர்கள் சமாதானம் சொன்னார்கள்.

அதற்கு—"அனவஸ்தை இரண்டு வகை. (1) பிராமாணிகமான மூலத்தை வைத்துக்கொண்டு யேர்பட்டது. (2) அப்பிராமாணிகமான மூலத்தை வைத்துக்கொண்டு யேர்பட்டது. அவைகளில் பிராமாணிகமான மூலத்தை வைத்துக்கொண்டு யேர்பட்ட அனவஸ்தை (பரம்பரை) அங்கீகரிக்கத்தகுந்தது, தோஷமல்ல. அப்பிராமாணிகமான மூலத்தை வைத்துக்கொண்டு யேர்பட்ட அனவஸ்தை அங்கீகரிக்கத்தகுந்ததல்ல, தோஷமுள்ளது. பீஜத்தைக்குறித்து அங்குரம் காரணம். அங்குரத்தைக்குறித்து பீஜம் காரணம் என்கிற விஷயம் பிராமாணிகமாகையால் இப்பிராமாணிகமான பீஜாங்குர பரம்பரை அங்கீகரிக்கத்தகுந்தது தோஷமல்ல. பாஹ்யபதார்த்தங்களின் அனுபவமில்லாமலே வாஸனா உண்டாவது அப்பிராமாணிகமாகையால்

இந்த அப்பிராமாணிகமான வாஸனையை (ஸம்ஸ்காரத்தை) வைத்துக்கொண்டு, வாஸனா பரம்பராரூப அனவஸ்தை அங்கீகரிக்கத் தகுந்ததல்ல. அப்படி ஸ்வீகரிப்பது துஷ்டமானது'' என்று சங்கராசார்யர் பௌத்தரைக்கண்டித்திருக்கிறார்.

*''வாஸ்தவமாக பிரமை என்பதே கிடையாது. கர்த்ருத்வம் (செய்கை) போக்த்ருத்வம் (சாப்பிடுகை) முதலிய ஸம்ஸாரம் இல்லை. பிரமை, ஸம்ஸாரம் இவைகளுண்டென்று சொல்லுவோமாயின் த்வைதிகள் சொல்லும் எல்லா அனுபபத்திகளும் வருகின்றன. ஆகையால் பிரமையும் ஸம்ஸாரமும் சொல்லுவதற்கு வருபவைகளல்ல என்கிறதே யுக்தமானது'' என்று பாமதிகாரர் சொல்லியிருக்கிறார்.

இப்படி சங்கராசார்யர், பாமதிகாரர் முதலிய அத்வைதிகளின் வாக்கியங்களினாலேயே பிரம்மத்தினிடத்தில் ஜகத்தின் பிரமையும், ஸம்ஸாரமும் அப்பிராமாணிகமென்று சித்திக்கின்றன.

பிரம பரம்பரைக்கு மூலமான ஜகத்தின் பிரமமே அப்பிராமாணிகமான பிறகு அத்தகைய பிரமையை பொருந்துவிப்பதற்காக ஒப்புக்கொள்ளும் பிரம பரம்பராரூபமான அனவஸ்தை, அப்பிராமாணிகமான மூலத்தை வைத்துக்கொண்டுவந்த, பௌத்தரால் அங்கீகரிக்கப்பட்ட வாஸனாபரம்பரையைப்போல் தோஷயுக்தமானது ஆகையால் அங்கீகரிக்கத்தக்கதல்ல.

ஏவம்ச (ஆகக்கூடி) அத்வைத மதத்தின் படிக்கு பிரம்மத்தினிடத்தில் ஜகத்தின் பிரமையே (அத்யாஸமே) பொருந்துவதில்லாததால் ஜகத்து கல்பிதமென்பது யுக்தமல்ல. ஆகையால் வேதாதி பிரமாணங்களில் சொல்லப்பட்டுள்ள பிராம்மணாதி வர்ணங்கள், வேதயக்ஞஸ்நான ஸந்த்யாவந்தன தீர்த்த தேவதைகள் முதலிய எல்லா ஜகத்தும் ஸத்யமே என்கிற விஷயத்தை

* பரமார்த்தஸ்து நவிப்ரமோ நாம கஶ்சிந்நச ஸம்ஸாரோ நாம, கிந்து ஸர்வமேதத்ஸர்வானுபபத்திபாஜனத்வேனாநிர்வசனீயமிதி யுக்தமுத்பஶ்யாம: (பாமதி. 4-1-3)

கோர்ட்டார் ஸன்னிதியில் விண்ணப்பம் செய்துக்கொண்டிருக்கிறேன். இரண்டு பக்ஷங்களையும் ஆலோசித்துச் சரியான தீர்மானமளித்து ஜனங்கள் கெடாமற் செய்ய வேணுமாய்க் கோருகிறேன்.

---

## வ்யாஹத பாஷண விசாரணை.

(பூர்வோத்தர விருத்தமாகச் சொல்லியிருப்பதை விசாரித்தல்.)

வாதி வக்கீல்:—சாஸ்திரிகளே. ஞானத்தை விட வேருக வெளிஜகத்தே இல்லை என்று, சொல்லும் பௌத்தமதம் பிராமாணிகமா (பிரமாணசித்தமா) அப்பிராமாணிகமா?

பிர. ஸா:—ஞானுதிரிக்தமாக ஜகத்து இல்லை என்பது பிரமாண விருத்தமானது (அப்பிராமாணிகம்)

வ:—ஜகத்து இல்லை (மித்யை) என்பது பிரமாண விருத்தமென்பது உமக்கு எப்படி தெரிந்தது?

ஸா:—நம்மாசார்யரின் (சங்கராசார்யரின்) பாஷ்யத்திலேயே.

வ:—எந்த கிரந்தத்தின் பாஷ்யம்?

ஸா:—பிரம்ம ஸூத்திரத்தின் பாஷ்யம்.

வ:—எந்த ஸூத்திரத்தின் பாஷ்யம்?

ஸா:—"நாபாவஉபலப்தே:, வைதர்ம்யாச்ச ந ஸ்வப்னுதிவத், க்ஷணிகத்வாச்ச, நபாவோனுபலப்தே:, ஸர்வதானுபபத்தேஶ்ச" (2-2-28 முதல் 32 வரைக்குமுள்ள) ஸூத்திரங்களின் பாஷ்யங்கள்.

வ:—"நாபாவ உபலப்தே:" என்கிற ஸூத்திரத்தினுல் பௌத்த மதத்தை எவ்விதமாக ஸூத்திரகாரரான வேதவியாஸர் கண்டித்திருக்கிருரென்று சங்கராசார்யர் தம்மிட பாஷ்யத்தில் சொல்லியிருக்கிருர்?

ஸா:—* ஜகத்து உபலப்தமாகிறதில்லை (காணுகிறதில்லை) ஆகையால் ஜகத்து இல்லை என்று பௌத்தாள் சொல்லுவது சரியல்ல. "நாபாவ உபலப்தே:" ந, அபாவ: உபலப்தே: குடம் முதலிய ஜகத்து காணுவதினுல் குடம் முதலிய ஜகத்து இல்லை என்று சொல்லக்கூடாது. கடபடாதி பதார்த்தங்கள் காணப் பட்டுக் கொண்டிருக்க அந்த ஜகத்துக்கு அபாவம் (இல்லை என்பது) பொருந்துவதில்லை. ஒரு மனிதன் போஜனம் செய்து போஜனத்தினுலுண்டான திருப்தியை அனுபவித்துக் கொண் டிருந்தும், நான் போஜனமே செய்யவில்லை, திருப்தனுமாகவில்லை என்று சொல்வானேயாயின் அவ்வார்த்தை எப்படி அங்கீகரிக்கத் தகுந்ததல்லவோ அப்படியே, இந்திரிய ஸம்பந்தத்தினுல் கட படாதி பதார்த்தங்களை காண்கிறவனுய்த் தானே வெளி (ஞான த்தை விட வேருன) வஸ்துக்களை நான் காணவில்லை, வஸ்த்துக் களுமில்லை என்று சொல்லுகிறவனிட வார்த்தைகள் அங்கீகரிப் பதற்கு அயுக்தமானவைகளாகின்றன என்று கடம் முதலான ஜகத்தை ஒப்புக்கொள்ளாமலிருக்கும் பௌத்தனை ஷை ஸூத்தி ரத்தினுல் ஸூத்திரகாரரான பாதராயணர் கண்டித்திருக்கிரு ரென்று சங்கராசார்யர் தம்மிட பாஷ்யத்தில் சொல்லியுளர்.

வ:—சங்கராசார்யர் இவ்விதமாக கண்டித்ததற்கு பௌத் தாள் என்ன ஸமாதானம் சொல்லியிருக்கிருர்கள்?

---

* नखल्वभावो बाह्यार्थस्याध्यवसातुं शक्यते। सद्युपलंभाभावाद्वाऽध्यव-सीयते सत्यप्युपलंभे तस्य बाह्याविषयत्वाद्वा सत्यपि बाह्यविषयत्वे बाह्यार्थ-बाधकप्रमाण सद्भावाद्वा (ब्र० सू० शां. भा. भामती । २ । २। २८)

(नाभाव उपलब्धेः २ । २ । २८) नखल्वभावो बाह्यार्थस्याध्यवसातुं शक्यते । कस्मात् उपलब्धेः उपलभ्यते हि प्रतिप्रत्ययं बाह्योऽर्थःस्तंभःकुड्यं घटः पट इति । नचोपलभ्यमानस्यैवाभावो भवितुमर्हति । यथा हि कश्चि-द्भुंजानो भुजिसाध्यायां तृप्तौ स्वयमनुभूयमानायामेवं ब्रूयान्नाहं भुञ्जे न वा तृप्यामीति तद्वदिंद्रियसन्निकर्षेण स्वयमुपलभमान एव बाह्यमर्थं नाहमुप-लभे न च सोऽस्तीति ब्रुवन्नुपादेयवचनः स्यात् (शां. भा.)

ஸா:—*நாம் எந்த பதார்த்தத்தையும் காணுவதில்லை என்று சொல்லுவதில்லை. ஞானத்தை விட வேறாக பதார்த்தங்களைக் காணுவதில்லை என்று சொல்லுகிறோமென்று ஸமாதானம் சொல்லியிருக்கிறார்கள்.

வ:—அதற்கு சங்கராசார்யர் என்ன தூஷணம் சொல்லியிருக்கிறார்?

ஸா:—† ஞானாதிரிக்தமாக பாஹ்ய பதார்த்தங்களில்லை என்று நாம் சொல்லுகிறோமென்று, நீர் சொல்லுவது நிஜமே, ஆயினும் உம்மிட வாய்க்கு அங்குசம் (வாய்பூட்டு) இல்லாததினால் (இப்படிச் சொல்லலாமிப்படிச் சொல்லக்கூடாது என்கிற நிர்ப்பந்தமில்லாததினால்) அப்படிச் சொல்லுகிறீர்களாயினும் அவைகள் யுக்தி யுக்தமான வார்த்தைகளல்ல. "நாபாவ உபலப்தே:" ந அபாவ: உபலப்தே: ஜகத்து ஞானத்தை விட வேறாகவே காணுகிறது. எம்மனிதனும் கடமே ஞானம் படமே ஞானம் என்று அறிவதில்லை. ஞானத்திற்கு கடம் விஷயமானது படம் விஷயமானது என்றே எல்லா லௌகிகர்களும் அறிகிறார்கள் என்கிற இது முதலான அநேக தூஷணங்களைச் சொல்லி, ஞானாதிரிக்தமாக பதார்த்தங்களில்லை என்று சொல்லக்கூடாதென்று சங்கராசார்யார் பௌத்தரைக் கண்டித்திருக்கிறார்.

வ:—ஐயா! ஞானாதிரிக்தமாக பதார்த்தங்கள் காணப்பட்டு வருபதால் ஞானவ்யதிரிக்தமாக பிரபஞ்சம் இல்லை என்று சொல்லக்கூடாதென்று சங்கராசார்யர் கண்டித்ததற்கு, பௌத்தர் அக்கண்டனத்தை எவ்விதமாக பரிகரித்துக் கொண்டிருக்கிறார்?

---

* नाहमेवं ब्रवीमि न कंचिदर्थमुपलभ इति। किंतु उपलब्धिव्यतिरिक्तं नोपलभ इति ब्रवीमि। (ब्र. सू. शां. भा. २-२-२८.)

† बाढमेवं ब्रवीषि निरंकुशत्वात्ते तुण्डस्य नतु. युक्त्युपेतं ब्रवीषि। यत उपलब्धिव्यतिरेकोपि बलादर्थस्याभ्युपगंतव्यः। उपलब्धेरेव। न हि कश्चिदुपलब्धिमेव स्तंभः, कुडयं, चेत्युपलभते उपलब्धिविषयत्वेनैव तु स्तंभ कुडयादीन् सर्वे लौकिकाः उपलभन्ते (ब्र. सू. शां. भा. २. २. २८.)

ஸா:—பாஹ்ய பதார்த்தங்கள் உபலப்தமாகின்றன (காணு கின்றன) என்பது நிஜமே. ஆனல்-ஸ்வப்னவஸ்தையில் பதார்த் தங்கள் காணப்படினும் எப்படி அங்கீகரிப்பதில்லையோ, மாயையால் பதார்த்தங்கள் உபலப்தமாயினும் அவைகளை எப் படி அங்கீகரிப்பதில்லையோ அப்படியே ஜாக்ரத் காலத்தில் பாஹ்ய பதார்த்தங்களின் உபலப்தி வந்தபோதிலும் அவைகளை அங்கீகரிக்க வேண்டியதில்லை என்று பௌத்தர் ஸமாதானம் சொல்லியிருக்கிறார்.

வ:—அதற்கு சங்கராசார்யர் என்ன தூஷணம் சொல்லி யிருக்கிறார்?

ஸா:—சங்கராசார்யர் சொல்லுவதென்ன? ஸூத்திரகாரரே சொல்லியிருக்கிறார்.

வ:—எந்த ஸூத்திரத்தினல்?

ஸா:—"வைதர்ம்யாச்ச நஸ்வப்னதிவத்" (பிர. ஸூ. 2.2-29) என்கிற ஸூத்திரத்தினல்.

வ:—இந்த ஸூத்திரத்தினல் பௌத்தர் சொன்ன ஸமாதா னம் ஸரியல்லவென்று எப்படி ஸித்திக்கிறதென்று சங்கராசார் யர் சொல்லியிருக்கிறார்?

ஸா:—ஸ்வப்னத்தில் காணப்படும் பதார்த்தத்திற்காகட்டும் மாயாவினல் காணப்படும் பதார்த்தத்திற்காகட்டும் பிறகு பாத கம் (அப்பதார்த்தம் இல்லை என்கிற ஞானம்) வருகிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தங்களும் மாயிக பதார்த்தங்களும் உபலப்த மாயினும் அவைகள் இல்லை என்று சொல்லக்கூடும். ஜாக்ரத் காலத்தில் காணப்படும் பதார்த்தங்களுக்கு எந்த அவஸ்தையி லும் பாதகம் (இல்லை என்கிறஞானம்) வருவதில்லை. ஆகையால் ஸ்வப்ன பதார்த்தங்களில்லாவிடினும் எப்படி ஸ்வாப்ன பதார்த் தங்களின் ஞான முண்டாகிறதோ அப்படியே பதார்த்தங்களில் லாமலே ஜாக்ரத்காலத்தில் ஞான முண்டாகிறதென்று சொல்ல முடியாது. ஆகையால் உபலப்தியையனுசரித்து பாஹ்யபதார்த் தங்களை ஒப்புக்கொண்டே தீரவேண்டுமென்று ஷை ஸூத்திரத் திற்கு வியாக்யானம் செய்திருக்கிறார்.

வ:—சாஸ்திரிகளே! "ததா பிரஞ்ஞான வ்யதிரேகேண ஸ்வப்ன ஜாகரிதயோர்ன கஶ்சித்வஸ்து விசேஷோ கிருஹ்யதே தஸ்மாத் பிரஞ்ஞான வ்யதிரேகேணுபாவோ யுக்தஸ்தேஷாம்" என்கிற வாக்கியம் எந்த கிரந்தத்திலிருக்கிற தென்பதை அறிவீரு?

ஸா:—ஆஹா அறிவேன் ஐய்யா பிரஹதாரண்யகோபனிஷத் 2.வது அத்யாயம் 4-வது பிராம்மணம் 5-வது மந்திரத்திற்கு வியாக்யானமாக சங்கராசார்யர் செய்த பாஷ்யத்திலுண்டு.

வ:—அதற்கு அர்த்தமென்ன?

ஸா:—ஸ்வப்னகாலத்திலாகிலும் ஜாக்ரத் காலத்திலாகிலும் ஞானத்தை விட வேருக எந்த வஸ்து விசேஷமும் காண்கிறதில்லையாகையால் ஞானவ்யதிரிக்தமாக வஸ்துக்களில்லை என்பதே சரியானது என்று அர்த்தம்.

வ:—"பிரம்ம வ்யதிரேகேண கார்யஜாதஸ்யாபாவ இதிகம்யதே" (பிர. ஸூ. சாங். பா.) என்கிற சங்கராசார்யரிட பாஷ்யத்திற்கு என்ன அர்த்தம்?

ஸா:—பிரம்மத்தைவிட வேருக ஜகத்து இல்லை என்று தெரிய வருகிறதென்று அர்த்தம்.

வ:—பிரம்மம் ஞானரூபமன்ரோ?

ஸா:—பிரம்மம் ஞானரூபமே.

வ:—பிரம்மவ்யதிரேகமாக ஜகத்தில்லை என்ருல் ஞானவ்யதிரிக்தமாக ஜகத்து இல்லை என்பது சங்கராசார்யரின் மதமேயல்லவா?

ஸா:—ஜகத்து ஞானவ்யதிரிக்தமாக இல்லை என்கிறதே நம்மாசார்யரின் மதம் என்பது பிரஸித்தமே.

வ:—ஞானம் = பிரம்மம் ஒன்றே ஸத்யமோ, ஞானுதிரிக்தமாக ஸத்தியமான பதார்த்தம் வேருண்டோ?

ஸா:—ஞானம் = பிரம்மம் ஒன்றே ஸத்யம். மற்றெல்லா ஜகத்தும் அந்த ஞானத்தில் கல்பிதமானது. மித்யை = ஞானவ்ய திரிக்தமாக இல்லை.

வ:—(1) "ஞானமாத்ரம் பாரமார்த்திகம், தத்ரைவ ஞாத்ரு ஞேயாதி கல்பிதமிதி ஸௌகதமதமேவ பவதாபி ஸங்கிருஹீ தம்" (2) "யத்யபி பாஹ்யார்த்த நிராகரணம் ஞானமாத்ரகல்பனு சாத்வயவஸ்து ஸாமீப்யமுக்தம்" இவ்விரண்டு வாக்கியங்கள் எந்த கிரந்தத்திலிருக்கின்றன, தெரியுமா?

ஸா:—தெரியும் (1) முதலாவது வாக்யம் கௌடபாதகாரி கையின் வியாக்யானத்திற்கு ஆனந்தகிரி என்பவர் செய்த வியாக் யானத்தில் இருக்கிறது, (2) இரண்டாவது வாக்கியம் ஷை கௌடபாதகாரிகைக்கு சங்கராசார்யரின் வியாக்யானம்.

வ:—முதல் வாக்கியத்தின் தாத்பர்யமென்ன?

ஸா:—ஞானமொன்றே ஸத்தியம், அந்த ஞானத்தில் எல்லா ஜகத்தும் கல்பிதமானது என்கிற ஸௌகதமதமே உங்களிட (கௌடபாதசார்யரிட) மதம் (பௌத்தமதமே அத்வைத மதம்) என்று அக்ஷேபித்துக்கொண்டதாக தாத்பர்யம்.

வ:—அதற்கு என்ன ஸமாதான மளிக்கப்பட்டிருக்கிறது?

ஸா:—ஞானமொன்றே ஸத்தியம், பாஹ்ய ஜகத்து இல்லை என்று பௌத்தரைப்போல் நாமும் சொல்லுகிறோம். ஆனல் பௌத்தரின் விஞ்ஞானம் க்ஷணிகம் (பிரதி நொடியிலும் மாறுத லுடையது) எங்களிட விஞ்ஞானம் நித்தியமானது (மாறுதலில் லாதது) என்று ஸமாதானமளிக்கப்பட்டது.

வ:—உங்களிட அத்வைதமதமும் விஞ்ஞான வாதிகளான பௌத்தரின் மதமும் ஒன்றே ஆயிற்றல்லவோ?

ஸா:—விஞ்ஞானதத்வமொன்றே நிஜமானது, ஜகத்து அவ் விஞ்ஞானதத்வத்தில் ஆரோபிதம் (மித்யை) விஞ்ஞானவ்யதிரிக் தமாக இல்லை என்கிற விஷயத்தில் ஒன்றேயாயினும் பௌத்த ரின் விஞ்ஞானம் க்ஷணிகம், நம்மிட விஞ்ஞானம் நித்யம் ஆகை

யால் அவாளிட பௌத்தமதத்திற்கும் நம்மிட அத்வைதமதத்திற்கும் பேதமிருக்கிறது.

வ:—பௌத்தரின் விஞ்ஞானதத்வம் க்ஷணிகமோ அல்லவோ உங்களிட விஞ்ஞான தத்வம் நித்யமோ அல்லவோ என்கிற விஷயத்தை 5-ஏ இஷ்யூ விசாரணை காலத்தில் விசாரிப்போம். தற்காலம் ஜகத்து ஞானதிரிக்தமாக இல்லை என்கிற விஷயத்தில் உங்களிட அத்வைதமதமும் விஞ்ஞான வாதிகளான பௌத்த மதமும் ஒன்றன்றோ?

ஸா:—ஆம் ஒன்றே. அவ்விஷயத்தில் பேதமில்லை. நாங்களும் (அத்வைதிகளும்) ஞானதிரிக்தமாக ஜகத்தில்லை என்று ஒப்புக்கொள்ளுகிறோம். பௌத்தரும் ஞானதிரிக்தமாக ஜகத்து இல்லை என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

வ:—அத்வைதிகள் சூன்யவாதிகளான பௌத்தரை கண்டித்திருக்கிறார்களல்லவா?

ஸா:—சூன்யவாதிகளான பௌத்தரின் மதத்தை, சங்கராசார்யர், அவரிட பாஷ்யத்திற்கு வியாக்யான காரர்களான பாமதிகாரர், பிரம்ம வித்யாபரணகாரர் முதலான அத்வைதிகள் கண்டித்திருக்கிறார்கள்.

வ:—சங்கராசாரியார் கண்டித்திருக்கும் வாக்கியத்தைச் சொல்லும்?

ஸா:—சூன்ய வாதிபக்ஷஸ்து ஸர்வபிரமாண விப்ரதிஷித்த இதி (பிரம்மஸூ. சங். பா. 2-2-30) என்கிற வாக்கியமே.

வ:—அவ்வாக்கியத்திற்கு யார்யார் எப்படிஎப்படி வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள்?

ஸா:—சூன்ய மொன்றே தத்வம், ஜகத்தெல்லாம் சூன்யத்தில் கல்பித மென்று சொல்லும் பௌத்தரைக் குறித்து * "நீங்

* शून्यपदेन सर्वप्रपञ्चातीतं भावरूपं किंचित्तत्वं विवक्षितं उताभावरूपं नाद्यः - तथासति वाचोयुक्त्यंतरेण ब्रह्मवादएवाश्रितः । यदिद्वितीयः पक्षः - तदा सर्वप्रमाणविरोधः । सर्वप्रमाणैः प्रपञ्च उपलभ्यमाने तदभाव एव तत्वमिति निरूपयितुमशक्यमिति दूषणस्य स्फुटतया तन्निराकरणाय न सूत्रकृता सूत्राण्यारचितानि (ब्रह्मविद्याभरणे २-२-३०.)

கள் அங்கீகரிக்கும் சூன்யம் பாவரூபமா அல்லது பிரபஞ்சா பாவரூபமா? என்று ஆக்ஷேபித்துக்கொண்டு, சூன்யம் பாவரூப மாயின் நம்மிட பிரம்மவாதமே உங்களால் (பௌத்தரால்) ஆஶ்ர யிக்கப்பட்டபடியால் (நம்மிட பிரம்மவாதமதமும் உங்களிட சூன்யவாதமதமும் ஒன்றேயானபடியால்) நிராகரிக்கிறதில்லை. உங்களால் அங்கீகரிக்கப்பட்ட சூன்யம் பிரபஞ்சா பாவ ரூப மாயின் பிரபஞ்சம் பிரமாணத்தினால் உபலப்தமாய்க் கொண்டி ருக்க பிரபஞ்சா பாவமே தத்வமென்று வ்யவஸ்தை செய்வது அசக்கிய மென்கிற தூஷணம் ஸ்பஷ்டமாகையால் (ஸர்வபிரமா ணவிப்ரதிஷித்த இதி) என்று தூஷித்து, ஸூத்திரகாரர் இத் தகைய பிரமாண விருத்தமான மதத்தைக் கண்டிக்கவில்லை" என்று பிரம்மவித்யாபரணகாரர் வியாக்யானம் செய்திருக்கிறார்.

வ:—ஞானதிரிக்தமாக பிரபஞ்சமே இல்லை என்கிற பௌத்த மதம் பிராமாண விருத்தமென்று சங்கராசார்யார் கண் டித்திருக் கிறாரல்லவா?

ஸா:—ஞானதிரிக்தமாக பிரபஞ்சமே இல்லை என்பது பிர மாண விருத்தமானதாகையால் அங்கீகரிப்பதற்குத் தகுந்ததல்ல வென்று எங்கள் ஆசார்யர் கண்டித்திருக்கிறார்.

வ:—"பிரஞ்ஞான வ்யதிரேகேண ஸ்வப்ன ஜாகரித யோர் நகஶ்சித் விஶேஷோ க்ருஹ்யதே தஸ்மாத் பிரஞ்ஞானவ்யதிரே கேண அபாவ: யுக்தஸ்தேஷாம்" என்கிற வாக்கியம் யாருடையது?

ஸா:—நம்மிட சங்கராசார்யரின் 2-4-5 பிரஹதாரண்யக பாஷ்யத்தின் வாக்கியம்.

வ:—இதற்கு என்ன அர்த்தம்?

ஸா:—ஞானவ்யதிரிக்தமாக ஜகத்து இல்லை என்று அர்த்தம்.

வ:—பிரபஞ்சம் பிரமாணத்தினால் உபலப்தமாய்க் கொண் டிருக்க பிரபஞ்சத்தின்நிஷேதம் (இல்லை என்பது) பொருந்துவ தில்லை என்று பௌத்தரின் பேரில் சொல்லிய தூஷணம் உங்க ளிட மதத்தின் பேரில் வருகிறதில்லையோ?

ஸா:— (பதிலில்லை)

வ:—To the court—பிரதிவாதிகளான அத்வைதிகள் சூன்யாதிரிக்தமாக பிரபஞ்சத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லை, ஞானதிரிக்தமாய் பிரபஞ்சத்தை ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்று சொல்லும் பௌத்தரின் பேரில் பிரபஞ்சம் பிரமாண சித்தமாய்க் கொண்டிருக்க பிரபஞ்சாபாவத்தை அங்கீகரிப்பது யுக்தமல்ல என்று தோஷத்தைச் சொல்லி தாமே அவர்களை கண்டித்து, மருபடியும் தாங்களே ஞானதிரிக்தமாக பிரபஞ்சமில்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி விருத்தமான வார்த்தைகளை பிரதிவாதிகளாடுகிறபடியால் பிரபஞ்சமில்லை, பிரபஞ்சாபாவத்தையே ஒப்புக்கொள்ளவேணும் என்று சொல்லும் அத்வைதமதம் ஸகல பிரமாண விருத்தமானதென்பதை கோர்ட்டார் நோட் செய்ய வேண்டியது என்று கோருகிறேன்.

---

## பிரதிவாதிவக்கீல் பிரதிவாதிஸாக்ஷியை திருத்தல்.

---

பிர. வ:—ஐயா ஶாஸ்திரிகளே! பிரமாணங்கள் பிரபஞ்சத்திற்கு எந்த ஸத்யத்வத்தை விஷயீகரிக்கின்றன? (தெரிவிக்கின்றன.)

ஸா:—வியாவஹாரிக ஸத்தியத்வத்தைத் தெரிவிக்கின்றன.

பிர. வ:—நீங்கள் (அத்வைதிகள்) ஜகத்துக்கு எந்த ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறீர்கள்?

பிர. ஸா:—பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம். (பாரமார்த்திக ஸத்யமான பிரபஞ்சம் இல்லை என்று சொல்லுகிறோம்.)

பிர. வ:—பிரபஞ்சத்திற்கு வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை விஷயீகரிக்கும் பிரமாணத்தினால் பாரமார்த்திகமாக பிரபஞ்சமில்லை என்று நிஷேதம் செய்யும் மதத்திற்கு விரோதம் வருகிறதோ இல்லையோ?

ஸா:—விரோதம் வருகிறதில்லை.

பிர. வ:— ஏன்?

ஸா:—ஒருவன் இது வெள்ளிச் சொம்பு என்கிறான். மற்றொருவன் இது தங்கச்சொம்பல்ல என்கிறான். இது சொம்பு இது சொம்பல்ல என்கிற வாக்கியங்களில் ஆபாததః (விசாரம் செய்யாமலிருக்கும் போது) விரோதம் கண்டு வந்தாலும் வாஸ்தவமாக முதலில் சொன்னவனிட வெள்ளிச்சொம்பு என்கிற வார்த்தையை கண்டிக்காமல் இது தங்கச்சொம்பல்ல என்று நிஷேதிப்பதால் இருவரிட வாக்கியங்களுக்கும் விரோதமெப்படி வருவதில்லையோ அப்படியே ப்ரத்யக்ஷாதிபிரமாணங்கள் பிரபஞ்சத்தை வியாவஹாரிக ஸத்ய மென்று விஷயீகரிக்கின்றன (தெரிவிக்கின்றன), நாங்கள் (அத்வைதிகள்) பிரபஞ்சம் பாரமார்த்திக ஸத்தியமாக இல்லை என்று சொல்லுகிறோம். ப்ரத்யக்ஷாதி பிரமாணஸித்தமான வியாவஹாரிக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறதில்லை. ஆகையால் ஜகத்தில்லை என்று சொல்லும் நம்மதத்திற்கு ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களின் விரோதம் வருகிறதில்லை.

---

## ஸாக்ஷி கிராஸ் விசாரணை.

---

வா. வ:—* பிரமாணங்களினால் ஜகத்துக்கு ஸத்தியத்வம் உபலப்தமாய்க் கொண்டிருக்க ஜகத்துக்கு ஸத்யத்வத்தை நிஷேதித்தால் பிரமாணவிரோதம் வருகிறது என்று நீங்கள் (அத்வைதிகள்) சொன்னதற்கு பௌத்தர் என்ன சமாதானம் சொல்லியிருக்கிறார்?

---

* लौकिकानि हि प्रमाणानि सदसत्त्वगोचराणि । तैः खलु सत्सदिति गृह्यमाणं यथाभूतमविपरीतं तत्त्वं व्यवस्थाप्यते । असच्चासदिति गृह्यमाणं यथाभूतमविपरीतं तत्त्वं व्यवस्थाप्यते । सदसतोश्च विचारासहत्वं व्यवस्थापयता सर्वप्रमाणविप्रतिषिद्धं व्यवस्थापितं भवति । तथाच सर्वप्रमाण विप्रतिषेधान्नेयं व्यवस्थोपपद्यते । (भामती २-२-३०.)

பிர. ஸா:—*நாங்கள் (பௌத்தாள்) ஜகத்துக்கு பிரத்திய க்ஷாதி பிரமாணங்களினுல் கிரஹிக்கப்பட்ட (ஸித்தமான) வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறதில்லை. ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம். நாங்கள் ஜகத்தை நிஷேதிக்கும் பாரமார்த்திக ஸத்யத்வத்தை பிரமாணங்கள் கிரஹிக்கிறதில்லை யாகையால் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களுக்கு விஷயமான (பிரத்தியக்ஷாதி பிரமாணங்களினுல் ஸித்திக்கும்) ஸத்தியத்வம் வேறு (வியாவஹாரிகம்) நாங்கள் நிஷேதிக்கும் ஸத்தியத்வம் வேறு (பாரமார்த்திகம்) இவ்விதமாக ஸத்தியத்வம் வெவ்வேறுகையால் ஜகத்து இல்லை என்றுசொல்லும் நம்மதத்திற்கு பிரமாணவிரோதம் வருகிறதில்லை என்று பௌத்தர் சமாதானமளித்திருக்கிறுர்.

வ:— அச்சமாதானத்திற்கு அத்வைதிகள் என்ன தூஷணம் சொல்லியிருக்கிறுர்?

ஸா:—† "பிரமாணங்கள் விஷயங்களை கிரஹிக்கும்போது பாரமார்த்திகஸத்தியமென்றே விஷயீகரிக்கின்றனவேயொழிய, தம் தம் விஷயங்கள் வ்யாவஹாரிக ஸத்யத்வத்தையுடையது, பாரமார்த்திக ஸத்யத்வத்தையுடையதல்ல என்று விஷயீகரிப்பதில்லை. ஆகையால் பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதித்தபோதிலும் பிரத்தியக்ஷாதி பிரமாணங்களின் விரோதம் வந்தே தீருகிறது" என்று தூஷணம் சொல்லியிருக்கிறுர்.

வா. வ:—சாஸ்திரிகளே! "பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் ஜகத்துக்கு வியாவஹாரிக ஸத்தியத்வத்தை விஷயீகரிக்கின்றன. நாங்கள் (அத்வைதிகள்) ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்

---

* यद्युच्येत तात्विकं प्रामाण्यं प्रमाणानामनेनविचारेण व्युदस्यतेन सांव्यवहारिकं। तथाच भिन्नविषयत्वान्नसर्वप्रमाणविप्रतिषेधः इत्यत आह। (भामती 2-2-31.)

† नह्ययं सर्वप्रमाणप्रसिद्धो लोकव्यवहारोऽन्यत्तत्त्वमनधिगम्य शक्यतेऽपह्नोतुम्। प्रमाणानिहि स्वगोचरे प्रवर्तमानानि तत्त्वमिदमित्येवप्रवर्तंते अतात्विकत्वंतु तद्गोचरस्यान्यतो बाधकादवगंतव्यं नपुनः सांव्यवहारिकं नः प्रामाण्यं नतु तात्विकमित्येवप्रवर्तंन्ते। (ब्र. सू. शां. भा. भामती २। २। ३१)

வத்தை நிஷேதிக்கிறேம்" என்று பௌத்தரைப்போலவே நீங்களும் சொன்னல் "பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் பாரமார்த்திக ஸத்யத்வத்தையே விஷயீகரிக்கின்றன, வியாவஹாரிக ஸத்யத்வத்தைவிஷயீகரிப்பதில்லையாகையால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதித்தால் பிரத்யக்ஷாதிபிரமாண விரோதம் வருகிறது" என்று நீங்கள் பௌத்தரின் பேரில் கூறிய தூஷணம் உங்கள் மதத்தின் பேரில் வருகிறதில்லையோ?

ஸா:— (பதிலில்லை.)

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் ஜகத்துக்கு வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை விஷயீகரிக்கின்றன. அத்வைதிகள் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கின்றனர். ஆகையால் ஜகத்து இல்லை என்று நிஷேதிக்கும் அத்வைதமதத்திற்கு பிரத்தியக்ஷாதி பிரமாணங்களின் விரோதம் வருவதில்லை என்பதைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டியது.

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

"ஞான வ்யதிரிக்தமாக ஜகத்து இல்லை. எல்லா பாஹ்யஜகத்தும் ஞானத்திலேயே கல்பிதமானது" என்று பௌத்தரைப் போலவே அத்வைதிகளும் சொல்லிக்கொண்டே "ஞானவ்யதிரிக்தமாய் ஜகத்து இல்லை" என்கிற விஷயத்தை பௌத்தரைக் கண்டிக்கும் நிமித்தத்தினல் தம்மிட சித்தாந்தத்தையே கண்டித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகையால் 'மேமாதா வந்திபா' (என்னிட தாயார் மலடி) என்று சொல்லுபவரைப்போல் வ்யாஹதபாஷிகள் (தாங்கள் சொல்லிய பிரமேயங்களுக்குத் தாங்களே விருத்தமாகச் சொல்லுகிறவர்கள்) ஆகிறார்கள்.

"பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் பாரமார்த்திக ஸத்யத்வத்தை விஷயீகரிக்கின்றனவே யொழிய வியாவஹாரிக ஸத்யத்வத்தை விஷயீகரிக்கிறதில்லையாகையால் ஜகத்துக்கு பிரத்தியக்ஷாதி பிரமாணவிரோதம் அபரிஹார்யமானது" என்று பிரதிவாதிகளே பௌத்தரைக் குறித்துச் சொல்லி, "பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் ஜகத்துக்கு வ்யாவஹாரிக ஸத்யத்வத்தை விஷயீகரிக்கின்றன. நாங்கள் (அத்வைதிகள்) பாரமார்த்திக ஸத்யத்வத்தை நிஷேதிக்கிறோம்" என்று தம்பேரில் ஏற்பட்டுள்ள வ்யாஹதியை பரிகரித்துக் கொண்டிருப்பதும் வ்யாஹதமேயாகிறது.

ஜகத்து பிரத்தியக்ஷாதி பிரமாணங்களினால் பாரமார்த்திக ஸத்தியமாகவே ஸித்திக்கிறபடியால் ஜகத்து இல்லை என்று சொல்லும் மாயாவாதிகளான அத்வைதிகளின் பேரில் பௌத்தரைப்போல் பிரத்தியக்ஷாதி பிரமாணவிரோதம் வருகிறபடியால் ஜகத்து கல்பிதம், எப்போது மில்லாதது என்கிற மதம் அங்கீகரிக்கத்தகுந்த தல்ல என்கிற விஷயத்தைக் கோர்ட்டார் கவனிக்க வேண்டியது.

---

# யத்ரஹி த்வைதமிவ பவதி

## என்கிற சுருத்யர்த்த விசாரணை.

## பிரதிவாதியின் இரண்டாவது சாக்ஷி.

---

*கோர்ட்:*—உம்மிட பெயர் என்ன?

*பிரதிவாதி ஸாக்ஷி:*—நீலகண்ட அவதானி.

*கோர்ட்:*—கோர்டார் முன்னிலையில் தெய்வசாக்ஷியாக நான் சொல்லுவதெல்லாம் சத்தியம் என்று சொல்லும்.

*பி. ஸா:*—கோர்ட்டார் முன்னிலையில் தெய்வசாக்ஷியாக நான் சொல்லுவதெல்லாம் வ்யாவஹாரிக ஸத்யமே.

*பிர. வ:*—அவதானிகளே! ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில்ஏதாவது ஆதாரமுண்டோ?

பி. ஸா:—உண்டு.

பி. வ:—அது யாது?

பி. ஸா:—"யத்ரஹி த்வைதமிவ பவதி" என்கிற பிரஹதாரண்யக வாக்கியம்.

பி. வ:—* "யத்ரஹி த்வைதமிவ பவதி" என்கிற வாக்கியத்தின் அர்த்தமென்ன?

பிர. ஸா:—யத்ர=எந்த அவித்யா வஸ்தையில், த்வைதமிவ=பரமார்த்தனுகிய அத்வைத ரூப பிரம்மத்தி னிடத்தில் த்வைதத்தைப் போல் இரண்டாவது வஸ்து காணப்படுகிறதோ, தத்=அந்த அவித்யாவஸ்தையில், வேராக இருக்கும் ஒருவன் வேராக இருக்கும் க்ராணேந்திரியத்தினுல் வேராக இருக்கும் வாசனையை அறிகிருன். சக்ஷுரிந்திரியத்தினுல் ரூபத்தைப் பார்க்கிருன். சுரோத்திரேந்திரியத்தினுல் சப்தத்தைக் கேழ்க்கிருன். வாகிந்திரியத்தினுல் பேசுகிருன். மற்ளுருவனை அறிகிருன்.

பிரம்ம ஞானிக்கு, யத்=எக்காலத்தில் (ஞானுவஸ்தையில்) எல்லாம் பிரம்மரூபமே ஆகுமோ, பிரம்மாதிரிக்தமாக எதுவும் இல்லாததாக ஆகுமோ (முத்துச்சிப்பியில் அஞ்ஞானத்தினுல் காணப்படும் வெள்ளி முத்துச்சிப்பியின் ஞானத்தினுல் எப்படி எப்போதுமில்லை என்று சித்திக்கிறதோ, அப்படியே பிரம்மத்தின் அஞ்ஞானத்தினுல் காணப்படும் ஜகத்து பிரம்ம ஞானத்தினுல் எப்போது மில்லாததென்று சித்தமாகுமோ) அக்காலத்தில் எந்த இந்திரியத்தினுல் எந்த வாசனையை அறிவான்? எந்த சக்ஷுரிந்திரியத்தினுல் எந்த ரூபத்தைக் காணுவான்? எந்த சுரோத்திரத்தினுல் எந்த சப்தத்தைக் கேழ்ப்பான்? எந்த வாகிந்

---

* यत्र हि द्वैतमिव भवति तदितर इतरं जिघ्रति, तदितर इतरं पश्यति, तदितर इतरं शृणोति, तदितर इतरमभिवदति, तदितर इतरं मनुते, तदितर इतरं विजानाति, यत्रवा अस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं जिघ्रेत्तत्केन कंपश्येत्तत्केन कं शृणुयात्तत्केन कमभिवदेत्तत्केन कं मन्वीत तत्केन कं विजानीयात् येनेदं सर्वं विजानाति तं केन विजानीयाद्विज्ञातारमरे केन विजानीयादिति ॥ (बृ. २-४-१४.)

திரியத்திஞல் எந்த வாக்கியங்களின் உச்சாரணை செய்வான்? எந்த மனதிஞல் எதின் விசாரம் செய்வான்? எந்த ஜீவன் எல்லா வற்றையும் அறிகிருஞே அந்த தன்னை எப்படி அறிவான்? அறிகிறவனை = விஞ்ஞாதாவை (தன்னை) எப்படி அறிவான்? என்று அர்த்தமாகிறது. ஞாஞவஸ்தையில் ஆத்மாவைவிட வேருன வஸ்துவே இல்லாததிஞல் எந்த ஞானமுமில்லை என்று மோக்ஷாவஸ்தையில் அஞ்ஞானத்திஞல் கல்பிக்கப்பட்ட ஜகத்தின் அபாவம் (மித்யாத்வம்) சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஜகத்து மித்யை என்று அர்த்தம்.

---

## கிராஸ் எக்ஜாமினேஷன்.

**வா. வ:**—ஐயா! இப்பெரிய வாக்கியத்திலிருக்கும் எந்த பாகத்திஞல் ஜகத்துக்கு மித்யாத்வம் தெரிவிக்கப்படுகிறது?

**பி. ஸா:**—'யத்ரஹி த்வைதமிவ பவதி' என்கிற பாகத்திஞலும் 'யத்ரவாஸ்ய ஸர்வமாத்மைவாபூத்' என்கிற பாகத்திஞலும் ஜகத்துக்கு மித்யாத்வம் தெரிவிக்கப்படுகிறது.

**வா. வ:**—'யத்ரஹி த்வைதமிவ பவதி' என்கிற இந்த பாகத்திஞல் ஜகத்துக்கு மித்யாத்வம் எப்படி சித்தமாகிறது.

**பி. ஸா:**—யத்ர = எந்த அவித்யாவஸ்தையில், த்வைதமிவ = த்வைதத்தைப்போல் காணப்படுகிறதோ என்று சொல்லி யிருப்பதிஞல், த்வைதம் = பிரபஞ்சம், இல்லை = மித்யை என்று சித்தமாகிறது.

**வா. வ:**—அவதானிகளே! தாங்கள் இவ்வுபனிஷத்தின் சாங்கரபாஷ்யத்தைப் பார்த்திருக்கிறீரோ?

**பி. ஸா:**—பார்த்திருக்கிருேம். பிரகிருதம் அதையே பாடமும் சொல்லிக் கொண்டிருக்கிருேம்.

வா. வ:—* ஷை கிரந்தத்திலுள்ள இவ்வாக்கியத்தின் அர்த்தத்தைச் சொல்லும்?

பி. ஸா:—'த்வைதமிவ' என்கிற இவ்வாக்கியத்தில் த்வைதத்திற்கு த்வைதத்தின் உபமானம் (திருஷ்டாந்தம்) கொடுக்கப்பட்டிருப்பதால், இவ்வாக்கியத்தினால் த்வைதத்திற்கு பாரமார்த்திகத்வம் சொல்லப்பட்டிருப்பினும், 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்' 'ஏகமேவாத்விதீயம்' 'ஆத்மைவேதம் ஸர்வம்' என்கிற இந்த சுருதிகள் ஜகத்துக்கு மித்யாத்வத்தைத் தெரிவிக்கிறபடியால் த்வைதம் (ஜகத்து) பாரமார்த்திக ஸத்யமானதென்று ஒப்புக் கொள்ளக்கூடாதென்பது சங்கராசார்யரின் பாஷ்யத்தின் அர்த்தம்.

வா. வ:—† இந்த பாஷ்யத்தின் ஆனந்தகிரி டீகையின் அர்த்தத்தைச் சொல்லும்.

பி. ஸா:—உலகத்தில் திருஷ்டாந்தமான சந்திரனுக்கும் தார்ஷ்டாந்திகமான முகத்திற்கும் ஸத்யத்வம் காணப்படுகிறது. ஆகையால் சுருதியில் த்வைதத்தின் உபமானம் த்வைதத்திற்குச் சொல்லப்பட்டிருப்பதால் திருஷ்டாந்தமான த்வைதத்திற்கும் தார்ஷ்டாந்திகமான த்வைதத்திற்கும்வஸ்துத்வம் = பாரமார்த்திகத்வம் சித்திக்கிறதென்று ஆக்ஷேபித்துக்கொண்டு த்வைத பிரபஞ்சத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லும் 'வாசாரம்பணம்' என்கிற சுருதியின் விரோதம் வருகிறபடியால் ஜகத்துக்கு ஸத்தியத்வத்தை அங்கீகரிக்கக்கூடாது என்று சங்கராசார்யர் ஸமாதானம் சொல்லியிருக்கிறார் என்று ஆனந்தகிரியின் வாக்கியத்தின் அர்த்தம்.

---

* ननु द्वैतेनोपमीयमानत्वात् द्वैतस्य पारमार्थिकत्व मिति न 'वाचारंभणं विकारो नामधेयं' इति श्रुत्यंतरात् 'एकमेवाद्वितीयं' 'आत्मैवेदं सर्वं' इति च ॥ (बृ. शां. २-४-१४.)

† द्वैतेन द्वैतस्योपमीयमानत्वात् दृष्टांतस्य दार्ष्टांतिकस्य च तस्य वस्तुत्वं स्यात् । उपमानोपमेययोश्चंद्रमुखयोर्वस्तुत्वोपलंभादित्यर्थः । द्वैतप्रपंचस्य मिथ्यात्ववादि श्रुतिविरोधात् न तस्य सत्यतेतिपरिहरति । न वाचारंभणं इति. (आनंदगिरी.)

வா. வ:—இந்த பிரஹதாரண்யக வாக்கியத்திற்கு ஸுரேச்வராசாரியாரிட வார்த்திகத்தைப் பார்த்திருக்கிறீரா?

பி. ஸா:—பார்த்திருக்கிறோம்.

வா. வ:—*இந்த வாக்கியத்திற்கு அர்த்தத்தைச் சொல்லும்.

பி. ஸா:—த்வைதம் ஸத்தியமாகாவிடின் த்வைதமிவ = த்வைதத்தைப் போல் என்று த்வைதத்தின் உபமானம் எப்படிப் பொருந்தும்? ஆகையால் 'யத்ரஹி த்வைதமிவ பவதி' என்கிற இச்சுருதி த்வைதத்திற்கு ஸத்யத்வத்தையே சொல்லுகிறது என்று இவ்வாக்கியத்தின் அர்த்தம்.

வா. வ:—இது எந்த கிருந்தமென்பதை நீர் அறிவீரா?

பி. ஸா:—இது நம்மிட சங்கராசார்யரின் ஸூத்ரபாஷ்யம்.

வா. வ:—2-2-29-வது ஸூத்திர பாஷ்யத்திலிருக்கும் இவ்வாக்கியம் எதற்காக பிரவர்த்தமாயிருக்கிறது?

பி. ஸா:—இவ்வாக்கியம் பௌத்த மதத்தைக் கண்டிப்பதற்காக பிரவர்த்தமாயிருக்கிறது.

வா. வ:—பௌத்தர்கள் சொல்லிய எவ்விஷயத்தைக் கண்டிப்பதற்காக பிரவர்த்தமாயிருக்கிறது?

பி. ஸா:—பௌத்தர்கள் ஞானதிரிக்தமாக ஜகத்து இல்லை என்று சொல்லவே, அதைக் கண்டிப்பதற்காகவே பிரவர்த்தமாயிருக்கிறது.

வா. வ:—எப்படிக் கண்டித்திருக்கிறார்?

பி. ஸா:—ஞானதிரிக்தமான ஜகத்து இருக்கிறதென்று பிரமாணங்களினால் காணப்படுகிறபடியால், ஞானதிரிக்தமாக ஜகத்து இல்லை என்று சொல்லக்கூடாதென்று கண்டித்து, மற்றும் லௌகிக வ்யவஹாரத்தினாலும் ஞானதிரிக்தமான ஜகத்து ஸத்தியமென்று சித்திக்கிறபடியினாலும் ஞானதிரிக்தமாக ஜகத்து இல்லை என்று சொல்லக்கூடாது என்று கண்டித்திருக்கிறார்.

---

* ननु द्वैतमिवेत्येतदुपमानं कथं भवेत् । द्वैतं वस्तु न चेदस्ति......॥ (सु. वा.)

வா. வ:—லௌகிக வ்யவஹாரம் யாது? அதினால் ஜகத்து ஸத்திபமென்று எப்படி சித்தமாகிறது என்று சங்கராசார்யர் சொல்லியிருக்கிறார்?

பி. ஸா:—*பாஹ்ய ஜகத்து இல்லை என்று சொல்லும் ஜனங்கள்கூட 'பஹிர்வத் அவபாஸதே' ஜகத்து பாஹ்ய பதார்த்தத்தைப்போல் காணப்படுகிறது என்று பாஹ்ய பதார்த்தத்தின் திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறார்கள். பாஹ்ய பதார்த்தமில்லாவிடின் பாஹ்ய பதார்த்தத்தைப்போல் என்பது எப்படிப் பொருந்தும்? யாராகிலும் விஷ்ணுமித்ரன் மலடிமகனைப்போல் இருக்கிறானென்று சொல்லுவார்களா? 'பஹிர்வத்' என்று பாஹ்ய பதார்த்தத்தை திருஷ்டாந்தம் செய்திருப்பதால் ஜகத்துக்கு ஸத்யத்வமே சித்தமாகிறது. ஆகையால் ஞானதிரிக்தமான ஜகத்து இல்லை என்று சொல்லக்கூடாதென்று சித்தமாகிறது என்று நம்மாசார்யர் சொல்லிக் கண்டித்திருக்கிறார்.

வா. வ:—'பஹிர்வத்' 'பஹிரிவ' இவ்விரண்டு வாக்கியங்களிலிருக்கும் 'வத்' பிரத்தியம் மற்றும் 'இவ' சப்தம் இவ்விரண்டின் அர்த்தமும் ஒன்றேயல்லவா?

பி. ஸா:—ஆம் ஐய்யா! ஒன்றுதான்.

வா. வ:—'வத்' 'இவ' இந்த சப்தங்களினால் சொல்லப்படும் ஸாதிருஸ்யத்தின் பிரதியோகி (எதின் ஸாதிருஸ்யம் சொல்லப்படுகிறதோ அவ்வஸ்து) ஸத்தியமாக இருக்க வேணுமென்பது சங்கராசார்யரின் அபிப்பிராயமல்லவா?

பி. ஸா:—ஆம், ஸத்தியமாக இருக்கவேணுமென்பதே சங்கராசார்யரின் அபிப்பிராயம்.

வா. வ:—அவதானிகளே! சங்கராசார்யரின் ஸூத்ர பாஷ்யம், உபனிஷத்பாஷ்யம், ஆநந்தகிரியாரின் டீகை, ஸுரேஸ்வராசார்யரின் வார்த்திகம் இவைகளால் 'யத்ரஹி த்வைதமிவ பவதி'

---

* 'बहिर्वत् अवभासते' इति वत्कारंकुर्वति इतरथा हि कस्मात् 'बहिर्वत्' इति ब्रूयुः । न हि 'विष्णुमित्रो वन्ध्यापुत्रवदवभासते' इति. कश्चिदाचक्षीत । ......न तु बहिर्वत् अवभासत इति ॥

என்கிற வாக்கியம் எந்த அர்த்தத்தைச் சொல்லுகிறதென்று சித்தமாகிறது?

பி. ஸா:—இந்த சுருதி த்வைத பிரபஞ்சத்திற்கு பாரமார்த்திக ஸத்தியத்வத்தைச் சொல்லுகிறதென்று சித்தமாகிறது.

வா. வ:—ஐயா! 'த்வைதமிவ பவதி' என்கிற இச்சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதில்லை என்பது மாத்திரமேயல்லாமல், ஸத்தியத்வத்தையே சொல்லிக்கொண்டிருக்கையில் த்வைத பிரபஞ்சத்தின் (ஜகத்தின்) மித்யாத்வ விஷயத்தில் இந்த சுருதி பிரமாணமென்று நீர் எப்படி சொல்லுகிறீர்?

பி. ஸா:—'யத்ராஹி த்வைதமிவ பவதி' என்கிற பாகத்திற்கு மேற்சொல்லியவாறு ஜகத்து மித்யை என்று அர்த்தமாகாவிடினும்—"யத்ரவா அஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேனகம் ஜிக்ரேத்" என்கிற பாகத்திற்கு எந்த அவஸ்தையில் எல்லாம் ஆத்மாவேயாகுமோ (ஆத்மாதிரிக்தமாகாமலிருக்குமோ) அப்பொழுது க்ராணேந்த்ரியாதிகளினால் கந்தாதிகளின் ஞானமுண்டாகாது. யார் இவ்வெல்லா பதார்த்தங்களையும் காணுகிறானோ அவனைக் காணுகிறதில்லை. விஞ்ஞானியான தன்னையும் அறிகிறதில்லை. ஆத்மாவைவிட வேறான மற்றொரு பதார்த்தம் இருந்தால்தான் ஒருவன் மற்றொன்றைக் காணுவது முதலியவைகள் பொருந்துகிறது. ஆத்மாதிரிக்தமான வஸ்துவே மோக்ஷதசையில் இல்லாததினால் எந்த ஞானமுமுண்டாகிறதில்லை என்று அர்த்தமாகிறபடியால் ஜகன் மித்யாத்வவிஷயத்தில் இச்சுருதியை ப்ரமாணமாகச் சொல்லுகிறோம்.

வா. வ:—இந்த கிரந்தம் யாது பாரும்.

பி. ஸா:—இது நம்மிட சங்கராசார்யரின் ஸூத்ரபாஷ்யத்தின் வ்யாக்யானமான பிரஹ்ம வித்யாபரணமென்னும் கிரந்தம்.

வா. வ:—*இவ்வாக்கியத்தின் அர்த்தத்தைச் சொல்லும்?

* सर्वप्रमाणैः प्रपंचे उपलभ्यमाने तदभाव एव तत्त्वमिति निरूपयितुमशक्यमिति दूषणस्य स्फुटतया तन्निराकरणाय न सूत्रकृता सूत्राण्यारचितानि. (ब्रह्मविद्याभरण २-२-३०)

பி. ஸா:—ஸகல பிரமாணங்களினால் பிரபஞ்சம் உபலப்த மாய்க்கொண்டிருக்க பிரபஞ்சத்தின் அபாவமே (பிரபஞ்சமில்லை என்பதே) தத்வமென்று நிரூபிப்பது அசக்கியமானது, (சாதிப்பதற்கு வாராதது) என்கிற தூஷணம் ஸ்பஷ்டமாய் இருப்பதால் ஜகத்தின் அபாவத்தைச்சொல்லும் சூன்யவாதி பௌத்தர்களின் மதத்தை நிராகரிப்பதற்காக ஸூத்ரகாரர் ஸூத்திரத்தைச் செய்யவில்லை என்று அர்த்தம்.

வா. வ:—இந்த கிரந்தம் யாது பாரும்.

பி. ஸா:—மேல் சொன்ன பிரம்ம வித்யாபரணத்திற்கு மூல பூதமான சங்கராசார்யரின் ஸூத்ரபாஷ்யம்.

வா. வ:—* இவ்வாக்கியத்தின் அபிப்பிராயத்தைச் சொல் லும்.

பி. ஸா:—ஜகத்து ஸத்தியமல்ல, மித்யை என்கிற சூன்ய வாதிமதம் ஸர்வ பிரமாண விருத்தமென்று ஸ்பஷ்டமாயிருக்கிற படியால் அதைக் கண்டிப்பதற்கு ஸூத்ரகாரர் ஸூத்திரத்தைச் செய்யவில்லை. (அத்யந்தஹேயமான மதம் நிராகரிப்பதற்குக் கூட யோக்கியமல்ல) என்று இவ்வாக்கியத்தின் அபிப்பிராயம்.

வா. வ:—இந்த சங்கராசார்யரின் பாஷ்யம் அதின் பிரம்ம வித்யாபரணமென்கிற டீகை இவ்விரண்டின் வாக்கியங்களினா லும் என்ன வென்று சித்தமாகிறது?

பி. ஸா:—ஜகத்து பிரமாணங்களினால் ஸத்திய மென்று தெரிந்துக்கொண்டிருக்க, அந்த ஜகத்து மித்யை, ஸத்தியமல்ல என்று சொல்லும் பௌத்தர்களின் மதம் அத்யந்தமயுக்தமான தென்று சித்தமாகிறது.

வா. வ.:—2-2-29-வது பிரம்ம ஸூத்திரத்தில் ஸ்வப்னத் தைப்போல் ஜகத்து மித்யை என்று சொல்லும் பௌத்த மதம் எவ்விதமாக கண்டிக்கப்பட்டிருக்கிறதென்று சங்கராசார் யர் சொல்லியிருக்கிறார்?

---

* शून्यवादिपक्षस्तु सर्वप्रमाणविप्रतिषिद्ध इति तन्निराकरणाय नादरः क्रियते. (ब्र. शां. भा. २-२-३१.)

பி. ஸா:—*ஸ்வப்ன பதார்த்தங்களுக்கு பாதம் (இல்லை என்கிற ஞானம்) உண்டாகிறபடியால் அந்த ஸ்வப்ன பதார்த்தங்கள் மித்யை என்று சொல்லலாம். ஜாக்ரத்காலத்தில் காணப்படும் பதார்த்தங்களுக்கு எக்காலத்திலும் பாதமுண்டாகாததினால் ஜகத்து ஸத்யமென்றே ஒப்புக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக் கண்டித்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்.

வா. வ:—உங்களிட அத்வைதமதத்தில் ஜகத் ஸத்தியமென்று சொல்லப்பட்டிருக்கிறதா, அல்லது மித்யை என்று சொல்லப்பட்டிருக்கிறதா?

பி. ஸா:—ஜகத்து மித்யை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வா. வ:—ஆனால் நீங்கள் ஜகத்து மித்யை என்று சொல்லும் பௌத்தர்களின்பேரில் சொல்லிய தோஷம் ஜகத்துமித்யை என்று சொல்லும் உங்கள் பேரில் வருவதில்லையோ?

பி. ஸா:—(பதிலில்லை).

வா. வ:—'யத்ர ஹி த்வைதமிவ பவதி.......... யத்ரவாஸ்ய ஸர்வமாத்மைவாபூத்' இவ்வாக்கியத்திற்கு ஆத்மாதிரிக்தமான வஸ்துவே இல்லை என்று சொல்லுவது அபிப்பிராயமா யிருக்குமாயின் 'ஆத்மாதிரிக்தம் ஜகத் நாஸ்தி' (ஆத்மனைவிட வேறான ஜகத்து இல்லை) என்று மாத்திரம் சொன்னால் போதுமாயிருக்கும். யார் எதை எதினால் காணுவான் என்கிற இது முதலான அர்த்தத்தைப் போதிக்கும் அநேக வாக்கியங்கள் வ்யர்த்தமாகிறதல்லவா? தவிற ஜிக்ரேத், பஶ்யேத் முதலிய விதிலிஙந்த பிரயோகங்கள் வியர்த்த மாகிறதல்லவா?

பி. ஸா:—(பதிலில்லை).

---

## வாதி விசாரணை.

---

பி. வ:—ஆசார்யரே! இச்சுருதிக்கு நீர் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்?

---

* बाध्यते हि स्वप्नोपलब्धं वस्तुप्रतिबुद्धस्य..... नैवं जागरितोपलब्धं वस्तुस्तंबादिकं कस्यांचिदप्यवस्थायां बाध्यते. (ब्र. शां. भा. २-२-२९.)

வாதி விஷ்ணுதாஸாசார்யர்:—அநுமான பிரமாணத்தில் தர்க்கமென்று ஓர் பிரமாணமுண்டு. அதற்கு உதாரணம்:— (1) நீ விஷத்தைக்குடித்த பக்ஷத்தில் உனக்கு மாரணரூபமான அனிஷ்டம் நேரிடும். உனக்கு அவ்விதமான மரணம் சம்பவிக்கக்கூடாது. ஆகையால் நீ விஷத்தைக் குடிக்கக்கூடாது. (2.) நீ அதிகமாகப் புசிப்பாயாகில் அஜீர்ண முண்டாகும். அஜீர்ணமாகக்கூடாது. ஆகையால் அதிகமாகப் புசிக்கக்கூடாது. என்று இவ்விதமாக—யாராவது யேதாவது கெட்டவேலையைச் செய்யத்துடங்குவானாகில், அவனைக்குறித்து மற்றொருவன் அதினால் உனக்கு கெடுதலுண்டாகும், அத்தகைய கெடுதலுண்டாகக் கூடாது. ஆகையால் நீ அந்தவேலையைச் செய்யக்கூடாது என்று அறிவிப்பதற்காகச் சொல்லுவார்களோ அதற்கு தர்க்கமென்று பெயர்.

பிரகிரதம்:—'யத்ரவா' என்கிற சுருதிமேற்சொன்னபடிக்கு தர்க்கரூப பிரமாணத்தைக்காட்டி ஜகத்து ஸத்தியமானது, மித்யை அல்ல என்று அறிவிக்கிறது. எப்படியெனின்— யத்ர =. எந்த மோக்ஷாவஸ்தையில், அஸ்ய = இந்த ஞானிக்கு, ஸர்வம் = எல்லா பதார்த்தங்களும், ஆத்மைவாபூத் = ஆத்மனைவிட வேறாக இல்லாததாயின், தத் = தத்ர = அக்காலத்தில், கேன = எந்த கிறாணேந்திரியத்தினால், கம் = எந்த கந்தத்தை, ஜிக்ரேத் = ஆக்ராணிப்பான்? எந்த சக்ஷுரிந்திரியத்தினால் எந்த ரூபத்தைக் காணுவான்? எந்த சுரோத்ரேந்திரியத்தினால் எந்த சப்தத்தைக் கேழ்ப்பான்? எந்த வாகிந்திரியத்தினால் எந்த சப்தத்தை உச்சரிப்பான்? எந்த மனதினால் விஷயங்களை விசாரிப்பான்? எதினால் எதின் ஞானத்தை அடைவான்? எந்த பரமாத்மனால் ஜீவன் இவ்வெல்லாவற்றையும் அறிகிறானோ அப்பரமாத்மனை எதினால் அறிவான்? விஞ்ஞாதாரம் = அறியும் ஸ்வயம் தான் தன்னிட ஸ்வரூபத்தை எதினால் தெரிந்துக்கொள்ளுவான்? என்று இவ்விதமான அனிஷ்டங்கள் நேரிடுமென்று சொல்லி, கந்தரூபாதி வஸ்துக்களின் ஞானமுண்டாவது, பரமாத்மஞானம், தன்னிட ஞானம், இதர லோகங்களின் ஞானம் இவைகள் உண்டாவது இவைகளெல்லாம் மோக்ஷாவஸ்தையில் மிகவும் ஆவஶ்யகமாக இருப்பதால், ஆத்மாதிரிக்தமாக எந்த வஸ்துவும் இல்லை என்று

சொல்லுவது யுக்தமல்ல. இவ்விதமாக இச்சுருதி மோக்ஷாவஸ்தையில் ஞானஞேய ஞாத்ரு பதார்த்தங்களைச் சொல்லிக்கொண்டே ஜீவபரமாத்மர்களின் பேதத்தையும் ஞாத்ருஞேயாதிரூப ஜகத்துக்கு ஸத்யத்வத்தையும் சொல்லுகிறது.

பி. வ:—புசித்த பக்ஷத்தில் வயறு நிரையும் என்று சொன்ன பக்ஷத்தில், வயறு நிறைவது (திருப்தியாகிறது) நமக்கு இஷ்டமே யாகையால் அது எப்படி நமக்கு பாதகமாகாதோ அப்படியே மோக்ஷத்தில் எல்லாம் ஆத்மஸ்வரூபமே, ஆத்மாதிரிக்தமாக இல்லை என்று சொல்லின்—கந்தாதிகளின் ஞானம், மற்றும் எந்த பரமாத்மனால் ஜீவன் எல்லாவற்றையும் அறிகிறனோ "அந்த பரமாத்மனிட ஞானம், தன்னிட ஞானம் இவைகள் உண்டாகாது என்று நீங்கள் சொல்லுவது நமக்கு அனிஷ்டமல்ல, இஷ்டமே ஆகையால் மோக்ஷதசையில் கந்தாதிஞானம் வேண்டாம், ஈப்வர ஞானமும் வேண்டாம், தன்னிட ஞானமும் வேண்டாம், இதராளிட ஞானமும் வேண்டாம். ஆகையால் அந்த ஞானத்திற்கு காரணமான ஆத்மாதிரிக்தபதார்த்தங்கள் உண்டென்று சொல்ல வேண்டிய ஆவஸ்யகதையும் இல்லை என்று சொல்லலாமல்லவா? ஆகையால் உங்களிட தர்க்கம் சரியல்ல.

வா. வி:—அந்த இடத்திற்கு போன பக்ஷத்தில் அனிஷ்டமான மரணமடைவாய். ஆகையால் நீ அவ்விடத்திற்கு போகக்கூடாதென்று ராஜசேவகன் ஒரு மனிதனைப் பார்த்துச் சொல்லவே அதற்கு அம்மனிதன் மரணம் எனக்கு இஷ்டமாகையால் நான் அவ்விடத்திற்குப்போகிறவனே என்று சொல்வானேயாகில் அதற்கு அம்மனிதனைக் குறித்து ராஜசேவகன் மறணம் உனக்கிஷ்டமாயினும் சாஸ்திரப்படிக்கு (சட்டப்படிக்கு) விருத்தமாகிறபடியால் அது அனிஷ்டம் தான். ஆகையால் அத்தகைய அனிஷ்டமான மரணம் உனக்கு நேரிடக்கூடா .தாகையால் நீ அவ்விடத்திற்கு போகக்கூடாதென்று சொல்லி எப்படி தடுப்பானோ அப்படியே—மோக்ஷாவஸ்தையில் கந்தாதிஞானம், ஈப்வர ஞானம், தன்னிடஞானம், இதர ஜனங்களின் ஞானம் இவைகள் உண்டென்று பிரமாணங்களினால் சித்தமாய்க் கொண்டிருப்பதால் அந்த ஞானாதி பதார்த்தங்கள் அவஸ்யம் அங்கீகரிக்க

வேணும். கந்தாதிஞானம் வேண்டா மென்பது இஷ்டமல்ல அனிஷ்டமே (சாஸ்திர விருத்தமே) பிரமாண சித்தமான கந்தாதி ஞானம் உண்டாவதற்காக மோக்ஷாவஸ்தையில் ஆத்மாதிரிக்த மான பதார்த்தத்தை ஒப்புக்கொண்டே தீரவேணும். ஆத்மா திரிக்தமான பதார்த்தமில்லை என்பது யுக்தமல்ல என்று இந்த 'கேன கம் பஶ்யேத்......விஞ்ஞாதாரமரே கேன விஜானீயாத்' இத்யாதி சுருதி சொல்லுகிறது. ஆகையால் மோக்ஷாவஸ்தையில் கந்தாதிஞானம் ஆகாமலிருப்பது உமக்கிஷ்டமாயினும் சாஸ்திர விருத்தமாகையால் அனிஷ்டமே யாகும். ஆகையால் மோக்ஷா வஸ்தையில் ஆத்மா திரிக்தமானபதார்த்தங்களை ஒப்புக்கொண்டே தீரவேணும்.

பி. வ:—ஆசார்யரே! கந்தாதிஞானம், பரமாத்மனிடஞானம் தன்னிடஞானம், இதரர்களின் ஞானம், இவைகள் மோக்ஷாவஸ் தையில் உண்டென்கிற விஷயத்தில் பிரமாணம் யாது?

வா. வி:—அநேக பிரமாணங்களிருக்கின்றன.

பி. வ:—அவைகளைச் சொல்லும்?

வா. வி:—(1) 'ஸதத்ர பர்யேதி ஜக்ஷன் க்ரீடன் ரமமாண: ஸ்திரீபிர்வா யானைர்வா' (சாங். 8-12-3); (2) 'ஸ யதி பித்ரு லோக காமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பிதர: ஸமுத்திஷ்டந்தி' (சாங் 8-2-1); (3) 'ஸோஸ்நுதே ஸர்வான் காமான்ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா' (தை 2-2) முதலியவை.

பி. வ:—இச்சுருதிகளின் அபிப்பிராயத்தைச் சொல்லும்?

வா. வி:—(1) ஸ: = முக்தன், தத்ர = மோக்ஷாவஸ்தையில் ரதாதி வாகனங்களில் ஸஞ்சரிக்கிறான், புசிக்கிறான், விளையாடு கிறான், ஸ்த்ரீயர்களுடன் விஹாரம் செய்கிறான். (2) முக்தன் எப்போது பித்ருக்களைப் பார்க்க அபேக்ஷிக்கிறானோ அப்போது பித்ருக்கள் எதிரில் வந்து நிற்பார்கள். (3) முக்தர்கள் தம்மால் அபேக்ஷிக்கப்படும் ஸகல பலன்களையும் அடைகிறார்கள் என்று அபிப்பிராயம்.

பி. வ:—இச்சுருதியில் சொல்லப்பட்ட பக்ஷணக்ரீடனுதி கார்யங்கள் மோக்ஷ தசையிலிருப்பதென்று நீர் எப்படி அறிவீர்?

வா. வி:—பரமாத்மனை அடைந்து தம்மிட ஸ்வரூபாபி வ்யக்தி ஆனபிறகு (முக்தரானபிறகு) அவர்களால் செய்யப்படும் க்ரீடாதிகளை இச்சுருதி சொல்லுகிறதினுல் இந்த க்ரீடாதிகள் மோக்ஷாவஸ்தையிலிருப்பவைகளே என்று சித்தமாகிறது. சங்கராசார்யர் முதலான அத்வைதிகளும் 'ஜக்ஷன் க்ரீடன்' இது முதலான சுருதிகள் மோக்ஷாவஸ்தையை வர்ணிக்கிறதென்று தம்மிட கிரந்தங்களில் சொல்லியிருக்கிருர்கள்.

பி. வ:—ஆசார்யரே! மோக்ஷாவஸ்தையை இச்சுருதி சொல்லுகிறதென்று சங்கராசார்யர் எவ்வாக்கியத்தில் சொல்லியிருக்கிருரோ அவ்வாக்கியத்தைச்சொல்லும்?

வா. வி:—'ஜக்ஷன் க்ரீடன் ரமமாண:' 'ஸ யதி பித்ரு லோக காமோ பவதி,' 'யஸ் ஸர்வஞ்ஞஸ்ஸர்வவித், ஸர்வான்காமான் ஸமஸ்நுதே' இத்யாதி சுருதிப்யோ மோக்ஷே ஸுகம் ஸம் வேத்யமிதி. (பிரஹ. சாங். பா. 3-9-29).

பி. வ:—இவ்வாக்கியத்தினுல் என்ன சித்தமாகிறது?

வா. வி:—முக்தஜீவர்கள் மோக்ஷாவஸ்தையில் பக்ஷணக்ரீடனுதிகளைச் செய்கிருர்கள், வேண்டிய பதார்த்தங்களை அடைகிருர்கள் என்கிற இது முதலான வாக்கியங்களினுல் மோக்ஷாவஸ்தையில் முக்தர்களுக்கு சுகாதி ஞானங்களிருக்கின்றன என்கிற விஷயத்தில் இந்த சுருதி பிரமாணமாகிறதென்று சித்தமாகிறது.

கோர்ட்:—ஆசார்யரே! 'கஸ்சித் காந்தா' இவ்வளவு மாத்ரமே வாக்கியத்தை எடுத்துக்கொண்டு —'கஸ்சித்' என்கிற புல்லிங்க பதத்தை 'காந்தா' என்கிற ஸ்த்ரீலிங்க பதத்திற்கு எப்படி விசேஷணமாகச்சொன்னுர் என்பதுபோல், சங்கராசார்யரின் சித்தாந்த வாக்கியத்தைப் பார்க்காமலே கேவலம் அவரிட பூர்வபக்ஷ வாக்கியத்தை எடுத்துக்கொண்டு சங்கராசார்யர் தம்மிட கிரந்தத்தில் சொல்லியிருக்கிருர் என்று சொல்லுவது உம்மிட வைஷ்ணவர்களின் ஸ்வபாவமென்று தோன்றுகிறது.

வா. வி:—பிரபுக்களே! நாங்கள் பூர்வபக்ஷ க்ரந்தம், ஸித்தாந்தக்கிரந்தம் இவைகளைப் பாராமல் சொல்லவில்லை. நாங்கள் சொல்லியவாக்யம் பூர்வபக்ஷ வாக்கியமே ஆயினும், ஸித்தாந்தத்திலும் கூட * இந்த சுருதி மோக்ஷாவஸ்தையிலிருக்கும் க்ரீடாதிகளைச் சொல்லுகிறதென்று தம்மிட பிரஹதாரண்யக பாஷ்யம், ஸூத்ர பாஷ்யம், இவைகளில் சொல்லி அப்படிச் சொல்லுவது மோக்ஷத்தில் ஏதுவுமில்லை என்கிற தம்மிட மதத்திற்கு விருத்தமாகிறபடியால், தேவதைகள், யோகிகள் முதலானவர்கள் செய்யும் க்ரீடாதிகள் முக்தர்களுக்கு உண்டென்று மோக்ஷத்தைத் துதிப்பதற்காக இச்சுருதி சொல்லுகிறதென்றும்; மற்றும் † பக்ஷிக்கிறான், விளையாடுகிறான் என்று இது முதலியவைகளைச் சொல்லும் சுருதிக்கு முக்தர்களுக்கு துக்கமில்லை என்கிற விஷயத்தில் தாத்பர்யமென்றும் தம்மிட கைச்சரக்கைச் சேர்த்துக் கொண்டு தம்மிடமதம் சரியாகப் பொருந்துவதுபோல் சொல்லியிருக்கிறார்.

சங்கராசார்யர் தம்மிட மதத்தைச் சாதிப்பதற்காக தம்மிட சொந்த வாக்கியத்தினால் எதையாகிலும் சொல்லிக்கொள்ளட்டும். அவர் சித்தாந்தம் செய்யும் காலத்தில் இச்சுருதி ஸம்ஸாராவஸ்தையைச் சொல்லுகிறதென்று சொல்லாமல் மோக்ஷாவஸ்தையை பிரதிபாதிக்கிறதென்று சொல்லியிருப்பதினால் ஜக்ஷன் முதலிய சுருதிகள் மோக்ஷாவஸ்தையில் க்ரீடாதிகளைச் சொல்லுகிறதென்பது நிர்விவாதமானதென்று சொல்லுகிறோம்.

---

* जक्षन् क्रीडन् इत्यादि श्रुतिविरोधोऽसंवेद्यत्व इति चेत् न। सर्वात्मैकत्वे यथाप्राप्तानुवादित्वात् मुक्तस्य सर्वात्मभावेसति यत्रक्वचिद्योगिषु देवेषु जक्षणादि प्राप्तं तद्यथाप्राप्तमेवानूद्यते तत्तस्यैव सर्वात्म भावादिति सर्वात्मभावमोक्षस्तुतये ॥ (बृ. शां. भा. ३-९-२८.)

† अत एव जक्षणादि संकीर्तनमपि दुःखाभावमात्राभिप्रायम् स्तुत्यर्थं आत्मरतिरित्यादिवत्, न हि मुख्यान्येव रतिक्रीडामिथुनानि आत्मनि निमित्तानि शक्यंते वर्णयितुं द्वितीयविषयत्वात्तेषाम् ॥

(ब्र. सू. शां. भा. ४-४-६)

பி. வ:—சங்கராசார்யர் சொல்லியவாறு இச்சுருதி மோக்ஷத்தைத் துதிப்பதற்காக யோகிகளின் க்ரீடாதிகளின் அனுவாதத்தையே செய்கிறது, மோக்ஷத்தில் க்ரீடாதிகளில்லை என்றே சொல்லுகிறது என்று ஏன் சொல்லக்கூடாது?

வா. வி:—மோக்ஷத்தில் க்ரீடாதிகள் உண்டென்று ஸ்பஷ்டமாகச் சொல்லும் சுருதி இருக்க அந்த ஸ்பஷ்டமான அர்த்தத்தை விட்டு தேவதைகள் யோகிகள் செய்யும் க்ரீடாதிகளை அந்தச் சுருதி அனுவாதம் செய்கிறதென்று சொல்லுவதற்கு ஒன்றும் ஆதாரமில்லை. ஆகையால் மோக்ஷத்திலிருக்கும் க்ரீடா பக்ஷண பித்ருதர்சனுதிகள் வாஸ்தவமானவைகளே ஆகையால் மோக்ஷத்தில் கந்தாதிஞானமில்லை என்பது பிரமாண விருத்தமாகிறபடியால், அனிஷ்டமாகிறது. ஆகையால் மோக்ஷத்தில் கந்தாதி ஞானம் ஆவஸ்யகம், அதற்காக அவைகளின் காரணங்களை ஆவஸ்யகமாக ஒப்புக்கொண்டே தீரவேணும். ஆகையால் மோக்ஷத்தில் 'ஸர்வம் ஆத்மைவாபூத்' எல்லாம் ஆத்மஸ்வரூபமாகவே இருக்கிறது ஆத்மாதிரிக்தமாக இல்லை என்று சொல்லுவது அத்யந்த அயுக்தமாகிறது.

பி. வ:—ஜிக்ரேத், பஸ்யேத் முதலிய விதிலிங்த பிரயோகங்களுக்கு உங்கள் மதத்தில் எப்படி ஸார்த்தக்யமுண்டாகிறது?

வா. வி:—ஜிக்ரேத், பஸ்யேத் முதலிய விதிலிங்த பதங்கள், ஆத்மாதிரிக்தமான பதார்த்தங்களில்லாவிடின் எதினுல் ஆக்ராணிப்பான்? எதினுல் காணுவான்? என்றுஅனிஷ்டமான (பிரமாண விருத்தமான) கந்தாதிகளின் ஞானுபாவத்தை ஒப்புக்கொள்ள வேண்டிவரும் என்று அனிஷ்டத்தை அறிவித்து அவ்விதமான கந்தாதி ஞானுபாவத்தை ஒப்புக்கொள்ளும் பிரஸங்கம் ஸம்பவிக்கக் கூடாது. ஆகையால் ஆத்மாவைவிட வேறுன வஸ்துவை அவஸ்யமாக ஒப்புக்கொள்ள வேணும் என்கிற தற்கரூபமான அனுமான பிரமாணத்தை தெரிவிக்கிறதென்று நாங்கள் சார்த்தக்யத்தை சொல்லுகிறேம்.

பி. வ:—'யத்ரஹி த்வைதமிவ பவதி' என்கிற இவ்வாக்கியம் எதற்காக பிரவ்ருத்தமாயிருக்கிறது?

வா. வி:—அறிந்துக் கொள்ளும் புருஷனைவிட வேறான பதார்த்தங்கள் இருந்தால்தான் ஒரு பதார்த்தத்தினால் (ஞானகரணத்தினால்) வேறான மற்றொரு பதார்த்தத்தை (ஞேயத்தை) அறிந்துக் கொள்ளுவது முதலியவைகள் பொருந்துகின்றன. ஆகையால் கந்தாதி ஞானமுண்டாவதற்காக ஆத்மாவைவிட வேறான இந்த்ரியாதி காணங்கள் மோக்ஷாவஸ்தையில் வேண்டியதே என்று அறிவிப்பதற்காக இவ்வாக்யம் ப்ரவ்ருத்தமாயிருக்கிறது.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

பி. வ:—(To the Court) மை லார்ட்!

'யத்ரஹித்வைதமிவ பவதி' என்கிற ப்ருஹதாரண்யக சுருதி யத்ர=எந்த அவித்யாவஸ்தையில், த்வைதமிவ=மித்யையான த்வைதம், பவதி=இருக்கிறதோ அக்காலத்தில் வேறொருவன் வேறொருவனைப் பார்க்கிறான், வேரான ஒருவன் வேறான சப்தத்தைக் கேழ்க்கிறான் என்பதே முதலியவைகள் பொருந்தும். 'யத்ரது அஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேனகம்பஶ்யேத்' எந்த ஞானாவஸ்தையில், அஸ்ய=இந்த ஞானிக்கு, ஸர்வம்=எல்லாம், ஆத்மைவாபூத்=ஆத்மாவே ஆய்விடுமோ (ஆத்மாதிரிக்தமாய் எதுவுமில்லாததாகுமோ) தத்=அந்த ஞானாவஸ்தையில் யார் யாரை அறிவான்? யார் சப்தத்தைக் கேழ்ப்பான், யார் கந்தத்தின் ஞானத்தை அடைவான், 'யேனேதம் ஸர்வம் விஜானாதி தம்கேன விஜானீயாத் விஜ்ஞாதாரமரே கேன விஜானீயாத்' யேன =ய:=எந்த ஜீவன் எல்லா ஜகத்தையும் அறிகிறானோ அந்த அறிந்துக்கொள்ளும் தன்னை யார் அறிவான்? (யாரும் யாரையும் அறிவதில்லை) என்று ஞானாவஸ்தையில் ஆத்மாதிரிக்தமான எல்லா ஜகத்தின் அபாவத்தை (இல்லாத்தனத்தைச்) சொல்லுகிறது. ஆகையால் இச்சுருதியினால் ஜகத்துக்கு மித்யாத்வம் (முக்காலத்திலுமில்லாத்தன்மை) சித்திக்கிறது.

## வாதிவக்கீல் ஆர்க்யுமெண்ட்.

வா. வ:—(To the Court) மை லார்ட்! (1) 'யத்ரஹி த்வைதமிவ பவதி, என்கிற இவ்வாக்கியம் 'இவ' என்கிற சப்தத்துடன் கூடியிருப்பதால் த்வைதப் பிரபஞ்சத்திற்கு பாரமார்த்திக ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதென்று சங்கராசார்யர், ஆனந்தகிரி, ஸுரேஶ்வராசார்யர் இவர்களால் சொல்லப்பட்டிருப்பதால் இச்சுருதி ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதென்பது அத்வைதாசார்யரின் வார்த்தைகளுக்கே விருத்தமாகிறது.

(2) இச்சுருதி ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லிக்கொண்டிருப்பினும் 'வாசாரம்பணம்' 'ஏகமேவாத்விதீயம்' 'ஆத்மைவேதம் ஸர்வம்' என்கிற இவ்வாக்கியங்கள் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லுகின்றனவாகையால் ஜகத்து மித்யை என்று சொல்ல வேணுமென்று சங்கராசார்யர் தம்மிட கிரந்தத்தில் சொல்லியிருப்பது யுக்தமல்ல. 'வாசாரம்பணம்' 'ஆத்மைவேதம் ஸர்வம்' என்கிற இச் சுருதிகளில் மித்யாத்வத்தைச் சொல்லும் பதமே இல்லை என்று முதலே சொல்லப்பட்டிருக்கிறது. 'ஏகமேவா த்விதியம்' என்கிற இவ்வாத்கியத்தில் ஜகத்துக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பதமில்லை. மற்றும் சங்கராசார்யர் இச்சுருதிக்கு ஜகத்து மித்யை என்று அர்த்தமென்று அவரிட இவ்வுபனிஷத் வ்யாக்யானத்தில் சொல்லவில்லை. ஏகமேவ = பிரளய காலத்தில் தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களெதுவும் இருக்கவில்லை. அத்விதீயம் = பரமாத்மனுக்கு ஸஹகாரியான த்விதீயவஸ்து எதுவும் இருக்கவில்லை என்று இச்சுருதிக்கு சங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறார். ஆகையால் இவ்வாக்கியத்தினால் ஜகத்துக்கு மித்யாத்வம் சித்திக்கமாட்டாது 'யத்ரஹி' என்கிற வாக்யத்திற்கு ஜகத்து இல்லை என்று சொல்லும் அபிப்பிராயமிருந்தால் 'ஜகத்து நாஸ்தி' ஜகத்து இல்லை என்று மாத்திரம் சொன்னால் போதுமாயிருக்கும். அங்கு அப்படிச் சொல்லவில்லை. ஆகையால் ஜகத்து இல்லை என்று இச்சுருதி சொல்லுகிறதில்லை.

(3) ஜகத்து சூன்யத்தைவிட வேருக இல்லை என்று சொல்லும் பௌத்தரைக் குறித்து ஜகத்து பிரமாணங்களினுல் அறியப் பட்டுக்கொண்டிருக்க ஜகத்து இல்லை என்று நிரூபிப்பது அயுக்த மான தென்கிற தூஷணம் ஸ்பஷ்டமா யிருப்பதால் ஸூத்ரக் காரர் ஜகத்து இல்லை என்று சொல்லும் பௌத்த மதத்தைக் கண் டிக்கவில்லை என்று ஸ்வத: தாங்களே சொல்லி, மற்றும் ஜகத்து இல்லை என்று தாமே சொல்லுவது ஸ்வ வ்யாஹதமாகிறது.

(4) இரண்டாவது வஸ்து இருக்குமாயின் ஒருமனிதன் தன்னை விட வேருன இந்திரியங்களால் வேறு வஸ்துக்களைக் காணுவா னென்பது பொருந்துகிறது. அத்வைத மதத்தின் படிக்கு ஞாதா (ஆத்மா) திரிக்தமான வஸ்துவே இல்லை என்று சொல்லின் எந்த இந்திரியத்தினுல் எந்த ரூபாதிகளைக் காணுவான்? எந்த பரமாத் மனுல் ஜீவன் எல்லாவற்றையும் அறிகிருனே அந்த பரமாத்மனை எப்படி அறிவான்? ஸ்வத: தன்னை எப்படி அறிவான்? ஆகையால் மோக்ஷாவஸ்தையில் தன்னிட ஞானம், பரமாத்மனின் ஞானம்; கந்தாதி விஷயங்களின் ஞானம் இவைகள் அவஸ்யமாக இருக் கிறதென்று 'ஜக்ஷன் க்ரீடன் ரமமாண:' இத்யாதி சுருதிகளில் சொல்லியிருக்கிறபடியால் மோக்ஷதசையில் எல்லாம் ஆத்மஸ்வ ரூபமென்று (ஆத்மாதிரிக்தமாக இல்லை என்று) சொல்லக்கூடாது என்று இவ்விதமாக இச்சுருதி மோக்ஷதசையில் ஞாத்ருஞேயாதி பிரபஞ்சம் உண்டென்று சொல்லுகிறதென்கிற விஷயத்தை கோர்ட்டார் நோட் செய்யவேணுமாய்க் கோருகிருேம்.

## நேதி நேதி என்கிற சுருதி விசாரணை.

பி. வ:—சாஸ்திரிகளே! ஜகத்து மித்யை என்கிற விஷயத் தில் இன்னும் ஏதாவது ஆதாரமிருந்தால் சொல்லும்.

பி. ஸா:—'அதாத ஆதேசோ நேதிநேதி நஹ்யேதஸ்மாதிதி நேத்யந்யத் பரமஸ்தி' (பிரஹ. 2-3-6) இவ்வாக்கியம் இருக்கிறது.

பி. வ:—இதற்கு அர்த்தம் சொல்லும்.

பி. ஸா:—அத = மூர்த்தா மூர்த்த பதார்த்தங்களின் நிரூ பணமான்பிறகு, அத: = மூர்த்தா மூர்த்த பதார்த்தங்கள் நிரூபிக்

கப்பட்டிருப்பதால், நேதிநேதி ஆதேச: = ஸத்ய பதார்த்தங்களில் ஸத்யமாயிருக்கும் பரமாத்மனின் விஷயமாய், 'நேதிநேதி' என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது, 'இதி' பூர்வ பிரஸக்தமாயிருக்கும் மூர்த்த = பிருதிவீஜலதேஜோ நாமக பதார்த்த ரூபன், ந = அல்ல; இதி = பூர்வபிரஸக்தமான, அமூர்த்த = வாயுஆகாசநாமகபதார்த்த ரூபன், ந = அல்ல; அல்லது இதி = மூர்த்தா மூர்த்தாத்மக பஞ்ச பூதரூபன், ந = அல்ல; இதி = வாஸனுரூபன், ந = அல்ல என்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

பரமாத்மனிட விஷயத்தில் 'இதி ந இதிந' என்று நிஷேதரூப மாகவே ஏன் உபதேசிக்க வேணும்? வேறுவிதமான உபதே சத்தை ஏன் செய்யக்கூடாது என்று ஆக்ஷேபணை வரவே, அதை நிராகரிப்பதற்காக 'நஹ்யேதஸ்மாதிதி நேத்யன்யத் பரமஸ்தி' என்கிற வாக்கியம் ப்ரவ்ருத்தமா யிருக்கிறது. அவ்வாக்கியத் திற்கு 'பாடகன்' என்கிற சப்தத்தை ஒரு மனிதனிடத்தில் உப யோகிக்க வேணுமாயின் அவனிடத்தில் பாடம் சொல்லுகிறது என்கிற கிரியை இருக்கவேணும். 'ஶ்யாம' என்கிற சப்தத்தை ஒரு வனிடத்தில் உபயோகிக்க வேணுமாயின் அவனிடத்தில் ஶ்யாம வர்ணம் இருக்கவேண்டும். 'தண்டீ' என்கிற சப்தத்தை ஒருவ னிடத்தில் உபயோகிக்க வேணுமாயின் தண்டமென்கிற த்ரவ்யம் அவனிடத்திலிருக்க வேணும். இவ்விதமாக யேதாகிலும் ஒரு சப்தத்தை ஒரு மனிதனிடத்தில் உபயோகிக்க வேணுமாயின் அவனிடத்தில் ஏதாவது ஓர் தர்மம் இருக்கவேண்டியது ஆவஶ்ய கமாயிருக்கிறது. பிரம்மத்தை ஏதாவது சப்தத்தினுல் சொல்ல வேண்டியிருப்பின் அதினிடத்தில் ஏதாவது தர்மம் இருக்க வேண் டியது ஆவஶ்யகமாகிறது. பிரஹ்மத்தினிடத்தில் யாதொரு *தர்ம மும் இல்லாததினுல், எந்த சப்தத்தினுலும் நிரூபிப்பதற்கு சக்ய மல்ல. ஆகையால் 'இதிநேதி' என்று நிஷேதிக்கும் சப்தத்தைத்

---

* यस्मिन् न कश्चिद्विशेषोऽस्ति नामवा रूपं वा कर्मवा भेदो वा जातिर्वा गुणोवा तद्वारेण हि शब्दप्रवृत्ति र्भवति । न चैषां कश्चिद्विशेषो ब्रह्मण्यस्ति अतो न निर्देष्टुं शक्यते इदं तदिति (बृ. शां. भा. २-३-६.)

தவிர பரமாத்மனை போதிக்கும் வேறு சப்தமே இல்லை என்று அர்த்தம்.

பி. வ:—இதினால் என்னவென்று சித்தமாகிறது?

பி. ஸா:—பிரஹ்மமொன்றே ஸத்தியமானது, பிரஹ்மத்தை விட வேறான மூர்த்தாமூர்த்தாத்மக எல்லா ஜகத்தும் மித்யை என்று சித்தமாகிறது.

## க்ராஸ் எக்ஸாமினேஷன்.

வா. வ:—அவதானிகளே! 'நேதிநேதி' என்கிற வாக்கியத்திற்கு முன்னிருக்கும் 'அத நாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யமிதி பிராணாவை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம்' (பிருஹ. 2-3-6). இவ் வாக்கியத்தின் அர்த்தம் என்ன?

பி. ஸா:—ஸத்தியமான பிராணாதிகளுக்கு ஸத்யத்வத்தைக் கொடுக்கும் பரமாத்மாவுக்கு 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்று பெயர் (உபதேசம்) உண்டு என்று அர்த்தம்.

வா. வ:—அவதானிகளே! 'இதி ந இதி ந' என்கிற பெயரை விட வேறான 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்கிற பெயர் (உபதேசம்) இருக்க 'நஹ்யே தஸ்மாதிதி நேத்யன்யத் பரமஸ்தி' என்கிற இந்த பூர்வவாக்கியம் 'இதிந இதிந' என்கிற ஆதேசத்தை (பெயரை) விட வேரான ஆதேசம் (பெயர்) பிரஹ்மத்திற்கு இல்லை என்று சொல்லுகிறதென்பது எப்படிப் பொருந்தும்?

பி. ஸா:—மித்யையான (பொய்யான) ஸகுண பிரஹ்மத்திற்கு 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்று பெயர். ஸத்தியமான பிரஹ்மத்திற்கு 'இதிந இதிந' என்று பெயர். ஆகையால் 'இதிந இதிந' என்கிற உபதேசத்தை (பெயரை) விட வேறான உபதேசம் ஸத்தியமான பிரஹ்மத்திற்கு இல்லை என்று நாங்கள் சொல்லுவதற்கு பாதகமில்லை.

வா. வ:—'அதாத ஆதேசோ நேதி நேதி' இவ்வாக்கியத்தினால் ஸத்தியமான பிரஹ்மம் சொல்லப்படுகிறது; 'அதநாமதேயம்' என்கிற வாக்கியத்தினால் ஸகுணமான மித்யா பிரஹ்மம் சொல்

லப்படுகிறது என்று சொல்லுவதற்கு அவ்வாக்கியங்களில் ஏதாவது குறிப்பு இருக்கிறதோ?

பி. ஸா:—(பதிலில்லை.)

வா. வ:—அவதானிகளே! 'கட: படோந' என்றால் என்ன அர்த்தம்?

பி. ஸா:—கடம் படமல்ல. கடம் வேறு, படம் வேறு என்று அர்த்தம்.

வா. வ:—'கட: படோன' என்கிற இவ்வாக்கியத்தினால் கடம் படரூபமல்ல என்று சித்தமாகிறதோ? அல்லது படமே இல்லை என்று சித்தமாகிறதோ?

பி. ஸா:—கடம் படரூபமல்ல என்று சித்தமாகிறதேயொழிய படமில்லை என்று சித்தமாகிறதில்லை.

வா. வ:—'நேதிநேதி' இவ்வாக்கியத்தின் அர்த்தமென்ன?

பி. ஸா:—பிரஹ்மம், இதிந = பூர்வ பிரஸக்தமான மூர்த்த பதார்த்தரூபமல்ல, இதிந = பூர்வபிரஸக்தமான அமூர்த்தபதார்த்த ரூபமல்ல, ஆகையால் 'நேதிநேதி' என்கிற சப்தத்தினால் பிரஹ்மம் சொல்லப்படுகிறது. அல்லது எந்தெந்த பதார்த்தங்களைக் காண்கிறோமோ அப்பதார்த்த ரூபமல்ல என்று அர்த்தம்.

வா. வ:—இதினால் என்னவென்று சித்தமாகிறது?

பி. ஸா:—பிரஹ்மம், மூர்த்த = பிருதிவீ ஜலதேஜோரூபமல்ல, அமூர்த்த = வாயு ஆகாசரூபமல்ல அல்லது உலகத்தில் எந்தெந்த பதார்த்தங்கள் காணுகின்றனவோ அந்தந்த பதார்த்தரூபமல்ல என்று சித்தமாகிறது.

வா. வ:—கடம் படரூபமல்ல என்று சொல்லுவதினால் எப்படி கடம் படத்தைவிட வேறாக யிருக்கிறதென்று பேதமே சித்தமாகிறதேயொழிய படமில்லை என்று சித்தமாகிறதில்லையோ, அப்படியே பிரஹ்மம் மூர்த்தா மூர்த்தாத்மக பிரபஞ்ச ரூப மல்ல என்று சொல்லுவதினால் பிரம்மத்திற்கும் மூர்த்தா மூர்த்தாத்மக பிரபஞ்சத்திற்கும் பேதமுண்டென்று சித்தமாகிறதேயொழிய மூர்த்தாமூர்த்தாத்மக பிரபஞ்சமே இல்லை என்று சித்தமாகிற

தில்லை. இப்படியிருக்க இச்சுருதி பிரபஞ்சத்திற்கு மித்யாத்வத்தைச் சொல்லுகிறதென்று நீங்களெப்படிச் சொல்லுகிறீர்?

*பி. ஸா:*—(பதிலில்லை.)

*வா. வ:*—'கட: கடோ ந' கடம் கடமல்ல என்று சொல்லலாமோ?

*பி. ஸா:*—கடத்தில் கடபேதம் இல்லாததினுல் கடம் கடமல்லவென்று சொல்லக்கூடாது.

*வா. வ:*—பிரஹ்மனிடத்தில் மூர்த்தாமூர்த்த பிரபஞ்சத்தின் பேதம் மற்றும் வாஸனுவின் பேதம் இருக்கிறதா?

*பி. ஸா:*—பிரஹ்மத்தினிடத்தில் எந்தபேதமும் இல்லைஎன்று நம் சங்கராசார்யர் தம்மிட 2-3-6 வது பிரஹதாரண்யக மந்த்ர பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறபடியால் பேதம் இல்லை.

*வா. வ:*—கடத்தில் கடபேதம் இல்லாததினுல் 'கட: கடோ ந' என்று சொல்லுவதற்கு எப்படி முடியாதோ, அப்படியே பிரஹ்மத்தினிடத்தில் மூர்த்தா மூர்த்தபேதம் இல்லாததினுல் 'பிரஹ்ம மூர்த்தம் ந அமூர்த்தம் ந' என்று மூர்த்தா மூர்த்தத்தின் பேதத்தைச் சொல்லுவது எப்படிப் பொருந்தும்?

*பி. ஸா:*—நீர் கேட்டதற்காக பிரஹ்மம் மூர்த்தமல்ல, அமூர்த்தமல்ல என்று நாம் சொன்னோமே யொழிய, வாஸ்தவமாக நம்மிட பிரஹ்மம் எந்த சப்தத்தினுலும் கம்யம் (அறியப்படுவது) அல்ல. பிரம்மத்தின் விஷயத்தில் கேள்விகேட்ட பக்ஷத்தில் நம்மைப்போன்ற ஞானிகள் பதிலளிக்காமல் (தூஷ்ணீம்) இருக்க வேண்டியதுதான்.

*வா. வ:*—இவ்வார்த்தையை நீரே சொல்லுகிறீரா அல்லது உம்மிட ஆசார்யர் யாராவது சொல்லியிருக்கிறுரா?

*பி. ஸா:*—யார் என்ன சொல்லுவது. நம்மிட சங்கராசார்யரே பிரம்மம் எந்த சப்தத்தினுலும் சொல்லப்படுகிறதல்ல. பிரம்மத்தின் விஷயத்தைக் குறித்துக் கேட்டபக்ஷத்தில் (தூஷ்ணீம்) பதிலளிக்காமல் உட்காரவேண்டியது என்று சொல்லியிருக்கிறுர்?

*வா. வ:*—எந்த கிரந்தத்தில் சொல்லியிருக்கிறுர்.

பி. ஸா:—3-2-18 பிரஹ்ம ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார்.

வா. வ:—*அவ்வாக்கியத்தின் அர்த்தத்தைச் சொல்லும்!

பி. ஸா:—பிரஹ்மத்தைச் சொல்லவேணுமென்று பாஷ்கலி என்பவரால் கேழ்க்கப்பட்ட பாத்வரென்பவர் மௌனமாக யிருந்தார். மறுபடியும் இரண்டு மூன்று தடவை கேழ்க்கவே அவர் பிரஹ்மத்தினிடத்தில் எந்த தர்மமுமில்லாததினால் பிரஹ்ம விஷயகமான பிரஶ்னத்திற்கு தூஷ்ணீம் பாவம் = பதிலளிக்காமல் மௌனமாக உட்கார்ந்திருப்பதே பதிலென்று சொல்லியிருக்கிறாரென்று அர்த்தம்.

வா. வ:—இதினால் என்ன சித்தமாகிறது?

பி. ஸா:—பிரம்ம விஷயகமாக யாராகிலும் கேட்பாரேயாயின் ஒன்றும் பதிலளிக்காமல் மௌனமாக உட்கார்ந்திருக்க வேணுமென்று சித்தமாகிறது.

வா. வ:—ஐய்யா! பிரதிவாதிகள் உங்கள் பிரஹ்மம் இல்லவே இல்லை, அதின் விஷயத்தில் பிரமாணமுமில்லை என்று உங்கள் பேரில் ஆக்ஷேபித்த பக்ஷத்தில் நீர் மௌனமாக உட்காரவேண்டியதே யல்லவா?

பி. ஸா:—ஐயா வகீலரே! பிரஹ்ம விஷயகமாக பிரஶ்னம் செய்தபக்ஷத்தில் எப்படி தூஷ்ணீம் பாவம் = மௌனமாக இருப்பதே பதிலாகிறதோ அப்படியே உங்களிட பிரஶ்னத்திற்கும் தூஷ்ணீம் பாவமே பதிலாகிறது. எங்கள் பூர்வாசார்யர்கள் 'வயம் பிரஹ்மணி நிஷ்ணாதா: ந கிமபிப்ரூம:' நாங்கள் பரபிரம்மத்தினிடத்தில் நிஷ்ணாதராக (ஆஸக்தராக) இருப்பதால் நாங்கள் ஒன்றும் பதில் சொல்லமாட்டோமென்று சொல்லியிருக்கிறார்கள். நம் சங்கராசார்யரும் 'திருடதியஸ் தூஷ்ணீம் சிலாவத் ஸ்திதா:'

---

* बाष्कलिना बाध्वः पृष्टस्सन् अवचनेन ब्रह्म प्रोवाचेति श्रूयते स होवाच अधीहि भो इति । स तूष्णीं बभूव । तं ह द्वितीये वा तृतीये वा वचने उवाच ब्रूमः खलु तत्वंतु न विजानासि उपशान्तोऽयमात्मेति ।

(ப்ரௌடானுபூதி 13) 'த்வைதாத்வைத விவர்ஜிதே ஸமரஸே மௌனம் பரம் ஸம்மதம்' பண்டிதர்கள் கல்லைப்போல் பேசாமல் கப்பென்று இருக்க வேண்டியதென்று சொல்லியிருக்கிறபடியால் உங்களிட பிரஶ்னத்திற்கு நாங்கள் பதிலளிப்பதில்லை.

வா. வ:—அவதானிகளே! 'பிரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா' என்கிற உம்மிட மதத்தில் ஸத்தியமாக இருக்கும் பிரஹ்மமோ எந்த சப்தத்தினாலும் ப்ரதிபாத்யமல்ல. (சொல்லப்படுவதல்ல.) ஜகத்தோ மித்யை ஆயிற்று. ஆகையால் வேதத்தினால் சொல்லப்படும் ஸத்தியமான வஸ்து எதுவும் இல்லாததினால் வேதம் அப்பிரமாணமென்று சொல்லவேண்டியதாகுமல்லவா?

பி. ஸா:—நம் மதத்தில் வேதாதி எல்லா ஜகத்தும் மித்யை = பிரஹ்மத்தில் கல்பிதம் (ப்ரமத்தினால் காணப்படுவது) வாஸ்தவமாக இல்லாததினால் வேதமே இல்லை. அப்படியிருக்க வேதத்திற்கு ப்ராமாண்யம் எப்படி சித்திக்கும்? 'சோத்யம்வாபரிஹாரோவா க்ரியதாம் த்வைத பாஷயா.....அத்வைதே நாஸ்திசோதனா' என்று சொல்லியவாறு நம்மத்வைத மதத்தின்படிக்கு உம்மோடுகூட ஆக்ஷேபஸமாதானங்களொன்றும் செய்கிறதேயில்லை.

வா. வ:—அவதானிகளே! நம்முடன் ஆக்ஷேப சமாதானங்களைச்செய்ய முடியாவிடின் உம்மிட மதத்தில் சாஸ்திரங்களென்னத்திற்கு? சாஸ்திரங்களில்லாவிடின் சிஷ்யர்களெதற்கு? எல்லா ஜகத்தும் மித்யையாகையால் ஸ்வர்க்காதி லோகங்களுக்காக வ்ரீஹ்யாதி திரவ்யங்களினால் யஜ்ஞாதி கர்மங்களைச் செய்வது எப்படிப்பொருந்தும்?

பி. ஸா.:—ஐயா! * நம் மதத்தில் சாஸ்திரமில்லை, சாஸ்தா இல்லை, சிஷ்யனில்லை, குரு இல்லை, சிக்ஷா இல்லை, நீரும் இல்லை,

---

* न शास्ता न शास्त्रं न शिष्यो न शिक्षा नचत्वं न चाहं न चायं प्रपंचः । न वर्णा न वर्णाश्रमाचार धर्माः......न मातापिता वा न देवा न लोका न वेदा न यज्ञा न तीर्थं ब्रुवंति...न मीमांसकादेर्मतं वा.....(दशश्लोकी) न पुण्यं न पापं न सौख्यं न दुःखं न मंत्रो...नमे जातिभेदः न मुक्तिर्न बंधः । (निर्वाणषट्कं)

நானும் இல்லை, பிராஹ்மணாதி வர்ணங்களுமில்லை, வர்ணாச்ரம தர்மங்களுமில்லை, தந்தை இல்லை, தாய்இல்லை, தைவமில்லை, ஸ்வர்க்காதி லோகங்களில்லை, வேதங்களில்லை, யஜ்ஞம் இல்லை, கங்காதி தீர்த்தங்களில்லை, மீமாம்ஸகாதி மதங்களில்லை, அத்வைதமதமில்லை, புண்யமில்லை, பாபமில்லை, சுகமில்லை, துக்கமில்லை, மந்திரமில்லை, ஜாதிபேதமில்லை, பந்துஇல்லை, மித்ரனில்லை, பந்தமில்லை, முக்திஇல்லை. இவ்வெல்லா ஜகத்தும் துச்சமானது. (முக்காலத்திலும் இல்லாதது) ஆகையால் சாஸ்திரம், சிஷ்யன், சிக்ஷை இவைகளொதுவும் இல்லவேஇல்லை என்று சொல்லும் நம்மைக் குறித்து அது எப்படிப் பொருந்தும் என்று கேழ்ப்பதற்கு அவகாசமே இல்லை.

*வா. வ.*:—எதுவுமில்லாவிடின் நீங்கள் (அத்வைதிகள்) சாஸ்திரவிசாரம், யஜ்ஞம், ஸ்நானம், ஸந்த்யாதி கர்மங்கள் ஏன் செய்கிறீர்கள்?

*பி. ஸா.*:—சாஸ்திரவிசாரம், யஜ்ஞம் முதலியவைகளைச் செய்பவர்கள் பிராந்தர்களே (அஞ்ஞானிகளே.) ஞானிகள் செய்வதில்லை. பிராந்தர்களே சாஸ்திர விசாரம், யஜ்ஞாதி கர்மங்கள் இவைகளைச் செய்யவேணும். ஞானிகள் மௌனமாக கல்லைப்போல் உட்கார்ந்திருக்க வேண்டியதென்று நம் ஆசார்யரே சொல்லியிருக்கிறார்.†

---

## வாதி விசாரணை.

*பி. வ.*:—ஆசார்யரே! 'நேதி நேதி' என்கிற இவ்வாக்கியத்திற்கு நீங்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்கள்?

*வா. வி.*—பரமாத்மா பரதந்திரமான மூர்த்த பதார்த்தங்களைவிட வேறானவன், மற்றும் பரதந்திரமான அமூர்த்தபதார்த்தங்களை விட வேறானவன் என்று பரமாத்மனையே ஸர்வஜகத் வில

† भ्रांता एव न पारगाः दृढधियस्तूष्णीं शिलावत्स्थिताः । (प्रौढानुभूति)

க்ஷணமென்று இவ்வாக்கியம் சொல்லுகிறது. 'நஹ்யேதஸ்மாதிதி நேத்யன்யத் பரமஸ்தி' என்கிற வாக்கியத்திற்கு 'இதி நேதி' என்கிறவாக்கியத்தினுல் சொல்லப்பட்டிருக்கும், அன்யத் = பரமாத்மனைவிட வேருன ஜகத்து, யேதஸ்மாத் பரம் ந = பரமாத்மனைவிட உத்தமமல்ல, என்கிற அர்த்தத்தை நாம் சொல்லுகிறோம்.

பி. வ.:—'அதநாமதேயம் ஸத்யஸ்ய ஸத்யம் பிராணுவை ஸத்தியம் தேஷாமேஷ ஸத்யம்' என்கிற இவ்வாக்கியத்திற்கு என்ன அர்த்தம்?

வா. வி:—பிராணம் ஸத்தியமானது. அப்பிராணத்திற்கு ஸத்தியம் = ஸத்யத்வத்தைக் கொடுப்பவனுகையால் அப்பரமாத்மனுக்கு ஸத்தியஸ்ய ஸத்யம் என்கிற பெயர் உண்டாயிருக்கிறது என்று இவ்வாக்கியத்திற்கு அர்த்தம்.

பி. வ:—'ஸத்யஸ்ய ஸத்யம்' இப்பதங்களுக்கு ஸத்யத்வத்தைக் கொடுப்பதென்று எப்படி அர்த்தம் செய்தீர்?

வா. வ:—'பிராணஸ்ய பிராணம் சக்ஷுஷ: சக்ஷு:' இத்யாதி வாக்யங்களுக்கு பிராணத்திற்கு சேஷ்டா சக்திகளைக் கொடுப்பவன், சக்ஷுராதிகளுக்கு தர்சனுதி சக்திகளைக் கொடுப்பவன் என்று சங்கராசார்யர் எப்படி அர்த்தம் செய்திருக்கிருரோ; நித்யோ நித்யானும் சேதனஸ்சேதனுனும்' என்கிற இவ்வாக்கியத்திற்கு நித்ய பதார்த்தத்திற்கு நித்யத்வத்தைக் கொடுப்பவன், சேதனர்களுக்கு சைதன்யத்தைக் கொடுப்பவன் என்று எப்படி அர்த்தமிருக்கிறதோ அப்படியே 'ஸத்யஸ்ய ஸத்தியம்' என்கிற வாக்யத்திற்கும் பிராணரூப ஸத்ய பதார்த்தங்களுக்கு ஸத்யத்வத்தைக் கொடுப்பவன் என்று அர்த்தமாகிறது.

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பி. வ:—'அதாத ஆதேஸ: நேதிநேதி' என்கிற சுருதி மூர்த்தா மூர்த்தாத்மகமான எல்லா பிரபஞ்சத்தையும் 'நேதி நேதி' என்று நிஷேதிக்கிறபடியால் மூர்த்தா மூர்த்தாத்மகமான எல்லா பிரபஞ்சமும் மித்யை யாகிறதென்பதை தர்மபிரபு அவர்கள் நோட்செய்ய வேணுமாய்க் கோருகிறோம்.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

வா. வ:—(To the Court) My Lord! 'நேதி நேதி' என்கிற இவ்வாக்கியம் பரமாத்மா மூர்த்தா மூர்த்தாத்மகமான எல்லா ஜகத்தைவிட வேறாக இருக்கிறானென்று சொல்லுகிறதே (பிரஹ்மம் ஜகத்ரூபமல்ல என்று சொல்லுகிறதே) யொழிய, ஜகத்து இல்லை என்று சொல்லுகிறதில்லை. படமில்லை என்று சொல்லின் படத்திற்கு மித்யாத்வம் யேற்படுமே யொழிய, கடம் படரூபமல்ல என்று சொல்லின் படத்திற்கு மித்யாத்வம் ஏற்படுகிறதில்லை. கடம் வேறு, படம் வேறு என்று அவைகளுக்கு பேதம் எப்படி சித்தமாகிறதோ அப்படியே பிரம்மம் மூர்த்தமல்ல அமூர்த்தமல்ல என்று சொல்லவே பிரஹ்மத்திற்கும் மூர்த்தா மூர்த்தாத்மகமான பிரபஞ்சத்திற்கும் பேதம் சித்தமாகிறதே யொழிய மூர்த்தா மூர்த்தாத்மக பிரபஞ்சமே மித்யை என்று சித்தமாகிறதில்லை.

இவ்வாக்கியத்தில் ஜகத்து மித்யை என்று சொல்லும் பதமே இல்லை. இவ்வாக்கியத்தை வைத்துகொண்டு ஜகத்து மித்யை என்று சொல்லுவது யுக்தமாக மாட்டாது என்கிற விஷயத்தைக் குறித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

---

## ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம என்கிற சுருதி விசாரணை.

பி. வ.:—சாஸ்திரிகளே! ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் இன்னும் ஏதாவது ஆதாரமுண்டோ ?

பி. ஸா.:—இன்னும் ஒரு சுருதியுண்டு.

பி. வ.:—அதைச் சொல்லும் ?

பி. ஸா.:—'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' (சாந். 6-14-1) என்கிற சுருதியே.

பி. வ.:—அதின் அர்த்தம் என்ன ?

பி. ஸா.:—இதம் ஸர்வம் = இவ்வெல்லா உலகமும் ப்ரஹ்ம = ப்ரஹ்மமே = ப்ரஹ்மத்தினிடத்தில் கல்பிதமானது மித்யை (முக்காலத்திலு மில்லாதது) என்று அர்த்தம்.

பி. வ.:—இதினால் என்ன வென்று சித்தமாகிறது ?

பிர. ஸா.:—எல்லா ஜகத்தும் ப்ரஹ்மனிடத்தில் கல்பிதமென்று சித்தமாகிறது.

---

## க்ராஸ் எக்ஸாமினேஷன்.

---

வா. வ.:—ப்ரஹ்மசப்தத்திற்கு ப்ரஹ்மத்தினிடத்தில் கல்பிதமென்கிற அர்த்தம் முக்கியார்த்தமா ? அமுக்கியார்த்தமா ? (கௌணார்த்தமா = Secondary meaning)கா.

பி. ஸா.:—அமுக்கியார்த்தமே யொழிய முக்கியார்த்தமல்ல.

வா. வ.:—முக்கியார்த்தமல்லா விடின் இவ்வர்த்தத்தையே சொல்ல வேண்டுமென்கிற தென்ன ? வேறு அர்த்தத்தை ஏன் சொல்லக்கூடாது. ?

பிர. ஸா.:—வேறு அர்த்தம் பொருந்துமாயின் சொல்லலாம்.

வா. வ.:—'ஸர்வகாம: ஸர்வரஸ: ஸர்வகந்த:' இவ்வாக்கியம் எங்கு இருக்கிறது ?

பிர. ஸா.:—'ஸர்வம் கல்விதம்' என்கிற வாக்கியத்திற்கு முன்னிருக்கும் வாக்கியமே.

வா.வ.:—இவ்வாக்கியத்தின் சங்கராசார்யரின் பாஷ்யத்தையும், ஆனந்தகிரி டீகையையும் பார்த்திருக்கிறீரா ?

பிர. ஸா.:—பார்த்திருக்கிறேம்.

வா. வ.:—*இவ்வாக்யத்திற்கு அர்த்தம் சொல்லும்.

பிர.ஸா.:—'ஸர்வகாம:' என்கிற இப்பதத்திற்கு 'ஸர்வே காமா:யஸ்ய ஸ:' எல்லா காமங்களும் யாரிட அதீனத்திலிருக்கின்றனவோ அவன் பரமாத்மா என்று சங்கராசார்யர் தாங்களே அர்த்தம் செய்து, அதற்கு தாங்களே 'காமோஸ்மி பரதர்ஷப' என்கிற(7-11) கீதாவாக்கியத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் நான் காமரூபனுக இருக்கிறேன் என்று சொல்லியிருப்பதினுல் அவ்விதமாகவே இச்சுருதியிலுள்ள 'ஸர்வகாம:' என்கிற பதத்திற்கும்' ஸர்வம்சாஸௌ காமஸ்ச' என்று கர்மதாரயஸமாஸம் செய்து பர

---

* सर्वे कामा दोषरहिता अस्येति सर्वकामः । "धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि" इति स्मृतेः । ननु कामोऽस्मीति वचनादिह बहुव्रीहिर्न संभवति । सर्वकाम इति । न कामस्य कर्तव्यत्वाच्छब्दादिवत्पारार्थ्यप्रसंगाच्च देवस्य । तस्माद्यथेह सर्वकाम इति बहुव्रीहिस्तथा कामोऽस्मीति स्मृत्यर्थो वाच्यः । (छां. शां. भा. 3-14-2.)

उदाहृतां स्मृतिमाश्रित्योक्तमाक्षिपति—नन्विति । कामसामानाधिकरण्ये बाधकोपलंभाद्बहुव्रीहिरेवेति परिहरति—न कामस्येति । तस्य कार्यत्वा त्तदैक्ये ब्रह्मणोऽनादित्वं बाध्यते । चेतनशेषत्वाच्च कामस्य तदैक्ये ब्रह्मणः स्वातन्त्र्यं हीयते तथाच कर्मधारयासंभवात् बहुव्रीहिरेवेत्यर्थः ॥ कथं तर्हि कामोऽस्मीति तादात्म्यस्मृतिरित्याशंक्याह—तस्मादिति । कामेश्वरयोः सामानाधिकरण्यसंभवात्प्रकृतश्रुतौ बहुव्रीहिर्यथेष्टस्तदा स्मृतावपि ब्रह्मपारतन्त्र्यमात्रं कामस्य विवक्षितं श्रुत्यनुसारेण स्मृतेर्नेतव्यत्वादित्यर्थः छां. आनं. 3-14-2)

மாத்மா ஸர்வகாம ரூபீ இருக்கிறான் (பரமாத்மாவும் காமமும் ஒன்றே) என்கிற அர்த்தத்தை ஏன் செய்யக்கூடாது ? என்று ஆக்ஷேபித்துக் கொண்டு, காமம் பரதந்திரமானது, ஜன்னிய மானது, அக்காமத்திற்கும் பரமாத்மாவுக்கும் ஐக்கியத்தைச் சொன்னால் பரமாத்மனுக்கும் பாரதந்த்ரியமும் ஜன்யத்வமும் உண்டாகி பரமாத்மாவின் ஸ்வாதந்த்ரியமும் அனுதித்வமும் நாசமடையும். அதற்காக காமத்திற்கு பரமாத்மனுடன் அபே தத்தைச் சொல்லக்கூடாது. 'ஸர்வேகாமா: யஸ்ய' என்று பஹுவ்ரீஹிஸமாஸம் செய்து, காமத்திற்கு பரமாத்மா ஸ்வாமி என்று அர்த்தம் செய்யவேணும். 'காமோஸ்மி' என்கிற கீதா வாக் கியத்திற்கும், காமః = காமஸ்வாமி, அஸ்மி = இருக்கிறேன், (நான் காமத்திற்கு ஸ்வாமி) என்றே அர்த்தம் செய்ய வேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வா. வ:—'காமோஸ்மி பரதர்ஷப' என்கிற இக்கீதாவாக்யத் திலுள்ள காமபதத்திற்கு காமஸ்வாமி என்று சங்கராசார்யர் அர்த்தம் செய்திருக்கிறபடியே, ப்ரஹ்மம் இதம் ஸர்வம் = இந்த எல்லா ஜகத்திற்கும் ஸ்வாமி என்று அர்த்தம் செய்வதே யுக்த மாகிறதல்லவா?

பிர. ஸா:—அந்த அர்த்தமும் பொருந்துகிறது.

வா. வ: –அப்படியாயின் 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' 'இதம் ஸர்வம் யதயமாத்மா' 'ப்ரஹ்மைவேதம் ஸர்வம்' 'ஆத்மைவேதம் ஸர்வம்' இவைகளே முதலிய பூர்வத்தில் சொல்லப்பட்ட வாக்யங் களுக்கு, இதர பிரமாணங்களுக்கு அவிருத்தமானதாயும் மற் றும் காமோஸ்மி என்கிற வாக்கியத்திற்கு சங்கராசார்யரால் செய்யப்பட்ட ஸர்வஸ்வாமி என்கிற அர்த்தத்தை அங்கீகரிப் பது யுக்தமாயிருக்க, ஜகத்து பிரஹ்மத்தில் கல்பிதமென்கிற ஸர்வ ப்ரமாணங்களுக்கும் விருத்தமா யிருக்கும் அர்த்தத்தை ஏன் அங்கீகரிக்க வேணும் ?

பிர. ஸா:—(பதிலில்லை.)

## வாதி விசாரணை.

*பிர. வ:*—ஆசார்யரே! 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்கிற ஶ்ருதிக்கு நீங்கள் என்ன அர்த்தம் சொல்லுகிறீர்கள்?

*வா. விஷ்ணுதாஸாசார்:*—இதம் ப்ரஹ்ம = இந்த ப்ரஹ்மம், ஸர்வம் = பூர்ணமானது அல்லது ஸர்வத்ரவ்யாப்தமானது அல்லது ஸர்வ ஸ்வாமி இது முதலிய அர்த்தங்களைச் சொல்லுகிறோம்.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

*பி. வ:*—(To the Court.) தர்மராஜப்ரபுக்களே! 'ஸர்வம் கல்விதம் பிரஹ்ம' என்கிற சாந்தோக்ய சுருதி, இதம் ஸர்வம் = இவ்வெல்லா ஜகத்தும், பிரஹ்ம = பிரஹ்மனிடத்தில் கல்பிதமானது (மித்யை) என்று சொல்லுகிறது.

ஸூத்ரகாரரான வேதவ்யாஸரும் 'ததநன்யத்வமாரம்பண ஶப்தாதிப்ய:' என்கிற 2-1-14வது பிரஹ்ம ஸூத்ரத்தினால் வாசாரம்பணம் முதலிய சுருதிகளினால் ஜகத்து கல்பிதமென்று சித்தமாய்க் கொண்டிருக்கிறபடியால், ஜகத்து பிரஹ்மனிடத்தில் கல்பிதமானது (மித்யை) என்று ஜகத்துக்கு மித்யாத்வத்தை சொல்லியிருக்கிறார். ஆகையால் பிராஹ்மணாதி வர்ணங்கள், பிரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், ஸ்நானம், ஸந்த்யா, யஜ்ஞம், வேதம், தேவதைகள், தீர்த்தங்கள், ஸ்வர்க்காதி பரலோகங்கள், இந்த லோகம் இவைகளே முதலிய எல்லா ஜகத்தும் மித்யை (பொய்).

ஜகத்தின் ஸத்யத்வ விஷயத்தில் வாதியினால்சொல்லப்பட்ட 'விஶ்வம் ஸத்யம்' இது முதலிய சுருதிகள், ப்ரத்யக்ஷம், அநுமானம், ஸூத்ரம், கீதை இவ்வெல்லா ப்ரமாணங்களும் ஜகத்து ஸத்யமென்று அறிவித்துக்கொண்டிருப்பினும், மேற் சொல்லப் பட்ட ஜகத்துக்கு மித்யாத்வ போதகமான 'வாசாரம்பணம்'

இது முதலிய சுருதிகளுக்கு விருத்தமாகிறபடியால் 'விஶ்வம் ஸத்யம்' இது முதலிய சுருதிகளினால் தோன்றும் ஜகத்தின் ஸத்யத்வம் வ்யாவஹாரிக ஸத்யத்வ (பொய் ஸத்யத்வ) மென்று அறியவேண்டும். பாரமார்த்திக ஸத்யமல்ல. ஆகையால் 'விஶ்வம் ஸத்யம்' இது முதலிய பிரமாணங்களினால் ஜகத்துக்கு பாரமார்த்திக ஸத்யத்வம் சித்தமாகிறதில்லை. இவ்விஷயத்தைக் கோர்ட்டார் கவனிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

வா. வ:—தர்மராஜப்ரபோ! 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்கிற சுருதியில் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கும் பதமில்லை, பிரஹ்ம மென்கிற பதத்திற்கு ப்ரஹமத்தினிடத்தில் கல்பித மென்கிற அர்த்தம் முக்யவ்ருத்தியினால் ஆகிறதில்லை. லக்ஷணை (Secondary Meaning) யினால் செய்யவேணும். பிரஹ்ம ஶப்தத்திற்கு முக்யார்த்தத்தை விட்டபிறகு, வேறு பிரமாணங்களுக்கு அவிருத்தமாயிருக்கும் அர்த்தத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். சங்கராசார்யரும் இவ்வாக்கியத்திற்கு மின்னிருக்கும் 'ஸர்வ காம: ஸர்வகந்த:' என்கிற வாக்கியத்திற்கு வ்யாக்யானம் செய்யும் போது 'காமோஸ்மி பரதர்ஷப' என்கிற கீதா வாக்யானுஸாரமாக பரமாத்மா ஸர்வகாமரூபன் என்கிற அர்த்தத்தை ஏன் செய்யக்கூடாது என்று சங்கித்துக் கொண்டு காமம் பரதந்த்ரமானது, மற்றும் ஜன்யமானது. அக்காமத்துடன் பரமாத்மாவின் அபேதத்தைச் சொன்னால் அப்பரமாத்மாவின் ஸ்வாதந்த்ரியமும் அனாதித்வமும் நஷ்டமாகுமாகையால் 'ஸர்வகாம' என்கிற பதத்திற்கு ஸர்வகாமத்திற்கு ஸ்வாமி என்று அர்த்தம் செய்யவேணும். 'காமோஸ்மி' என்கிற கீதாவாக்யத்திற்கும் ஸ்ரீ கிருஷ்ணன் காமரூபனென்று அர்த்தம் செய்யாமல் காமத்திற்கு ஈஶ்வர பாரதந்த்ரியத்தையே சொல்லவேண்டும். (ஸ்ரீகிருஷ்ணன் காமத்திற்கு ஸ்வாமி என்றே அர்த்தம் செய்யவேண்டும்) என்று

சொல்லியிருக்கிறார். மற்றும் 'ஸர்வஸ்யவஶீ' ஏஷஸர்வேஶ்வரः, ஸர்வஸ்யாதிபதி:, ஸர்வஸ்யேஶானः, ஏஷபூதாதிபதி:, ஏஷபூத பால:' இவைகளே முதலிய வேதவாக்யங்களினால் எல்லா ஜகத்தும் பிரஹ்மத்தின் அதீனம், பிரஹ்மம் ஜகத்துக்கு ஸ்வாமி என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் பிரஹதாரண்யகம் 2-5-1வது மந்த்ர பாஷ்யத்தில் சங்கராசார்யர் இதம் ஸர்வம்= இது ஸர்வார்த்த (பல)ஸாதனமானதென்று அர்த்தம் செய்திருக்கிறார். அப்படியே 'ஸர்வம் கல்விதம் பிரஹ்ம' என்கிற வாக்யத்திற்கும் இவ்வெல்லா ஜகத்தும், பிரஹ்ம=பிரஹ்மத்தின் அதீனம், அல்லது, இதம் பிரஹ்ம = இந்த பிரஹ்மம், ஸர்வம்= எல்லா ஜகத்துக்கும் நியாமகமானது, அல்லது இதம் பிரஹ்ம= இந்த ப்ரஹ்மம், ஸர்வம்=ஸர்வ ப்ராப்திக்கு ஸாதனமானது என்று இவைகளே முதலிய அர்த்தங்களைச் செய்வது சரியானதாகையால் 'பிரஹ்மை வேதம் ஸர்வம்' 'இதம் ஸர்வம் யதயமாத்மா' 'ஆத்மை வேதம் ஸர்வம்' இதுமுதலிய வாக்கியங்களைப்போலவே இவ்வாக்கியமும் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கிறதில்லை.

'வாசாரம்பணம்' இது முதலிய சுருதிகளினால் ஜகத்துக்கு மித்யாத்வம் சித்திக்கிறதில்லாதபடியால் அந்த சுருதிகளின் ஆதாரத்தினால் ஜகத்து மித்யை என்று 'ததநந்யத்வ மாரம்பண ஶப்தாதிப்ய:' என்கிற ஸூத்ரம் சொல்லுகிறதென்று சங்கராசார்யர் செய்த வ்யாக்யானம் சரியானதல்ல.

'ததநன்யத்வ மாரம்பண ஶப்தாதிப்யः' என்கிற ஸூத்ரத்தில் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கும் பதமில்லை.

'ததநன்யத்வம்' என்கிற வாக்கியத்திலுள்ள 'தத்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மத்தையே எடுத்துக்கொள்ள வேணுமென்கிற விஷயத்தில் ஆதாரமுமில்லை. 'தத்' என்கிற பதத்திற்கு ஜடப்ரக்ருதியை எடுத்துக்கொண்டு ஜகத்து பிரக்ருதியைவிட வேறானதல்ல (அபின்னம்) என்கிற அர்த்தத்தையும் செய்யலாம். ஆகையால் 'தத்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மத்தை எடுத்துக் கொள்ளுவது யுக்தமல்ல.

'தத்' என்கிற பதத்தினால் ப்ரஹ்மத்தை எடுத்துக்கொண்ட போதிலும் அனன்யத்வம் என்கிற பதம் ஜகத்தில் 'தத்' என்கிற

பதத்தினுல் போத்யமான எந்த ப்ரஹ்மமுண்டோ அதின் அபேதத்தையே அறிவிக்கிறதே யொழிய, ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கிறதில்லை.

பேதத்திற்கும் அபேதத்திற்கும் விரோத மிருக்கிறபடியால் ஜகத்து பிரஹ்மத்தைவிட பின்னமாவது ஆகவேணும், அபின்னமாவது ஆகவேணும். பின்னமுமல்ல, அபின்னமுமல்ல என்று சொல்லுவது பொருந்தாது.

தங்களிடமதம் மாயாகல்பித மாயிருக்கிறபடியால், எவ்வளவு அனுபபத்திகள் வந்தபோதிலும், அவ்வெல்லா அனுபபத்திகளும் தங்களுக்கு பூஷணங்களே ஸுஹ்ருத்துக்களே என்று அத்வைதிகள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இத்தகைய அனுபபன்ன (துஷ்ட)மான மதத்தை அங்கீகரிப்பது எப்படி யோக்கியமாகும்? இத்தகைய அநேக காரணங்களினுல் 'ததனன்யத்வம்' என்கிற பிரதிஜ்ஞா பாகம் ஜகத்துக்கு மித்யாத்வத்தை அறிவிக்கிற தென்பது யுக்தமல்ல.

'ஆரம்பணம்' என்கிற பதம் 'வாசாரம்பணம்' என்கிற பதத்திற்கு உத்தர பாகத்திலிருப்பதினுல், உத்தர பாகத்தை எடுத்துக்கொண்டு சுருதியை உதகரிப்பது எங்கும் சம்பிரதாய மில்லாததினுல், 'ஆரம்பணஶப்தாதிப்ய:' என்கிற ஹேதுபாகத்திலிருக்கும் ஆரம்பணஶப்தத்தினுல் 'வாசாரம்பணம் விகாரோ நாம தேயம்' என்கிற சுருதியை ஸுத்ரகாரர் அறிவித்திருக்கிறுரென்று சொல்லுவது அஸங்கதமானது.

இப்படி ஜகத்து மித்யை என்கிற விஷயத்தில் சுருதி, ஸுத்திரம், கீதை, பிரத்யக்ஷம், அனுமானம் இவைகளில் ஒரு பிரமாணமும் ஆதாரமாக இல்லாததினுல், ஜகத்து பாராமார்த்திகஸத்யமே மித்யை அல்ல. மற்றும் வாதி தனக்கு ஆதாரமாய் கொடுத்திருக்கும் சுருதி ப்ரஹ்மஸுத்திரம் கீதை என்கிற பிரஸ்தானத்ரயம், பிரத்யக்ஷம், அனுமானம் இவ்வெல்லாப் பிரமாணங்களும் ப்ராஹ்மணவர்ணமே முதலான ஜகத்துக்கு ஸத்யத்வத்தை ஸ்பஷ்டமாக அறிவிக்கிறது. எப்படி யெனின்:—

(1) 'விஶ்வம் ஸ்த்யம்' என்கிற ருக்வேதவாக்யம் பிரஹ்மாதிரிக்தமான ஜகத்துக்கு ஸத்யத்வத்தைச் சொல்லுகிறது. அத்வைதத்தில் பண்டிதரென்று சொல்லப்பட்டவரான வித்தியாரண்ய ஸ்வாமிகளும் இச்சுருதிக்கு வ்யாக்கியானம் செய்யும்போது 'ஸத்யம்'என்கிற பதத்திற்கு,அனுரூபிதம் வித்யமான மேவ = கல்பிதமல்ல, ஸத்யமானதே என்று அர்த்தம் செய்திருக்கிறபடியால், பிரதிவாதி மதத்தையனுசரித்தும் இச்சுருதிக்கு ஜகத்து பாரமார்த்திக ஸத்யமே (பொய், ப்ரமையினால் தோன்றுகிறதல்ல) என்று அர்த்தமிருக்கிறதென்று தெரியவருகிறது.

(2) 'ததேதத்ஸத்தியம்' என்கிற முண்டக சுருதி பிரஹ்மாதிரிக்தமான கர்மாதி ஜகத்து ஸத்திய மென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது, 'ததேதத் ஸத்யம்' என்கிற வாக்யம் முண்டகோபநிஷத்தில் பிரஹ்ம விஷயத்தையும், ஜகத்துவிஷயத்தையும் சொல்லிக்கொண்டே—தத் ஏதத் = அந்த இப்பிரஹ்மம், ஸத்யம் = அவிததம் = அபத்தமல்ல, நிஜமே என்று சங்கராசார்யர் அர்த்தம் செய்து, ஜகத்விஷயத்தில் அர்த்தம் செய்யும் போதும், ததேதத் = கர்மாதிஜகத்து, ஸத்யம் = அவிததம் = அபத்தமல்ல,நிஜமே என்று அர்த்தம் செய்திருக்கிறார். இந்த சுருதி ப்ரஹ்மத்திற்கு எத்தகைய 'ததேதத்ஸத்யம்' என்கிற வாக்யத்தினால் எத்தகைய ஸத்யத்வத்தைச் சொல்லுகிறதோ, ஜகத்துக்கும் அத்தகைய 'ததேஸத் ஸத்யம்' என்கிற வாக்யத்தினாலேயே அத்தகைய ஸத்யத் வத்தையே சொல்லுகிறதென்கிற விஷயத்தில் விவாத மில்லை. ஆகையால் இச்சுருதி ப்ரஹ்மஸத்யத்வ விஷயத்தில் எப்படி ஆதாரமாகிறதோ, அப்படியே ஜகத்ஸத்யத்வ விஷயத்திலும் ஆதாரமாகிறது.

(3) 'யாதா தத்யதோர்த்தான் வ்யததாத்ஶா, ஶ்வதீப்யஸ்ஸமாப்ய:' என்கிற ஈஶாவாஸ்ய சுருதி யாதாதத்யத்துடன் கூடிய (ஸத்யமாயிருக்கும்)ஜகத்தின் ஶ்ருஷ்டியை பரமாத்மா செய்கிறான் என்று சொல்லி ஜகத்துக்கு ஸத்யத்வத்தைத் தெரிவிக்கிறது.

(4) 'யச்சிகேத ஸத்யமித்தன்னமோகம்' (ருக். 8-1-10) என்கிறவாக்கியம் பரமாத்மனால் எந்த ஜகத்து நிர்மிக்கப்பட்டதோ

அந்த ஜகத்து, ஸத்யமித், ஸத்யமானதே, பொய்யல்ல, என்று ஜகத்தின் மித்தியாத்வத்தை நிஷேதித்து, ஸத்யத்வத்தைச் சொல்லுகிறது, ஆகையால் இவ்வாக்யத்தினாலும் ஜகத்து பாரமார்த்திக ஸத்யமென்று சித்தமாகிறது.

(5) 'அஸத்யமப்ர திஷ்டந்தே ஜகதாஹுரனீஶ்வரம்' (கீதை 16-8) இவ்வாக்கியம் ஜகத்துக்கு அஸத்யத்வத்தை (பொய்த்தன்மையை) அறியும் மனிதன் ஆஸுரஸ்வபாவ முடையவன், அவனுக்கு அதோகதி (நித்ய நரகம்) ஆகிறது என்று ஜகத்தை அஸத்யம் என்று அறிகிறவர்களை நிந்தித்துக்கொண்டிருக்கிறபடியால் ஜகத்து ஸத்யமேயாகிறது என்று இவ்வாக்யத்தினால் சித்தமாகிறது.

(6) 'அதாதோ பிரஹ்மஜிஜ்ஞாஸா' 'ஜன்மாத்யஸ்யயத:' இச் சூத்திரங்கள் முதல்கொண்டு 'அனாவ்ருத்திஶ்ஶப்தாதனாவ்ருத்திஶ்ஶப்தாத்' என்கிற கடைசிஸூத்ரம் வரைக்குமிருக்கும் எல்லா ஸூத்ரங்களும், எந்த பரமாத்மா ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் இவை முதலியவைகளைச் செய்கிறானோ, அந்த பரமாத்மா, ஆனந்தாதி குணங்களால் பூர்ணனாயிருக்கிறான், அந்த பரமாத்மாவின் ஶ்ரவணமனனத்யானங்களைச் செய்து, பரமாத்மா ஜகத்தின் கர்த்தா, தங்கத்தைப் போன்ற நிறமுள்ளவன், சதுர்முகனுக்கு காரணன், மற்றும் எல்லோருக்கும் ஸ்வாமி என்று அப்பரமாத்மாவின் அபரோக்ஷ ஞானத்தை சம்பாதித்துக் கொண்டு, பிரக்ருதி பந்தத்தினின்றும் முக்தனாய் தன்னிட ஸ்வரூபானந்தத்தை அனுபவித்துக்கொண்டு 'ஏதத்ஸாம காயன்னாஸ்தே' என்கிற சுருதியில் சொல்லியவாறு ஈஶ்வரனை ஸாம வேதத்தினால் துதித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும்,மற்றும்ஜகத்து பிரமாணங்களினால் உபலப்தமாகிறதாகையால் அது பொய்யென்று அறியக்கூடாது என்று ஜகத்து மித்யை என்று சொல்லுகிறவர்களின் மதத்தைக் கண்டித்து ஜகத்து ஸத்யமென்று சொல்லிக்கொண்டிருக்கிறபடியால், ப்ரஹ்மஸூத்ரத்தினாலும் ஜகத்து ஸத்தியமென்று சித்தமாகிறது.

(7) அதிகமாகச் சொல்லுவதென்ன? வேதம், ஸூத்திரம் கீதா ரூபமான ப்ரஸ்தானத்ரயம், ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகள் பிரமாணங்களாக இருக்கின்றபடியால், வேதாதிகளில் சொல்லப் பட்டிருக்கும் எல்லா வஸ்துக்களுக்கும் ஸத்யத்வத்தையே அறிய வேண்டும். ஏனெனின்—பிரமாணம் என்கிற ஶப்தத்தில் ப்ர மா-ல்யுட் (அன = அண) என்கிறமூன்று பாகங்களிருக்கின்றன. ப்ர என்றால் நிஜமான வஸ்துக்களை விஷயீகரிக்கும், மா = ஞானத் திற்கு, ல்யுட் = காரணம் (நிஜமானவஸ்துவின் ஞானத்தை உண் டாக்கக்கூடியது = வேதாதிகளினால் அறியவரும் வஸ்துக்கள் ஸத்யமானவை என்று அர்த்த மிருக்கிறபடியால், பிரமாணமா யிருக்கும் வேதாதிகளினால் அறியப்படும் வஸ்து ஸத்யமானது (நிஜமானது) என்று சித்திக்கிறது. ஆகையால்-'ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத்' 'யஜ்ஞேன யஜ்ஞமயஜந்த தேவா:' 'இமம்மே கங்கே யமுனே ஸரஸ்வதி' இவைகளே முதலிய வேதகீதாஸூத்திரங்க ளினால் அறிந்துவரும் பிராஹ்மண வர்ணாதி ஸமஸ்தஜகத்து பார மார்த்திக ஸத்யமானவைகள், பொய்யல்ல என்று சித்தமா கிறது. இவ்விஷயத்தை தர்மப்ரபுக்கள் விசாரம் செய்யவேணு மாய்க் கோருகிறோம்.

---

# ஸம்யமினீபுரம் ஹைகோர்ட்.

## ஸிவில்ஸூட்

O. S. No. 564 of 1927.

2-B. இஷ்யூ.

| | | | | |
|---|---|---|---|---|
| விஷ்ணுதாஸாசார்யர் | ... | ... | ... | வாதி. |
| கங்காதர சாஸ்திரியார் | ... | ... | ... | பிரதிவாதி. |

---

# வாதி விசாரணை

(25-6-1927.)

வா. வ:—ஆசார்யரே! ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமா அல்லது மித்யையா?

வா. வி:—ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமே.

வா. வ:—இவ்விஷயத்திற்கு ஆதாரமென்ன?

வா. வி:—சுருதி, அபாதிதமான (கெடுதலில்லாத) பிரத்யக்ஷம், அனுமானம் இவைகளே ஆதாரங்கள்.

வா. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ஸத்யத்வத்தைச் சொல்லும் சுருதி யாது?

வா. வி:—(1) "அதரதான் ரதயோகான் பத:ஸ்ருஜதே அதானந்தான் முத: பிரமுத: ஸ்ருஜதே...அதவேசாந்தான் புஷ்கரிணீ: ஸ்ரவந்தீ: ஸ்ருஜதே...ஸஹிகர்தா" (பிரஹ. 4-3-10.); (2) "ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:...ததேவ சுக்ரம் தத்பிரஹ்ம ததேவாம்ருதமுச்யதே. தஸ்மின்லோகா: ஶ்ரிதாஸ்ஸர்வே ததுநாத்யேதி கஶ்சன ஏதத்வை தத்"(கா.5-8.); "யதா கர்மஸு காம்யேஷு ஸ்திரியம் ஸ்வப்னேபி பஶ்யதி ஸம்ருத்திம் தத்ர ஜானீயாத் தஸ்மின் ஸ்வப்ன நிதர்ஶனே" (சாங். 5-2-8.) "புருஷம் கிருஷ்ணம் கிருஷ்ணதந்தம் பஶ்யதி ஸ யேனம் ஹந்தி" (ஐ. 3-2-4-17.) இதுகளே முதலான அனேக சுருதிகளிருக்கின்றன.

வா. வ:—இவைகளின் அர்த்தமென்ன? இதினால் என்ன சித்தமாகிறது?

வா. வி:—(1) ஈஶ்வரன் இரதம், குதரை மார்க்கம் ஆனந்தம் ஸரோவராதிகள் இவைகளை சிருஷ்டிக்கிறான். ஈஶ்வரன் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறவனாகையால் ஸ்வாப்ன பதார்த்தங்களையும் சிருஷ்டிக்கிறவனாகிறான் என்று பிரஹதாரண்யகச் சுருதியின் அர்த்தம். (2) எந்த பரமாத்மன் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்க (மனது தவிர மற்ற எல்லா இந்திரியங்களும்

உபரமமாயிருக்க, ஜனங்களுக்கு அபேக்ஷிதமான புத்ராதிகளை சிருஷ்டிக்கிறான். அப்பரமாத்மனே எல்லா உலகத்திற்கும் ஆஸ்ரயன் என்று காடக சுருதியின் அர்த்தம்.(3) ஸ்வப்பனத்தில் ஸ்த்ரீயைப்பார்த்தால் அம்மனிதனுக்கு அபேக்ஷிதமானவஸ்து பிராப்தமாகிறது என்று சாந்தோக்ய சுருதியின் அர்த்தம். (4) ஸ்வப்னத்தில் எந்த மனிதன் கருத்த தந்தங்களையுடைய கருத்த புருஷனைப் பார்க்கிருனோ அம்மனிதனை ஸ்வப்னத்தில் பார்க்கப்பட்ட புருஷன் கொல்லுகிறான் என்று ஐதரேய சுருதியின் அர்த்தம். இவ்விதமாக ஸ்வாப்ன பதார்த்தங்கள் இஷ்டானிஷ்ட பதார்த்தங்களுக்குக் காரணங்களாகின்றன. ஆகையால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு அர்த்தக்ரியா காரித்வம் சுருதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானவைகளென்று சித்தமாகிறது.

வா. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ஸத்தியத்வத்தை அறிவிக்கும் பிரத்தியக்ஷம் யாது?

வா. வி:—ஜாக்ரதவஸ்தையில் "கடஸ்ஸன் படஸ்ஸன்" இது முதலிய பிரத்தியக்ஷத்தினால் அறியப்படும் கடபடாதி பதார்த்தங்கள் எப்படி ஸத்தியமென்று சித்தமாகிறதோ; அப்படியே ஸ்வப்னவஸ்தையிலும் 'கஜ:ஸன் கட:ஸன்' என்று பதார்த்தங்கள் ஸத்தியமென்றே அறிந்து வருகிறபடியால் ஜாக்ரத் பதார்த்தங்களைப்போலவே ஸ்வப்னவஸ்தையில் அறியப்படும் பதார்த்தங்களும் ஸத்தியமானவைகளென்றே சித்தமாகிறது.

வா. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கும் அனுமானம் யாது?

வா. வி:—"ஸ்வாப்ன கஜாதிகம் ஸத்யம் அர்த்தக்ரியா காரித்வாத், ஈஸ்வர சிருஷ்டத்வாத் ஜாக்ரத் பதார்த்த வத்" ஜாக்ரத் பதார்த்தங்கள் ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டதினாலும், பதார்த்தங்களை உண்டாக்குகிறதினாலும் எப்படி ஸத்தியமானவைகளோ, அப்படியே ஸ்வாப்ன கஜாதிகளும் ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதினாலும், ஸ்வாப்ன காமினீஸம்போகாதி பதார்த்தங்கள்

ரேதோத்ஸர்ஜனுதி கார்யங்களை உண்டாக்குகிறதினாலும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானவைகளென்று சித்தமாகிறது.

---

## கிராஸ் எக்ஸாமினேஷன்.

---

*பி. வ:*—ஆசார்யரே! 'வைதர்ம்யாச்ச ந ஸ்வப்னாதிவத்' (பிர. ஸூ. 2-2-29) இச்சூத்திரத்தைப் பார்த்திருக்கிறீரா?

*வா. வி:*—பார்த்திருக்கிறேம்.

*பி. வ:*—இச்சூத்திரம் எதற்காக ப்ரவ்ருத்தமாயிருக்கிறது?

*வா. வி:*—'கட: ஸன் பட: ஸன்' இது முதலிய பிரத்தியக்ஷப் பிரமாணங்களினால் கடபடாதி எல்லா ஜகத்துக்கும் ஸத்யத்வம் சொல்லப்படுகிறபடியால் ஜகத்து ஸத்தியமென்று அங்கீகரிக்க வேண்டும் என்று ஸூத்திரகாரர் பௌத்தர்களைக் குறித்துச் சொல்லவே, ஜாக்ரத்காலீன கடபடாதி எல்லா பதார்த்தங்களும் ஸத்யமானவைகளென்று அறியவருகிறபடியால் அவைகளை ஸத்யமென்று ஒப்புக் கொள்ளுவதாயின், ஸ்வப்னாவஸ்தையில் ஸத்தியமென்று அறியப்படும் ஸ்வாப்ன பதார்த்தங்களும் ஜாக்ரத்காலத்தில் ஸத்தியமென்று அறிந்துவரும் சுக்திரஜதாதி பதார்த்தங்களும் ஸத்தியமானவைகளென்று ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அவைகள் ஸத்தியமானவைகளென்று யாரும் எப்படி ஒப்புக்கொள்ளுகிறதில்லையோ அப்படியே ஜாக்ரதவஸ்தையில் ஸத்தியமென்று அறிந்துவரும் கடபடாதி பதார்த்தங்களும் ஸத்தியமானவைகளென்று ஒப்புக்கொள்ளவேண்டியதில்லை என்று பௌத்தர்கள் ஆக்ஷேபிக்கவே அவ்வாக்ஷேபத்தை நிராகரிப்பதற்காக இச்சூத்திரம் ப்ரவ்ருத்தமாயிற்று.

*பி. வ:*—இச்சூத்திரத்தின் அர்த்தமென்ன?

*வா. வி:*—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கும், சுக்தி ரஜதத்திற்கும் பாதஞானம் (முக்காலத்திலும் இல்லாதது என்கிற ஞானம்) வருகிறதினால் ஸ்வப்னத்தில் ஸத்யமென்று அறியப்படும் ஸ்வாப்ன பதார்த்தங்களும், ஜாக்ரத் காலத்தில் இவைகள் உண்டென்று

தெரிந்துவரும் சுக்திரஜதாதி பதார்த்தங்களும் ஸத்தியமானவை களென்று ஒப்புக்கொள்ளக்கூடாது. * ஜாக்ரத்காலத்தில் ஸத்திய மென்று அறியப்படும் கடபடாதி பதார்த்தங்களுக்கு முக்காலத்தி லும் இல்லாததென்கிற பாதஞானம் வருகிறதில்லை. ஆகையால் அவைகள் ஸத்தியமானவைகளென்று ஒப்புக்கொள்ள வேண்டும் என்று அர்த்தம்.

பி. வ:—ஆசார்யரே! இச்சூத்திரம் ஸ்வாப்னபதார்த்தம் பாதி தம் (மித்யை) என்று சொல்லுகிறதா இல்லையா?

வா. வ:—எந்த ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு இது மித்யை ஸத்தியமல்ல என்கிற பாதக ஞானம் வருகிறதோ அப்பதார்த் தங்கள் மித்யை என்று இச்சூத்திரம் சொல்லுகிறதே யொழிய எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களும் மித்யை என்று சொல்லுகிற தில்லை.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களில் சிலதுமாத்திரம் மித்யை என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

வா. வி:—எந்த ஸ்வாப்ன பதார்த்தங்களின் மித்யாத்வ விஷ யத்தில் பிரமாணமிருக்கிறதோ அந்த ஸ்வாப்ன பதார்த்தத்தை மித்தை என்று நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்.

பி. வ:—சில ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு மித்யாத்வத்தைச் சொல்லும் பிரமாணம் யாது?

வா. வி:—"ஸ்வப்னே.........ஸச்சாஸச்ச ஸர்வம் பஶ்யதி" (ஷட்ப்ரஶ்னம் 4. 5.) இச்சுருதி ஸ்வப்னுவஸ்தையில் ஜீவன் ஸத் (ஸத்திய) பதார்த்தங்களையும் அஸத் (அஸத்திய) பதார்த்தங்களை யும் காணுகிறானென்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. ஸ்வப்னு வஸ்தையிலாவது ஜாக்ரதவஸ்தையிலாவது காணப்படும் பதார்த் தங்களில் எந்த பதார்த்தம் பாதிதமாகிறதோ அது மித்யை. எது பாதிதமாகிறதில்லையோ அது ஸத்தியமானது. பாதிதமாகிறபடி யால் சுக்திரஜதாதி பதார்த்தங்கள் ஜாக்ரதவஸ்தையில் இருக்கிற

* ஙாவம் ஜாகரிதோபலப்தம் வஸ்து ஸ்தம்பாதிகம் கஸ்யாஞ்சிதப்ய வஸ்தாயாம் பாத்யதே.

தென்று தெரிந்துவந்தபோதிலும் அது ஸத்தியமென்று ஒப்புக்கொள்ளுவதில்லை. இரதாதிகள் ஸ்வப்னுவஸ்தையில் காணப்படுபவைகளாயினும் அவைகளுக்கு பாதகஞானம் இல்லாததினல் அவைகளை ஸத்தியமானவைகளென்றே ஒப்புக்கொள்ளவேண்டும்.

பி. வ :—எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கும் ஜாக்றத் காலத்தில் பாதை வருகிறதில்லையோ?

வா. வி.:—எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களும் மித்யை என்கிற பாதஞானம் வருகிறதில்லை. 'நேதம் ஜாக்றத் கிந்து ஸ்வாப்னமேவ' என்று ஸ்வப்னுவஸ்தையில் காணப்படும் பதார்த்தங்கள் ஜாக்ரத் காலத்தில் காணப்படும் பதார்த்தங்களல்ல. ஸ்வாப்னகாலத்தில் உள்ளவைகளேயாகும், என்றே ஞானம் வருகிறதேயொழிய, நாத்ரரஜதம்= இங்கு வெள்ளி இல்லை என்கிற பாதஞானத்தைப்போல், நாத்ரவஸ்து = இங்கு ஸ்வாப்னுவஸ்தையில் பதார்த்தமே இல்லை என்று பாதஞானம் வருகிறதில்லை. ஆகையால் ஸ்வப்னகாலத்தில் காணப்படும் பதார்த்தத்தினிடத்தில் இது ஜாக்ரத் காலத்தில் பார்த்த பதார்த்தமே என்கிற ஜாக்ரத் பதார்த்தத்தின் எந்த அபேதம் காணுகிறதோ அந்த அபேதமே பாதிதமாகிறது, ஸ்வாப்ன பதார்த்தத்தின் ஸ்வரூபமே பாதிதமாகிறதில்லை.

ஸ்வப்னகாலத்தில் எந்த பதார்த்தம் காணப்படுகிறதோ அது ஸ்வப்னகாலத்தில் இருந்த பதார்த்தமே யொழிய ஜாக்ரத் காலத்தில் காணப்படும் பதார்த்தமல்ல, என்கிற ஞானம் வருகிறதிலேயே அப்பதார்த்தங்கள் மித்யை என்று சொல்லுவதாயின்—வைசாகமாதத்தில் பார்க்காமலிருந்த மனிதன் விஷயத்தில் இம்மனிதன் வைசாக மாதத்தில் என்னல் பார்க்கப்பட்ட மனிதன் என்கிற ஞானமுண்டாய், சிலகாலங்களுக்குப் பிறகு இம்மனிதன் வைசாக மாதத்தில் என்னல் பார்க்கப்பட்டவனல்ல, கார்த்திக மாதத்தில் பார்க்கப்பட்டவன் என்று பாதஞானம் வருமாயின் அம்மனிதன் மித்யை என்று ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அம்மனிதனே மித்யையாகிறதில்லை. அம்மனிதனிடத்தில் தோன்றிய வைசாகமாத வ்ருத்தித்வம் எப்படி மித்யையாகி

றதோ அப்படியே ஸ்வப்னத்தில் பார்த்த கஜாதிபதார்த்தங்கள் ஜாக்ரத்காலத்தில் பார்த்தவைகளல்ல என்று பாதஞானம் வருமாயின் அந்த ஸ்வாப்ன பதார்த்தத்தினிடத்தில் காணப்படும் ஜாக்ரத்கால வ்ருத்தித்வம் (ஜாக்ரத்காலத்தில் இருக்கும் தன்மை) மாத்திரம் மித்யை யாகிறது. ஸ்வப்ன காலத்தில் காணப்படும் பதார்த்தமே மித்யை என்று அந்த பாத ஞானத்தினால் ஸித்தமாகிறதில்லை. (அந்த பாத ஞானம் எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களும் மித்யை = அஸத் என்று தெரிவிக்கிறதில்லை.)

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களை உண்டாக்கும் உபாதான காரணங்கள் இல்லையல்லவா?

வா. வி:—ஏனில்லை, உபாதான காரணமுண்டு.

பி. வ:—ஸ்வாப்ன கடபடகஜதுரகாதி பதார்த்தங்களுக்கு உபாதான காரணம் யாது?

வா. வி:—முன் அந்தந்த பதார்த்தங்களின் சிரவண தர்சனாதிகளினால் உண்டாயிருக்கும் ஸம்ஸ்காரம்தான் உபாதான காரணம்.

பி. வ:—ஸம்ஸ்காரம் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு உபாதான காரணமென்று உங்களுக்கு எப்படித்தெரியும்?

வா. வி:—நம்மாசார்யரிட உபதேசத்தினாலும், பிரமாண வாக்கியங்களினாலும், அதிகமாகச் சொல்லுவதென்ன, சங்கராசார்யரிட கிரந்தத்தினாலும் இவ்விஷயம் தெரியவருகிறது. இது பிரசித்தமான விஷயம் தான். எல்லாருக்கும் சம்மதமே.

பி. வ:—ஸ்வப்னகாலத்தில் சக்ஷுராதி இந்திரியங்கள் உபரதமாக = வியாபார ரஹிதமாக இருப்பதால் பதார்த்தங்களின் தர்சனம் முதலியவைகள் எப்படிப் பொருந்தும்?

வா. வி:—'ஸ்வப்னே...ஸச்ச அஸச்ச ஸர்வம் பச்யதி' என்கிற இச்சுருதி ஸ்வாப்ன பதார்த்தங்களை ஜீவன் ஸ்வப்னாவஸ்தையில் காணுகிறானென்று சொல்லுகிறது. மற்றும் எல்லோருக்கும் ஸ்வாப்ன பதார்த்தத்தின் ஞானம் அனுபவ ஸித்தமானதினால்

அந்த ஞானம் எப்படிப் பொருந்தும் என்கிற ஆக்ஷேபத்திற்கு அவகாசமே இல்லை.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானம் உண்டென்று அங்கீகரிக்கலாம். அதற்குக் காரணம் யாது? அதைச்சொல்லும்.

வா. வ:—இந்தக் கேள்வி தற்காலம் அனுபயுக்தமானது. ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானம் ஸ்வப்னாவஸ்தையில் உண்டென்பது ஸர்வானுபவ சித்தமாயிருக்கிறது. ஆகையால் அதற்கு காரணம் ஏதாவது இருக்கவேவேணும். தற்காலம் அதின் பெயரைச் சொல்லுவதினால் ஒன்றும் பிரயோஜனமில்லை யாகையால் இத்தகைய வீண் கேள்விகளைக் கேள்க்கக்கூடாதென்று கோர்ட்டார் உத்திரவு செய்யக் கோருகிறேன்.

கோர்ட்:—அவரிட கேள்விக்குப்பதில் ஆசார்யருக்கு தெரிந்திருக்குமாயின் சொல்லவேணும். தெரியாவிடில் தெரியாதென்று சொல்லவேணும். தற்காலம் அதின் பிரயோஜனம் உண்டு இல்லை என்கிற விஷயத்தின் விசாரம் கோர்ட்டாருக்குச் சேர்ந்தது. முன்வேலை நடக்கட்டும். ஆசார்யரே, அக்கேள்விக்கு பதில் சொல்லும்.

வா. வ:—அப்படியே பிரபுக்களின் உத்தரவாயின் சொல்லுகிறார்.

மிஸ்டர் சர்மா! ஸ்வாப்னபதார்த்தங்களின் தர்சனம் பொருந்துகிறதில்லை என்பது ஆக்ஷேபணையா அல்லது பிரஶ்னமா?

பி. வ:—ஆக்ஷேபணை தான், சமாதானம் சொல்லட்டும்.

வா. வி:—ஸ்வப்னகாலத்தில் மனோரூபமான இந்திரியத்தின் உபரமமில்லை. ஆகையால் ஜீவன் மனதினால் ஸ்வாப்ன பதார்த்தங்களைக் காண்கிறான்.

பி. வ:—ஜீவன் மனதினால் ஸ்வாப்னபதார்த்தங்களைக் காணுகிறானென்று நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்?

வா. வி:—“இந்திரியாணாமுபரமே மனோனுபரதம்யதி ஸேவதே விஷயானேவ தத்வித்யாத் ஸ்வப்ன தர்ஶனம்” என்றால் இதரேந்த்ரியங்கள் உபரதமாய் மனது உபரதமாகாமலிருக்கும்போது

ஜீவன் விஷயங்களை அனுபவிப்பதற்கே ஸ்வப்ன மென்கிறார்கள் என்று சங்கராசார்யரே (2-3-40) வது ஸூத்ர பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறாரல்லவா?

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களை உண்டுபண்ணுகிறவன் யார்?

வா. வி:—ஈஶ்வரன் உண்டுபண்ணுகிறவனென்று சுருதி சொல்லுகிறது.

பி. வ:—ஈஶ்வரன் ஸகுணனா நிர்குணனா? (நிர்த்தர்மகனா?)

வா. வி:—இக்கேள்வி தற்காலம் அனுபயுக்தமாகையால் இதற்கு பதிலளிக்கப்படமாட்டாது.

பி. வ:—(To the court) மைலார்ட்! பிரஹ்மம் நிர்தர்மக (நிர்குண) மாயின் வாதி சொல்லியவாறு அப்பிரஹ்மனுக்கு ஸ்வாப்ன பதார்த்தங்களின் கர்த்ருத்வம் பொருந்தாதாகையால் இக்கேள்விக்குவாதி பதிலளிக்கவேணுமாய் கோர்ட்டார் உத்திரவு செய்ய வேணுமாய்க் கோருகிறோம்.

கோர்ட்:—ஆசார்யரே! அவரிடகேள்விக்கு பதில்சொல்லும்.

வா. வி:—உலகத்தில் நிர்த்தர்மகமான பதார்த்தமே கிடையாது. அப்படியிருக்க பிரஹ்மம் ஸகுணமா நிர்குணமா (நிர்த்தர்மகமா) என்கிற கேள்விக்கே அவகாசமில்லையே.

பி. வ:—சசவிஷாணத்தினிடத்தில் தர்மமுண்டோ?

வா. வி:—ஆஹா! அஸத்வ ரூபதர்மமும், ஞேயத்வாதி தர்மங்களுமுண்டு.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்கள் பூர்வக்ஷணத்தில் கிடையாது. உத்திரக்ஷணத்தில் கிடையாது. மத்தியில் ஸ்வப்ன காலத்தில் உண்டாய் உடனே நஷ்டமாவது எப்படிப் பொருந்தும்?

வா. வி:—ஐயா! மின்னல் பூர்வ காலத்திலும் உத்திர காலத்திலும் இல்லாமல், மத்ய காலத்தில் உண்டாய் தத்க்ஷணமே நஷ்டமாகிறது. இவ்விஷயம் எல்லோருக்கும் அனுபவ சித்தமாயிருக்கிறது. அவ்விதமே ஸ்வாப்ன பதார்த்தங்களும் தத்க்ஷணத்தில் உண்டாய் நஷ்டமுமடைகின்றன என்று சொல்வதற்கு

யாதொரு பாதகமும் கிடையாது. ஆகையால் பரமாத்மனால் உண்டாக்கப்பட்ட ஸ்வாப்ன பதார்த்தங்கள் எல்லாம் ஸத்தியமானவைகளேயாகும்.

பி. வ:—கிராஸ் இல்லை.

---

## பிரதிவாதி ஸாக்ஷி விசாரணை.

---

(15-7-1927.)

பி. வ:—ஸ்வப்னத்தில் காணப்படும் பதார்த்தங்கள் ஸத்தியமா அல்லது மித்யையா?

பி. ஸா:—ஸ்வப்னத்தில் காணப்படும் பதார்த்தங்கள் மித்யையே.

பி. வ:—மித்யை என்றால் என்ன?

பி. ஸா:—கயற்றில் தோன்றும் ஸர்ப்பத்தைப் போல் முக்காலத்திலுமில்லாத வஸ்து.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஜாக்ரத் காலத்தில் கண்டுவரும் பதார்த்தங்களைப் போன்றவைகளே அல்லவா?

பி. ஸா:—ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஜாக்ரத் பதார்த்தங்களைப் போன்றவைகளல்ல, மித்யையே.

பி. வ:—ஏன் ஜாக்ரத் பதார்த்தங்களைப் போன்றதல்ல?

பி. ஸா:—"மாயா மாத்ரம்து கார்த்ஸ்ந்யேனாநபிவ்யக்ஸ்வரூபத்வாத்" (பிர.ஸூ 3-2-3) என்கிற இச்சூத்திரத்தில் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு (1) உபாதான காரணம், (மாறுதலடையும் காரணம்) (2) அவைகள் ஜாக்ரத் பதார்த்தங்களைப்போல் இருப்பதற்கு யோக்கியமான தேசம் (3) காலம் இவைகள் கிடையாது. (4) நிமித்த காரணம் (கர்த்தா) இல்லை. (5) ஞானமுண்டாவதற்குக் காரணங்கள் (இந்திரியங்கள்) இல்லை. (6) ஸ்வாப்ன பதார்த்தம் முக்காலத்திலும் இல்லை என்கிற பாதக ஞானம் வருகிறது.

ஆகையால் அந்த ஸ்வாப்ன பதார்ந்தம் மித்யை (மாயையால் கல்பிதமானது) என்று சூத்திரகாரர் சொல்லியிருக்கிறார்கை யால், அந்த ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை (எக்காலத்திலு மில்லாதது) ஆகையால் ஜாக்ரத் பதார்த்தத்தைப் போன்றது அன்று.

பி. வ:—ஸ்வாப்னபதார்த்தம் முக்காலத்திலும் இல்லாதவை என்கிற பாதஞானம் எந்த பிரமாணத்தினால் உண்டாகிறது?

பி. ஸா:—சுருதியினாலுண்டாகிறது.

பி. வ:—அந்த சுருதி யாது?

பி. ஸா:—"நதத்ர ரதா ரதயோகா நபந்தானோ பவந்தி, நதத்ர ஆநந்தாமுத: பிரமுதோ பவந்தி, நதத்ர வேசாந்தா புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்யோ பவந்தி" (பிரஹ. 4-3-10) இச்சுருதியே.

பி. வ:—இச்சுருதியின் அர்த்தம் என்ன?

பி. ஸா:—தத்ர=அந்த ஸ்வப்ன காலத்தில், இரதங்கள் இல்லை. இரதத்திற்குக் கட்டும் குதிரைகள் இல்லை, மார்க்கமில்லை, ஸரஸாதிகள் இல்லை என்று அர்த்தம்.

பி. வ:—இந்த சுருதியினால் என்னவென்று சித்தமாகிறது?

பி. ஸா:—ஸ்வப்னாவஸ்தையில் எந்தபதார்த்தங்களும் இல்லை என்று சித்தமாகிறது.

பி. வ:—இதினால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு மித்யாத்வம் எப்படி சித்தமாகிறது?

பி. ஸா:—மித்யை என்றால் எக்காலத்திலும் இல்லாத பதார்த்தம். ஸ்வாப்ன பதார்த்தம் எக்காலத்திலும் இல்லாததி னால் மித்யையாகிறது.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு * உபாதான காரணம் நிமித்தகாரணம் இவைகள் ஏன் இல்லை?

---

* எந்த காரணம் கார்யரூபமாக பரிணதமாகிறதோ அது உபாதான காரணமெனப்படும். மண் குடரூபமாக பரிணமிக்கிறபடியால் குடத்திற்கு மண் உபாதான காரணமெனப்படும்.

எந்த காரணம் பதார்த்த ரூபமாக மாறாமல் பதார்த்தங்களை உண்டாக்குகிறதோ அதுநிமித்த காரணமெனப்படும். குயவன் குடமாக மாறாமல் குடத்தை யுண்டாக்குகிறபடியால் குடத்திற்கு குயவன் நிமித்தகாரண மெனப்படுவான்.

பி. ஸா:—ஸ்வப்ன காலத்தில் ஸ்வாப்ன பதார்த்தங்களை ஒரு நொடியில் உண்டாக்குகிற வல்லமையுடைய நிமித்தகாரணனை புருஷனும், மற்றும் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு உபாதான காரணமும் (இரதாதி ரூபமாக மாருதலடையும் காஷ்டாதி பதார்த்தங்களும்) இல்லாததினால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு நிமித்த காரணமும் உபாதான காரணமும் இல்லை.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு யோக்கியமானதேச காலங்கள் ஏன் இல்லை ?

பி. ஸா:—இரவு படுத்திருக்கும் மனிதன் அப்போதே ஸ்வப்னத்தில் பகலைக் காண்கிறான், அக்காலத்தில் பகல் இருப்பதில்லை. அப்படியே இரதாதி பதார்த்தங்களை தேகத்தில் காண்கிறான். அந்த இரதாதி பதார்த்தங்கள் இருக்கக்கூடுமான இடம் தேகத்தினுள் கிடையாது. ஆகையால் ஸ்வாப்ன பதார்த்தத்திற்கு. யோக்கியமான தேச காலங்கள் இல்லை.

பி. வ:—ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானத்திற்கு காரணம் ஏன் இல்லை.

பி. ஸா:—பதார்த்தங்களின் ஞானத்தை உண்டாக்குகிற சக்ஷுராதி இந்திரியங்கள் ஸ்வப்ன காலத்தில் உபரமித்திருப்பதினால் (தம்மிட வேலைகளைச் செய்யாமலிருப்பதினால்) ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானத்திற்கு காரணங்கள் இல்லை. இவ்விதமாக ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானத்திற்கு காரணங்களும், ஒரு நொடியில் பதார்த்தங்களை உண்டாக்கும் ஸாமர்த்தியமுள்ள புருஷனும், ஸ்வாப்ன இரதாதி ரூபமாக மாருதலடையும் காஷ்டாதி உபாதான காரணங்களும் இல்லை. யோக்கியமான தேச காலங்களும் இல்லை. மற்றும் ஸ்வாப்ன பதார்த்தங்களில்லை என்று அறிவிக்கும் சுருதியுமுண்டு. ஆகையால் ஸவாப்ன பதார்த்தங்கள் மித்யை = முக்காலத்திலுமில்லை என்று சித்தமாகிறது.

---

## வாதி வக்கீல் கிராஸ்.

வா. வ:—ஐயா அவதானிகளே 'நதத்ர ரதா' என்கிற வாக்கியத்தின் உத்தர வாக்கியத்தைப் பார்த்திருக்கிறீரா?

பி. ஸா:—பார்த்திருக்கிறேம்.

வா. வ:—அவ்வாக்கியத்தைச் சொல்லும்.

பி. ஸா:—"நதத்ர ரதா நரதயோகா ந பந்தானே பவந்த்யத ரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே நதத்ராநந்தா முத: ப்ரமுதோ பவந்த்யதாநந்தான் முத: பிரமுத: ஸ்ருஜதே. நதத்ர வேமாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்யோ பவந்தி. அதவேசாந்தான் புஷ்கரிணீ: ஸ்ரவந்தீ: ஸ்ருஜதே ஸஹிகர்தா." (பிரஹ. 4-3-10)

வா. வ:—இச்சுருதியின் அபிப்பிராயமென்ன?

பி. ஸா:—ஸ்வப்னவஸ்தையில் இரதம், குதிரை, மார்க்கம் முதலிய பதார்த்தங்கள் இருக்கவில்லை. அத=பிரகு, பரமாத்மா இரதம் குதிரை முதலிய பதார்த்தங்களை நிர்மாணம் செய்கிறன், ஸஹிகர்தா=அப்பரமாத்மன் எல்லா பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்கிறவன் ஆகையால் ஸ்வாப்ன பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்கிறவன் என்று அபிப்பிராயம்.

வா. வ:—'ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:' என்கிற சுருதி எந்த உபனிஷத்தில் இருக்கிறது.

பி. ஸா:—இச்சுருதி காடகத்தில் (5-8.) இருக்கிறது.

வா. வ:—இதின் அபிப்பிராயம் என்ன?

பி. ஸா:—ஜீவன் தூங்குகையில் எந்த புருஷன் (பரமாத்மா) விழித்திருந்து, ஜனங்களால் அபேக்ஷிக்கப்பட்ட புத்திராதிகளை படைக்கிறன் என்று இச்சுருதியின் அபிப்பிராயம்.

வா. வ:—இவ்விரண்டு சுருதிகளால் ஜாக்ரத் பதார்த்தங்களைப் போல் ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஸ்ருஷ்டியும் பரமாத்மனே செய்கிறன் என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

பி. ஸா:—ஆம் பரமாத்மனே ஸ்வாப்ன பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிருனென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வா. வ:—உங்களுக்கு எத்தனைகுழந்தைகள் இருக்கின்றனர்?

பி. ஸா:—மூன்று குழந்தைகளுண்டு.

வா. வ:—உமக்கு கலியாணம் ஆவதற்குமுன் அவர்களிருந் தார்களா?

பி. ஸா:—கலியாணத்திற்குமுன் குழந்தைகளிருப்பது எப் படி? (இல்லை.)

வா. வ:—அக்குழந்தைகள் எப்போது பிறந்தார்கள்?

பி. ஸா:—கலியாணமானபிறகு ஐந்தாரு வருஷங்களுக்குப் பின் பிறந்தார்கள்.

வா. வ:—உங்களிட குழந்தைகள் ஸ்வாப்னபதார்த்தங்களைப் போல் மித்யையே அல்லவா?

பி. ஸா:—அக் குழந்தைகள் ஸ்வாப்ன பதார்த்தங்களைப் போல் மித்யை எப்படி ஆவார்கள்? அவர்களிருக்கிருர்களல்லவா?

வா. வ:—அக்குழந்தைகள் உம்முடைய கலியாணமாவதற்கு முன் இருக்கவில்லையாகையால் ஏன் மித்யை ஆகக்கூடாது?

பி. ஸா:—அக்குழந்தைகள் கலியாணத்திற்கு முன் இல்லாம லிருந்து, கலியாணத்திற்கு பிறகு பிறந்து இப்பொழுது இருப்பதி ஞல் ப்ராகபாவப்ரதியோகி (முன்னில்லாதிருந்தவர்கள்) ஆகிருர் களே யொழிய, மித்யை (முக்காலத்திலு மில்லாதவர்கள்) எப்படி ஆவார்கள்.

வா. வ:—'நதத்ர ரதா.....அதாதான்' என்கிற சுருதி ஸ்வாப்ன பதார்த்தங்கள் பூர்வம் இல்லாமலிருந்து, அத=பிரகு (ஸ்வப்ன காலத்தில்) ஸிருஷ்டிக்கப்பட்டதென்று சொல்லுகிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு மித்யார்த்வம் (முக்காலத்திலும் இல் லாத் தன்மை) பொருந்துகிறதில்லை யல்லவா?

பி. ஸா:—(பதிலில்லை.)

வா. வ:—(To the Court) பிரபுக்களே! 'ந தத்ர ரதா:' என்கிற சுருதி இரதாதிகள் பூர்வமிருக்கவில்லை. பிறகு ஈஶ்வரனால் சிருஷ்டிக்கப்பட்டதென்று சொல்லுகிறதேயொழிய, முக்காலத்திலுமில்லாதது (மித்யை) என்று சொல்லுகிறதில்லை என்பதை கோர்ட்டார் நோட்செய்யக் கோருகிறேன்.

வா. வ:—அவதானிகளே! 'அதரதான் ரதயோகான்...ஸஹி கர்தா' என்கிற சுருதிக்கு அர்த்தம் என்ன?

பி. ஸா:—பரமாத்மா ஸ்வப்ன காலத்தில் இரதாதிகளை ஸ்ருஷ்டிக்கிறான் என்று அர்த்தம்.

வா. வ:—'ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:' என்கிற சுருதியின் அர்த்தம் என்ன?

பி. ஸா:—ஜனங்கள் தூங்கிக்கொண்டிருக்கையில் பரமாத்மா ஜனங்களால் கோரப்படும் புத்திராதிகளை ஸ்ருஷ்டிக்கிறான் என்று அர்த்தம்.

வா. வ:—இந்த சுருதிகளால் ஸ்வப்னபதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறவன் யார் என்று சொல்லப்பட்டது?

பி. ஸா:—ஈஶ்வரன் ஸ்வப்ன பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறவனென்று சொல்லப்பட்டது.

வா. வ:—'ஸர்வோபேதா ச தத்தர்ஶனாத்' (பிரஹ். ஸு. 2-1-30) இந்த ஸுத்திர பாஷ்யத்தின் பாமதி என்னும் வ்யாக்யானத்தை பார்த்திருக்கிறீரா?

பி. ஸா:—பார்த்திருக்கிறோம்.

வா. வ:—அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

பி. ஸா:—* காஷ்டாதி வெளிபதார்த்தங்களின் அபேக்ஷையில்லாமல், தேகத்திலிருக்கும் அந்தாகாரணத்தி (வாஸனையி) லேயே இரதாதிகளின் ஸ்ருஷ்டி காணப்பட்டு வருகிறது. அந்த ஸ்ருஷ்டி இல்லை என்று அதின் அபலாபம் (மறைப்பு) செய்வதற்கு சாத்தியமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

---

*ததனபேக்ஷாந்தர (பாஹ்யகரணாபேக்ஷாந்தர) கரணமாத்ர ஸாத்யா த்ருஷ்டா ஸ்வப்னே ரதாதி ஸ்ருஷ்டிரசக்யாபன்ஹோதும்.

வா. வ:—'அத ரதான்' இவ்வாக்யத்தின் சங்கர பாஷ்யத்தைப் பார்த்திருக்கிறீரா?

பி. ஸா:—பார்த்திருக்கிறோம்.

வா. வ:—அதில் இரதாதிகளின் உபாதான காரணம் என்னவென்று சொல்லப்பட்டிருக்கிறது?

பி. ஸா:—'அத வேஶாந்தாதீன் ஸ்ருஜதே வாஸனாமாத்ர ரூபான்' (சங். பா.) 'வாசனாமயீஸ்ருஷ்டி:' (ஆநந்.) இது முதலிய வாக்கியங்களினால், ஸ்வாப்ன இரதம் முதலியவைகள் மனோ விருத்தி ரூப வாஸனாபரிணத மானவைகள், பாஹ்யபதார்த்தங்களுக்கு காஷ்டாதிகள் உபாதான காரணமாவதுபோல், ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு வாஸனையே உபாதான காரண மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வா. வ:—வெளி இரதாதிகளுக்கு காஷ்டாதிகள் எப்படி உபாதான காரணமாக இருக்கின்றனவோ, அப்படியே ஸ்வப்னத்தில் காணப்படும் இரதாதிகளுக்கு மனோவிருத்திரூப வாஸனா (ஸம்ஸ்காரம்) உபாதான காரணமென்றும், பரமாத்மன் நிமித்த காரணம் என்றும் சொன்னபிறகு, ஸ்வப்னத்தில் இரதாதிகளை சிருஷ்டிக்கிறவன் இல்லை, உபாதான காரணம் (இரதாகாரமாக பரிணமிக்கும் காரணம்) இல்லை என்று எப்படிச் சொல்லுகிறீர்?

பி. ஸா:—(பதிலில்லை.)

வா. வ:—(To the Court) பிரபுக்களே! ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஸ்ருஷ்டிக்கு கர்த்தா முதலியவைகள் இல்லை என்று சொல்லிக்கொண்டே, மற்றும் இருக்கிறதென்று சொல்லும் விருத்தபாஷணத்தைகோர்ட்டார் நோட்செய்யக் கோருகிறோம்.

வா. வ:—அவதானிகளே! ஸ்வப்னத்தில் நிர்மிக்கப்படும் பதார்த்தங்களுக்கு உபாதான காரணமாக இருக்கும் ஸம்ஸ்காரம் எங்கு இருக்கிறது?

பி. ஸா:—மனதில் இருக்கிறது.

வா. வ:—அம்மனதில் இருக்கும் வாஸனையினால் மாறுதலடைந்த இரதாதிகள், மனதிற்கு ஆதாரமாயிருக்கும் தேஹத்

தில் இருப்பதற்கு யோக்கியமா யிருக்கிறதல்லவா? (வாஸனை பரிணதமான இரதாதிகளிருப்பதற்கு தேகம் யோக்கியமான தேசமாகிறதல்லவா?)

*பி. ஸா:*—வாஸனு பரிணதமான இரதாதிகளிருப்பதற்கு தேகம் யோக்கியமான தேசமாகலாம்.

*வா. வ:*—(To the Court) இவ்விஷயத்தைக் கோர்ட்டார் நோட்செய்ய வேண்டும்.

*வா. வ:*—ஸ்வப்னுவஸ்தையில் பரமாத்மன் இரதாதிகளை எப்படி ஸ்ருஷ்டிக்கிறுனே அப்படியே வஸந்தகாலம், இரவு முதலிய பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கலாமல்லவா?

*பி. ஸா:*—எல்லா பதார்த்தங்களையும் ஸ்ருஷ்டிக்கும் பரமாத்மா வஸந்தகாலம், இரவு முதலியவைகளை ஸ்ருஷ்டிக்கலாம்.

*வா. வ:*—நாங்கள் க்ரீஷ்மகாலத்தில் பகலில் படுத்திருக்கும்போது காணப்படும் ஸ்வப்னத்தில் பரமாத்மனுல் நிர்மிக்கப்பட்ட வஸந்தகாலம், இரவு இவைகள் காணப்படுவதற்கு பாதகமில்லையல்லவா?

*பி. ஸா:*—ஸ்வப்னத்தில் ஸ்ருஷ்டிக்கப்படும் வஸந்தகாலம் இரவு இவைகள் காணப்படுவதற்குப் பாதகமில்லை.

*வா. வ:*—(To the Court) இவ்விஷயத்தைக் கோர்ட்டார் நோட்செய்யக் கோருகிறோம்.

---

## வாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

---

*வா. வ:*—(To the Court) தர்மராஜப்ரபோ! ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்யமானவைகளே யொழிய பொய்யல்ல. ஏனெனில்—

(1) 'அத ரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே..............ஸஹி கர்தா' (பிரஹ. 4-3-10) என்கிற இச்சுருதியில் யார் எல்லா ஜகத்தைப் படைத்தவனே அவனே ஸ்வப்னுவஸ்தையில், இரதம்,

குதிரை, ஸந்தோஷம், ஸரோவரம், நதிகள் முதலியபதார்த்தங்களைப் படைக்கிறான் என்று சொல்லியிருப்பதினால், ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்யமானவைகளென்று சித்திக்கின்றன. மித்யையான (முக்காலத்திலுமில்லாத) பதார்த்தங்களை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கிறானென்று சொல்லுவது பொருந்துகிறதில்லை.

(2) 'ய ஏஷ ஸுப்தேஷு ஜாகர்த்தி காமம் காமம்புருஷோ நிர்மிமாண:' என்கிற காடகச் சுருதி-ஜீவன் தூங்குகையில் பரமாத்மா அந்தந்த புருஷர்களால் அபேக்ஷிக்கப்படும் புத்ராதி பதார்த்தங்களைப் படைக்கிறாரென்று சொல்லுகிறது. ஆகையால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானவைகளென்று சித்தமாகிறது.

(3) 'ஸ்வப்னே ...ஸச்சாஸச்ச பச்யதி' என்கிற ஷட்பிரஸ்ன வாக்கியத்தில்—ஜீவன் ஸ்வப்னாவஸ்தையில் ஸத்தியமான பதார்த்தங்களைப் பார்க்கிறான் என்று சொல்லியிருக்கிறபடியினால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானதென்று சித்தமாகிறது.

(4) 'யதாகர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்னேபி பச்யதி. ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத் தஸ்மின் ஸ்வப்ன நிதர்சனே' என்கிற சாந்தோக்யச் சுருதியும்; 'புருஷம் கிருஷ்ணம் கிருஷ்ணதந்தம் பச்யதி ஸ ஏனம் ஹந்தி' என்கிற ஐதரேயச்சுருதியும் ஸ்வாப்ன பதார்த்தங்கள் சுபாசுபங்களை அறிவிக்கின்றனவென்று ஸ்வப்ன பதார்த்தங்களுக்கு சுபாசுபஸூசகத்வம் (அர்த்தக்ரியாகாரித்வம் = பதார்த்தங்களின் உத்பத்திக்கு காரணத்வம்) சொல்லியிருப்பதினால், 'ஸ்வாப்ன பதார்த்தா: ஸத்யா: அர்த்தக்ரியாகாரித்வாத்' இது முதலிய அனுமானத்தினாலும், ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானவைகளென்று சித்தமாகிறது.

(5) 'கஜ:ஸன், கடஸ்ஸன்' இது முதலிய அபாதிதமான ப்ரத்யக்ஷத்தினால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமானவைகளென்று சித்தமாகிறது. இவ்விதமாக ஸ்வாப்ன பதார்த்தங்கள் ஸத்தியமாயிருக்கிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தங்களைப்போல் ஜகத்மித்யை என்று பிரதிவாதி சொல்லுவது சரியானதல்ல என்பதைக் கோர்ட்டார் நோட் செய்ய வேண்டியதாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

## பிரதிவாதி வக்கீல் ஆர்க்யுமெண்ட்.

பி. வ:—(To the Court) யுவர் ஆனர்! ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை (பொய்) யானவை. ஸத்யமானவைகளல்ல. ஏனெனின்:—

(1) ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு உபாதான காரணம் (ஸ்வாப்ன பதார்த்த ரூபமாக மாறுதலடையும் பதார்த்தம்) இல்லாததினுல் ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை.

(2) ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்கள் இருப்பதற்குப் போதுமான இடம் தேகத்திலில்லாததினுல் தேகத்தில் காணப்படும் ஸ்வாப்ன இரதாதிகள் மித்யை யானவை.

(3) ஸ்வப்ணுவஸ்தையில் இராக்காலத்தில் காணப்படும் பகலும், வஸந்தருதுவில் காணப்படும் க்ரீஷ்மருதுவும் இல்லை, ஆகையால் அந்த ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை.

(4) ஒரு நொடியில் விசித்ரமான நாணுவிதமான ஸ்வாப்ன பதார்த்தங்களை நியமிக்கும் புருஷன் இல்லாததினுல் ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய்யானவைகள்.

(5) ஸ்வப்ணுவஸ்தையில் எல்லா இந்திரியங்களும் உபாமித்திருப்பதினுல் ஸ்வாப்ன பதார்த்தங்களை அறிவிக்கும் இந்திரியங்களில்லாததினுல் ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய்யானவைகளே.

(6) நேதம் ரஜதம் = இது வெள்ளியல்ல என்கிற பாதக ஞானம் உண்டாகிறபடியால், முத்துச் சிப்பியினிடத்தில் தோன்றும் வெள்ளி எப்படி பொய்யோ, அப்படியே 'நதத்ர ரதா: ந ரதயோகா: ந பந்தாநோ பவந்தி; ந தத்ர ஆனந்தா: முத: ப்ரமுதோ பவந்தி, ந தத்ர வேஶாந்தா: புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்யோ பவந்தி' என்கிற 4-3-10 வது பிரஹதாரண்யக வாக்கியத்தினுல் ஸ்வாப்ன பதார்த்தங்களில்லை என்று பாதக ஞானமுண்டாகிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யையானவை, ஸத்தியமல்ல என்று 'மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேனுனபிவ்யக்த ஸ்வரூபத்வாத்' என்

கிற பிரஹ்மஸூத்ரத்தில் பாதராயணாசார்யார் சொல்லியிருக்கிறு ராகையால், ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை, ஸத்யமல்ல.

(7) 'வைதர்ம்யாச்ச ந ஸ்வப்நாதிவத்' என்கிற ஸூத்ரத்தில் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு விழித்த உடனே 'நேதம் ஜாக்ரத் இந்து ஸ்வாப்ன மேவ' என்று பாதக ஞானமுண்டாகிறதினாலும் ஸ்வாப்ன பதார்த்தம் பொய்யென்று சொல்லியிருக்கிறபடியினாலும் அந்த ஸ்வாப்ன பதார்த்தங்கள் பொய், ஸத்யமல்ல.

'ஸ்வப்னே......ஸச்ச அஸச்ச பஶ்யதி' என்கிற ஷட்ப்ரஶ்ன சுருதி ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ப்ராதிபாஸிகஸத்யத்வத்தை (பொய்ஸத்யத்வத்தை) அறிவிக்கிறதாகையால் அந்த சுருதியினால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு பாரமார்த்திக ஸத்யத்வம் சித்தமாகிறதில்லை.

---

## வாதி வக்கீல் ரீ ஆர்க்யுமெண்ட்.

---

வா. வ:—(To the Court) மைலார்ட்! பிரதிவாதியினால் 'மாயாமாத்ரம்து' என்கிற ஸூத்திரத்திற்கு சங்கராசார்யார் செய்திருக்கும் வ்யாக்யானத்தின்படிக்கு ஸ்வாப்ன பதார்த்தம் மித்யை என்று சொல்லுவதற்காக சொல்லிய ஆறு காரணங்களும் அயுக்தமும், ஸ்வவ்யாஹதமும் (தான் ஒப்புக் கொண்டிருப்பதற்குத் தானே, விருத்தமாகச் சொல்லுவதும்) ஆகிறது. எப்படியெனின்:—

(1) இந்த பிரஹதாரண்ய கோபநிஷத் பாஷ்யத்தில் 'வாஸனாமாத்ரரூபான்' 'வாஸனாமயீ ஸ்ருஷ்டி:' என்கிற வாக்யங்களால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு ஸம்ஸ்காம் (வாஸனா) உபாதான காரணமாக இருக்கிறது என்று தாமே சொல்லி, இச்சூத்ர பாஷ்யத்தில் ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்களுக்கு உபாதானகாரணம் (இரதாதி ரூபமாக மாருதலடையும் காரணம்) இல்லையாகையால் ஸ்வாப்ன இரதாதி பதார்த்தங்கள் மித்யை (பொய்) என்று

சொல்லுவது அயுக்தமும், ஸ்வவ்யாஹதமுமாகிறது. அப்படியே சங்கர பாஷ்யத்தின் வ்யாக்யான கர்த்தாவாகிய, அத்வைதிகளில் பெரிய பண்டிதரென்று சொல்லிக் கொள்ளப்பட்டிருக்கும் பாமதீ காரர் 2-1-31-வது பிரஹ்மஸூத்ர வ்யாக்யானத்தில் 'அந்த: கரண ஸாத்யா த்ருஷ்டா ஸ்வப்னே ரதாதி ஸ்ருஷ்டி ரஸக்யாபஹ்நோதும்' என்கிற வாக்கியத்தினால் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு தேகத்திலிருக்கும் மனதினால் பரிணதமான வாஸனாரூப காரணங்களினால் இரதாதிகள் உண்டாகின்றன என்று சொல்லியிருப்பதினால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யை என்கிற விஷயத்தில் ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கு உபாதான காரணம் இல்லை என்று சொல்லிய முதலாவது காரணம் யுக்தமல்ல.

(2) அப்படியே—ஸ்வாப்ன இரதாதிகளுக்கு தேகத்திலிருக்கும் மனோஜன்யமான வாஸனையே (ஸம்ஸ்காரமே) காரணமாயிருக்கிறதென்று சொல்லியிருப்பதினால் தேகத்திலிருக்கும் மனதின் வாஸனையினால் பரிணதமான இரதாதிகளுக்கு வேண்டியளவு இடம் தேகத்தில் இருப்பதற்கு ஒன்றும் பாதகமில்லையாகையால் 'ஸ்வாப்ன ரதாதி பதார்த்தங்களுக்கு யோக்யமான (இருப்பதற்கு போதுமான) ஸ்தலம் தேகத்திலில்லாததினால் தேகத்தில் காணப்படும் இரதாதிகள் மித்யை என்று சொல்லிய இரண்டாவது காரணமும் யுக்தமல்ல.

(3) தேகத்தில் ஸ்வாப்ன இரதாதிகளை எப்படி பரமாத்மா ஸ்ருஷ்டிக்கிறானோ அப்படியே பகலையும், க்ரீஷ்ம ருதுவையும் ஸ்ருஷ்டிக்கிறான். ஆகையால் ஸ்வப்னத்தில் ராத்ரி காலத்தில் பகலையும், வஸந்த ருதுவில் க்ரீஷ்மருதுவையும் காணுவதற்கு பாதகமில்லை. ஆகையால் ராத்திரி படுத்த மனிதன் ஸ்வப்னத்தில் பகலைக் காண்கிறான், வஸந்த ருதுவில் படுத்தமனிதன் ஸ்வப்னத்தில் க்ரீஷ்மருதுவைக் காண்கிறான். அப்போது பகலும் க்ரீஷ்ம ருதுவுமிருக்கிறதில்லை. ஆகையால் ஸ்வப்னத்தில் காணப்படும் காலமில்லாததினால் அது பொய்யென்று சொல்லிய மூன்றாவது காரணமும் யுக்தமல்ல.

(4) 'ஸஹிகர்தா' என்கிற சுருதியில் ஈச்வரனே ஸ்வாப்ன பதார்த்தங்களின் கர்த்தா (காரணன்) என்று சொல்லப்

பட்டிருக்கிறபடியாலும், 'ஸர்வோ பேதாச தத்தர்சனுத்' (பிர-ஸூ. 2-1-30) என்கிற ஸூத்ரத்தில் 'ஸர்வகர்மா' 'ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரஶாஸனே கார்கி' இத்யாதி ப்ரமாணங்களை உபன்யஸித்து ஈஶ்வரனுக்கு விசித்ர ஸாமர்த்ய மிருக்கிறதென்று சங்கராசார்யர் ஒத்துக் கொண்டிருக்கிறபடியால், ஒரு நொடியில் ஸ்வாப்ன பதார்த்தங்களை உண்டாக்கக்கூடிய ஸமர்த்தனை புருஷனிருக்கிருனென்று சித்தமாய்க் கொண்டிருக்க "ஒரு நொடியில் ஸ்வாப்ன பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கும் புருஷனில்லாததினுல் அப்பதார்த்தங்கள் பொய்" என்று சொல்லிய நாலாவது காரணம் யுக்தமல்ல.

(5) ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானமுண்டாவது எல்லோருக்கும் அனுபவ சித்தமாயிருக்கிறது. காரணமில்லாமல் கார்யமுண்டாவது அஸம்பாவிதமானதாகையால் அந்த ஞானத்திற்குக் காரணமிருக்கிறதென்று எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். அக் காரணம் யாது என்று விசாரிக்குங்கால்— ஸ்வப்ன காலத்தில் மனது உபரதமாகிறதில்லை யாகையால், மனதே காரணமென்று சொல்ல வேண்டும். 2-3-40-வது ப்ரஹ்ம ஸூத்ர வ்யாக்யானத்தில் 'இந்த்ரியாணுமுபரமே மனேனுபரதம்யதி, ஸேவதே விஷயானேவ தத்வித்யாத் ஸ்வப்ன தர்ஶனம்' என்கிற ஸ்ம்ருதியை உதாகரித்து ஸ்வப்னத்தில் மனது உபரமிக்கிறதில்லை. அந்த மனதினுல் ஜீவன் வாஸனுபரிணதமான பதார்த்தங்களை அனுபவிக்கிருன். அதுவே ஸ்வப்ன தர்சனமென்று சங்கராசார்யர் எழுதியிருக்கிருர். ஆகையால் "ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஞானத்திற்கு காரணமில்லாததினுல் அது மித்யை" என்று சொல்லிய ஐந்தாவது காரணம் யுக்தமல்ல.

(6) 'ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தானே பவந்தி, அத ரதான் ரதயோகான் பத: ஸ்ருஜதே' என்கிற சுருதி அவ்விடத்தில் முதலில் இரதாதிகளிருக்க வில்லை. அத=பிறகு, ஈஶ்வரன் இரதாதிகளை ஸ்ருஷ்டிக்கிருன் என்று சொல்லுகிறபடியால் இரதாதிகள் பூர்வத்திலிருக்க வில்லை (ப்ராகபாவ ப்ரதியோகி=பூர்வமில்லாமலிருக்கை) என்று சித்தமாகிறதே யொழிய, எப்போதுமில்

லாதது = மித்யை, அத்யந்தாபாவ ப்ரதியோகி, என்று சித்தமாகிற தில்லை. எப்படி யெனின்:—

பூர்வத்தில் இருக்கவில்லை பிறகு பிறந்தன என்று சொன்ன மாத்திரத்தினுல் அந்த பதார்த்தம் பொய்யாகுமாயின்— கலியாண மாகாததிற்குமுன் குழந்தைகளிருக்கவில்லை, பிறகு பிறந்தார்க ளென்று சொன்னுல் அக்குழந்தைகளும் மித்யையாக வேண்டி வரும். மற்றும் பூர்வத்தில் B. A ஆயிருக்கவில்லை இப்போது B. A. ப்யாஸ் ஆயிற்று; பூர்வத்தில் வீடு இருக்கவில்லை, இப்போது வீடு கட்டப்பட்டது என்று சொன்ன மாத்திரத்தினுல் B. A. பொய், வீடும் பொய் என்று சொல்ல வேண்டியதாகும். ஆகையால் இந்த சுருதி பூர்வத்தில் இரதாதிகள் இருக்கவில்லை, பிறகு உண்டாக்கப்பட்டதென்று சொல்லுகிறதினுல், ஸ்வாப்ன ரதாதிகள் எப்போது மில்லாதவைகள் (மித்யை) என்று சித்தமாகிற தில்லை. ஆகையால் ஸ்வாப்ன இரதாதிகளுக்கு 'நதத்ர ரதா:' என்கிற ஶ்ருதியினுல் பாதக ஞானம் (ஸ்வாப்னரதாதிகள் எப்போது மில்லாதவென்கிற ஞானம்) உண்டாகிறதில்லை. ஆகையால் 'இதம் ரஜதம்' என்கிற ஞானத்திற்கு 'நேதம் ரஜதம்' என்கிற பாதக ஞானம் உண்டாகிறபடியால் எப்படி அந்த ரஜதம் ஒப்புக்கொள் ளக்கூடாதோ அப்படியே 'ந தத்ர ரதா: ந ரதயோகா:' என்கிற சுருதியினுலேயே ஸ்வாப்ன இரதாதிகள் முக்காலத்திலும் இல் லாதவைகளென்று பாதகஞானம் உண்டாகிறபடியால் ஸ்வாப்ன பதார்த்தம் மித்யை என்று ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொல்லிய ஆருவது காரணமும் யுக்தமல்ல. ஆகையால் சங்கராசாரி யர் செய்த ஸூத்ரார்த்தம் சரியல்ல.

(7) 'வைதர்ம்யாச்ச நஸ்வப்னுதிவத்' என்கிற ஸூத்ரத்தில் எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களுக்கும் பாதகம் வருகிறதென்று ஸூத்ரகாரர் சொல்லவில்லை. எல்லா ஸ்வாப்ன பதார்த்தங்களும் பொய் என்கிற பாதகஞானம் வருகிறதுமில்லை. 'நேதம் ஜாக்ரத் கிந்து ஸ்வாப்னமேவ' என்று ஸ்வப்னுவஸ்தையில் அறியப்படும் பதார்த்தங்கள் ஜாக்ரத்காலத்தில் அறியப்பட்ட பதார்த்தமல்ல ஸ்வப்னகாலத்திலிருந்ததேயாகும் என்றே பாதக ஞானமுண்டா

கிறது. 'நாத்ர ரஜதம்' இங்கு வெள்ளிஇல்லை என்கிறபாதகஞானத்தைப்போல் 'நாத்ரவஸ்து' இங்கு ஸ்வாப்னவஸ்தையில் பதார்த்தமே இல்லை என்கிற பாதகஞானம் வருகிறதில்லையாகையால் ஸ்வப்னகாலத்தில் அறியவரும் பதார்த்தங்களில் இது ஜாக்ரத் பதார்த்தமே என்று ஜாக்ரத் பதார்த்தத்தின் அபேதம் எது தெரியவருகிறதோ அதுமாத்ரமே பாதிதமாகிறதே யொழிய ஸ்வாப்ன பதார்த்தங்களின் ஸ்வரூபமே பாதிதமாகிறதில்லை.

ஸ்வப்னகாலத்தில் காணப்படும் பதார்த்தம் ஏதுண்டோ அது ஸ்வப்னகாலத்தி லிருந்ததேயாகும். ஜாக்ரத் காலத்தில் காணப்பட்ட பதார்த்தமல்ல என்று ஞானமுண்டாகிறதினாலேயே அப்பதார்த்தம் மித்யை என்று சொல்லுவதாயின்-வைசாகமாதத்தில் கண்டிராத மனிதனிட விஷயத்தில் இம்மனிதன் வைசாக மாதத்தில் என்னால் காணப்பட்டவன் என்கிற ஞானமுண்டாய் பிறகு கொஞ்சகாலத்திற்கு பிறகு இம்மனிதன் வைசாகமாதத்தில் என்னால் காணப்பட்டவனல்ல, கார்திகமாதத்தில் காணப்பட்டவ்னென்று பாதகஞானமுண்டாகுமாயின் அம்மனிதன் மித்யை என்று சொல்லவேண்டியதாகும். அம்மனிதன்பொய்யாகிறதில்லை, அம்மனிதனிடம் தோன்றிய வைசாகமாஸ வ்ருத்தித்வமே (இருக்கையே) எப்படி பொய்யாகிறதோ, அப்படியே ஸ்வப்னத்தில் கண்ட கஜாதி பதார்த்தங்கள் ஜாக்ரத்காலத்தில் காணப்பட்டதல்ல என்று பாதகஞானமுண்டாகிறதினால் அந்த ஸ்வாப்ன பதார்த்தங்களினிடத்தில் காணப்படும் ஜாக்ரத்கால வ்ருத்தித்வமே (ஜாக்ரத் காலத்திலிருக்கையே) பொய்யாகிறதே யொழிய ஸ்வப்னகாலத்தில் கண்ட பதார்த்தங்களே பொய்யென்று அந்த பாதகஞானத்தினால் சித்தமாகிறதில்லை. (அந்த பாதகஞானம் எல்லா ஸ்வாப்னபதார்த்தங்களும், மித்யை = அஸத் என்று அறிவிக்கிறதில்லை.

மற்றும் 'ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹஹி' இது முதலிய ஸூத்ரங்களில் ஸூத்ரகாரர் ஈச்வரன் ஸ்வப்ன பதார்த்தங்களைப் படைக்கிறானென்று சொல்லியிருக்கிறார். தவிர 'ஸ்வப்னே...ஸச்ச அஸச்ச பச்யதி' என்கிற ஷட்ப்ரச்ன ச்ருதி ஸ்வாப்ன பதார்த்

தங்கள் நிஜமானவைகளென்று சொல்லுகிறது. எல்லாப்ரமாணங்களும் பாரமார்த்திக ஸத்யத்வத்தை (நிஜமான நிஜத்தையே) அறிவிக்கின்றன. வ்யாவஹாரிக ஸத்யவத்தை (பொய்யான நிஜத்தை) அறிவிக்கிறதில்லை என்று பௌத்தர்களைக் கண்டிக்கும்போது பிரதிவாதிகளே (அத்வைதிகளே) சொல்லியிருக்கிறபடியால் 'ஸச்ச பஶ்யதி' என்கிற சுருதியினால் அறிவிக்கப்பட்ட ஸத்யத்வம் பொய்யென்கிறது ஸ்வவ்யாஹத (தான் சொல்லிய தற்கே விருத்த) மாகிறது. இது முதலிய அநேக காரணங்களினால் ஸ்வாப்ன பதார்த்தங்கள் மித்யையல்ல, பாரமார்த்திக ஸத்யமானவைகளே என்கிற இவ்விஷயத்தைக் கோர்ட்டார் விசாரம் செய்து ஸஜ்ஜனங்கள் 'ஸத்யகர்மா' என்கிற இது முதலிய சுருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கு ஸத்யமான பதார்த்தங்களைப் படைக்கும் பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிராஹ்மணவர்ணுதிகள், வேதம், யஜ்ஞம் முதலிய ஜகத்து 'விஶ்வம் ஸத்யம்' என்கிற ஶ்ருதியில் சொல்லப்பட்டவாறு ஸத்யமானதென்று தெரிந்துகொண்டு அத்தகைய ஸத்யமான கர்மங்களைச் செய்து பரமாத்மாவின் ஞானத்வாரா நித்ய சுகரூபமான மோக்ஷத்தை அடைய வேணுமென்று தீர்மானிக்கவேணுமாய்க் கோருகிறோம்.

# ஸம்யமனீபுரம் ஹைகோர்ட்.

## வேதாந்த விசாரணை ஸிவில் ஸூட்
## O. S. No. 564 of 1921.
### 2-வது இஷ்யு.

| வாதி | பிரதிவாதி |
| --- | --- |
| விஷ்ணுதாஸாசார்யர். | கங்காதர சாஸ்த்ரிகள். |

### வாதி விசாரணை. *

கோர்ட்:—உம்மிட பெயரென்ன?

வாதி:—விஷ்ணுதாஸாசரர்யர் ஐயா.

கோர்ட்:—ஈஶ்வரஸாக்ஷியாக கோர்ட்டார்முன்னிலையில் நான் சொல்லுவதெல்லாம் நிஜமானதே என்று சொல்லும்.

வாதி:—ஈஶ்வர சாக்ஷியாக கோர்ட்டார் முன்னிலையில் நான் சொல்லுவதெல்லாம் நிஜமே யொழிய பொய்யல்ல.

வாதிவக்கீல்:—இந்த தாவா செய்தவர் நீர்தானா?

வாதி:—ஆம் ஐயா.

வா. வ:—தாவா என்ன?

வாதி:—பிரதிவாதி ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களினால் சித்தமாயிருக்கும், ப்ராஹ்மணவர்ணாதி ஜகத்து பொய் பரமாத்மா நிர்குணன், ஜீவப்ரஹ்மங்களுக்கு அபேதம்' 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்கிற ஞானமே மோக்ஷஸாதனம் என்று சொல்லி ஸஜ்ஜனர்களை ப்ராந்தர்களாக்கி தங்களுடன் தமஸ்ஸுக்கு (நரகத்திற்கு) அழைத்துச் செல்லுகிறார்கள். ஆகையால் அவர்கள் அப்படிச் செய்யக்கூடாதென்று உத்திரவாகவேணும் என்று தாவா செய்யப்பட்டிருக்கிறது.

---

* இவ்வாதி பிரதிவாதி விசாரணைகளை 8-வது பேஜியில் ஸாக்ஷி விசாரணைக்குமின் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

வா. வ:—நீங்கள் என்னவென்று சொல்லுகிறீர்கள்?

வாதி:—ப்ராஹ்மணவர்ஜ்ஞதி எல்லா ஜகத்தும் ஸத்யமே யொழிய பொய்யல்ல, பரமாத்மா குணபூர்ணன், ஜீவப்ரஹ்மங் களுக்கு பேதமுண்டு, பரமாத்மா குணபூர்ணன் என்கிற ஞானமே மோக்ஷஸாதனம் என்று நாங்கள் சொல்லுகிறோம்.

வா. வ:—நீங்கள் ஜகத்து ஸத்யமென்று சொல்லுவதற்கு என்ன ஆதாரம்?

வாதி:—ப்ரத்யக்ஷம், அனுமானம், ஶ்ருதி ஸூத்ரகீதாரூப மான ப்ரஸ்தானத்ரயம் இவைகளும் மற்றும் எல்லா ப்ரமாணங் களும் ஆதாரம்தான்.

வா. வ:—ஶ்ருதியைச் சொல்லும்?

வாதி:—'விஶ்வம் ஸத்யம் மகவானுயுவோரிதாபஶ்சன ப்ர மினந்தி வ்ரதம் வாம்' (ருக். 2-7-3-12).

வா. வ:—இதின் அர்த்தமென்ன?

வாதி:—ஓ! யஶஸ்ஸையுடைய இந்த்ர ப்ராஹஸ்பத்யந்தர்கத பகவத்ரூபங்களே! நீங்கள் படைத்த 'விஶ்வம்' ஜகத்து, 'ஸத்யமித்' நிஜமானது. மித்யா = ஆரோபிதம் அல்ல, ஆபஶ்சன = ஜலாபி மானிதேவதைகளும் உங்களிட, 'வ்ரதம்' ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களை நிஜமென்றே அறிகிறார்கள் என்று அர்த்தம்.

வா. வ:—இதினால் என்னவென்று சித்தமாகிறது?

வாதி:—இதினால் ஈஶ்வரனால் படைக்கப்பட்ட ஜகத்து நிஜ மானது, மித்யை (ஆரோபிதம்) அல்ல என்று சித்தமாகிறது. அப்படியே இதில் சொல்லப்பட்ட கர்மாபிமானிகளான தேவதை களின் ப்ரத்யக்ஷத்தினாலும் சித்தமாகிறது.

வா. வ:—இவ்வாக்கியத்தினால் ஜகத்து ஸத்யமென்கிற விஷ யத்தில் தேவதைகளின் ப்ரத்யக்ஷ முண்டென்று எப்படி சித்த மாகிறது?

வாதி:—'ஆபஶ்சன ப்ரமினந்தி வ்ரதம் வாம்' என்கிற வாக் யத்தினால் சித்தமாகிறது.

வா. வ:—அது எப்படி?

வாதி:—தேவதைகள் உங்களிட ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களை 'ப்ரமினந்தி' நிஜமென்று அறிகிறார்கள் என்று சொல்லியிருப்பதினால், பரமாத்மாவின் விஶ்வகர்த்ருத்வாதி வ்யாபாரங்கள் நிஜமானதென்று தேவதைகளின் ப்ரத்யக்ஷத்தினால் சித்தமாகிறது.

வா. வ:—இவ்விஷயத்தில் வேறேதாகிலும்ஆதாரமுண்டோ?

வாதி:—அநேக ஶ்ருதி ஸ்ம்ருதிகளுண்டு.

வா. வ:—ஶ்ருதிகள் யாது?

வாதி:—(1) 'ததேதத் ஸத்யம்' (மும். 1-2-1) (2) 'யாதாதத்யதோர்த்தான் வ்யததாத் ஶாஶ்வதீப்ய: ஸமாப்ய:' (ஈஶா. 8.) (3) 'யச்சிகேத ஸத்யமித்தன்ன மோகம்' (ருக் 8-1-17) இதுகளே முதலான அநேகமுண்டு.

வா. வ:—இதுகளினால் என்னவென்று சித்தமாகிறது?

வாதி:—(1) தத் ஏதத் = மின் சொல்லப்பட்ட இக்கர்மாதிகள், ஸத்யம் = நிஜமானது. (2) பரமாத்மா, யாதாதத்யத: அர்த்தான் = நிஜமான மஹதாதி பதார்த்தங்களை, வ்யததாத் = படைத்தான்.(3) பரமாத்மனால் எந்த ஜகத்து நிர்மிக்கப்பட்டதோ அந்த ஜகத்து நிஜமே, பொய்யல்ல என்று சொல்லப்பட்டிருப்பதினால் ஜகத்து நிஜமானது, பொய்யல்ல என்று சித்தமாகிறது.

வா. வ:—ஸ்ம்ருதி யாது?

வாதி:—'அஸத்யமப்ரதிஷ்டந்தே ஜகதாஹுரனீஶ்வரம்' (கீதா. 16-8.)

வா. வ:—நீங்கள் சரியான எச்சரிக்கையி லிருக்கிறீரா?

வாதி:—சரியாகத்தா னிருக்கிறேன்.

வா. வ:—அப்படியாயின் ஜகத்து பொய் என்கிற விஷயத்திற்கு அனுகூலமான பிரமாணத்தை ஏன் சொல்லுகிறீர்?

வாதி:—இவ்வாக்கியத்தின் பூர்வோத்தர வாக்யங்களைப் பார்த்தால் இவ்வாக்யம் ஜகத்து மித்யை என்கிற விஷயத்திற்கு

அனுகூலமாகிறதில்லை என்பது மாத்ரமே யல்லாமல், ஜகத்து ஸத்யமென்கிற விஷயத்திற்கு அனுகூலமுமாகிறது என்று தெரிய வரும்.

வா. வ:—அப்பூர்வோத்ர வாக்யங்களைச் சொல்லும்?

வாதி:—'த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மின்தைவ ஆஸுர ஏவச தைவோ விஸ்தரஶ: ப்ரோக்த ஆஸுரம் பார்த்தமே ஶ்ருணு' (கீ. 16-6.) 'அஸத்ய மப்ரதிஷ்டந்தே ஜகதாஹுரனீஶ்வரம்' (கீ. 16-8.) 'மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம்' (கீ. 16-20) இதின் அர்த்தம்—உலகத்தில் தைவ ஸ்ருஷ்டி என்றும், ஆஸுர ஸ்ருஷ்டி என்றும் இருவகையான ஸ்ருஷ்டியுண்டு. அவைகளில் தைவ ஸ்ருஷ்டி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது. ஓ பார்த்தனே இப்பொழுது ஆஸுர ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறேன் கேள், என்று சொல்லி, ஆஸுர வ்யாபாரங்களைச் சொல்லுவதற்கு ஆரம்பித்து, அஸுர ஜனங்கள் ஜகத்து பொய் என்று சொல்லிக்கொண்டே என்னிடத்திற்கு வராமலே அதோகதியை அடைகிறார்கள் என்று ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனைக் குறித்துச் சொல்லி யிருக்கிறபடியால் ஜகத்து பொய்யல்ல நிஜமானதே என்று சித்தமாகிறது.

வா. வ:—வேறேதாகிலும் ஆதாரமுண்டோ?

வாதி:—எவ்வளவென்று சொல்லுகிறது! ஶ்ருதி முதலிய எல்லா ப்ரமாணங்களும் ஜகத்து ஸத்யமென்றே சொல்லுகின்றன.

வா. வ:—எல்லா ப்ரமாணங்களும் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை எவ்விதமாக அறிவிக்கின்றன?

வாதி:—ப்ரமாண மென்றால் நிஜமான (யதார்த்தமான) ஞானத்தைப் பிறப்பிக்கக்கூடிய வஸ்து. ஞானம் யதார்த்தமென்றால் இருக்கப்பட்ட (நிஜமான) பதார்த்தங்களை அறிவிக்கின்றவை என்று அர்த்தம். ஶ்ருதி, கீதா, ப்ரஹ்மஸூத்ரம், ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகள் எப்பொழுது ப்ரமாணங்களென்று அங்கீகரிக்கப்பட்டதோ அப்போது அதினால் உண்டாகும் ஞானத்தினால் அறியவரும் பதார்த்தங்கள் நிஜமானவைகளென்றே சித்தமாகிறது. ஆகையால் 'ப்ராஹ்மணோஸ்ய முகமாஸீத், பத்ப்யாம்

ஶூத்ரோ அஜாயத' ...'யஜ்ஞேன யஜ்ஞமயஜந்த' 'இமம்மே கங்கே யமுனேஸரஸ்வதி' இவைகளே முதலிய ஶ்ருதிகளினாலும், 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' 'ப்ராஹ்மாணமீஶம்' முதலிய கீதா வாக்யங்களினாலும், 'ஜன்மாத்யஸ்ய யத:' 'க்ஷத்ரியத்வாவக தேஶ்சோத்தராத்ர சைத்ரரதேன லிங்காத்' இவைகளே முதலிய ஸூத்ரங்களினாலும், ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகளினாலும் அறியவரும் ப்ராஹ்மணாதி வர்ணங்கள் ப்ரஹ்மசர்யாத்யாஶ்ரமங்கள், வேதம் தேவதைகள், யஜ்ஞம், கங்காதி தீர்த்தங்கள் இவைகளே முதலான எல்லா ஜகத்தும் நிஜமானதென்று சித்தமாகிறது.

வா. வ:—ப்ரத்யக்ஷானுமானங்கள் ஜகத்து ஸத்யமென்று எப்படி அறிவிக்கின்றன?

வாதி:—கட: ஸன், பட: ஸன், கடம் ஸத்யம், படம் ஸத்யம் இவைகள் முதலிய பாதக ரஹிதமான எல்லா ப்ரத்யக்ஷங்களும், "ஜகத் ஸத்யம், அர்த்த க்ரியாகாரித்வாத், ஈஶ்வர ஸ்ருஷ்டத்வாத்" ஜகத்து ஈஶ்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருப்பதினாலும், பதார்த்தங்களை உண்டாக்குகிறதினாலும் நிஜமானது என்கிற இவ்விதமான அனுமானங்களும், (யுக்திகளும்) ஜகத்து ஸத்யமென்று அறிவிக்கின்றன.

---

## க்ராஸ் எக்ஜாமினேஷன்.

---

பிர. வ:—ஆசார்யரே! தாங்கள் சொல்லிய ஶ்ருதி ஸூத்ரம் கீதா ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகளெல்லாம் ஜகத்துக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கின்றன என்பது சரிதான். ஆயினும் அச்சத்யத்வம் வ்யாவஹாரிகமாயிருப்பதினால் ஜகத்து மித்யை அல்ல என்று சொல்லுவதற்கு எப்படி ஸாதகமாகும்? மற்றும் ஜகத்து பொய் (மித்யை) என்று சொல்லும் அத்வைத மதத்திற்கு எப்படி விருத்தமாகும்?

வாதி:—ஜகத்து வ்யாவஹாரிக ஸத்யமென்றால் நிஜமான ஸத்யமல்ல, பொய் ஸத்யமென்று அர்த்தமாகிறபடியால் பூர்

வோக்தமான ஶ்ருத்யாதி ப்ரமாணங்களால் சித்தமா யிருக்கும் ஜகத்தின் ஸத்யத்வம் பொய் என்று சொல்லுவதாயின் 'ஸத்யம் ஞானமனந்தம் ப்ரஹ்ம' என்கிற ஶ்ருதியில் சொல்லப்பட்ட ப்ரஹ்மத்தின் ஸத்யத்வமும் பொய்யென்று அறியவேண்டியதாகும். ஆகையால் ஶ்ருத்யாதி ப்ரமாணங்களினுல் தெரியவரும் ஸத்யத்வம் பாரமார்த்திக ஸத்யத்வமென்றே சொல்லவேண்டும். ஆகையால் ஜகத்துக்கு பாரமார்த்திகஸத்யத்வமே சித்தமாகிறது.

---

## ரீக்ராஸ்

---

வா. வ:—விஞ்ஞான வாதிகளான பௌத்தரும், ஶூன்ய வாதிகளான பௌத்தரும் ஜகத்து ஸத்யமென்று சொல்லுகிறுர்களா? மித்யை (ஆரோபிதம்) என்று சொல்லுகிறுர்களா?

வாதி:—ஜகத்து மித்யை (ஆரோபிதம்) என்றே சொல்லுகிறுர்கள்.

வா. வ:—இப்படிச் சொல்லும் பௌத்தர்களை சங்கராசாரியார் கண்டித்திருக்கிறுரா?

வாதி:—கண்டித்திருக்கிறுர்.

வா. வ:—எப்படிக் கண்டித்திருக்கிறுர்?

வாதி:—ஜகத்து ப்ரமாணங்களினுல் நிஜமென்று சித்தமாய்க் கொண்டிருக்க ஸத்யமல்ல என்று சொல்லுவது யுக்தமல்ல. ப்ரமாணங்களுக்கு விரோதம் வருகிறது. ஆகையால் ஜகத்து நிஜமல்ல வென்று சொல்லக்கூடாது என்று கண்டித்திருக்கிறுர்.

வா. வ:—அதற்கு பௌத்தர்கள் என்ன ஸமாதானம் சொல்லியிருக்கிறுர்கள்?

வாதி:—ப்ரமாணங்கள் ஜகத்து வ்யாவஹாரிக ஸத்ய (பொய் நிஜ) மானதென்று அறிவிக்கின்றன. நாங்கள் ஜகத்து பாரமார்த்திக ஸத்ய (நிஜமான நிஜ) மல்ல என்று நிஷேதிக்கிறோம். ஆகை

யால் ஜகத்து, மித்யை = பொய், பாரமார்த்திக ஸத்யம் (நிஜமான நிஜம்) அல்ல என்று சொல்லும் எங்களிட மதத்திற்கு ப்ரமாண விரோதம் வருகிறதில்லை என்று ஸமாதானம் சொல்லியிருக்கிறார்.

வா. வ:—அதற்கு அத்வைதிகள் எப்படிக் கண்டித்திருக்கிறார்கள்?

வாதி:—ப்ரமாணங்கள் தங்கள் தங்கள் விஷயங்களை பாரமார்த்திக ஸத்யம் (நிஜமான நிஜம்) என்றே அறிவிக்கின்றன. வ்யாவஹாரிக ஸத்யமானது, பாரமார்த்திக ஸத்தியமானதல்ல என்று அறிவிக்கிறதில்லை யாகையால் ஜகத்து பாரமார்த்திக ஸத்யமானதல்ல என்று சொல்லும் உங்களிட பௌத்த மதத்திற்கு ப்ரமாணவிரோதம் வந்தே தீரும் என்று அத்வைதிகள் கண்டித்திருக்கிறார்கள்.

வா. வ:—'இதம் ரஜதம்' (இது வெள்ளி) என்கிற ஞானம் ரஜதத்தை (வெள்ளியை) ஸத்யமென்று (நிஜமென்று) அறிவிக்கிறதா?

வாதி:—ரஜதம் ஸத்யமென்று அறிவிக்கிறது.

வா. வ:—ரஜதத்திற்கு ஸத்யத்வத்தை அறிவிக்கிறபடியால் ரஜதமும் நிஜமென்று ஒப்புக்கொள்ளவேண்டுமல்லவா?

வாதி:—'இதம் ரஜதம்' என்கிற ஞானமுண்டான பிறகு 'நேதம் ரஜதம் கிந்து ஶுக்திகைவ' என்கிற பாதக ஞானம் வருகிறபடியால் 'இதம் ரஜதம்' என்கிற ஞானம் ரஜதம் ஸத்யமென்று அறிவித்துக்கொண்டிருந்தாலும் அதற்குஸத்யத்வத்தை ஒத்துக்கொள்ளுகிறதில்லை.

வா. வ:—ஆனால் 'ஜகத்து இல்லை' என்று ஜகத்துக்கும்பாதக ஞானம் வருகிறபடியால் ஜகத்துக்கும் ஸத்யத்வத்தை ஒப்புக்கொள்ளக்கூடாதல்லவா?

வாதி:—ஜகத்துக்கு எந்த அவஸ்தையிலும் பாதகம் வருகிறதில்லை என்று சங்கராசார்யர் 'நைவம் ஜாகரிதோபலப்தம் வஸ்து கஸ்யாமபி அவஸ்தாயாம் பாத்யதே' என்கிற வாக்யத்தினால் சொல்லியிருக்கிறார். வாஸ்தவமாக பாதகம் வருகிறதும்

இல்லை. ஆகையால் ஶ்ருதி ஸூத்ரம் கீதை இத்யாதி ப்ரமாணங்களினால் அறியவரும் ப்ராஹ்மண வர்ணாதி எல்லா ஜகத்தும் பாரமார்த்திக ஸத்யமென்றே சித்தமாகிறது. ஆகையால் ஜகத்து ஸத்யமென்றே ஒப்புக் கொள்ள வேண்டும்.

வா. வ:—'விஶ்வம் ஸத்யம்' இச்சுருதியிலுள்ள ஸத்யம் என்கிறபதத்திற்கு வித்யாரண்யர் (வேதபாஷ்யகாரர்) என்ன அர்த்தம் செய்திருக்கிறார்?

வாதி:—ஸத்யம் = நிஜமானது, வித்யமானமேவ = இருப்பதே, நத்வாரோபிதம் = ஆரோபிக்கப்பட்டதல்ல (கல்பிதமல்ல.) என்றே அர்த்தம் செய்திருக்கிறார்.

வா. வ:—இவ்வாக்கியத்தினால் என்ன சித்தமாகிறது?

வாதி:—பரமாத்மாவின் குணகர்மாதிகளெல்லாம் ஆரோபிதம் (பொய்) அல்ல. பாரமார்த்திக ஸத்யமே என்று சித்தமாகிறது.

வா. வ:—உமக்கு ஸாக்ஷிகளுண்டோ?

வாதி:—உண்டு.

வா. வ:—ஹாஜர் படுத்துகிறீரா?

வாதி:—வாயிதா கொடுத்தால் ஹாஜர் படுத்துகிறேன்.

ஹியரிங் அட்ஜர்ண்ட்.

---

## பிரதிவாதி விசாரணை.

---

கோர்ட்:—நீர் ஸ்வாமி ஸத்யமாக கோர்ட்டார் முன்னிலையில் நாம் சொல்லுவதெல்லாம் நிஜமேயொழிய பொய்யல்ல என்று சொல்லும்.

பி. வா:—மஹாராஜ்! நம்மிட மதத்தில் ப்ரஹ்மத்தை விட வேறான நிஜமான பதார்த்தமே இல்லாததினால் எல்லாம் நிஜமாகச் சொல்லுகிறேனென்று எப்படிச் சொல்லமுடியும்?

கோர்ட்:—ஆனால் எல்லாம் பொய்யேசொல்லுகிறேனென்று சொல்லுகிறீரா?

பி. வா:—இல்லை, ப்ரபுக்களே! நம்மிட மதத்தில் பாரமார்த்திக ஸத்யமென்றும், வ்யாவஹாரிக ஸத்யமென்றும் இரண்டுவித ஸத்யங்களுண்டு. அவைகளில் பாரமார்த்திக ஸத்யமானது பிரஹ்மமொன்றே. மற்றெல்லாம் வ்யாவஹாரிக ஸத்யமாயிருப்பதினால்கோர்ட்டார் முன்னிலையில் ஸ்வாமிஸாக்ஷியாகநாம் சொல்லுவதெல்லாம் வ்யாவஹாரிக ஸத்யமானவைகளென்றுசொல்லுகிறோம்.

வா: வ:—வ்யாவஹாரிக ஸத்யமென்றால் என்ன?

கோர்ட்:—இவ்விசாரம் இப்போது அனாவசிகம் முன்னாகட்டும். சாஸ்த்ரிகளே உம்மிட பெயர் என்ன?

பி. வா:—கங்காதர சாஸ்த்ரிகளையா.

பி. வ:—இந்த ஸ்டேட்மெண்ட் கொடுத்தவர் நீர்தானா?

பி. வா:—ஆம் ஐயா.

பி. வ:—உம்மிட அபிப்ராயமென்ன?

பி. வா—வாதியினால் தாவாவில் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களும் பொய். ஆகையால் கோர்ட்டார் இந்த தாவாவை விசாரிக்காமலே தாவாவை தள்ளிவிடுவதுடன், நமக்கு இதற்காக ஏற்பட்டிருக்கும் செலவுகளை வாதியினால் நமக்குச் சேற்பிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கின்றோம்.

பி. வ:—இவ்விஷயத்திற்கு உமக்கு ஆதாரமுண்டோ?

பி. வா:—உண்டு.

பி. வ:—அதை ஹாஜர் படுத்துவீரா?

பி. வா:—அந்த ஆதாரங்கள் நம்மிட ஸாக்ஷிகளிடத்தில் இருப்பதினால் அவர்களை விசாரிக்கும்போது அவைகள் ஹாஜர் செய்யப்படுகிறது.

பி. வ:—ஸாக்ஷிகளை ஹாஜர்படுத்துகிறீரா?

பி. வா:—ஹாஜர்படுத்துகிறோம். வாய்தா கொடுக்கவேணுமாய்க் கோருகிறோம்.

கோர்ட்:—ஹியரிங்க் 22-2-1927ல் போடப்பட்டிருக்கிறது.

# இப்புத்தகம்

பெங்களூர் பஸவன்குடி போஸ்ட்
உத்திராதிமடம் பில்டிங்க்ஸ்
எஸ். எம். எஸ். ஏ. ஸபை லைப்ரேரியன்
வி. என். தேசிகாசார்யாரிடத்திலும்,
மதராஸ் திருவல்லிக்கேணி சிங்கராசாரி தெரு,
13 நெ. உத்திராதி மடத்திலிருக்கும்
எஸ். ராமாசாரியாரிடத்திலும் கிடைக்கும்.

## இப்புத்தகம்

பெங்களூர் பஸவன்குடி போஸ்ட்

உத்திராதிமடம் பில்டிங்க்ஸ்

எஸ். எம். எஸ். ஏ. ஸபை லைப்ரேரியன்

வி. என். தேசிகாசார்யாரிடத்திலும்,

மதராஸ் திருவல்லிக்கேணி சிங்கராசாரி தெருவு,

13 நெ. உத்திராதி மடத்திலிருக்கும்

எஸ். ராமாசாரியாரிடத்திலும் கிடைக்கும்.